RANJITHA SINGH

TAMIL

MADRAS :

C. COOMARASAWMY NAIDU & SONS

1914

 [Price 10 As.

Seve

ரஞ்சிதசிங்

சென்னை :

வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

[ரிஜிஸ்தர் செய்தது] 1914 [விலை 10 அணா

PRINTED AT
THE 'CAXTON PRESS,'
MADRAS, E.

ரஞ்சிதசிங்

முதல் அத்தியாயம்

"இத்தனை நேரமாகியும் எந்த சமாசாரமும் தெரியவில்லை; ஊர் முழுவதும் காரிருளால் மூடப்பட்டிருக்கிறது. பனி மிகுந்து, குளிரால் சொல்ல முடியாத நடுக்க முறுகிறது. தெருவில் ஏற்றப்பட்டிருக்கும் விளக்குகள் ஒவ்வொன்றும், மங்கலடைந்து, 'அதோ விளக்கு தெரிகிறது' என்பதற்கு மட்டும் சொல்லளவாய் இருக்கிறதேயன்றி, தெருவில் நடக்கும் பிரயாணிகளுக்கு அனுகூலமாக இல்லை. தெருவில், வேலைக்காரர்களும் போகப் பயப்படுகிறார்கள். இந்த ஸ்திதியில் நமக்கு சமாசாரம் எப்படி வரும்! வேண்டாமென்றாலும் கேட்கமாட்டேனென்று சென்றானே! அவனது தைரியத்தைக் குறைக்க எனக்குக் கொஞ்சம் கூட இஷ்டமில்லை; அவன் உயிரோடு ஜீவித்திருக்கும் பிராப்தம் ஏற்பட்டிருந்தால், பிழைத்து வரட்டும்; இல்லாவிட்டால், நாம் செய்யக் கூடியது என்ன இருக்கிறது! இவ்வளவு விசாலமான பங்களாவில் நான் ஒருத்தி தனியே இருக்கிறேன்! எனது வேலைக்காரர்கள் மூலைக்குமூலை, படுத்துறங்குகிறார்கள். எனக்கோ தூக்கம் வரவில்லை. மணி பன்னிரண்டாகிறது. வேலைக்காரர்கள்

சோபாவை பத்துத்தரம் தட்டிப் போடச் செய்தேன்; பிறகு படுத்துக்கொண்டேன். என்ன செய்தாலென்ன! உடம்பு, முகம், கை கால்களெல்லாம் முள் குத்துவது போல் குத்துகின்றன. அதிசூரனான எனது பாலன் என்னிடம் வந்து 'அம்மா! கணவாய்க் காவலர்களை அடித்துப் பிடுங்க கொள்ளைக் கள்ளர்கள் வந்திருப்பதால், கணவாய்க் காவலர்களுக்கு உதவி புரிய அனேகர் போகிறார்கள். நானும் போகிறேன்' என்று என்னை வேண்டினான். 'ஐயோ! அறியாத பாலன்! பதினெட்டும் பூர்த்தியாகவில்லையே! நீ எப்படிப் போகத் துணிந்தாய்! வீரர்கள் கையால் அறைபட்டு மாண்டுபோவாயே! கண்மணி! வேண்டாமடா!' எனக் கதறினேன். அதற்கு அவன், இசையாமல், 'ஐயோ! பயித்தியமே! பெண் புத்தி பேதமையென்பது நன்கு விளங்குகிறது. நீ சூரரை மணந்து அவரோடு பழகி அனேகம் யுத்தங்களில் பிரவேசித்துத் தைரியம் பெற்றிருந்தும், 'பேதமை என்பது மாதர்க்கணிகலம்' என்றபடி பேதையாகவே இருக்கின்றனையே! நான் சூரன் மகனல்லவா! பகைவரை எதிர்க்க என் மனம் பதைக்காதா! என்னை அவர்கள் ஓர் அறை அறையுமுன் அவர்களை நான் எமனுலகம் அனுப்பி விடமாட்டேனா! என் தைரியத்தை நானே புகழ்ந்து பேசுகிறேனென்றெண்ணாதே! என் இயற்கை இது என்பது நீ நன்கு உணர்வாய். அம்மா! இனி அரை நிமிஷமும் நான் இங்கிருக்கமாட்டேன்; போய் வருகிறேன்' என்று கூறினான். அவனுடைய புத்தி கூர்மையையும் தைரியத்தையும் உணர்ந்த நான் அவனுக்குப் போகவிடை கொடுத்தேன்—'பலர்க்கும் உபகாரமாகிய இவ்வரிய காரியத்தை அவன் விடாமற் செய்து ஜெயித்துப் பிழைத்து வந்தால் அவர்கள் அனைவரும் என்னை வாழ்த்துவார்கள். அதனால் நல்ல கியாதி

யையும் என் மகன் அடைவான். பலபேர்க்குபகாரமான காரியத்தைச் செய்து முடிப்பதில் ஒருவனுடைய பிராணனை விநியோகம் செய்வது மேலான காரியம்! ஒரு குடித்தனம் க்ஷேமத்தை யடையும் பொருட்டு, அக்குடித்தனத்தில் உள்ள ஒருவனை விலக்கலாம். ஒரு கிராமத்தின் க்ஷேமத்தின் பொருட்டு ஒரு வீட்டுக்காரனை ஒழிக்கலாம். அனேகம் கிராமங்களின் க்ஷேமத்திற்காக ஒரு கிராமத்தை நாசமாக்கலாம். இது தர்ம சாஸ்திரத்தில் உள்ளது. எனது ஏகமகன் இவ்வரிய காரியத்தில் பிரவேசித்து ஜெயசீலனாய் எல்லோருக்கும் நன்மை செய்து வந்தால் எவ்வளவோ கீர்த்தியுண்டாகும்'—" என்று பலவாறாக யோசித்தபடியே சுகுணபாய் தன்னுடைய சோபாவில் படுத்துக் கொண்டு, வலது கையைச் சிரசில் தாங்கினவளாய், இடது கையைச் சோபாவின் சார்மணையின்மேல் ஊன்றிக் கொண்டு, அரை விழியும் தூக்கமுமாக சற்று நேரம் கண் அயர்ந்தாள்.

இவள் சோளங்கி புரத்தில் ஓர் போர் வீரன் புத்திரி; ராஜ புத்திர வம்சத்தைச் சேர்ந்தவள்; பார்வைக்கு அழகான மேனியை யுடையவள்; சங்கரசிங்கு என்ற ஒரு யுத்த வீரனை இவளது பதினாரும் பிராயத்தில் மணம் புரிந்தாள்; தன் புருஷன் ஓயாது போர் முகத்தை நோக்கிச் செல்பவனாதலால், அவனுடன் எப்போதும் சேர்ந்து வாழ்ந்திருப்பது அருமையாயிருந்தது. அவன் சண்டைக்குப்போய்த் திரும்பி வந்ததும் யுத்தத்தில் நடந்த அதிசயங்களையும், யுத்த வீரர்கள் காட்டும் திறமைகளையும், இவளுக்குச் சொல்வான். இவள் அவைகளைக் கேட்குந்தோறும் சந்தோஷ மிகுந்து, புருஷன் பிரிந்ததனால் அடைந்திருந்த துக்கத்தை அறமறப்பாள். பிறகு இவளும் தன் புருஷனோடேயே ஆண் உடை தரித்துச் சென்று, யுத்தங்களில் அரிய காரியங்களைச் செய்து, புருஷனுக்கு அனுகூலமா யிருப்பாள். இப்படி

யிருக்கையில் இவளுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அவனை மிகவும் அருமையாக வளர்க்கவேண்டுமென விரும்பியதால், இவள் அம்மகவோடு தனது புருஷன் ஊரான பர்த்தபூர் வந்து, அவ்வூரிலுள்ள பங்களாவில் சில வேலைக்காரர்களோடு வசித்து வந்தாள்.

இப்படி யிருக்க, ஆப்ரிக்காக் கண்டத்துக்குச் சென்றிருந்த இவளது புருஷன், கடும்போர் புரியும் போது, காலனுக்கு இரையானானெனச் சமாசாரம் வந்தது. அதனால் இவள் மனம் கரைந்து நொந்தாள். புருஷனோடு தானும் இறக்கத் துணிந்தாள். தன் அருமைக் குழந்தையின் முகத்தைப்பார்த்துப் பார்த்து 'இவ்வழகிய மகனை யாரிடம் விட்டு என் வாழ்நாளை ஒழிப்பேன்!' என நினைந்தாள். சரீரத்திலுள்ள புண்கள் காலம் ஆக ஆக ஆறுவது போல, இவளுடைய மனக்கிலேசமும் ஆறியது. தன் மகனுடைய முக மண்டல விலாசத்தையும், வேத புராண இதிகாசங்களைச் செவியுற்று அடையும் ஆனந்தத்தை விட எத்தனையோ மடங்கு அதிகமான அவனுடைய மழலைச் சொற்களின் ஓசையையும் கண்டு கேட்டு மன மகிழ்ந்தாள். ஜெப்பல்பூரில் இவளுக்கேராளமான பொருள்களும் நிலங்களும் ஒருபெரிய பங்களாவும் இருந்தன. இவைகள் யாவும் இவளது புருஷனால் சம்பாதிக்கப்பட்டவைகளே. சொத்துக்களை வைத்துக்கொண்டு, தான்கௌரவமாககாலந் தள்ளின தல்லாமல், லோகோபகாரமான காரியங்களுக்கும், தான தருமங்களுக்கும் செலவழித்து வந்தாள். தன் மகனைப் படிப்பிக்கவேண்டிய முயற்சிகள் இவள் செய்யாதிருந்தும் அவன் யாவரும் தன்னை மெச்சிக் கொள்ளும்படி அவ்வளவு தீவிரமாகப் படித்துவந்தான். அவனிடத்தில் பெருந்தன்மையும், வீரமும் அமைந்திருந்தன. வாலிபர்கள் தங்களை வீரர்கள் என்று பிறர் சொல்லக் கேட்பதில்

மிகுந்த சந்தோஷத்தை அடைவதும், அப்படியே தாங்கள் இருக்கப் பிரயத்தினப் படுவதும் இயற்கையா யிருக்கின்றன. அது நல்ல குணந்தான். என்றாலும், "பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்தது" என்பதுபோல அவர்கள் ஆண்மையென்பது இன்னது என்பதை உணராதவர்களாய், பிடி மீசை வைத்துக்கொண்டு, பொன் சங்கிலி மூக்குக் கண்ணாடி, சரிகைத் தலைப்பாகை, விதம் விதமான உடைகள் இவைகளைத் தரிப்பதனாலும், சிங்காரத் தடி பிடித்துச் சுழற்றுவதனாலும், மோதிரங்கள் இட்டுக்கொள்வதனாலும், புகைச்சுருட்டுப் பிடிப்பதனாலும், முரட்டுத்தனமாய் தாம் பேசும் சொல்லையே பெருமைப் படுத்தி ஸ்தாபித்துப் பேசுவதனாலும் ஆண்மைக் குணமுள்ளவர்களாகமாட்டார்கள். ஒருவன், மேலுக்குச் சாதரண உடை உடுத்திக்கொண் டிருப்பவனாயினும், உண்மையாக பெருந்தன்மை உள்ளவனாயிருக்கலாம். ஒருவரிடத்தில் உள்ள பொருள்களாலாவது அல்லது வெளிக்குப் புலப்படுகிற சாதாரண நடையுடை பாவனைகளாலாவது அவர்கள் ஆண்மை உள்ளவர்களாகவாயினும், இல்லாதவர்களாகவாயினும் ஆகமாட்டார்கள். அவரவர்கள் நிற்கின்ற நெறியினாலும் செய்கின்ற செய்கையாலுமே அவரவர்களை மதிக்க வேண்டும். நமது ரஞ்சிதசிங்கினிடம் அரிய குணங்கள் அநேகம் இருந்தன. மனோ திடத்தால், அவன், தன்னுடைய கோபதாபங்களை அடக்கிக் கொள்ளும் குணமும், செய்கருமத்தில் ஊக்கமும், தான் பேர்பெற வேண்டுமென்பதற்காகவே ஒரு காரியத்தைச் செய்யாமையும், தான் என்னும் அகங்காரம் இல்லாமையும், பிறர் காரியமும் தன் காரியமெனக் கடமையென எண்ணிச் செய்யுந் தன்மையும், தைரியமும், உண்மையும், அடக்கமும், வணக்கமும், மனத்தூய்மையும், சாந்தகுணமும், ஜீவகாருண்யமும், உறுதியும், நீதியும்,

விவேகமும் ஆகிய நல்ல குணங்களைப் பெற்றிருந்தான். இவ்வளவும் இவனுக்கு இயற்கையாய் ஏற்பட்டிருந்தன. அன்றியும், அவைகள் அவனது நற்றாயின் பழக்கத்தால் விர்த்தியடைந்திருந்தன; இவ்வளவு அருமைக் குணம்வாய்ந்த உத்தம பாலனை விட்டுப் பிரிய எப்படி மனம் துணிவாள் சுகுணபாய்!

இவள் அன்றிரவு தூக்கமின்மையால் அடிக்கடி எழுந்து உட்காருவதும் மறுபடி படுத்துக் கொள்வதுமாய் இருந்தாள். இவளுக்கு வயது சுமார் நாற்பது ஆயிருந்தும் சரீரவன்மை பெற்று, நல்ல அழகான மேனியையும், கம்பீரமான சுபாவத்தையும் பொருந்தி யிருந்தாள். அவளைப் பார்ப்பவர்கள் அவளுடைய உருவத்திற்கும் கம்பீர வார்த்தைகளுக்கும் பயப்படுவார்கள். அவள், தான் எப்போதும் நல்ல உடைதரித்துக் கொள்வதிலேயே மிகுந்த பிரியமுடையவள்; பனிக்காக, உயர்ந்த கம்பளத்தினால் தைக்கப்பட்ட மேஜோடும் கைக் கவசங்களும் அணிந்திருந்தாள். உக்காப் புகை பிடிப்பதில் இவளுக்கு மிகுந்த பிரியமாதலால், சதா அதுவே இவளுக்குச் சமீபத்திலேயே வேலைக்காரர்களால் சித்தமாய் வைக்கப்பட்டிருக்கும். தன் மகன் ரஞ்சிதசிங்கன் வரவை எதிர்பார்த்துப் பார்த்து மனம் சோர்ந்தவளாய், அவள், "ஐயோ! மகனே! யாரிடம் சிக்கிக் கொண்டாயோ! அடா கண்மணி! நான் போகவேண்டாமென்றாலும் கேட்காமல் சென்றாயே! நீ உயிர் தப்பி வந்து சேரவேண்டுமே! உன்னைத் தவிர எனக்கு இவ்வுலகில் வேறு கதியார்?" என மிகவும் வருத்தமடைந்தவளாய் மறுபடியும் படுத்து நித்திரை போனாள். இரவு சுமார் நாலுமணிக்கு கழுதை ஒன்று பலத்த குரலெடுத்துக் கத்திற்று. கர்த்தபம் கத்துவதைச் செவியுற்ற சுகுணபாய், தான் படுத்திருந்த படுக்கை விட்டு எழுந்து, "இது

நல்ல சகுனம்—'காணலாம், கத்தலாகாது; கத்தலாம், காணலாகாது; காணவும் காணலாம் கத்தவும் கத்தலாம்'—என்ற பெரியோர் வாக்கின்படி, நரியைப் பார்ப்பது நல்லசகுனம்; அது ஊளையிடுவதைக்கேட்கலாகாது. கழுதையைப் பார்க்கலாகாது; அதன் தொனியைக் கேட்பது நல்ல சகுனம். கருடனைப் பார்த்தாலும், அது சத்தமிடுவதைக் கேட்டாலும், நல்ல சகுனமே. ஆதலால், நல்ல சகுனம் இப்பொழுது கிடைத்திருக்கிறது. வெகு சீக்கிரத்தில், எனது மகனைப்பற்றிய நல்ல சமாசாரம் எனக்கு கிடைக்கும்" எனச் சந்தோஷ மடைந்தவளாய், "யார் வரப்போகிறார்களோ! அல்லது மகன்தான் வருவானோ!" என விளிம்பு முழுவதும் சரிகையாலும், உயர்ந்த பட்டினாலும் நெய்யப்பட்டுள்ள அங்கியாகிய கோஷா உடையைத் தரித்துக்கொண்டு, கணுக்கைமுதல் கையின் அமைப்புக்கேற்றபடி கிட்டத்தட்ட முழங்கை வரையில் இரண்டு கைகளிலும் தங்கப் பட்டை வளையல்கள் அணிந்தவளாய், விரல்களில் பெரியதும் சிறியதுமான அனேக மோதிரங்கள் தரித்து அம்மோதிரத்தி லிருந்து புறங்கையின் வழியாய் முன்கை வளையலில் மாட்டிய தங்கச் சங்கிலியும், முழங்கைக்கு மேல் தங்க வளையங்களும் பூண்டு, கழுத்தில், அமங்கலி யாதலால் எந்த ஆபரணமும் போட்டுக் கொள்ளாமல், அவள் குலாசாரப்படி சட்டை யணிந்து, உயர்ந்த வைரங்கள் இழைத்த பொத்தான் ஜ்வலிக்க, மூக்கில் ஒன்றுமில்லாமல், காதுகளில் மட்டும் மெல்லிய தங்கக் கம்பி வளையங்கள் பூண்டு விளங்கினாள்; இவள் அமங்கலி என்று குறிக்க முடியாமல் இவளுடைய முக மண்டலமானது விசாலமான நேத்திரத்தைப் பெற்று, களங்கமற்ற சந்திரனைப் போலப் பிரகாசித்தது. எந்த புருஷர்களும், இவளது முகத்தைப் பார்க்க முடியாமல், இவள், தனது கோஷா

உடையால் மூடிக்கொண்டு சற்றுநேரம் உலாத்துவதும், உடனே சோப்பாவில் உட்கார்ந்து யோசிப்பதுமாய் இருந்தாள். மறுபடியும் கழுதையின் கத்தல் பலப்பட்டது; "ஓயாது இப்படியேன் கழுதை கத்தவேண்டும்!" எனத் தன் அறையிலிருந்தபடியே வேலைக்காரன் ஒருவனை எழுப்பி, வெளியே போய்ப்பார்க்கச் சொன்னாள். அவன் போய்க் கதவைத் திறந்து பார்த்தபோது, தெருவில் கால்களைக் கட்டப்பட்ட கழுதை ஒன்று நின்றுகொண்டிருக்கவும், அதன் சமீபத்தில் இருந்த நாய் ஒன்று தெருக்கதவு திறக்கப்பட்டவுடனே ஓடி வந்து பங்களாவில் புகுந்து கொள்ளவும் கண்டான். அதனைக் கண்ட வேலைக்காரன், அது சின்ன எஜமானருடைய நாய் எனத்தெரிந்து, மிகுந்த சந்துஷ்டியோடு பங்களாவிற்குள் வந்தான்; நாய், சமுகை பாய்க் கெதிரில் நின்று, தன் வாயிலிருந்த கடிதத்தைக் கீழே போட்டது. அவள் அதை உடனே கையில் எடுத்து "என் மகன் நாயிடம் கடிதத்தை அனுப்பியிருக்கிறான்; ஏதோ விசேஷமிருக்க வேண்டும்! இந்நாய் இத்தனை நேரம் தெருவாசலில் வந்து காத்துக் கொண்டிருக்கையில், தன் வாயில் கடிதத்தைக் கௌவிக் கொண்டிருந்த படியால், கத்த முடியாமல் கழுதையைக் கால் நகங்களால் பீறிக் கத்தும்படி செய்திருக்கிறது. கழுதை கத்துவதைக் கவனியாமலிருந்து விட்டால், நாய் வெகு கஷ்டப்பட்டு நின்றிருக்கும்" என நாயைத் தட்டிக் கொடுத்து, அதைத் தூக்கிச் சோப்பாவின் மேல் வைத்து, ரொட்டித்துண்டு கொஞ்சம் கொண்டு வந்து போடும்படி செய்து விட்டு, பிறகு கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள்; அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"என் அருமைத் தாய்க்கு ரஞ்சிதசிங் அனேக நமஸ்காரம். தங்கள் உத்தரவு பெற்று, ஊராருடன் சேர்ந்து இம்

மலையடிவாரத்திற்கு வந்தேன். நாம் ஊரில் கேள்விப்பட்டதுபோல, சண்டைக்குச் சித்தமாய், என்னை எதிர்க்க இங்கு யாரும் வர இல்லை; நமது இராஜ்ஜியத்தைப் பாதுகாக்க இம்மலைக் கணவாயில் அன்னியர்கள் பிரவேசிககாத படி சில போர்வீரர்கள் காவலிருக்கிறார்கள். இவர்கள் காவலை மீறி, மலை எலிகள் என்று சொல்லப்படும் கபூலிகளான சில முரட்டு ஜாதியார், திருட்டுத்தனமாய் இவர்களுடைய ஆயுத சாலையில் புகுந்து, ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் திருடிக்கொண்டு போகின்றார்கள்; மலையடிவாரத்திற்குச் சமீபமாயுள்ள ஊர்களையும் கொள்ளையடிக்கிறார்கள். இப்படி இக்காரியங்கள் வெகு நாளாய் நடந்து வருகின்றன. இவர்களைப் பிடிக்க, நமது சேனாதிபதி எத்தனையோ பிரயத்தினங்கள் செய்தும், முடியவில்லை. நேற்று நடந்த காரியமானது, முன் நடந்ததைவிட மிகக்கொடுமையானது. சுமார் இருநூறு கபூலியர்கள் வரையில் ஒன்று சேர்ந்து இரண்டு மூன்று கிராமங்களைக் கொள்ளையடித்தார்கள்; ஆயுத சாலையில் காவலாயிருந்த பத்துப் போர்வீரர்களைப் பலமான காயப்படுத்தி விட்டார்கள். என்னோடுகூட வந்த பர்த்தபுரி வாசிகள் அனைவரும் இருபது மைல் தூரமுள்ள இந்த இடத்திற்கு வந்து, சும்மா வேடிக்கை பார்த்துவிட்டுத் திரும்புகிறார்கள். ‘கொடிய துஷ்டர்களைப் பிடித்து வதைசெய்ய வேண்டாமா?’ என்று நான் கேட்டேன். என்னை அவர்கள் பரிகாசம் செய்கிறார்கள். ‘அரசாங்கத்தார் துஷ்டர்களைக் கண்டுபிடித்து சிக்ஷைசெய்யவேண்டுமே ஒழிய, நாம் என்ன செய்ய முடியும்?’ என்று சொல்லிப் பொதுக் கூட்டம் கூடி, தாங்கள் அனுதாபப்பட்டதாகத் தெரிவிக்கிறார்கள். நான் மகாசூரரான இராணுவ வீரருடைய புத்திரனாயிருந்தும், சிறுவனாயிருப்பதை உத்தேசித்து, அவர்கள்,

நான் சொல்லும் வார்த்தைகளை அலக்ஷியம் செய்துவிட்டார்கள். இங்குள்ள ஒவ்வொருவரும் பாடுபட்டால், துரோகிகளைக் கட்டாயம் கண்டுபிடித்து விடலாம்; நான் திருடர்கள் விஷயமாய் ஏதாவது புலன் அகப்படுமோ என்று இங்குத் தங்கினேன். கூட்டத்தாரை விட்டுப்பிரிந்து கொள்ளை நடந்த ஒரு கிராமத்தைச் சேர்ந்தேன். இங்கு விரோதிகளைப் பற்றிய விவரம், ஏதோ ஒருவழியாய்ப் பேசிக்கொள்ளப் படுகிறது; அதனால் இங்குத் தங்கிவிட்டேன்; நான் வராமைக்குத் தாங்கள் வருந்துவீர்களென, என்னுடன் காவலாயிருந்த நாயை, இக்கடிதத்துடன் தங்களிடம் அனுப்பியிருக்கிறேன்; எனக்குப் பதில் தாங்கள் எழுதி அனுப்பவேண்டுமானால், நாய் மூலமாகவே அனுப்பக் கோருகிறேன். எத்தனை நாளானாலும் திருடர்களைக் கண்டுபிடித்து சிக்ஷை செய்வித்த பிறகே ஊர்வந்து சேருவேன்; தாங்கள் ஆசிர்வதித்துக் கொடுத்த துப்பாக்கி ஒன்றே என் உயிரைக்காக்கப் போதுமானது; வருத்தப் படவேண்டாம்.

நமஸ்காரம்
இப்படிக்குத் தங்கள்
அருமை மகன்,
ரஞ்சிதசிங்."

இக்கடிதத்தைச் சுகுணபாய், முழுவதும் திருப்தியோடு வாசித்தாள்; ஆனாலும், கடைசியாக "திருடர்களைத் தேடிச் சிக்ஷை செய்வித்த பிறகே, ஊர்க்கு வருவேன்" என்று தன் மகன் எழுதியிருந்ததைக் கண்டபோது, இவளுக்கு அசாத்திய வருத்தம் உண்டாயிற்று; "இது என்ன சாமான்னிய காரியமா! முன் பின் யோசிக்காமல், முரட்டுத் தனமாய் இவன் யோசிக்கிறானே! அக்காரியத்தைச் செய்து முடிக்க இவனால் சாத்தியமாகுமா! வயது முதிர்

ந்த புத்திசாலிகளும், சரீர பலத்தோடு யுத்தத்தில் பழகின வர்களும் செய்து முடிக்க வேண்டிய காரியமாயிற்றே! பலவானுயிருந்தால் மட்டும் எதிரிகளைத் தோற்கடிக்க முடியுமா! 'முண்டனுக்கு இரண்டான்' என்றபடி, சீக்கிரத் தில் இவன் எதிரிகளால் வென்றுவிடப் படுவான்; இவன் தந்திர சாலியாயின் சுலபத்தில் இவனை வெல்ல முடியாது. இவன் அதிபால்யனுயிற்றே! எந்த வித தந்திரம் கண்டான்! பிடிவாதக் காரனுயிற்றே! இவனை எப்படி நான் திருப்பி வரவழைப்பேன்! வெகு பேரால் முடியாத காரியத்தை, இவன் ஒருவனே செய்து தீர்க்கப் போகிறான்! 'பல துளிபெரு வெள்ளம்' என்பது போல, ஒரு திவலை மழை முதலில் விழுகிறது; உடனே மறுதிவலையும் விழுகிறது; அப்படியே படிபடியாய் எல்லா நீர்த்திவலைகளும் பூமியில் விழுகின்றன; அவைகளால் எதேஷ்டமான வெள்ளம் உண்டாகின்றது. அது போல், எனது சிறுவன், சாத் தியமாகாத இக்காரியத்தில் பிரவேசித்து கொஞ்சம் வழி கண்டால், அதிலிருந்து வேறொருவர் பிரயத்தனப்பட வேண்டும்; அப்படியே மற்றொருவர் செய்ய வேண்டும்; இப்படிப் பலரும் முயன்றால்தான் துஷ்டர்களைக் கண்டு பிடிக்க சாத்தியமாகும். ஆதலால் அவன் ஒருவனுடைய பிரயத்தின மட்டும்பிரயோசனமில்லை; இவன் மற்றவர்களுக்கு வழிகாட்டியா யிருப்பதால் நான் சந்தோஷப் படுகிறேன். என்றாலும், வாலிபனும் எனது ஒரே புதல்வனும் ஆகிய இவனுக்காக நான் மனம் தடுமாறுகிறேன். எனது பர்த்தா உயிரோடு இருந்தால் எனக்கு இவ்விசாரம் உண்டாகாது. அவர் ஏராளமான பொருளைத் தேடி வைத்துக் கொஞ்ச நாளாகிலும் குடும்பத்தோடு இருந்து சுகத்தை யனுப விக்காமல் யுத்தத்தில் மாளவும், என் மகனாகிய இவன் பொருட்டு இச்சொத்துக்களை வைத்துக்கொண்டு நான்

குடும்பத்தோடு இருக்கவும், இவ்விதமான விபரீதங்கள் சம்பவிக்கவும், நான் அல்லற்படவும் கடவுள் விதித்தாரே! என்ன செய்வேன்! ஆ! ஆ! தேவா! என் மகன் திரும்பி வருவானா! நல்ல அன்னபானாதிகள் உண்டு குடித்து, அவனோடு களிப்படைய நண்பர் அநேகர் காத்துக் கொண்டிருக்க, அவன் தன்னந்தனியே சென்று மகா துஷ்டர்களான மலைக்குறவர்களைக் கண்டுபிடிக்க பிரயத்தனப்படுவது நல்ல காரியமாகுமா! நான் இவனுக்கு என்ன பதில் எழுதியனுப்புவேன்! எந்த ஊரிலிருந்து இந்தக்கடிதம் எழுதினான் என்பது எனக்குத் தெரியவில்லையே! மிக்க அறிவுள்ள நாயானதனால் எப்படியோ தந்திரம் செய்து கதவைத் திறக்கும்படி செய்தது; இதைப்போல அறிவு மனிதர்களுக்கும் இல்லையே!'' எனத் தானே தவித்துக் கண்ணீர்பெருக சகுணையாய் தன்னுடைய *காதலனை ஒரு சமயம் நினைத்தும், தன் †கண்மணியை ஒரு சமயம் நினைத்தும் துக்கித்தவளாய், சற்று நேரம் அப்படியே நின்றாள். பிறகு தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு, "அடே! முனிசிங்! நமது ரஞ்சித் மலைக்குறவர்களைப் பிடிக்கப் போகிறானாம். அவன் எந்த ஊரிலிருந்தோ கடிதம் எழுதியிருக்கிறான். இந்த நாயின் பின் சென்று, அவன் இருக்குமிடத்தைத் தெரிந்து, அவனை உன் தாய் அழைத்து வரச் சொன்னாளென அழைத்து வருவாயா?'' என்றாள்.

வேலைக்காரன் — "அம்மா! நான் போகத்தடை சொல்லமாட்டேன்; தாங்கள் சொன்ன உத்தரவை மீறினேனென்று நினைக்கவேண்டாம். வழக்கம்போல, சில கிராமங்கள் மட்டும், மலைக் குறவர்களால், அடிக்கடி கொள்ளையடிக்கப்பட்டு வந்தன. எத்தனையோ பிரயத்தனங்கள் செய்து

---

* காதலன் = கணவன்

† கண்மணி = கண்மணி போன்ற புத்திரன்

நமது ராஜன் அவ்வகையான திருடர்கள் வெகுபேர்களைப் பிடித்து, சிறைவாசம் செய்ய விதித்திருக்கிறார். இன்னமும் அக்கூட்டத்தில் சிலபேர்கள் தாம் பிடிபடாமல் இருக்கிறார்கள். ஆயிற்று; அவர்களும் கூடிய சீக்கிரத்தில் அகப்பட்டு மரணதண்டனையைப் பெறுவார்கள். அக்குறவர்களுக்கு நான் பயந்ததனால் போகமாட்டேனென்கிறேனென்று தாங்கள் நினைக்க வேண்டாம். அதைப் பற்றி அவசியமில்லை. இக்காலத்தில் அனாவசியமாய் ஒருவனுக்கொருவர் பயப்படவேண்டியதில்லை. கேவலம் சிறுபிள்ளையான ரஞ்சிதசிங்கே, கொஞ்சம்கூட பயப்படாமலிருக்க, நானுபயப்படுவேன்? அவர், தைரியமாய் உங்களிடம் உத்தரவுபெற்று, துப்பாக்கி, கத்தி முதலியவைகளை எடுத்துக் கொண்டு போகும்பொழுது, எனக்கும், அவரோடுகூடப் போக அதிக இஷ்டமாயிருந்தது. ஆனால், அவர் என்னைப் பார்த்து, 'நீயுங் கூட வா!' என ஒரு வார்த்தை சொல்லவில்லை; தாங்களும், போகும்படி என்னை அனுப்பவில்லை. நான் போயிருந்தால், இந்த மாதிரி அவர் ஒன்றியாக அலையும்படி விட்டுவிடுவேனா? ஒருகாலும் விடமாட்டேன்; தற்சமயம் எனக்கு உடம்பு செம்மையாயில்லை; தலையில் பித்தம் ஏறி மயக்கமம் அசாத்தியமாயிருக்கிறது; நான் நடந்தால் கீழே விழுந்து விடுவேன் போல இருப்பதனால் எனது மனைவி என்னை அடிக்கடி எங்கும் போகவேண்டாமென்கிறாள். தற்காலம் தங்களிடத்தில் ஜீவனம் பண்ணிக் கொண்டிருக்கலாமென்று வந்தேன். இப்படியெல்லாம் தாங்கள் சொல்லவும், அந்தப்படி நான் நடக்கவும், எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால், தைரியம் இல்லையென்று நினைக்கவேண்டாம். நேற்று ஏரிக்கரைக்கு போனேன். அங்கே ஒருபெரிய அரசமரம் இருந்தது. அம்மர நடுவில் யாரோ ஒரு பெரிய ஆள் நின்றுகொண்டிருந்ததுபோலத் தெரிந்

தது; வேறு யாராவது ஒருவர் அதைப் பார்த்திருந்தால் பயந்து குப்புறவிழுந்து அடித்துக்கொண்டு அழுவார்கள். நான் கொஞ்சம்கூட பயப்படவில்லை; அப்போது அங்கே யாரோ ஒருவன் போய்க்கொண் டிருந்தான். அவனைக் கூப்பிட்டேன். அவன் என்னைப் பார்த்துவிட்டு ஓட்டமாய் ஓடி வந்தான். அவன் என் கிட்ட வந்தவுடன் எனக்குத் தைரியம் அதிகமாயிற்று. ஆனால், என் உடம்பு முழுவதும் வியர்த்துப் பேச்சுக் கூட தடுமாறியிருந்தது. அவனிடத்தில் கையைமட்டும் குறிப்பாகக்காட்டி, 'அதோ பார்' என்றேன். அவன் ஒன்றும் தெரியாமல் முழித்தான். பிறகு, 'பயப்படாதே' என அவனுக்குத் தைரியம் சொல்லி, 'அரசமர நடுவில் அதிக உயரமாய் ஓர் ஆள் நிற்கிறான்; பார்' என்று காட்டினேன். அவன், 'கிட்ட வாரும்' என்று என்னைக் கூப்பிட்டான். இருவரும் அரசமரத்துக்கு அருகே சென்று பார்த்தோம். அது ஆள் அல்ல; பனைமரமாயிருந்தது. இந்த ஒரு விஷயத்தில் எனது தைரியத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். மனித ரூபமாயிருந்தவன் கூட, என்னைப் பார்த்த பயத்தால் பனைமரமாக மாறிவிட்டான். கொஞ்சங்கூட நான் தைரியக் குறைவினால் சொல்லுகிறேனென்று மயங்க வேண்டாம். இப்போது சமயம் கொஞ்சம் சரியாயில்லை என்றுதான் வருத்தப்படுகிறேன்'' என்றான்.

சுகுணாபாய் — ''சரி! போதும் வீணாக ஏன் பேசுகிறாய்! நீ போய்வா'' என்று அவனைப் போகச் சொல்லிவிட்டு வேறு ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டாள். ''நீ இந்த நாயின் பின்னாலே போய், என் மகனை அழைத்து வருவாயா?'' என்றாள். அவன் என்ன விஷயம் என்று கேட்க, சங்கதிகளைச் சொன்னாள். அவன், ''அம்மா! நான் ஒரு தாய்க்கு ஒரே பிள்ளை; என்னை எத்தனையோ

செல்வமாக வளர்த்தார்கள். ஏராளமான சொத்துக்க ளிருந்தது; ஏதோ காலவித்தியாசத்தால் அவைகள் போய் விட்டன. தங்களிடத்தில் வேலைசெய்து ஜீவிக்க வந்தேன். நான் ஊரைவிட்டு எப்படிப்பட்ட காலத்திலும் ஒன்றி யாக வெளியே போனதில்லை. ஏதோ 'கிருஷ்ணா, ராமா, கோவிந்தா!' என, கிடைத்ததைக் கொண்டு திருப்தியோடு காலம் தள்ளுகிறேன். என்னை இப்பொழுதே ஓடிப்போ வென்றாலும் ஓடிவிட சித்தமாயிருக்கிறேன். மலைக்குறவர் கள் என்ற வார்த்தையைக் கேட்கும் போதே எனது உடல் நடுக்கம் எடுக்கிறது. அந்தக் காரியத்துக்கு மட்டும் நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்" என்று காலில் விழுந் தான். பார்த்தாள் சுகுணபாய்! "என்ன ஆச்சரியம்! உலகத்தில் இப்படிப் பட்ட பேதைகளும் இருக்கிறார்களே! தம்மைக் காத்துக் கொள்வதிலும், பயத்தை அடைகிறார் கள்! இவர்களால் உலகத்திற்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது? 'ஹா! ஹா!' என்று அடாவடியாய்ப் பேசு கிறவர்கள் சமயத்திற்கு உதவமாட்டார்கள். ஒருவனுக்கு மனோபலம் இயற்கையிலே உண்டாயிருக்க வேண்டியது; செயற்கையால் எப்படி உண்டாகும்? இயற்கையோடு செயற்கையும் சேர்ந்தால், பின்னும் விசேஷமே. இயற்கை யான சுவபாவம், செய்கையால் மாறினாலும் அதன் ஒளி குன் றாது. இயற்கையில்லாது செயற்கை மட்டும் இருந்தால், அது சீக்கிரம் ஒழிந்துபோம். ஆதலால், இவர்கள் பால்ய முதல் நல்ல பழக்கத்தில் பழகினவர்களன்று. அவரவர்கள், தங்க ளுக்கு ஆகவேண்டிய காரியங்களைத் தாங்களே செய்யவேண் டியதே தவிர, அன்னியர்களின் உதவியை என்றும் எதிர் பார்க்கக்கூடாது. என்னுடைய அவசரத்தை முன்னிட்டு, என்னுடைய சிநேகிதர்கள் முதலிய மற்றவர்களை உதவி கேட்டால், அவர்களும், இதைவிட எண் படங்கு அதிக

மான சாக்குப் போக்குகளைச் சொல்லி விடுவார்கள். இவர்களை எதிர்பார்த்து, நான் காலஹரணம் செய்வதைவிட, நானே நேரில்போவது மெத்த உசிதமென்று நினைக்கிறேன். ஆனால் என் புருஷன் இறந்த இந்த இரண்டு மூன்று வருஷங்களாக நான் வீடுவிட்டு வெளியேறினதில்லை. நான் வெளியே போகும்படி நேர்ந்ததுமில்லை. என் மகன் அசாத்திய சூரன்; தன்னடையில் குன்றாதவன்; எண்ணித் துணிபவன். அவன் விஷயமாக நான் அதிகம் கவலைப்படவேண்டியதில்லை'' என்று நினைத்தாள். ஆனாலும், "பெற்ற மனம் பித்து'' என்பதுபோல, அவள் மனம் சஞ்சலம் அடைந்தது. ஆகையால், அவள் "நானிங்கு ஒரு நிமிஷமும் தங்கமாட்டேன்'' என்று உறுதிகொண்டு, பங்களாவிற்குச் சென்று எங்கெந்த சாமான்கள் எப்படி எப்படி கிடந்தனவோ அவைகளையெல்லாம் அப்படி அப்படியே போட்டுவிட்டு, பங்களாவின் கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டாள். பங்களாவிற்கு வெளியே யிருந்து அதனைப் பார்த்துக் கொள்ளும்படி வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டாள். போலீஸ் அதிகாரியைக் கூப்பிட்டனுப்பி, தான் வருமளவும் அந்த பங்களாவை பந்தோபஸ்தாய் பார்த்துக் கொள்ளும்படி தெரிவித்தாள். தன்னுடைய வழிச் செலவுக்குக் கொஞ்சம் ரூபாவும் தன் புருஷனுடைய இராணுவ உடைகளும் எடுத்து சிறு மூட்டையாகக் கட்டிக்கொண்டாள். போக்கிடம் இன்ன தெனத் தனக்குத் தெரியாது ஆகையால், நிரந்தரமாக நாளுக்கு நாளைக்கு ஒரு வாடகை வண்டியை அமர்த்திக் கொண்டாள். காலமே பதினைந்துமயில், சாயங்காலம் பத்துமைல் போகவேண்டும் என்று அந்த வண்டிக்காரனுக்குத் திட்டம் செய்தாள். அதற்கு வேண்டிய வாடகை கொடுப்பதாக ஒப்புக் கொண்டாள். வண்டிக்காரன் உடனே வண்டி கொண்டுவந்தான்.

வண்டியிலேறிக்கொண்டாள். தன்னோடு கூட உதவியாக வந்த நல்லறிவுள்ள நாற்கால் பிராணியாகிய நாயின் உதவி ஒன்றே இவளுக்குப் பேருதவியாயிருந்தது. நாய், முன்னோட, அதன் பின்னாலேயே வண்டியை ஓட்டும்படி திட்டம் செய்தாள். சரியான பாதையில் பத்து மைல் தூரம் வண்டிபோன பிறகு, நாய் குறுக்கே போக ஆரம்பித்தது. அவ்வழியில் வண்டி செல்லாதாகையால், வண்டிக்காரன், சாலையின் வழியே வண்டியை ஓட்டினான். நாய், ஓடி வந்து வண்டியை மறிப்பதும், மறுபடியும் குறுக்கு வழியே ஓடுவதுமாய் இருந்தது. சுகுணாபாய், வண்டியை நிறுத்தச் சொல்லி, "நாய் செல்லும் வழியே வண்டி போக வேண்டுமே யல்லது வேறு மார்க்கத்திற் சென்றால் என் மகனைக் காணமுடியாது; இக் குறுக்குவழியில் நானெப்படி நடந்து செல்வேன்? கோஷா உடையோடு கூடிய என்னைப் பல பேர்கள் கண்டு விசாரித்தால், நான் என்ன பதில் சொல்வது? அடா குழந்தாய்! என்னை அவதிப்படும்படி விட்டாயே! உனக்கு இது தர்மமா? உன்னைக் காணாமல், இவ்வவதிக்குப் பயந்து நான் வீட்டுக்குத் திரும்ப மாட்டேன். என்னுடைய சொத்துக்கள் யாவும் எப்படி வேண்டுமானாலும் போகட்டும்! நான் உன் முகம் பாராது திரும்புவேனோ!" என்று வருத்தமடைந்தவளாய், வண்டிக்காரனை நோக்கி, "உனக்கு நாலு நாளைக்குக் கொடுக்கவேண்டிய ரூபாவையும் இதோ தந்துவிடுகிறேன்; எடுத்துக்கொள். நீ, இந்த இடத்திலேயே உனக்கு ஏற்பட்ட காலம் வரையில் இருக்க முடியுமானால் இருக்கலாம்; இல்லாவிட்டால், ஊர்க்குப் போய்விடலாம்" என்று அவனிடத்தில் ரூபாவைக் கொடுத்துவிட்டு, சிறு மூட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு நாயின் பின்னாலேயே குறுக்கே நடந்தாள். அப்போது, பகல் பத்துமணி இருக்கும். வெய்யில் இல்லா

விடினும், வானம் கறுத்து, சின்ன சின்ன நீர்த்திவலைகள் பூமியின்மீது விழுந்தன. மலைச்சாரலிலிருந்து வந்த காற்று, உயிர்ச்சேதமுண்டாக்கும்படி சுறீர் சுறீர் என முகத்தில் குத்துவதுபோல் அடித்தது; பூமியானது, கற்பாறையுள்ள இடங்கள் நீங்கலாக, மற்ற இடங்களில் சேறாகவும், பள்ளமாகவும் இருந்தது. ஜலம் பிரவாகமாய்த் தேங்கியிருந்தது. நாயின் பின்னாலேயே சுகுணபாய் கொஞ்சதூரம்சென்றாள்; பிறகு அவளுக்கு நடக்கவே முடியவில்லை; "பக்கத்தில் தெரிந்த ஓர் கிராமத்திற்குள் சென்று, சற்றே இளைப்பாறிக் களை தீருவோம்" என்று நினைத்தாள். நாயை உபசரித்து கூப்பிட்டுக்கொண்டு அந்தக் கிராமத்தை நோக்கிச் சென்றாள். நாய், தான் போகும் வழியினின்று தனது எஜமானி வேறு வழியாய்ப் போவதை உணர்ந்தும், அதை மறிப்பதை விட்டு, 'எஜமானி அம்மாள் களையுற்றாள்' என எண்ணி அவள் பின் சென்றது. அவள் தன் ஸ்வய உருவோடு அங்குச் சென்றால், பார்ப்பவர்கள் ஏதாவது விபரீதமாய்த் தன் விஷயத்தில் நினைக்கக்கூடும்; ஆண் உடை தரித்துக்கொண்டாலும், தன்னைக் கண்டு பயப்படுவார்கள்; இதற்கென்ன செய்யலாம் என்று சற்று நேரம் யோசித்து கோஷா இல்லாத வேறு சாமான்னிய ஸ்த்ரீகள் மாதிரி உடுக்கக் கருதினாள். தன் மேல் போட்டிருந்த உயர்ந்த சட்டைகளையும், கோஷா உடையையும் எடுத்துவிட்டுத் தன்னிடத்திலிருந்த ஒரு கறுப்புக் கம்பளியை இடுப்பில் கட்டிக்கொண்டு, மேலே பனியன் சட்டை மட்டும் அணிந்துகொண்டாள். செகப்புப் போர்வையால் தலையை ஒருவாறு மூடினபடி மேலே போர்த்துக்கொண்டாள்; இதுவே அத் தேசத்துப் பிச்சைக்காரர்கள் உடுத்திக்கொள்ளும் உடை. தன் கையிலும், காலிலும் கை விரல்களிலும் அணிந்திருந்த ஆபரணங்களை யெல்லாம் ஒன்று தவறாமற் கழற்

றித்தனது மூட்டைக்குள் வைத்துக்கொண்டாள்; இயற்கை அழகுள்ள தன்னுடைய முகத்தை மாற்ற எண்ணங் கொண்டு, சமீபத்தில் கிடந்த காவிக் கற்களைப் பொறுக்கி, ஜலத்தை விட்டு அரைத்து முகத்தில் பூசிக்கொண்டாள். இப்படிச் செய்ததால், தன் உருவம், அடியோடு மாறிவிட்டதா எனச் சோதிக்க, தன்னருகில் நாயைக் கூப்பிட்டாள்; அது கிட்டவர அஞ்சி யோசித்தது. தன்னுடைய குரலைச் செம்மையாக அதற்குக் காட்டினதும், அது கிட்டவந்தது. இதனால், தான் முழுவதுமே பிச்சைக்காரி போல் ஆனதாகத் தெரிந்து அந்த ஊர்க்குள் சென்றாள். அவ்வூர் சாதாரணமான கிராமங்களில் சற்றுப் பெரிய ஊராயிருந்தது. ஐந்தாறு தெருக்களிருந்தன. இவள் யார் வீட்டுக்கும்போகக்கூடாது என்றெண்ணி, பொதுஸ் தலமாய் இருக்குமிடத்தை விசாரித்தாள். அவ்வூரில் பெருமாள் கோவில் நீங்கலாக வேறு பொதுஸ்தலம் இல்லை எனக் கேட்டு, அக்கோவிலுக்குள் செல்ல எத்தனித்தாள். நாயோடு கூட வந்த இவளை அக்கோவில் அர்ச்சகர் பார்த்து, "அடீ பிச்சைக்காரி! உன்னுயோடு இக்கோவிலுக்குள் நுழையாதே! உனக்கு ஏதாவது வேண்டுமானால் இத்தெருக்களில் போய்க் கேட்டுக்கொள்ளலாம்; நீ யார்? இருப்பது எந்தஊர்? தட்டுக் கெட்டு இவ் வூருக்கு வந்தனையோ? உன்னைப்பார்த்தால் பிச்சைக்காரி மாதிரி காணப்படுகிறாய்; நீ உடுத்திக்கொண் டிருக்கும் கம்பளி உடைகளோ அதிக விலையுள்ளவைகளா யிருக்கின்றனவே! காலத்துக்குத் தகுந்தபடி இக்கோலங் கொண்டாயோ?" என்று கேட்டார். சுகுணபாய், "என்ன மதிப்பற்ற வார்த்தை! இவ்வுடையால் நான் கேட்கப்பெற்றேன்! ஐயோ! என்னிடத்திலுண்டான ஒரு பேர் அவாவன்றோ, இப்படிக்கெல்லாம் செய்கிறது! நான் என்னுடைய இடத்தி

விருக்கையில் இவர் இவ் வார்த்தையை உபயோகித்திருந் தால், கொஞ்சத்தில் விடுவேனு! கஷ்டத்தோடு கஷ்டம் எனக்குப் பசியு மதிகரித்திருப்பதால், கொஞ்சம் ஆகா ரத்துக்கு வழி பண்ணிக்கொண்டு பிறகு போய்விட லாம்; இவர் சொல்வதற்கு நான் வருத்தமடைவதிற் பிரயோஜன மில்லை; அறியாமல் ஒரு மனிதன் ஒரு குற்றம் செய்தால், அதைப் பொறுப்பது நல்லவர் களுடைய கடமையல்லவா!'' என மனந்தேறி, ''ஐயா! தாங்கள் கோபித்துக் கொண்டு பேசவேண்டாம்! நான் வெகுதூரம் வழி நடந்து வந்ததால் மிகுந்த சிரமமா யிருக்கிறது; எனது பசிக்கு கொஞ்சம் ஆகாரம் வேண்டும், சற்று நேரம் நான் இளைப்பாறி இருக்க கொஞ்சம் இட மும் தேவை, இதைத் தவிர வேறு எனக்கு எதுவும் வேண்டாம்; அதற்காக ஏதாவது பொருள் கேட்டாலும் கொடுத்து விடுகிறேன்; தயவு செய்ய வேண்டும். நான் இப்பொழுது ஜோதிப்பூரி லிருந்து வருகிறேன்; நான் க்ஷத்திரிய குலக் கைம்பெண். என் புருஷன் இறந்தமை யால் இப்படி வரும்படி நேர்ந்தது! தங்களைப் பார்த்தால் இத் தேசத்தார் போலக் காணவில்லை; இத் தேசத்தா ராயின், எப்படிப்பட்ட ஏழைக ளிடத்தும், மரியாதைத் தாழ்வாய் பேச மாட்டார்கள்! தாங்கள் சொன்னதற்காக நான் கோபித்துக் கொள்ளவில்லை; இப்பொழுது எனது பசிப்பிணியைத் தீர்க்க ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள்'' என்றாள்.

அர்ச்சகர் — ''அம்மா! நீ சொல்வது போல நான் இத்தேசத்தா னன்று; இக்கோயில் பூசை செய் வதற்காகவே, தக்ஷிண தேசத்திலிருந்து வந்திருக்கிறேன், பூஜையோடு பரிசாரகம், சமையல், முதலிய எல்லா வேலைகளும் என்னுடையவைதான். வரும்படியோ மிக

யும் கொஞ்சம்; அதிகாரமோ கணக்கு வழக்கில்லை; வேண்டுமானால், நீயும் கூட அதிகாரம் செய்யலாம்; பத்து வருஷமாய் இந்த ஊரில் இருக்கிறேன்; ஊர் மட்டும் பெரிதுதான்; சந்தேகமில்லை. மணி ஒன்று ஆய்விட்ட தாலும், இன்று விசேஷப்படி திட்டம் இல்லாததாலும், புளியோதனம் அரைப் பட்டை வைத்திருக்கிறேன்; ரொட்டி போட்டிருந்தேன்; அது காலமேயே தீர்ந்து விட்டது; வேணுமானால் அதைத் தருகிறேன்; சாப்பிடு. கிரயம் கூட நீ ஒன்றும் கொடுக்க வேண்டாம்; இன்றிரவு இங்கிருந்தால், உனக்கு இஷ்டமானபடி எல்லாம் செய்து கொடுக்கிறேன்" என்றார்.

சுகுணபாய் — "இப்பொழுது இருப்பது போதுமா னது; தயவு செய்து அதைக் கொடுங்கள்" என்றாள். நாய், தன்னோடு கோவிலுக்குள் வரக் கூடாது என அர்ச் சகர் சொல்லிவிட்டதால், சுகுணபாய்க்கு அதை வெளி யே நிறுத்திவிட்டுப் போக மனமில்லாமல், சாதத்தை வெளியிலேயே கொண்டுவந்து கொடுக்கும்படி சொன் னாள். அர்ச்சகர் அப்படியே கொண்டு வந்து கொடுத்து, அதை வைத்துக்கொண்டு சாப்பிடப் பக்கத்தில் உள்ள சிறு குளத்தையும் காட்டினார். சுகுணபாய் அக்குளக் கரைக்குச் சென்று, தான் பாதி சாப்பிட்டு, மறுபாதியை நாய்க்குக் கொடுத்தாள். அந்த ஆகாரம் அச்சமயம் அவ ளுக்கு அதிக ருசியா யிருந்ததால், அனேகமாய்த் தன் வயிற்றுக்குப் போதுமானதா யிருந்தது; அர்ச்சகர் செய்த உபசாரத்திற்கு மனமகிழ்ந்தவளாய், திரும்பி வந்து அவர் க்கு ஒரு ரூபா கொடுத்து, இளைப்பாறும் இடம் கேட் டாள். அவர், தம் வீட்டைக் காண்பித்து, திண்ணையில் படுத்துக் கொள்ளும்படி சொன்னார். கொஞ்சம் சாதத் திற்கு, ஒரு ரூபா அவள் கொடுத்ததைப் பார்த்து

"இவளை ஏதோ சாமான்ய ஸ்த்ரீயாக நினைத்தோம். பெரிய மனுஷிபோல் காண்கிறது! முக ஜாடையும் அப்படியே யிருக்கிறது! முகத்தில் காவியைப் பூசி அடையாளம் தெரியாமல் மறைத்துக் கொண்டிருக்கிறாள்; இவள் படுத்துக் கொள்ளட்டும்; போகப் போக, சங்கதிகளை விசாரிப்போம்" என்றெண்ணிப் பேசாதிருந்தார் அர்ச்சகர்.

சுகுணாபாய், அர்ச்சகர் வீட்டுத் திண்ணையிற் படுத்துக் கொள்ள, நாயும் அவள் கால்மாட்டிற் படுத்துக் கொண்டது. இவள், முதல் நாள் முழுவதும் தூக்கமில்லாமலிருந்ததனாலும், வண்டியில் குலுக்கப்பட்டு வெகுதூரம் வந்ததனாலும், குறுக்குவழியில் வெகு சிரமப்பட்டு நடந்ததனாலும் அதிக அசதியாய்த் தன் மூட்டையைத் தலையின்கீழ் வைத்துக் கொண்டபடியே, அயர்ந்து தூங்கிவிட்டாள்.

அவள் அயர்ந்து தூங்குவதை அர்ச்சகர் பார்த்து, "இவளை எழுப்பலாகாது" என்று சொல்லிப் போய்விட்டார். இவர் பணத்தின் மேல் மிகுந்த ஆசை உடையவராதலால், தாம், சுவாமிக்கு ஆராதனம் செய்வதில் பரமபக்தரெனப் பார்ப்போர்கள் நினைக்கும்படி, காஞ்சிபுரம் பட்டுக்கரை பன்னிரண்டாறு சோமன் ஜோடி வரவழைத்து, பஞ்சகச்சம் வைத்து பரிஷ்காரமாய்க் கட்டிக் கொண்டு, உடம்பு முழுவதும், முதுகிலும் கூட நாமத்தைப் போட்டுக் கொள்வார். இவர் தக்ஷண தேசத்தில் இந்தளூர் என்கிற திவ்ய க்ஷேத்திரத்தில் பிறந்தவர்; வாலிபத்தில், அத்தியயனம் செய்து கொஞ்சம் சாஸ்திரத்திலும் பயின்றார். வேதம், சாஸ்திரம் இரண்டும் கற்றதனால், இருவித அபிவிருத்தி இவருக்கு ஏற்பட்டது. சாஸ்திர சம்பன்னராகியும், இவருக்கு பொருள் சம்பாதிக்கும் அவாவானது அதிக்கிரமித்திருந்தது. இவர், கோவிலுக்குப் போனால், தீர்த்தப் பிரசாதம் தமக்கு முதலில்

வேண்டு மென்றும், தாம் கொண்டுவந்திருக்கும் தனு வம் — அதாவது சிறிய துண்டு வேஷ்டி — நிறையப் பிரசாதம் கொடுக்கும்படிக்கும் கேட்பார். கொடுக்கா விட்டால், தாம் சாஸ்திரம் வாசித்து என்ன பிரயோசனம்? பெருமாள் கோவிலுக்குப் போனால் வினியோகம் கூட சரியாகக் கொடுப்பதில்லை என்று பல பேரறியச் சொல்லிக்கொண்டு போவார். இவருக்குக் கலியாண மாகி சம்சாரம் வீட்டிற்கு வந்து ஏழெட்டு வருஷங்க ளாகியும் சந்ததியில்லை. இவர் குடும்பத்திற்கு போது மான சொத்துக்க ளிருந்தும், அதில் ஒரு பைகூட எடுத்துச் செலவு செய்ய இஷ்டமில்லாமல், வைதிகத்தில் வரும் வரும்படியைக் கொண்டே சுவல்பமாய்ச் செலவு செய்து மிகுதியைத் தகுந்த வட்டிக்குக் கொடுத்து விடுவார். ஊரில் நடக்கும் திருவத்தியயனம் முழுவதும் இவருக்குத்தான்; கட்டாயம் தாம் ஒரு பிராமணனாக வரிக்கப்பட வேண்டுமென, முந்தியே கேட்டுக் கொள்வார். இவர் தமது தாய் தந்தையர்க்குச் செய்ய வேண்டிய திருவத்தியயனங்களுக்காக, வீட்டில் ஏதோ அசந்தர்ப் பத்தைக் கற்பித்து, பெருமாள் சன்னிதியில் தர்ப்பணம் பண்ணி, கோவிலில் இரண்டு தளிகை போடச் செய்து, அதில் ஒரு தளிகையை இரண்டு பேருக்குக் கொடுத்துவிட்டு, பாக்கி ஒரு தளிகையை தாம் எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து விடுவார். யாராவது கேட்டால், "அண்ணா திருவத்தியயனம் இந்த வருஷமாவது செம்மையாய்ச் செய்ய வேண்டுமென்று நினைத்தேன்; பகவான் அனுகூலம் பண்ணவில்லை; வீட்டில் பொம்மனாட்டிக்கு ஒரு வாரமாய் வாந்தியும் பிராந்தியும் பிரமாதமா யிருக்கிறது: அதனால் கோவிலிலேயே அரிசி, சாமான்கள் எதேஷ்டமாய்க் கொடுத்து, நிறைய தயி

ரும் வாங்கிக் கொடுத்தேன்; கோவில் பரிசாரகன் பிரசாதத்தைத் திருடாமல் வெகு பந்தோபஸ்தாய்க் காத்து, இரண்டு பேர் பிராமணுளுக்கு வினியோகம் செய்து வந்தேன். என்ணை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? என்ணைச் சேர்ந்தவர்கள் யாரையாவது அழைத்து பொங்கச் சொல்வோமென்றால், அவர்களிடத்தில் கொஞ்சம் கூட சுசி ருசி ஆசாரம் கிடையாது. அதனால் மனத்திற்குப் பிடிக்கவில்லை'' என்று சொல்லி விடுவார். ஒரு சமயம் மேற்படி பெருமாள் கோயிலில் உத்ஸவம் நடந்தது. அனேகம் பேர் சாமான்னியர்கள் கோவில் பிரசாதத்தை முன்னிட்டுத் தம்பதி சகிதமாய் வந்து விட்டார்கள்; வீட்டில் வைஷ்ணவ பேர்வழிகள் ஒருவரோடொருவர் சேர்ந்து சாப்பிடா விட்டாலும் பெருமாள் சன்னிதியில், எந்த ஜாதி மதத்தினரும் பார்க்க எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவது வழக்கம்; இக்கொள்கை மிகவும் சிலாக்கிய மென்றே சொல்லலாம். "ஈசுவரன் அவரது சிருஷ்டிப் பொருள்கள் எல்லாவற்றி னிடத்திலும் மிகுந்த கருணையோடு பக்ஷபாத மில்லாமல் இருக்கிறார். 'ஒருவர் உயர்த்தி, மற்றவர் தாழ்த்தி' என்பது. அவருடைய தீர்மானமன்று'' என்பதை இத்தகைய ஒற்றுமை எடுத்துக் காட்டுகிறது; உத்ஸவதினங்களில் ஒரு நாள் சுவாமி நாலுவீதியும் புஷ்பப் பல்லக்கில் வலம் வரும்போது, பக்திமான்கள் பலர் ஆங்காங்கு மண்டகப்படிகள் இயற்றி, அவ்வவ்விடத்தில் சுவாமியை நிறுத்தித் தங்களால் இயன்ற தின்பண்டங்களோ, பழவர்க்கங்களோ அல்லது பிரசாதங்களோ வினியோகிக்கும் வழக்கம்போல இந்த உற்சவத்திலும் சுவாமியை ஒரு மண்டகப்படியில் நிறுத்தி, அந்த இடத்தில் பிராமணர்களுக்கு ஏராளமான பொங்கல், புளியோதனம், ததியோதனம் வினியோகம்

செய்தார்கள். இதைச் செய்விக்கிறவர் யாராய் இருந்தாலும், எடுத்து விநியோகிப்பவர் கோவில் வழக்கமாய் அக்காரியத்திற்கு ஏற்பட்டவர்கள்தான்; அந்தப்படி, கோவில் சம்பந்தமான ஒருவர் விநியோகித்தார். இதில் ததியோதனத்துக்குத் தொட்டுக்கொள்ள ஊறுகாயாக கத்தரிக்காய்க்கறியாவது * விநியோகம் நடந்தது: ஒரு கத்தரிக்காயைப் பதினைந்து அல்லது இருபதாய்ப் பிளந்த ஒரு துண்டு, ஆள் ஒன்றுக்குக் கொடுக்கப்பட, ஒருவருக்குத் தவறிப்போய், இரண்டு துண்டுகள் விழுந்து விட்டன; பக்கத்தில் உட்கார்ந்திருந்த நமது அர்ச்சகருக்கு ஒன்றே மாத்திரம் கொடுக்கப்பட, இவர் அசாத்திய கோபமுள்ளவராய், விநியோகிப்பவரைப்பார்த்து, "இது என்ன அநியாயம், கொஞ்சங்கூட மரியாதையில்லை, யோக்கியதை இல்லை, இவர் வஞ்சகமாகவே கொடுக்கிறார்" என்று எழுந்து விநியோகிப்பவர் கையில் தட்டத்தில் வைத்துக் கொண்டிருந்த அந்தக் கறியமுதை அள்ளினார். இவர் அள்ளுவதைப்பார்த்து மற்றவர்களும் அள்ள, விநியோகிப்பவர் பிடித்துத் தள்ளினார். "ஏற்கெனவே பிரசாத விநியோகம் செய்யும் முறையில் எனக்குப் பாத்தியமுண்டு; மூன்று தலைமுறையாய் எங்கள் வம்சத்தார் செய்துகொண்டிருந்தார்கள். இப்பொழுது அந்நியர் அநியாயமாய் பிடுங்கிக் கொண்டார்கள்; எனக்குக் கிடைக்க வேண்டும்" என்று வழக்கிட்டிருந்த வேறொருவன், இதுதான் சமயம் எனக் கூட்டத்தில் புகுந்து கலகம் செய்ய, அந்தக் கக்ஷியில் அநேகம் பெயரும், இந்தக் கக்ஷியில் வெகு பேர்களும் சேர்ந்து, அடி தடி சண்டை பலமாய் நடந்தது. பிறகு, சுவாமிக்குப் பிடித்துக் கொண்டிருந்த கைதீவர்த்தி, பெரிய தீவர்த்திகளையும் இருகக்ஷிக்காரர்களும் பிடுங்கிக்கொண்டு, ஒருவருக்கொருவர் பொசுக்கிக் கொண்டார்கள். இச் சண்டையில்

இருதிறத்தாருக்கும் காயம் பலம். நமது அர்ச்சகரோ, சண்டை கனத்து மும்முரமாய் நடந்த பொழுது, கையிலிருந்த பிரசாதங்களை வெகு பத்திரமாய் வீட்டிற் கொண்டுவந்து சேர்த்து விட்டு, சண்டை பார்க்கப் போனார். கலகம் பலமாய் நடப்பதாய்த் தெரிந்த போலீஸார் உடனே வந்து கலகத்தை அடக்கி, சுமார் ஐம்பது பேரைக் குற்றவாளிகளாக்கிக் கொண்டு போய்விட்டார்கள். இவ்வளவு பெரிய கலகத்திற்கு அர்ச்சகர் மூலபுருஷ ரானதால், அவரை முதல் குற்றவாளியாக்கினார்கள். இவர், தாம் சண்டையே போடவில்லையே என என்ன சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. பின்னால் கேசு விசாரணை நடந்தது. அவரவர் தங்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள பெரிய பெரிய வக்கில் வைத்து வாதாடினார்கள். அர்ச்சகர் பணத்திற்கும் செலவு வந்துவிட்டது. விசாரணை முடிந்து நியாயாதிபதி இருபக்கத்தாருங் குற்றவாளிகளைக்கண்டு, அவரவர்கள் செய்த குற்றத்திற்காக நாலு நாலுமாதம், அவ்வாறுமாதம் தண்டனை விதித்தார். அர்ச்சகருக்கு ஆறுமாதம் கடுங்காவலும், இருநூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டன. கையிலிருந்த ரொக்க மெல்லாம் செலவழித்துக் கக்ஷியாடினார். ஒன்றும் பிரயோசனமில்லாமற் போயிற்று. ஜெயிலுக்கும் போகவேண்டியதாய் முடிந்தது: அப்பீல் செய்தால் கேஸ் விடுதலையாகி விடும் என்று மற்றவர்கள் அப்பில் செய்ய, இவரும் அதற்காக வேண்டிய ரூபாவுக்காகத் தம் சொத்துக்களையும் நகைகளையும் விற்று முதல்செய்து, பெரிய வக்கீலைத் தருவித்துக் கக்ஷியாடினார். ரூபா செலவழிந்ததுதான் லாபம். அப்பீலில், கீழ்க்கோர்ட்டுத் தீர்மானத்தையே உறுதியாக்கி விட்டார்கள். என்ன செய்வார் பிராமணர்! ஜெயில் வாசம் செய்தார்! ஆறுமாதம் ஜெயிலிலிருந்து விடுதலை

யடைந்து, சமையல் செய்யும் உத்தியோகத்திலும் நன்றாய்க் கயிறு முறுக்கும் வேலையிலும் ஜெயிலிலேயே பழக்கப்பட்டு, அவைகளில் கைதேர்ந்த கெட்டிக்காரரானார். தம் ஊருக்குவர வெட்கம் அடைந்தவராய், ஒரு பெரிய மனிதரைக்கண்டு, தூரதேசத்தில் ஒருவர் கண்ணிலும் தென்படாமல், தாம் இருக்கும்படி ஏதாவது வேலைக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று, கேட்டுக் கொண்டார்; அவர் ஜோதிப்பூர் சமஸ்தானத்தில் வேலை பார்த்து வந்தவரானதால், குல்குல் என்ற இந்த ஊர் பெருமாள் கோவிலில் இவர் அர்ச்சகராக இருக்கும்படி ஏற்பாடுசெய்து அனுப்பினார்; அப்பொழுதே இவர், தன் சம்சாரத்தை அழைத்துக் கொண்டு இங்கு வந்து சேர்ந்தார்; அது முதல் சென்ற பத்து வருஷங்களாக இவ்வூரிலேயே இருக்கிறார்; அன்னிய நாட்டாருடன் இவர் பழகுவதனால், சிற்சில சமயங்களில் இரக்கமும் விசுவாசமும் காட்டக் கற்றுக் கொண்டார். அனவசியமாய் இவர் விஷயம் இங்கு எழுத நேர்ந்த காரணம், சுய நயம் பாராட்டுதல், ஆத்மஸ்துதி, பரோபகார மின்மை, அர்த்தாபேக்ஷை, பொறாமை முதலிய துர்க்குணங்கள் கூடிய ஒருவன் எவ்வளவு வித்வானாயிருந்தாலும், நாசம் அடைகிறான் என்பதைத் தெரிவிக்கும் பொருட்டேயாம்.

அர்ச்சகர் சுகுணாபாய்க்கு நல்ல ஆகாரங்கள் சித்தஞ் செய்து இரவு சுவாமி பூஜையெல்லாம் முடித்துக் கொண்டு, தம் வீடுவந்து, சாப்பாட்டை வைத்துவிட்டு, தம் சம்சாரத்தினிடம் சொல்லி, திண்ணையில் படுத்திருக்கும், சுகுணாபாயை எழுப்பச் சொன்னார். அந்தம்மாள் மகா உத்தமி, பதிசொல்லைப் பணிவுடன் செய்வதில் மிகுந்த திருப்தியுடையவள்; தான் இருக்குமிடம் பிறர் அறியாது வசிப்பவள்; தனக்கு அது வேண்டும் இது வேண்டுமென தன் புருஷனை

ஒருநாளும் கேட்டறியாள்; தான் கட்டிக்கொள்ளும் புடைவைகளுக்குக் கூட தன் அபிப்பிராயத்தைச் சொல்லத்தெரியாதவள்; ஒரு சமயம் அதிக சிரமத்தால் தன் புருஷன் எதாவது கோபித்துக் கொண்டால், பதில் பேசமாட்டாள். திண்ணையில் படுத்துறங்கும் பிச்சைக்காரிக்கு, தான் ஏதாவது உணவு கொடுக்கவேண்டுமென்று நினைத்தும், புருஷன் என்ன சொல்வாரோ என ஏங்கியிருந்தாள்: இவர், அவளை எழுப்பு என்று சொன்ன வார்த்தை இவளுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்ததால், உடனே விளக்கோடு வாசல் திண்ணையில் வந்து அவளை எழுப்பினாள். சுகுணபாய் கண்ணை விழித்துப் பார்த்து, "அடே குழந்தாய்! என்னை எண்டா ஒன்றியாய் விட்டுப் போனாய்?" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள். இந்தம்மாள், "இவள் ஏதோ புத்திர சோகத்தினால், இவ்வேஷத்தோடு வெளியே புறப்பட்டாள்" என்று நினைத்து, "என்ன அம்மா! வருத்தப்படாதே: உன் மகன் சீக்கிரம் வருவான்; எழுந்திருந்து சாப்பிடவா" என்று உபசரித்தாள்.

சுகுணபாய், "தாயே! தாங்கள் அனுக்கிரகித்துச் சொன்ன வார்த்தை எனக்கு க்ஷேமத்தைக் கொடுக்கட்டும். பரதேசியான என்னைத் தாங்கள் உபசரிக்க என்ன தவம் செய்தேன்! ஏதோ அதிக சிரமத்தால் தூங்கி விட்டேன்! எனது நாயும் மெத்தப் பசித்திருக்கிறது" என்று எழுந்து வீட்டிற்குள் சென்றாள். நாய் அவள் பின் வருவது அர்ச்சகருக்கு அதிக கஷ்டமாய் இருந்தது — இதைத் தெரிந்த சுகுணபாய், "சுவாமி! இது அற்பப்பிராணியாதலால், தாங்கள் அருவருப்பை அடைகிறீர்கள். இப்பிராணி செய்யும் உபகாரம் சொல்வதற்கும் கேட்பதற்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கும்; எஜமானரைக் காப்பாற்றும் விஷயத்தில் தன் உயிரையும் சில சமயங்களில் விட்டு

விடும்; உலகத்தில் எந்த பிராணியும் ஒன்றுக் கொன்று உபகாரமாயிருக்கச் சிருஷ்டிக்கப் பட்டனவே யல்லது, 'இந்த ஜந்து உபயோக மற்றது; இதை யேன் கடவுள் உண்டாக்கினார்?' என்று சொல்லக்கூடாது. கேவலம், அற்ப பிராணியான செல் அல்லது கரையானை ஏன் கடவுள் உண்டாக்கியிருக்கவேண்டும்? அதன் உபத்திரவம் அபாரமாயிருக்கிறதே! வீட்டில் உள்ள நல்ல சமான்கள், புஸ்தகங்கள், வேஷ்டி முதலிய அரிய பெரிய வஸ்துக்களையும், நாம் அடிக்கடி கவனிக்காவிட்டால் நாசம் செய்து விடுகிறதே! என்றாலும், அதனால் அனேக உபகாரகங்கள் செய்யப்படுகின்றன. முக்கியமாய் அது, பொருள்களிடத்தில் நாம் அடிக்கடி விருப்பம் கொள்ளும்படிச் செய்கிறது. ஏராளமான சாமான்கள் வைத்துள்ள ஒருவனை அது, 'ஏன் வீணாக எனக்கு இரையாகும்படி வைத்திருக்கிறாய்? தர்மத்திற்குக் கொடு' எனத் தூண்டுகிறது. நமக்கு தொந்தரவு செய்கிற விஷ ஜந்துக்களை அரித்துச் சாப்பிட்டு விடுகின்றது. பெரிய சர்ப்பத்தையும், அது முதலில், அதன் கண்களைக் கரைத்துக், குருடாக்கி, பின், உடம்பைக் கொஞ்சம் கொஞ்சமாய் அரித்துச் சாகவைக்கின்றது. அது 'கரையானாகிய நான் என் வாயீரம் கொண்டு பிழைப்பது போல் நீங்களும் உங்கள் சுயப்பிரயாசையால் சம்பாதித்து சாப்பிடுங்கள்' என்ற நீதியை நமக்குக் கற்பிக்கிறது. நம்மைக் கொல்லும் பாம்பு, ஏன் இருக்கவேண்டுமென்றால், அது உயர்ந்த இரத்தினத்தை நமக்குக் கொடுக்கின்றது; அதன் விஷம் மருந்துக்கு உபயோகமாகிறது. வேறொரு பிராணிக்கு ஆகாரமாகவும் உதவுகின்றது. மருந்து சாப்பிட்டு நீக்கும்படியான வியாதிகளைக் கடவுள் உண்டாக்காமல் நாம் சுகமாய் வாழும்படி செய்தாலென்ன? நாம் ஜென்மாந்திரத்திலோ, அல்லது இந்த ஜன்மத்திலோ, அதர்

மங்கள் செய்திருந்தால், இன்ன விதமான ரோகங்களை அனுபவித்து கஷ்டப்பட்டுச் சாகவேண்டும் என்று ஏற்பட்டிருப்பதால் ரோகங்களை கடவுள் விதித்திருக்கிறார். ஆதலால் நோய்களை நாம் அநுபவிப்பது, நல்ல காரியத்தைச் செய்ய ஏதுவாகிறது. ஆதலால், பொதுவாய், பிராணிகளை வருத்துவதும், அவைகளை அலக்ஷியம் செய்வதும் ஆகாது. தாங்கள் தயை புரிந்து, ஆகாரத்தை வெளியே கொண்டுவந்து போடும்படி செய்வீர்களானால், இந்த இரண்டு ஜீவன்களும் சந்தோஷமாய் உண்டு காலம் கழிக்கும்'' என்றாள். அர்ச்சகர், ''அம்மா! நீ ஸ்த்ரீஜாதியாயினும், விஷயங்களைக் கவனித்துப் பேசுகிறாய்; உன்னோடு நாயும் கூட இருக்கட்டும்'' என்றார். பிராமண ஸ்த்ரீ சாப்பாடு பரிமாறினாள். சுகுணபாய்ச் சம்பிரமமாய்ச் சாப்பிட்டாள்; நாயும் வயிறு நிறைய தின்றது. சுகுணபாய் அந்தம்மாளிடத்தில், இரண்டு ரூபா கொடுத்து, அவள் செய்த நன்றிக்கு உபசாரம் சொல்லி, இராப்பொழுதை அவ்விடத்தில் கழித்து, மறுநாள் உதயத்தில், அர்ச்சகரிடத்திலும் அவர் சம்சாரத்தினிடத்திலும் விடை பெற்று, நாய் வழி காட்ட, அதன் பின் தொடர்ந்து சென்றாள்.

ஒருநாளும் நடந்து வழக்கமில்லாதவளாதலால், மலைப்பாங்கான பாதையில், இவள் நடப்பது மிகுந்த கஷ்டமாயிருந்தது. தான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், தன் மகனைக் காணவேண்டுமென்கிற அவா அதிகமாயிருந்ததால், சிரமத்தைக் கவனிக்காமல் நடந்தாள். சுமார் பத்துமணி வரையில் நடந்து சிந்துமகா நதியின் கிளை நதி ஒன்றைக் கடக்கும்படி நேர்ந்தது. அக்கரையை அடைந்தாலன்றி வேறு தங்குவதற்கு இடமில்லை. அதிக பிரவாகமான ஜலத்தை இவள் பார்த்ததே கிடையாது. ஜலம் தேங்கியுள்ள குளத்திலும், இவள் இறங்கியதில்லை; இந்நதியைப் பார்க்க

வும் பயந்தாள்; நாய் திடீரென ஆற்றில் குதித்து, நீந்தி அக்கரை சென்றது; தன் எஜமானி தன்னோடு வராததைக் கண்டு மறுபடியும் இக்கரைக்குவந்து வாலை யாட்டி யாட்டி நின்றது; இவள், "ஓகோ! என் செய்வது இதோடு நமது பிரயாணம் முடிந்து விட்டதோ! என் மகனை எப்போது காண்பேன்! நான் தைரிய சாலியாயிருந்து பிரயோசனமென்ன? இவ்வாற்றில் இறங்கிச் செல்ல சாமர்த்தியமுண்டோ! திரும்பிப்போக என்மனம் இடம் தருமோ! இங்கு யாரையும் காணமுடியவில்லையே! இந்நதிக்கரையின் பக்கங்கள் அடர்த்தியான மரம் செடிகளாலும், முட்செடிகளாலும் நிரம்பி யிருக்கின்றன. இப்பக்கமாய்ச் சென்று யாரையாவது காணலாம் என்றாலும் கூடவில்லையே!" என நாயைத் தட்டிக் கொடுத்து சற்று நேரம் நின்றாள். ஒரு காகமும் ஆகாயத்தில் பறக்கவில்லை; வெகு நேரமாயிற்று. கடைசியாக ஒரு கூட்டத்தார் வெகு தொலையில் வருவதைக் கண்டு, 'அவர்களிடத்தில் சென்று விசாரிப்போம்' என நடந்தாள். நாய் வழி மறித்தது. இவள் அதைத் தடுத்து மறுபடியும் முன் சென்றாள். மறுபடியும் மறித்தது. இவளுக்கதனால் அதிக கோபம் உண்டாய், பசியும் அதிகரித் திருந்ததால், "நாய் நன்றி அறிவு உள்ளதுதான் என்றாலும், அதன் மிருகத்தன்மையை எப்படி விடும்? நான் எதற்காகப் போகிறேனென்று அறிந்து கொள்ள, இதற்குச் சக்தி யில்லாமல் வீணாய் என் என்னை மறிக்கிறது?" என்று அதைத் தன் கையால் அடித்துத் தள்ளிக் கொஞ்சதூரம் சென்றாள். மறுபடியும் நாய் வழி மறித்தது. சுகுணபாய் அதிக கோபங் கொண்டு அதை உறைக்க அடித்துத் தள்ளிச் சென்றாள். அவ்வடிகளைப் பட்டுக்கொண்ட அந்த நாய் அவள் பின்னேயே சென்றது. அவள் வெகு சீக்கிரத்தில் நடந்து, போகிறவர்

களைக் காண முடியாவிட்டாலும், அக் கூட்டத்தார், யாரோ ஒரு பெண் வருகிறாளென நின்று விட்டார்கள். இவளும் மெள்ள மெள்ள நடந்து அக் கூட்டத்தாரைக் கண்டாள். பத்துப்பேர் ஸ்த்ரீகளும், பத்துப் பெயர் புருஷர்களும், சிறு குழந்தைகளும் இருந்தார்கள். அவர்களைப் பார்த்து இவள், "இதோ இருக்கிற இவ்வாற்றை எப்படிக் கடந்து செல்லலாம்?" என வினவ, அவர்கள், "நீ இருப்பது எவ்விடம்? முன்னே நின்றாயே, அந்த இடத்தில்தான் இறங்கிச் செல்லவேண்டும்; அவ்விடத்தில் துடையளவுக்கு மேல் ஜலமில்லை; அதைத் தவிர்த்து சுமார் நாலு மயில் வரையில் இறங்கும் துறை கிடையாது" என்றார்கள். சுகுணபாய், "நான் ஒன்றியாய் ஆற்றில் இறங்கின வழக்கமில்லை; நீங்கள் கொஞ்சம் தயை புரிந்து, உங்களில் யாரையாவது ஒருவரைக் கொண்டு என்னை அக்கரையேற்றி வைக்கும்படி செய்வீர்களானால், மெத்தப் புண்ணியமுண்டு" என்றாள். அக் கூட்டத்தார்களில் ஒருவன் இவளைப் பார்த்து, சற்றே திகைத்து, வேறுபட்ட முகத்தோடு, "நான் வந்து வழி காட்டுகிறேன்" என்றான்.

சுகுணபாய், அவன் சொன்ன வார்த்தையிலிருந்து மனதில் ஏதோ சந்தேகங் கொண்டவளாய், "நீர் ஒருவர் வந்தால் போதாது; இன்னும் யாரையாவது கூப்பிட்டுக் கொண்டு வாரும்" என்றாள். அவன், சுகுணபாயைப் பார்த்து, "ஏன்? நான் ஒருவன் உனக்குப் போதாதோ! ஏன் வீணாய் இருவர், மூவரை விரும்புகிறாய்? இங்குள்ள யாவரும் எனக்குட்பட்டவர்களே! என்னை நீ இன்னானென்று அறியாய் போலும்! நான் இக்கூட்டத்தாரில் முக்கியத் தலைவன்; காட்டில் வசிக்கும் மகாராஷ்டிர ஜாதியைச் சேர்ந்தவன்; நாங்களெல்லோரும் ஒரே ஜாதியார்கள் தான். காட்டில் வசித்து அங்குள்ள பழங்களையும்

தேன், மெழுகு, கஸ்தூரி, முதலிய பொருள்களையும் காட்டிற்குக் கொண்டுபோய், விற்று, முதல் செய்து, கிடைக்கும் ரூபாய்க்கு வேண்டிய ஆகாரங்களை அப்போதைக் கப்போது நாங்கள் வாங்கிக்கொண்டு வருவது வழக்கம். அதற்காகத்தான் நாங்கள் எல்லாரும் சேர்ந்து சமீபத்திலுள்ள பெரிய ஊருக்குச் சென்று சாமான்களோடு திரும்பி வருகிறோம். எங்கள் காடு இந்நதிக்கு அப்பால்தானிருக்கிறது. நாங்கள் இரண்டு மூன்று மைல் சென்று, பிறகு இந்நதியைக் கடப்போம்; எங்களோடு வந்தாலும் நீ ஆற்றைத் தாண்டிப் போகலாம். எந்த ஊர்க்குப் போகிறாய்? இன்று அஸ்தமனத்திற்குள் நீ போய்ச் சேரும்படியான ஊர் எதுவும் இல்லை, இன்று இரவு எங்குத் தங்குவாய்? ஒரே வெளியாயும் சில இடத்தில் காடாயும் இருக்கிறதே!'' என்றான்.

சுகுணபாய் — ''ஐயா! நான் ஜப்பலபுரியிலிருந்து வருகிறேன், பிச்சைக்காரி யென்பது என்னைப் பார்க்கையிலேயே தங்களுக்குத் தெரியும், ஊருக்கூர் சென்று வயிறு பிழைத்து வருகிறேன்''

தலைவன் — ''உன்னைப் பார்த்தால் பிச்சைக்காரியைப் போற் காணவில்லையே, ஏதோ மனதில் வியாகூலம் கொண்டு போகிறாய் போல் காண்கிறதே!''

சுகுணபாய் — ''எப்படியாவது வைத்துக்கொள்ளும்; இப்படியே என்னை அக்கரை சேர்த்தால் நல்லது''

தலைவன் — ''நான் மட்டும் வருவேன்; உன்னை அக்கரை யேற்றுவேன். இல்லாவிட்டால், எங்கள் எல்லாரோடு நீயும் சேர்ந்து வந்தால், தாராளமாய்ப் போகலாம்'' என்றான். அக் கூட்டத்தில் இவன் ஒருவன் மட்டும் பேசினானே ஒழிய மற்ற யாரும் வாய்திறக்கவேயில்லை.

அந்தச் சமயத்தில் அவர்களைத் தவிற வேறு யாரையும் காணோம். சற்றுநேரம் சுகுணபாய் மனம் தடுமாறி நின்று, "இவர்கள் பின் சென்றால், நாய்க்கு என்னை அழைத்துப் போக வழிதெரியாமல் போய் விடுமே! என்செய்வது? 'ஜலம் கொஞ்சம் தான்! இறங்கலாம்' என்ற பாவனையாய் எனது நாய் வழிமறித்ததே! அதை நான் அடித்தேனே! இவனது உதவியே வேண்டாம்; திரும்பிப்போய் ஆற்றில் நான் தனியே இறங்கி அக்கரை செல்கிறேன்; நதியில் அதிக ஜலம் இருந்து அதனால் இறந்தால்தான் என்ன? இவர்களைப் பார்த்தால் ஏதோ மோசக்காரர்கள் மாதிரி காண்கிறது. இவர்களிடத்தில் எனக்கு நம்பிக்கை யில்லை. இவர்கள் முகங்களைப் பார்க்கும்போதே பயமாயிருக்கிறது; தெரியாத்தனமாய் நான் நாயின் புத்தியைக் கேட்காமல் ஏன் வந்தேன்?" என மனக்கஷ்ட முடையவளாய், "ஐயா! உங்கள் உதவி வேண்டாம்; நானே அவ்வழியாய் ஆற்றைத் தாண்டிச் செல்லுகிறேன்," எனத் திரும்பினாள். அக்கூட்டத் தலைவன் இவளைப் பின் தொடர்ந்தான். சுகுணபாய் "நீரேன் என்னுடன் வருகிறீர்?" என்று கேட்டாள். "எனக்கு அவ்வழியாய்ப் போக வேண்டிய வேலை யிருக்கிறது; நான் வருவதால் உனக்கென்ன கஷ்டம்?" என்றான் தலைவன். இவள் நின்றால் அவனும் நிற்பான்; நடந்தால் கூட நடப்பான்; இப்படிச் சுகுணபாய் ஆற்றுக்குச் சமீபமாகப் போய் சற்று நேரம் நின்றாள். அவளுக்குப் பசி அசாத்தியமா யிருந்தது. கொடும் பசிக்குக் கொஞ்சம் ஆற்று ஜலத்தை அள்ளிக் குடித்து, இறங்கினாள். ஜலம் மிகவும் கொஞ்சமாகவே யிருந்தது. ஆற்றுக்கு அக்கரை சென்றதும், நாய் போகும் வழியே சுகுணபாய் கொஞ்சதூரம் சென்றாள். பெரிய காடு ஒன்று எதிர்ப்பட்டது. தலைவனும் கூடவே வந்தான்.



சுகுணாபாய் ஒரு மரத்தின் வேரில்
கால் மாட்டிக் கொண்டு வீழ்ந்து மூர்ச்சையானாள் —
(35-ம் பக்கம் பார்க்க)

அவனோடு இவள் எதுவும் பேசவில்லை; காட்டிலுள்ள குறுக்குப் பாதைகளில் மனிதர் நடமாட்டமே யில்லை. கொஞ்சதூரம் சென்றதும் சுகுணையால் நடக்க முடியாமல் தத்தளித்தாள். காலை முதல் ஆகாரமில்லாததால் அவளுக்குக் கண்கள் சுழன்றன. தான் நடப்பதே தெரியாமல் சென்றாள்; ஒரு மரத்தின் வேரில் கால் மாட்டிக் கொண்டு திடீரெனக் கீழே விழுந்து விட்டாள். அப்படியே மூர்ச்சையானாள். கூட்டத்தலைவன், "நமது காரியம் பலித்தது; இவளை இப்படியே தூக்கி நமது இடத்திற்குக் கொண்டுபோய் விடலாம்; 'இந்தக்காடு நீங்கலாக வேறு வெளியூர்களுக்குப் போய் திருடுகிறதில்லை' என நாங்கள் பிரமாணம் செய்து கொண்டிருப்பதால், இவ்வளவு தூரம் சும்மா வந்தேன்; நல்ல வேளையாயிற்று" என்றெண்ணி ஒரு சத்தம் கொடுத்தான். இந்த சத்தம் கொடுத்து பத்து நிமிஷங்களுக் கெல்லாம் காட்டுக்குள்ளிருந்து ஐந்தாறு பேர் ஓடிவந்தார்கள். அவர்கள் வந்தவுடன் தலைவன் ஜாடை காட்டினான்; அவர்கள் சுகுணபாயை அப்படியே தூக்கிக்கொண்டார்கள். நாய் குலைத்து அவர்களைக் கடிக்கப்போயிற்று. தலைவன் தன் கையிலிருந்த தடியால் ஓங்கி அதை ஒரு அடி அடிக்கவே, அப்படியே சுருண்டு கீழே விழுந்தது. சுகுணபாயைத் தூக்கிக் கொண்டவர்கள் வெகு வேகமாய்ச் சென்றார்கள்; அக்காட்டிலுள்ள ஒரு பெரிய ஆலமரத்தை யடைந்தார்கள். அவ்வாலமரமானது, சுமார் இருநூறு அடி அகலத்துக்கு அடிமரம் பரந்து நடுவே ஓரிடத்தில் தாராளமாய் ஒருவர் போகும்படியான வழியுள்ள விசாலமான பொந்தை உடையதா யிருந்தது. அதற்குள் தலைவன் உட்பட, ஒவ்வொருவரும் சுகுணபாயை மெள்ளத் தூக்கிக் கொண்டு பிரவேசித்தார்கள். அவ்விடத்தில் ஒரு பக்கம் கற்களினால்

மூடப்பட்ட ஒரு பாதையிருந்தது. அக்கற்களைப் புரட்டி விட்டார்கள். அந்தப் பாதை பூமியின்கீழ் போயிற்று; அவ் வழியே எல்லோரும் கொஞ்சதூரம் சென்று, அவர்கள் வசிக்கும் இடத்தை யடைந்தார்கள்.

காட்டு மகாராஷ்டிரர்கள் என்கிற இக் கொள்ளைக் கூட்டத்தார் அங்கு வெகுகாலமாக வசித்துக்கொண்டு வருகிறார்கள். இந்த இடத்திற்குப்போக ஆலமரத்தின் வழியாகச் சென்றாலன்றி, வேறு மார்க்கமில்லாமல் நாலா பக்கமும் கல்சுவர்போல எழுப்பப்பட்டவையும் வேலிகளைப்போல் அடைக்கப் பட்டவைகளுமான கற்பாறைகளும் நீண்ட புதர்களும் அடர்த்தியாய் வளர்க்கப்பட்டிருந்தன. ஆவ்விடம் சுமார் மூன்று சதுரமயில் விஸ்தீரணமிருக்கும். அது இக் கூட்டத்தார் வசிக்க யோக்கியமான சகலமும் அமையப்பெற்றிருந்தது. மலையிலிருந்து ஓடி வரும் சிறிய கால்வாயின் ஜலம் ஒன்றே இவர்களுக்கு மிகவும் சௌகரியத்தைக் கொடுத்தது. இக் கூட்டத்தார்களின் வீடுகள் ஐம்பதுக்கு மேலில்லை. அவ்வீடுகள் கருங்கல்லினாலேயே கட்டப்பட்டு கற்பாறைகளாலும் மேலே அனேக விதமான கொடிகளாலும் மூடப்பட்டு, வீடுகள் என்பது தெரியாமலே இருந்தன. சில வீடுகள் கற்பாறையின் நடுவே மலைகளைத் துளைத்து அமைக்கப்பட்டிருந்தன. இவர்கள் அனேகமாக பகற்பொழுது முழுவதும் காடுகளில் சஞ்சரிப்பார்கள். ஒருவரிருப்பது மற்றவர்களுக்குத் தெரியாமலும் வழிப்போக்கர்கள் காண முடியாமலும், மரங்களினிடையே மறைந்து திரிவார்கள். வெளியூர்களுக்கு ஏதாவது சாமான்கள் வாங்கப் போகவேண்டுமானால் அவர்கள் நல்லுடையுடுத்தி தாங்கள் சேகரித்து வைத்திருக்கும் தேன், மெழுகு, நெய் முதலியவைகளை எடுத்துக் கொண்டு விற்கப் போவதுபோல் பாவனை காட்டி அவை

களை விற்று முதல்செய்ததனாலும், தாங்கள் திருடி அடக்கமாக வைத்திருக்கும் பொருள்களாலும் தங்கள் தங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை வாங்கிவருவார்கள். இவர்களைப் பார்க்கும் பட்டணவாஸிகள் இவர்களிடத்தில் எவ்விதமான அவநம்பிக்கையும் கொள்ளுகிறதில்லை. யாராவது இவர்களைக் கூப்பிட்டால் பயந்து நடுங்கினவர்கள்போல் பாசாங்கு செய்வார்கள். போலீஸ் அதிகாரிகள் இவர்களைக்கண்டு விசாரித்தால், "நாங்கள் காட்டுப் பூச்சிகள்; விறகு முதலியவைகளை விற்று, குந்தக் குடிசையில்லாமல் கஷ்டஜீவனம் செய்து, கண்டவிடத்தில் படுத்துக்கொள்ளும் பயங்காளி மனிதர்கள்" என்று சொல்வார்கள். அவர்கள் அதை நம்பி இவர்களை விட்டுப்போவார்கள். சில சமயங்களில் இவர்களை அவர்கள் சோதித்தாலும் ஒன்றுமேயிராது. இவர்கள் பகற்காலத்தில் திருடுவதைத்தவிர இராக்காலங்களில் ஒரு நாளும் வெளிப்படுகிறதில்லை. இவர்களை விரட்டியடிக்கக் கூடிய துப்பாக்கிகளோடு செல்லும் யாத்ரிகளைக் கண்டால் இவர்கள் தங்களால் ஆனமட்டும் அவர்களைக் கொள்ளையடிக்க பிரயத்னம் செய்து முடியாவிட்டாலும், அல்லது தங்களை அவர்கள் கொன்று விடுவார்கள் எனத் தெரிந்தாலும் காட்டிலுள்ள மரங்களின் மேலேறி பூமியிலிறங்காமல் மரத்துக்கு மரம் கிளைவழியாகவே தாவிக் குறித்த ஆலமரப் பொந்துக்கு வந்து தங்கள் வீடு சேர்வார்கள். இவர்களுக்குள் தலைவனால் ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளை இவர்கள் கொஞ்சம்கூட தவறமாட்டார்கள். இவர்கள் ஸ்த்ரீகளோ அதிக லக்ஷணமுடையவர்களாயிருப்பதோடும், மரங்களில் ஏறி, தேன் அடைகளிலிருந்து தேனைச் சேகரிப்பதிலும், வில் அம்பு கையிற்கொண்டு மான் முதலிய மிருகாதிகளை வதைசெய்து ஆகாரத்திற்குத் தேடிக் கொள்வதிலும், காட்டெருமைகளால் கற்பாறைகளில்சொரி

யப்பட்டுள்ள பாலைத்தேடிக் கண்டுபிடித்து, அவைகள் வீணாகப் போகாதபடி பந்தோபஸ்துசெய்து நெய்யாக மாற்றி அவைகளைக் குடுவையில் சேகரம்பண்ணுவதிலும் மிகுந்த சாமர்த்தியவதிகளா யிருப்பார்கள். இவர்கள் அணிந்துகொள்ளும் நகைகளோ, பிரதிதினமும் புதிப்பிக்கக்கூடிய ஆபரணங்களாயிருக்கும். காதில் பனையோலைச் சுருளையிட்டு அதில் நல்ல புஷ்பங்களை மாட்டிக் கொள்வார்கள். தலையில் பச்சை இலைகளை விதவிதமாகக் கத்தரித்து அடுக்கிக் கோத்து அணிந்துகொள்வார்கள். கழுத்தில், காட்டுக் குன்றிமணிகளைப் பனை ஓலைகளில் மெழுகினால் ஒட்டி, மாலையாக அணிந்துகொள்வார்கள். மண்ணினால் செய்த சிறிய துண்டுகளுக்குத் தாங்கள் வாங்கிக் கொண்டு வரும் துருநாகப்பட்டைகளை ஒட்டி கழுத்தில் கோத்துப் போட்டுக் கொள்வார்கள். மண்களால் செய்த சட்ட வளையல்களுக்கு நல்ல வர்ணங்கள் கொடுத்து கையில் அணிந்துகொள்வார்கள்: அவர்கள் கையில் அணிந்துகொள்ளும் மோதிரங்கள் யாவும் மாக்கல்லினால் செய்யப்பட்டவைகளே. சதா புஷ்பங்களை தரித்துக் கொள்வதில் மிகுந்த இஷ்டமுடையவர்கள்; அவர்கள் வஸ்திரம் கட்டிக் கொள்வது பெரும்பாலும் இடுப்போடே யிருக்கும். வெளியிற் போகும்போது மட்டும், மெல்லிய நாரினால் தாங்களே பின்னி வர்ணமிட்ட மெல்லிய தாழம்பாயைப் போன்ற ஒருவகை ஆடையை மேலே போர்த்துக் கொள்வார்கள். அசாத்திய பல முடையவர்கள். பெற்றோர்களுக்கு சுசுருஷை செய்வதும் பெரியோர்களுக்கு கீழ்ப்படிவதும் இவர்களுடைய பிடிவாதமான கொள்கை. எவ்வளவு வயது சென்றவர்களா யிருந்தாலும், அவர்களால் உண்டாகும் கஷ்டத்தை கவனிக்கமாட்டார்கள். அவர்களுக்கு சுசுருஷை செய்வதில் இவர்கள் கொஞ்சம்கூட

தவறார்கள். இன்னும் சில உத்தமமான குணங்கள் இக் கூட்டத்தார்களிடத்திலுண்டு. காட்டில் இவர்களில் ஆண் பிள்ளைகள் வழிப்போக்கர்களை வழி மறித்துக் கொள்ளை யடிக்கும்போது, "எங்களை உபத்திரவம் செய்யாதேயுங்கள்; நீங்கள் கேட்டதைத் தந்து விடுகிறோம்" என்று அவர்கள் பணிந்து சொல்வார்களானால், அவர்களை ஒன்றுமே செய்யாது விட்டுவிடுவார்கள். தங்களை யடைந்தோரை ஆதரிப்பதில் மிகுந்த காருண்ய முள்ளவர்கள். தெய்வமென்பது இன்னது. அதற்கு நாம் இந்த மாதிரியான கடமைகளைச் செய்யவேண்டுமென சாஸ்திர புராணங்களில் சொல்லியபடி அவர்களுக்குத் தெரியாவிட்டாலும், ஒரு சிலையை அவர்கள் ஸ்வாமியாகப் பாவித்து தங்கள் சம்பாத்தியத்தில் ஏதோ ஒருபங்கு முதலில் எடுத்து வைத்துவிட்டு பாக்கியிருப்பதைத் தங்கள் சொந்த உபபோகத்துக்குச் செலவிட்டுக் கொள்வார்கள். வருஷத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டுமுறை ஸ்வாமிக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள திதியைக்கொண்டு, தாங்கள் அன்போடு வேண்டிய சாமக்கிரியைகளை வாங்கி அர்ப்பணம் செய்து ஆனந்திப்பார்கள். தங்களுக்குள் கலியாணம் முதலிய விசேஷங்கள் செய்யவேண்டுமானால், ஸ்வாமி உத்தரவு கொடுத்தாலன்றி, ஒருநாளும் செய்வதில்லை. ஜாதியில் கீழ்ப்பட்டவனாயினும், செய்தொழில் தெரியாதவனாயினும், ஒரேவிதக் கொள்கையோடு ஒருவன் தன்னுடைய வாழ்நாட்களைக் கழிப்பானாயின், அவனே சிறந்தவனாகிறான். ஏராளமான செல்வவந்தனாயினும், உயர் குடிப்பிறந்தோன் எனப் பெருமை வாய்ந்தவனாயினும், வீண்வாதம்செய்து தான் செய் கருமங்கள் இன்னது என்பதை அறியாமல், எந்த விதத்திலும் ஸ்திரபுத்தி யில்லாமல் ஒருவன் சதா சஞ்சல சித்தனாய் இருப்பானானால், அவன் எக்குடிப்

பிறந்து யாவனுயிருப்பினும், என்ன பிரயோஜனம்! ஒருவன் எல்லாம் படித்த வித்வானுபிருந்தாலும், அவனிடத்தில் ஊக்கமும் சிரத்தையும் இல்லாவிட்டால், அவன் படித்ததிற் பிரயோஜனமில்லை. இக்காலத்தில் ஒருவன், பிறர்க்கு நற்காரியங்கள் செய்ய சிரத்தை வகிப்பது, அநேகமாய் இல்லையென்றே சொல்லலாம். ஆனால் ஸ்வயகாரியத்தில் சிரத்தை வகிப்பனோ என்றால், அதுவும் இல்லை. முக்கியமாய் சிலர் தாங்கள் செய்யவேண்டிய பிதுர் கர்மாவிலும் கூட அசிரத்தை அடைந்தவர்களாய், தற்காலம் ஏற்றுக்கொண்டிருக்கும் அன்னியகாரியங்களில் ஏனையோர் திருப்தியடைய சிரத்தையை அதிகமாக வகிக்கிறார்கள். வேறு சிலர் ஸ்வய காரியத்தை மறந்து, பொறுப்பற்ற பொது நன்மையான காரியங்களுக்கல்லாமல், விருதாவுக்கு, ஸ்திரீகள் மெச்சிக்கொள்ள அல்ப காரியங்களைப் பிரியத்தோடு செய்ய யத்தனிக்கிறார்கள். வேறு சிலர், தங்களுக்காகவே எக்காரியத்தையும் வெகு சிரத்தையோடு செய்து சாதித்துக் கொள்ளுகிறார்கள். இன்னும் சிலர் சிரத்தை என்பது இன்னது என்று தெரியாமல், முயலுங் காரியங்களில் எல்லாம் கவலை கொண்டு மேற்போக்காய்த் திரிகிறார்கள். இவர்களுக்கு எந்த காரியமும் கைகூடுவதில்லை; மனமும் திர்மதி அடைவதில்லை. சதா கஷ்டப்பட்டும் அல்ப சௌக்கியம் ஏற்பட்டால், அதற்குச் சந்தோஷம் அடைந்து, காலம் கழிக்கிறார்கள். ஆகவே, யார் எக்காரியத்தைச் செய்தாலும், சிரத்தையோடு முயன்று, "செய்வன திருந்தச்செய்" என்றபடியும், "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்றபடியும், "முயற்சி திருவினையாக்கும், முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" என்றபடியும் ஒரே பிடிவாதமாய் சிரத்தையோடு செய்வார்களானால், அவர்களே எல்லார்க்கும் மேம்பட்டவர்களாகிறார்கள்.

மேலே சொன்ன கூட்டத்தார்கள், ஒருவிதமான கட்டுப்பாட்டோடு திருட்டுத் தொழில் செய்வதிலும், ஒருவித முறை யேற்படுத்தி அனுசரித்து வருவதால், அவர்களைச் சுற்றிலுமிருக்கும் பகைவர்களுக்கு இரையாகாமல் செவ்வனே காலம் தள்ளுகிறார்கள்.

இக் கூட்டத்தாரால் எடுத்துக்கொண்டு போகப்பட்ட சுகுணபாய், கண்ணைத்திறந்து கொண்டு, அவர்கள் பிரதேசத்தையும் சுற்றிலும் தான் சந்தித்த கூட்டத்தார்களையும் கண்டு, ஆச்சரிய முற்றவளாய், "எதனிமித்தம் இவர்கள் என்னை இங்குத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார்கள்!" என்னுடைய அருமை நாயையும் காணோமே! இவர்களிடத்திலா அகப்பட்டுக் கொண்டேன்! இனி தப்புவது ஒருநாளுமில்லை; என் மகனைப் பார்க்கவேண்டுமென்ற அவாவும் இதோடு ஒழிந்தது. இவர்கள் என்னை என்ன செய்வார்களோ! தெரியவில்லை; என்னிடத்திலுள்ள சொத்துக்கள் யாவும் எனது சிறிய மூட்டையிலிருக்கிறது; அதை எடுத்துக் கொண்டார்கள்; அதை நான் இலக்ஷியமாக நினைக்கவில்லை. நான் மானபங்கத்தை யடையாமலிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். என்னிடத்தில் கைத்துப்பாக்கி ஒன்று மாத்திரம் இருக்குமானால் இவர்கள் இத்தனை பேரையும் கொன்று விட்டுப்போய் விடுவேன். மனோபலத்தை வகித்த ஸ்த்ரீ, வீட்டிற்குள்ளிருந்து பேச யோக்கியமானவளே யொழிய, வெளியேறி பலபேர் கையில் அகப்பட்டுக்கொண்டால், எதற்குப் பிரயோஜனப்படுவாள்? யுத்த வீரனான எனது புருஷன் இறந்துபோனானென்று கேள்விப்பட்ட பின்னும் உயிரோடு ஏன் இருந்தேன்? அல்லது என்மகன் திரும்பி வருவதை எதிர்பார்த்துக்கொண்டு என் பங்களாவில் அடைந்து கிடப்பதைவிட்டு, அவனை நான் பார்க்கவேண்டுமென்ற ஆவலால் ஏன் வெளி

யேறி வந்தேன்? நானென்ன செய்வேன்? ஸ்ரீராமா! என்னை அவமானப்படுத்தாமல் காப்பாற்றவேண்டும்; இக் குலாந்தகர்கள் என்னிடம் நட்புக்கொண்டாடி, 'காதலி!' யென்றால் கணமேனும் உயிர்தரிப்பேனா? மகா சூரனான என் மகன் நான் இங்கு அகப்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்டான், இக் கொடியவர்களைக் கொஞ்சத்தில் விடுவானோ? இவர்களை எமனுலகம் அனுப்பி என்னை அழைத்துக் கொண்டு போவானே! கண்ணா! என்மீது உனக்குண்டான கருணை யிதுவோ! வெகு சீக்கிரத்தில் என்னை இவர்கள் வதைக்கும்படி விட்டுவிட்டாயே!" எனப் பலவாறாக நினைந்து, கண்களில் நீர் பெருக துக்கித்தாள். கள்வர் கூட்டத்தார்கள் இதைப்பார்த்து, "என் அம்மா! அழுகிறாய்! பசியின் மிகுதியால் வருந்தப்படுகிறாயோ? உன்னிடத்திலுள்ள பொருள்கள் யாவும் நாங்கள் கவர்ந்து கொண்டோம். உன்னை அவ்விடத்திலேயே விட்டுவிட யோசித்தோம். ஆனால், எங்கள் தலைவன் உன்மீது கொண்ட ஆசையால் உன்னைத் தூக்கிக் கொண்டு வந்தோம். உனக்கு வேண்டிய ஆகாரங்களையும் கொடுத்து உபசரிக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார். அந்திப்பொழுதில் வந்து அனேகமாக உன்னைச் சந்திப்பார்; அதற்குள் வேண்டிய ஆகாரத்தைச் செய்துகொண்டு அவர் பார்க்கும் போது நீ சந்தோஷமாயிருக்கப் பிரயத்தனப்படுவாய்; இல்லாவிட்டால், உன் பிராணன் இன்றோடு ஒழிந்துவிடும்" என்றார்கள்.

சுகுணாபாய்,—"என் உயிரை நாசமாய்த்துக்கொள்ளாவிட்டாலும் பிறரால் போக்கடித்துக் கொள்வதிலிருந்த சந்தோஷத்தை யடைகிறேன்" என நினைத்தவளாய், அவர்கள் வேண்டியபடி, தனது பசியைத் தணித்துக்கொள்ள சமையலிடத்திற்குச் சென்றாள். அங்கே

ஸ்த்ரீகள், இவள் வரவை எதிர்பார்த்து நின்று, இவள் வந்ததும் மிக்க உபசாரத்துடன் அழைத்து, உட்காரச் செய்து, தாங்கள் விதம் விதமாய் சமைத்திருந்த ஆகாரங்களைப் படைக்க முயன்றார்கள். சுகுணாபாய், அந்த ஸ்த்ரீகளைப் பார்த்து, "அம்மைமீர்! உங்கள் உபசரிப்புக்கு நான் மெத்த சந்தோஷத்தை யடைகிறேன். இன்றிரவு என் பிராணன் யாருக்கோ இரையாகப்போகிறது. அதற்குள் நல்ல ஆகாரமுண்ண எனக்கு பிரியப்படுமா? நானும் மகாராஷ்டிரஜாதியைச் சேர்ந்தவள் தான். நீங்களும் காட்டில் வாழும் மகாராஷ்டிரர்கள்தான். நீங்கள் சித்தஞ்செய்த ஆகாரத்தை நான் சாப்பிடமாட்டேன் என்ற கொள்கையில்லை. மனச் சஞ்சலத்தால் மதிமயங்கிக் கிடக்கிற எனக்கு இவ்வுணவுகள் வேண்டாவெறுப்பாகும். உடம்பு முழுவதும் அதிக அழுக்குப் படிந்திருப்பதால், குளித்து முழுகி, சரீரத்தைச் சுத்தி செய்துகொண்டு பிறகு கொஞ்சம் தண்ணீர்மட்டும் குடிக்கிறேன். ஸ்நானம் செய்யும் இடத்தை மட்டும் காட்டுவீர்கள்" என்றாள். அந்த ஸ்த்ரீகளில் போக்கியமும், பொறுமையும், அடக்கமும் வாய்ந்த ஒரு வாலிபப்பெண், "நான் குளிக்குமிடம் காட்டுகிறேன், என் பின்னால் வாருங்கள்" என்று பக்கத்திலுள்ள நீரோடைக்கு அழைத்துக்கொண்டு போனாள். அங்கே சுகுணாபாய் சரீரத்திலுள்ள அழுக்கெல்லாம் போக்கி, முகத்தில் பூசியிருந்த காவியைமாற்றி ஸ்நானம் செய்து வேற்றுடை தரித்து நின்றாள். அழைத்துக்கொண்டுபோன பெண் அவளைப்பார்த்து, "மகா உத்தமிபோல் காணப்படுகிற இந்த அம்மாள், கோரரூபம் வாய்ந்த நமது கூட்டத்துத் தலைவரிடம் அகப்பட்டுக்கொள்ளப் போகிறாளே! இவளேன் இவர்களிடம் அகப்பட்டுக்கொண்டாள்? இவளைப் பார்த்தால் ஒரு பெரிய ராஜஸ்த்ரீ மாதிரி காணப்படுகிறது.

காட்டில் வாழும் கள்ளர்களிடம் அகப்பட்டுக்கொள்ளவா இந்த அம்மாள் பிறந்து வளர்ந்தாள்?" என்று அனுதாப மடைந்தவளாய், "அம்மா! தாங்களிருப்பது எந்த ஊர்? தட்டுக்கெட்டு இப்படியும் வந்து அகப்பட்டுக்கொள்வீர்களா? உன்னத உருவுடன் பிறந்த தாம் உதாசனிக்கப் படுவீர்களே! என் செய்வது? என்றாலும், தாங்கள் ஒரு யுக்தி செய்வீர்களானால் நீங்கள் சௌக்கியமாய் இங்கிருந்து வாழ்ந்துகொண்டிருக்கலாம்; உங்களுக்கு எவ்வித் தொந்தரவுமில்லை. சாப்பாட்டிற்கு வேண்டியதை அவர்களே கொடுத்து உதவுவார்கள். விளக்குவைத்துக் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தலைவர் தங்களிடம் வந்து விசாரிப்பார்; அப்பொழுது அவர் காலில் தாங்கள் விழுந்து, 'என்னைத் தங்கள் புத்திரியாகப் பாவித்துக் காப்பாற்ற வேண்டும்' என்று கேட்டுக்கொண்டால், உடனே பேசாமல் போய்விடுவார்; நாளைமுதல் உங்களை யாரும் எதுவும் சொல்லமாட்டார்கள்; கற்புக்குப் பங்கம் வராமல் காலம் தள்ளலாம்; எதிர்த்து முரட்டுத்தனம் செய்தாலோ கத்தியால் வெட்டுண்டு சாகவேண்டியதுதான்" என்றாள்.

சுகுணாபாய், அவள் சொல்வதைக் கேட்டு "காலில் விழுந்தால் காப்பாற்றும் குணம் உண்டோ?" என்றாள். அப்பெண் "ஆம்; அதை ஒரு முறையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றாள்.

சுகுணாபாய் — "அரசன், ஆசான், அன்னை, பிதா, என் அன்பிற்குகந்த நாதன் இவர்களுக்கு வணங்கி, ஆசிர்வாதம் பெற்ற என் சிரசு, கேவலம் அசேதனம் போன்ற காட்டு முரட்டுத் தனம் வாய்ந்த இக்கொடியோனிடத்திலிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு அவனை வணங்குமா! ஒரு நாளுமில்லை; சாவதே நிச்சயம்"

எனத்தேர்ந்தவளாய், அப்பெண்ணின் அரிய குணத்திற்கு மெச்சி, அவளுக்குப் பின்னே, ஆகாரம் சித்தமாய் இருக்கும் வீட்டுக்குச் சென்றாள். இவள், அதிக உணவை அபேக்ஷிக்காமல் கொஞ்சமாகப் புசித்து விட்டு, அவர்களோடு தன் தலைவிதியை நினைத்து பேசிக்கொண் டிருந்தாள். இரவு எட்டு மணிக்கு மறுபடியும் அந்த ஸ்த்ரீகள் இவளைச் சாப்பிட உபசரித்தார்கள். இவள் ஒரே பிடிவாதமாய் வேண்டாமென்று சொல்லிவிட்டாள். சுமார் பத்து மணிக்கு, இவளை எல்லாரும் தனியே ஓரிடத்தில் இருக்கச் செய்து, வேறு எங்கேயோ மறைந்து கொண்டார்கள்; அப்பொழுது தலைவன், முன்னே காட்டில் தான் இருந்ததுபோலல்லாமல், திருடிவைத்திருந்த உயர்ந்த வஸ்திரங்களால் தனது கறுத்துத் தடித்த அங்கத்தை அலங்கரித்து, கைகளில் காப்புகளை முழங்கை வரையில் மாட்டிக்கொண்டு விரல்களுக் கெல்லாம் உயர்ந்த மோதிரங்களணிந்து, தனது சிறிய தலையை அங்கத்துக்குத் தக்கபடி பருத்துக்காட்டும் பொருட்டு அனேக முழ நீளமுள்ள கறுப்புத தலைப் பாகை கட்டிக் கொண்டான். முகத்து மீசை சற்றே வெளுத்ததாயினும், கறுத்த மை கொண்டு திருத்தி, பெருத்துக் காட்ட உபமயிரும் வைத்து காதளவு முறுக்கி விட்டுக் கொண்டான். கழுத்து முதல் கறுத்துத் தடித்த மயிரால் சரீர முழுவதும் மூடப்பட்டிருந்தது. தான் நல்ல வாசனையுடையவனாக யிருக்க வெண்ணி காட்டிலுள்ள அகில், சந்தனம் முதலிய உயர்ந்த வாஸனைத் திரவியங்களை அரைத்து தடிப்பாய்க் கரைத்து மார்புமுழுவதும் மொத்தாகாரமாய் பூசிக்கொண்டான். நீளமான மயிரோடு சந்தனமும் கலந்து சரீரத்தில் வளைவு வளைவாக கறுப்புக் கோடுகள் இட்டதுபோல காணப்பட்டது. இவ்வளவு சிறந்த அலங்காரத்தோ டிருந்தவன், காலில் முரட்டுச் செருப்

பைப் போட்டுக் கொண்டு கையில் உருவின கத்தியோடு, இருவர் பின்தொடர, வெற்றிலை பாக்கை வாயில் போட்டுத் துப்பிக் கொண்டே சுகுணாபாய் இருக்குமிடத்துக்கு வந்து, அங்கே போட்டிருந்த கருங்கல் நாற்காலியின் மேல் உட்கார்ந்தான். சுகுணாபாய் இவனைப் பார்த்து, விலவிலக்கவளாய், "ஐயோ! இக்கத்திக்கா இன்று இரையாகப் போகிறேன்! ஒருவனுக்கு மரணமானது, காசியிலாவது அல்லது புத்திரர் முன்னிலையது நேரிட்டால், விசேஷமெனப் பெரியோர்கள் சொல்லுவார்கள். அவ்விரண்டுமில்லாமல், அனாதைப் பிணமாய் சாகப்போகிறேன்! இவனைக் கெஞ்சிக் கேட்பேன் என்பது ஒருநாளுமில்லை! மானத்தைக் காப்பாற்றும் பொருட்டு உயிரை விட்டுவிடுவது தான விசேஷம். பகைவரைப் பணிவது தீரமற்ற திடனற்ற அற்பர்களுடைய செய்கையன்றோ! இவன் என்னை என்ன கேட்கப் போகிறானோ தெரியவில்லை! எது கேட்டாலும் தக்கவாறு விடையளிக்கச் சித்தமாயிருக்கிறேன்," என நினைந்து தலைகுனிந்து சரீரம் வெந்து அவயவங்களை அவன் காணமுடியாமல் சுருக்கிக்கொண்டு, தன்னுடைய முழங்கால்களை இரு கைகளினாலும் இறுகக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். தலைவன், "பெண்ணே! நீ நல்ல அழகாயிருக்கிறாயடி, கண்ணே! என் முன்னே, எழுந்து வாடி; சொன்னேனே" என்றான்.

சுகுணாபாய் — "உன் முன்னா! ஹா! ஹா! சந்தோஷம், நன்றாய்ச் சொன்னாய்! உனக்கேது, இந்த நீது; அடிக்காது: என்மீது, ஏன்வாது; சொன்னேன்; சொன்னேன், போ! போ! மூடமே."

தலைவன் — "என்ன! என்ன! ஆ! ஆஹா! அடேடே! நல்ல வித்தைக்காரி; விளையாட்டுநாரி; உன்னைக்கோரி, கொண்டுவந்தேன் சோம்பேறி" என, மனம்

தேறி "மூடமே! என்று சொன்ன வார்த்தையின் ருசி கற்கண்டைப்போல் தித்திக்குதடி மானே! உன்னை நானே, சும்மா விடேனே!" என எழுந்தான். சமீபத்தில் சென்றுவிட்டான் மகாபாதகத் தலைவன். அதைப் பார்த்தாள் மகா பதிவிரதையான சுகுணையாய். தனக்கொன்றுமே தெரியாமல் விழித்தாள். "ஐயோ! கிட்ட நெருங்கிவிட்டானே!" என மனம் பதைத்தாள்; உயிர் துடித்தாள்; மெய் சிலிர்த்தாள். "ஓகோ! வந்ததே மோசம்! என் பிராண நாதனிருந்தால் இப்படிப்பட்ட ஆபத்து எனக்கு நேரிடுமா? என் அரிய கண்மணியை நான் தேடப் புறப்பட்டவேளை எவ்வேளையோ! என் செய்வேன்! வைகுண்டவாஸா! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! கண்ணா! மணிவண்ணா! என்னைக் காத்தருள்வது உனது கடமை; நான் தனியாய் இங்கு அகப்பட்டுக்கொண்டேன். என்னைக் கொன்றுவிட்டால் அதிக சந்தோஷம் என நினைந்து இங்குத் தங்கினேன். இந்த மகாபாதகன் அப்படி என்னைச்செய்ய விரும்பாமல் கத்தியைக் கீழே எறிந்துவிட்டு என் சமீபத்தில் வந்துவிட்டானே! கொடியவன்! இச்சமயம் என்னைக் காப்பாற்றுவது உனது கடமை. திரௌபதிக்கு வந்த ஆபத்தைக் காத்து மான சம்ரக்ஷணம் செய்த தேவனல்லவோ நீ! அனேக ஆயிரம் வருஷங்களாக முதலையால் பிடிக்கப்பட்ட கஜேந்திரன் ஆதிமூலமே என்று அலறும் காலத்தில், அதற்கு அபயஹஸ்தம் கொடுத்துக் காப்பாற்றின ஹரி வாஸுதேவனல்லவோ நீ! கோவர்த்தனகிரியைக் குடைபிடித்து, கோபாலர்களை கனத்தமேக வருஷத்தினின்றும் காப்பாற்றின பிரபுவல்லவோ நீ! இச்சமயம் என்னைக் காப்பாற்றுவது உனக்கோர் அஸாத்தியமோ!" எனத் தனது குலதெய்வமான கோபாலகிருஷ்ணனை ஸ்தோத்திரித்தவளாய், மானஸிக பூஜைசெய்து

அவனது தாமரை மலர்ப்பாதங்களை கண்ணில் ஒத்திக் கொண்டு சற்றுநேர மிருந்தாள். அப்போது இவளுடைய மனம், தைரியத்தை யடைந்தது, உடனே யெழுந்தாள். தனக்கு உண்டாயிருந்த பயத்தை ஒழித்தாள். தலைவனைப் பார்த்து, "அடே பரமதுஷ்டா! நடுக்காட்டில் நான் சோபமுற்றுக் கிடக்கும்போது, ஒருவரு மறியாமல் என்னை இங்குக் கொண்டுவந்தாய்! அதுவும் அன்றி அன்னிய ஸ்த்ரீயாகிய என்னை அருவருக்கக்கூடிய வார்த்தைகள் பேசத் துணிந்தாய்! ஹே மந்தபுத்தியுடையவனே! உனது குலப்பெயரைக் கெடுக்கவந்த கடையவனே! துஷ்டர் கூட்டத்தில் சேர்ந்தவனே! கொள்ளை அடிப்பதிற் கை தேர்ந்தவனே! நீ ஒரு பலவானா! காட்டில் வாழ்ந்தாலும் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவனா! நீ ஆண்மைத்தனமிருந்ததனால் இக்கூட்டத்தின் தலைவனாக இருந்தால் இக்கொடிய காரியம் செய்யத்துணிவையா! நீ கொள்ளும் எண்ணத்திற்கு நான் ஒருகாலும் இணங்கேன்! நீ தைரியத்தோடு பேசும் வார்த்தைக்குச் சுணங்கேன்! சீ, சீ! தூரநில், கிட்ட நெருங்காதே! நீ இங்கிருப்பது என் மகன் உணர்வானாயின், நான் உன்னிடம் ஒன்றியாக அகப்பட்டுக் கொண்டேன் என்பதை அறிவானாயின், உன் தலையை ஆயிரம் சுக்கலாக உடைத்துச் சித்திரவதை செய்வானே! துரோகி! ஏ, பாபி!" என்று அதட்டிப் பேசினாள். தலைவன் இவ்வார்த்தைகளால் அதிக கோபத்தை யடைந்தானாயினும், சற்றே பொறுத்துக் கொண்டு, "அடி! வீணா ஏன் பிதற்றுகிறாய்! என்னிடத்தி லகப்பட்டுக் கொண்ட உத்தம பழத்தை நான் புசிக்காமல் விடுவேனா! இங்குள்ள யாவரும் எனக்கு அடங்கினவர்கள் என்பதை அறியாயோ! உன் மகன் எங்கிருந்து இங்கு வந்து என்னை வதைக்கப் போகிறான்! இயமன் கூட என்னிட வாப்

பயப்பட்டு சற்று விலகி நிற்பானே! என்னுடைய பயங்கர மான கோபத்துக்கு உள்ளாகாமல், வெறிகொண்ட உன் மனத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு, என் வசமாக வேண்டிய எண்ணத்தைக் கைக்கொள்வாய்! அதட்டிப் பேசு வதால் உன்னை விடப்போகிறதில்லை! நீ எனது வார்த்தைக் கிணங்கா விட்டாலோ இதோ இருக்கும் என் கட்கத்துக்கு உனது சிரசைக் காப்புக் கட்டி விடுவேன்!'' என்று சொல் லிக் கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டு கருங்கல் நாற் காலியின் மேல் உட்கார்ந்தான். கால் மேல் காலைப் போட்டுக் கொண்டான், வெருட்டி உருட்டிப் பார்த் தான்; அவள் சொன்ன வார்த்தையின் அருத்தம் அச்சம யம் அவன் மனதில் உறுத்த, பல்லை நெறு நெறுவென்று கடித்து, தலையில் தேர்வடம் சுற்றினது போல் சுற்றிக் கட்டியிருந்த முண்டாசைக் கழற்றித் தூர எறிந்து, பனங் காய் போன்ற தன் தலையை ஆட்டி, "பேஷ்! பேஷ்! சபாஷ்! சபாஷ்! என்னை இது வரையில் இம்மாதிரி யாரும் சொன்னதில்லை'' என சார்மணை போலிருந்த மற்றொரு கல்லின் மேல் சார்ந்தான். "ஆஹஹா! உஸ்! அடாடடா! அடே! வெளியிலிருக்கிறவன் யாரடா! ஓடிவா! சீக்கிரம்! கொட்டினதடா தேள்! பார் பக்கத்தில்; பார் எங்கே, நல்ல தேள்! மலைப்பாறையிலுள்ள தேள்! நன்றாய் முது கில் மாட்டிவிட்டது'' என்று சொல்லி வாய் மூடி கருங்கல் நாற்காலியி லிருந்தபடியே அப்படியே கீழே விழுந்துவிட்டான். வெளியி லிருந்தவர்கள் உள்ளே ஓடி வந்து பார்த்தார்கள்; கற்பாறைகளில் தேள் விசேஷம். ஆகையால், இவன் கள்ளர்களுக் கெல்லாம் தலைவன் என் பது போல, தேள்களுக் கெல்லாம் அதிபதியான ராஜத் தேள், நல்ல சிவந்த நிறத்தோடு அரையங்குலத்துக்கு கொஞ்சம் குறைவான நீளமுள்ளதாய், கடுகு போன்ற

மணிகளடங்கிய கொடுக்கோடு, இரண்டு அங்குலம் மூன்று அங்குலம் நீளமுள்ள இரண்டு மூன்று தேள்கள் முன்னே போகவும், நாலு அங்குல நீளமுள்ள ஒரு பெரிய நண்டு தெறுக்காலின் மேல் ஏறிக்கொண்டு, இரண்டு மூன்று தேள்கள் பின்னே செல்லவும், தான் நடுவிற் போகக் கண்டார்கள். ராஜத்தேளை யடிப்பது மிகுந்த கஷ்டம்; மற்றத் தேள்களை அடிக்கக் கழியை எடுத்துக்கொண்டு, அவைகளின் சமீபத்திற் போகும் போது, வெகு சிக்கிரத்தில் கல்பாறையின் இடுக்கில் அவைகள் அனைத்தும் மறைந்து விட்டன. ராஜத்தேள் ஒரு நாளும் கொட்டுவது வழக்கமில்லை. அது கொட்டி விட்டால் மறுபடியும் பிழைப்பது கிடையாது. தலைவனை, ராஜத்தேள் கொட்டிவிட்டதோ என, அங்குள்ளார் சந்தேகித்தார்கள். தேள் கொட்டிய சமாசாரம் எல்லாருக்கும் தெரியவே, அங்குள்ளோர் யாவரும் ஒரே கூட்டமாய்க் கூடி விட்டார்கள். தங்களிடமுள்ள தேள்கொட்டும் மருந்துகளை வேண்டிய மட்டும் போட ஒன்றும் பிரயோசனமில்லாமல் போய்விட்டது. தேள் கொட்டிய ஒரு மணி நேரத்திற் கெல்லாம் தலைவனது சரீரம் வெந்து போனது போலப் போயிற்று. ஆகையால், அவன், வீறிட்டு இரண்டு முறை கத்தினான்; அப்படியே பிராணன் போய்விட்டது. ஒரே கூட்டமாகச் சுமார் இருநூறு பேருக்குமேல் சேர்ந்து அவன் இறந்து போனதற்காகத் துக்கமுற்றுக் கத்தினார்கள்; அவனுடைய பத்தினிமார் பத்துப்பேர்களும், ஒரே ஒரு புதல்வியும், கணக்கில்லாத விசனத்தை அடைந்தார்கள். தாங்கள் இனி எப்படி ஜீவிப்போம் எனத் தவித்தார்கள். சுகுணபாய் இவனுக்காக விசாரப்படுகிற இத்தனை பேரையும் பார்த்து, தானும் மனதில் கஷ்டத்தை அடைந்தவளாய், “அடே! பாதகா! அநியாயமாய் மாண்டாயே! எனக்கு

வந்த எமன் உன்னையா கொண்டு போகவேண்டும்? உனக்காக வருத்தப்படுகிறவர்கள், வெகு பேரிருக்க, இவ்வளவு பேரையும் தவிக்க விட்டு எமனுலகம் சென்றாயே! மகா பாபியாகிய என்னை நீ விரும்பி, இங்கு அழைத்து வாராவிட்டால், நீ ஒருகாலும் சாகமாட்டாயே! உயிரோடு சௌக்கியமாய் இருப்பாயே!" என வருத்த மடைந்தாள்.

ஸ்த்ரீகளெல்லாரும் ஒன்று சேர்ந்து, மகாலக்ஷ்மி போல் அமர்ந்திருக்கும் சுகுணபாயிடம் வந்து, "அம்மா! மகா உத்தமியான தங்களை அபேக்ஷித்தபடியால், எங்கள் தலைவர் இந்த கோர தண்டனையை அடைந்து மாண்டார்; தாங்கள் இருப்பது எந்த தேசமோ! எந்த இராஜகுடும்பத்தில் பிறந்தீர்களோ! இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டீர்களே! அநியாயமாய் எங்கள் தலைவர் போய்விட்டாரே! நாங்கள் அநாதைக ளாய்விட்டோமே! மற்றும் இங்குள்ள ஆண்பிள்ளைகள் யாவரும் அவரைப் போல அவ்வளவு சாமர்த்தியவான்கள் அல்லவே! எங்களுக்குள் அனேகர் இங்குப் பலவந்தமாய்க் கொண்டுவரப்பட்டவர்களே! சிலர், காலில் விழுந்து காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டபடியால் மானபங்க மடையாமலிருக்கிறார்கள்! சிலர் அவர்களுக்கு இஷ்டமான இங்குள்ள புருஷரை மணந்து, மக்கட்பேறடைந்து சுகமாக காலம் கழிக்கிறார்கள். பரம்பரையா யுள்ளவர்களும், இங்கு வந்து அதிககாலிருந்திருப்பவர்களுமே, வெளியே சாமான்கள் கொள்ளவும் கொடுக்கவும் போவார்கள்; மற்ற ஸ்த்ரீகள் எக்காரணத்தினாலும் வெளியே அனுப்பப்பட மாட்டார்கள். இனி எங்கதி எப்படியாகுமோ!" என வருத்த மடைந்தார்கள். அங்குள்ள புருஷர்கள் எல்லாரும் ஒன்று கூடி, தலைவன் இறந்து போனதற்கு வருந்தி, அவனைத் தகனம் செய்யப் பிரயத்தனம் செய்தார்கள்; தலைவனது சரீரம் முழுமை

யும் தேளின் விஷத்தால், கொளகொளத்துப் போய், எங்குத் தொட்டாலும் சதைக்குள் கை அழுந்துவதும் அல்லது சதைகள் மாமிசங்களோடு பிய்ந்து விடுவதுமாயிருந்தது. காட்டுத் தழைகளைக் கொண்டுவந்து, அவனது சரீரத்தின் மேல் போட்டு, மாமிசங்கள் சிதறுமற் கட்டி, அப்படியே எடுத்துப் போய்த் தகனம் செய்தார்கள். மறுநாள் முழுமையும் தலைவன் இறந்ததற்காக எல்லாரும் வருத்த மடைந்தார்கள்; எந்த வேலையையும் கவனிக்க வில்லை. அதனால் சுகுணபாயைப் பற்றிக் கவனிப்பார் யாருமில்லை. அவள் தனியே "ஒருவரிடமும் சொல்லாமல் ஓடிவிடலாமோ!" என யோசித்தாள். தன்னோடு முதல் நாள் முதல் மிகுந்த பிரியத்தோடு பழகிய சிறு பெண், "வெளியே போக முடியாமல் பெரிய கற்பாறையால் ஏறும் வழி அடைக்கப் பட்டிருக்கிறது; அதோடு, கருங்கல்லாகிய கதவு, ஏறும் வாசற்படியிற் சாத்திப் பூட்டிட்டு இருக்கிறது; இவைகளைப் பேதித்துப் போவது கஷ்டம்; எவராலும் முடியாது" என்று தான் வேறு விதமாய்க் கேட்டதற்குப் பதில் சொல்லி யிருந்தாள். இன்னும், அந்தப் பெண், "என்னைச் சிலர் சூதாக அழைத்து வந்தார்கள்; நானும் அவர்களும் காட்டு வழியே வந்து கொண்டிருந்தோம்; எங்களை இக்கள்வர்கள் மடக்கினார்கள்; அவர்கள் இவர்களோடு சண்டையிடும்போது, இவர்களில் சிலர் மரத்தினடியிலிருந்த என்னைப் பிடித்து இங்குக் கொண்டுவந்தார்கள்; சில மாதங்களுக்கு முந்தித்தான் நான் இங்கு வந்தேன்; நான் வணக்கமாகத் தலைவன் காலில் விழுந்தேன், அவன் என்னை மன்னித்தான்" என்றாள்.

சுகுணபாய் அப்பெண்ணோடும் மற்றவர்களோடும் பழகிக் கொண்டு, அவர்கள் தரும் ஆகாரத்தை உண்டு, அவ்விடத்தில் இருந்தாள்.

இரண்டாவது அத்தியாயம்.

ஸிந்து மாகாணத்தைச் சேர்ந்த ஊமர் கோட்டை என்னும் பட்டணத்தில், சட்டோஜி பான்ஸலே என்கிற ஒரு வாலிபன் இருந்தான். அவன் பாரஸீகர்கள் வமிசத்தைச் சேர்ந்தவன்; கைத்தொழில்களில் நிபுணன்; சிற்ப சாஸ்திரத்தில் பாண்டித்யத்தை அடைந்தால் மட்டும் அவ்வகுப்பினர் ஒப்புக்கொள்வார்களே யன்றி, அதை விட்டு வேறு எந்தத் தொழிலும் செய்ய அச் சாதியார் இடம் கொடுப்பதில்லை. இவனுக்கு ஏராளமான சொத்துக்கள் தன் தகப்பனால் தேடிவைக்கப்பட்டிருந்தன. அவற்றைக் கையாடுவதில் சரியான திறமை வகிக்காதவனாதலால் இவன், வீண் செலவிட்டான்; அப்பன் சம்பாதித்த பொருள்களை லோகோபகாரமாகப் பயன்படுத்துகிற வகை இன்னதென்று அறியாதவனான இவன், பல பேர்களுடைய ஆலோசனைகளைப் பெரிதும் ஏற்றுக்கொண்டு, அவ்வழியே நடந்து வியாபாரத்திலும் விவகாரத்திலும் மிகவும் செலவிட்டனன். என்ன செலவழித்தாலும் சொத்துக்கள் குறையாமல் இருந்தன. இவன் பாடலிபுரமென்னும் ஊரில், தவளாபாய் என்கிற அழகு பொருந்திய இளம்பெண்ணை விவாகம்செய்து கொண்டிருந்தான். அம்மாது, நீதிசாஸ்திரம் தர்மசாஸ்திர முதலியவைகளை நன்ருய் உணர்ந்து, புருஷனுக்கு அடங்கினவளாய், அவன் தன்னை எவ்வழி செலுத்த விரும்புகிருனே, அவ்வழியே தானும் நடந்து வந்தாள். இவள், அதி *வாலையானதால், சொத்துக்களின் விபரம் தெரியாதவளாய், அதைப்பற்றிக் கொஞ்சம்கூட கவனியாதிருந்தாள். இவள் கணவன், சிற்ப சாஸ்திரத்தில் நிபுணனுயினும்,

* வாலை = இளம் பெண்.

தான் வேலைசெய்துதான் காலக்ஷேபம் செய்யவேண்டுமென்கிற ஆவசிகம் இல்லாமையால், கையிலுள்ள பொருள்களைச் செலவழித்து, அதிசயமான பொருள்களைத் தருவிப்பதும், தான் நூதனமாக ஒரு சிற்பத்தைச் செய்வித்து, அதைச் சொற்பவிலைக்கு விற்பதுமே இவனது வாடிக்கைத் தொழிலாக இருந்தது. இவனது தகப்பனார், கேவலம் தரித்திரமான ஓர் ஏழைக்குடியில் பிறந்தவர்; அவர் தமது மதாசாரப்படி சிற்பத்தொழிலை அதிகமாகக் கற்றுணர்ந்திருந்தாலும், அதில் தமக்கு நல்ல ஊதியம்வராமை கண்டு, வியாபாரத்தில் புகுந்தனர். அதனால், அவர்கள் மதத்தினர் ஒரு கட்டுப்பாடு செய்து அவரைத் தங்கள் ஜாதியினின்றும் நீக்கிவிட்டார்கள். ஏழ்மையும் இளமையும் வாய்ந்த அவர் தம் சம்சாரத்தோடு வேறோரிடத்திற்குச் சென்று, அங்கே வறுமையிலும் செம்மையாக இருக்கவேண்டுமென்று அபேக்ஷித்து, சீர்மையிலிருந்து வந்த விதவிதமான சட்டைப் பொத்தான்களையும், ஊசி, நூற்செண்டுகளையும், நெருப்புப் பெட்டிகளையும், ஒரு மரத்தட்டில் எடுத்துக்கொண்டு, ஊர் ஊராய்த் திரிந்து விற்பார். அன்றாடம் கிடைக்கும் இலாபத்தில், தமக்கும் தம்முடைய பத்தினிக்கும் கூடியவரையில் போதுமான சுவல்ப தொகையை எடுத்துக்கொண்டு பாக்கியைத் தாம் ஏற்படுத்தியிருக்கும் சொற்ப முதலோடு சேர்த்துவிடுவார். இரண்டொரு வருஷத்துக்கெல்லாம் இவர் கைக்குக் கொஞ்சம் ரூபா சேரவே, தாம் சுவல்பமாக வாங்கிக்கொண்டிருந்த சாமான்களைப் பெரிய கடைகளில் மொத்தமாக வாங்கி அதைத் தாம் குடியிருக்கும் வீட்டில் வைத்துக்கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக வெளியூர்களுக்குப் போய் விற்று வந்தார். அக்காலத்தில் அவர், தமக்கு வருவாய் அதிகமாயினும், அதிக செலவு செய்தவரல்லர்.

கையில் பணம் மிகுதிப்படவே, பெருத்த வியாபாரிகளைப் போலத் தாமும், மொத்தமாக, அயல்நாடுகளிலிருந்து சாமான்களை வரவழைத்து, அவ்வூரிலேயே ஒரு கடையை அமர்த்திக்கொண்டு, அக்கடையில் வியாபாரம் செய்து வந்தார். இவரிடத்தில் உண்மை, தர்மசிந்தை, பரோபகாரம் முதலிய நற்குணங்கள் அமைந்திருந்த படியால், நல்ல வியாபாரிகள் இவரிடத்தில் அபிமானம் வைத்து இவர் கேட்கும் சரக்குகளைச் சுவல்ப லாபத்துக்குக் கடனைக் கொடுத்து உதவினார்கள். இப்படியாக நாளடைவில் பெருத்த பணக்காரராகி ஊமர்கோட்டைக்கு வியாபாரத்தின் பொருட்டுவந்து, அவ்விடத்தில் நிலைபெற்றார். இவர் முதலில் நெருப்புப்பெட்டி வியாபாரம் செய்ய வாரம்பித்து, தன்னுடைய நன்னடையாலும், நாணயத்தாலும் சீர்பெற்று சிறந்த வர்த்தகரானார்; கப்பல் வியாபாரத்தில் பங்கு எடுத்துக்கொண்டு அதனால் பெருத்த லாபத்தை யடைந்தார். இவருடைய நல்ல தசா காலத்தில் சட்டோஜி பிறந்ததனால், அவன் பிறந்த தினமானது அரிய பிரமுகர்களாலும், அனேக பெரிய வியாபாரிகளாலும், இவரிடத்தில் வேலை செய்யும் அனேக வேலைக்காரர்களாலும், சுதினமாகக் கொண்டாடப்பட்டது. இவனது பால்யத்தில் ஓர் இராஜகுமாரனைப் போல் இவனை வளர்த்து வந்தார்கள். நல்ல ஆசிரியரிடத்தில் கல்வி கற்க இவன் ஒப்படைக்கப்பட்டான்; பாரஸீக பாஷையை நன்று யுணர்ந்தான்; சித்திரத்தொழிலில் கைதேர்ந்தவனானான். இவனுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. இவனது பதினெட்டாவது வயதில், தவளாபாய் என்கிற பணக்காரன் வீட்டுப்பெண்ணை, வெகு விமரிசையாக இவன் தகப்பனார் இவனுக்குத் திருமணமுடித்தார். ஊமர்கோட்

டையிலுள்ள ஜனங்கள் யாவரும், கலியாணத்தில் தக்க படி உபசரிக்கப்பட்டார்கள். சட்டோஜிக்குக் கலியாண மான கொஞ்ச தினத்திற்குள் இவன் தாயார் இறந்தனள். அவள் மகா பதிவிரதையாயிருந்து இறந்தபடியால், இவ னது பிதா ஆறுலக்ஷ ரூபா மதிப்புள்ள அவளுடைய நகைகள் எல்லாவற்றையும் செலவிட்டு, சிற்ப சாஸ்திர பள்ளிக்கூடங்களையும் தர்ம வைத்தியசாலைகளையும் கட்டி னார். தாம் அருமையாய்த் தேடி சம்பாதித்த திரவியங்க ளில் பேர்பாதி ஆறுகோடி ரூபாவை அப்பொழுது ஏற் பட்ட பஞ்சகாலத்தில் செலவிட்டு அனேக ஏழைக் குடும் பங்களைக் காப்பாற்றினார். ஜாதிக் கட்டுப்பட்டால் வெளி யேற்றப்பட்ட இவர், நல்ல வியாபகத்தோடு கூடிய செல்வ வந்தராயிருந்தும், தம் ஜாதியாரான அனேக ஏழைகள் தம் இல்லாமையைச் சொல்லிக்கொண்டு இவரிடம் வந்தால், அவர்கள் தமக்குச் செய்த இடையூற்றுக்காக அவர்களை வெறுத்துத் தள்ளாமல், தம்முடைய கொடைமாரியால் அவர்களைக் குளிர்வித்து உதவி புரிந்தார். அச் சாதியார் கொண்ட ஒரே தொழிலானது இவரால் மாற்றப்பட்டு, ஊதியம் பெறக்கூடிய எந்தக் கைத்தொழிலோ அல்லது வியாபாரமோ, அல்லது அரசாங்க வேலையோ, இன்னும் எதுவோ, அவர்கள் விரும்பிச்செய்து, வறுமையால் வருந் தாமல் ஜீவிக்கும்படி, ஏற்பாடு செய்தார். இவ்வளவு நன் மையைத் தங்கள் ஜாதியாருக்குச் செய்ததல்லாமல், இவர், லோகோபகாரராயும் இருந்து, சட்டோஜியின் இருபதா வது வயதில் இறந்தார்.

சட்டோஜி காருண்ய சுபாவ முள்ளவனாதலால், எல்லாருக்கும் இணங்கி நடந்தான். அது சிலர்க்குத் துன்பத்தைக் கொடுத்தது. ஊமர் கோட்டையில் ஹோல்கார் வம்சத்தைச் சேர்ந்த ஒருவர், தம்முடைய

பங்காளிகளால் அநியாயமாய்க் கவர்ந்து கொள்ளப் பட்ட தம்முடைய சொத்துக்களைத் தமக்கே மீட்டும் வாங்கிக்கொடுக்கும்படிக்கும், தாம் சம்ஸாரத்தோடு ஆகாரத்திற்கும் வழியற்றவராய் மிகுந்த கஷ்டத்தோடு ஜீவிக்கிறதாகவும் சட்டோஜிக்குத் தெரிவித்தார். இவர் சுபாவத்தில் மிகுந்த துஷ்டத்தனம், பொறாமை, பிறர் சொத்தைக் கவர்தல், கபடம் முதலிய அநேக துர் நடக்கைகள் உடையவர். இதை சட்டோஜி அறியாமல், இவர் சொல்லும் இனிய வார்த்தையைக் கேட்டு மன மிரங்கி, "உமது சொத்துக்கள் எப்படிப்போயின?" என்று வினவினான். ஹோல்கார், தாம் இளமைப் பருவத்தில் தாயின்மையால் பாட்டனிடம் பூஜ் பட்டணத்தில் வசித் திருந்ததாகவும், அக் காலத்திலேயே அங்குள்ள தமது தகப்பனார் இறந்துவிட்டார் என்றும், தமது பாட்டனுடைய விசேஷமான பிரீதியினால் தாம் அங்கேயே வளர்ந்துவந்து தமக்குக் கலியாண முதலிய யாவும் தமது பாட்டனரே செய்துவைத்ததாகவும், அவர் இறந்தபின் தமது மாமன் மார் தம்மை விசுவாஸமாக நடத்திவந்து, தாம் வேறு குடும்பத்தைச் சேர்ந்தவரெனக் கொஞ்சங்கூடக் கருதா மல் தங்களுடைய சொத்துக்களில் தமக்கும் ஏதேனும் கொடுத்துவிடுவதாக சொன்னதாகவும், தாம் ஊமர்கோட் டையில் தமது பிதாவுக்கு ஏற்படுகிற சொத்தைப்பற்றிக் கொஞ்சங்கூட எதிர்பார்க்க வேண்டியதில்லையென்று தமது பாட்டனர் தெரிவித்திருந்ததாகவும், தமது பிதாவுக்கு நால் வர் சகோதரர்களானதால், அவர்கள் வசமே தமது பிதா வின் சொத்துக்களும் சேர்ந்திருந்ததனால் தம்முடைய சிறிய தகப்பன்மார்கள் ஒவ்வொரு சமயம் பூஜுக்குவந்து தம் மைப் பார்த்துத் தமக்கு வேண்டும்செலவுகளுக்குக் கொடுத் துப் போனதாகவும், ஊமர்கோட்டையில் ஏதாவது விசே

ஷம் நடந்தால் தாமும் ஒவ்வொரு சமயம் வந்துபோன தாகவும், தமது கலியாணகாலத்தில் தமது சிற்றப்பன் பெரியப்பன் முதலிய யாவரும் பூஜாக்கு வந்து தம்முடைய கலியாணத்தை விமரிசையாய் நடத்திவைத்து, தம்மை சம்சாரத்தோடு ஊமர்கோட்டைக்கு வந்து சௌக்கியமா யிருக்கும்படி கேட்டுக்கொண்டதாகவும், தம்முடைய பாட்டனார் தம்மை ஒரு நிமிஷங்கூட பார்க்காதிருக்க மனந் துணியாதவராதலால், தாம் ஒருநாளும் தம்மை அனுப்ப ஒவ்வாமல் தமது தகப்பனாரின் சொத்துக்கள் தமக்கு ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி வந்ததாகவும், அதனால் தமது தகப்பனோடு கூடப்பிறந்தவர்கள் யாவரும் மன வருத்தமடைந்து ஊர்க்குச் சென்றதாகவும், தமக்கு அனுகூலமாயிருந்த மாமன்மார்கள் யாவரும் அவரவர்களுக்கு சம்சாரங்கள் பலக்கவே சொத்துக்களைப் பங்கிட்டுக் கொண்டு வெவ்வேறு குடித்தனக்காரர்களானதாகவும், அவர்கள் பிரிந்துபோனதும் தம்முடைய காலக்ஷேபத்திற்காக ஏதோ சுவல்ப திரவியம் கொடுத்து உபகரித்து வந்ததாகவும், அதுவும் நாளடைவில் நின்றுவிட்டதனால், தமக்கு வேறு எந்தத் தொழிலும் செய்யத் தெரியாததாகவும், தமது பாலியத்தில் தம்மைப் பள்ளிக்கூடத்திற் படிக்க அனுப்பினாலும், தாம் தாயில்லாப் பிள்ளையாகையால் பாடம் படிக்காததற்கு உபாத்தியாயர் தம்மைத் தண்டிக்கவோ, அல்லது கடுமையாகக் கேட்கவோ, அல்லது தாம் போகாமைக்குக் காரணம் கேட்கவோ தமது பாட்டனார் அனுமதி தரவில்லையென்றும், தாம் பள்ளிக்கூடம் போகும்போது, தமது இஷ்டம்போல நல்ல ஆபரணங்களும் சட்டை தலைக்குட்டை முதலியவைகளும் போட்டுச் செம்மையாக அலங்கரித்துக்கொண்டு, வேலைக்காரன் ஒருவன் பின்தொடர, சற்றுநேரம் அங்குப்போய் உட்கார்ந்தி

ருந்ததாகவும், பள்ளிக்கூடம் போவது என்றால் நல்ல உடுப்புகளை தரித்துக்கொள்ள வேண்டியது என்று ஒன்றுமட்டும் தாம் பழக்கப்பட்டு வந்தாரே ஒழிய, ஓர் எழுத்தாவது படிக்கப் பழக்கப்படவில்லை என்றும், கடைசியாக தாம் பள்ளிக்கூடம் போவதென்றால் கனத்த கஷ்டமாயிருக்கிறதென்று தமது பாட்டனிடம் சொல்ல, அவர், "நீ இனி போகவே வேண்டாம்" என்று சொல்லிவிட்டதாகவும், தாம் படிக்காததைப்பற்றி தமது பாட்டனரை யாராவது கேட்டால், தமது பேரன் படித்து வித்வானாக வேண்டாம், "தாயில்லாத பிள்ளை எப்படியாவது உயிரோடு சௌக்கியமா யிருந்தால் போதுமானது; அவன் ஜீவிய காலத்தை சந்தோஷமாகக் கழிக்க அவனுக்குப் போதுமான சொத்துக்கள் நான் கொடுத்து விடுகிறேன். சரஸ்வதிக்கும், லக்ஷ்மிக்கும் பகையானதால் படித்துப் பாண்டித்ய முடையவன் தரித்திரத்தை யடைவான்; எத்தனையோ பணக்காரர்கள் படிக்காதவர்களா யிருக்கிறார்கள். 'ஓதுவா ரெல்லாம் உழுவான் தலைக்கடையில்' என்றபடி படித்து வித்வானாயினும் தன்னுடைய வித்வத்தைச் சொல்லிக் கொண்டு குடித்தனக்காரர்களிடத்தே காத்துக்கொண் டிருக்க வேண்டியவனாவான். ஆகையால் தாம் குடித்தனக்காரரா யிருந்தால் போதுமானது" என்று சொல்லிவிட்ட படியால், தமது படிப்பு கெட்டு முட்டாளாகி விட்டதாகவும், சாப்பாட்டிற்குக் கஷ்டப்படும்படி நேர்ந்து விட்டதாகவும், கஷ்டம் என்பது இன்னது என்பது தெரியாத தாம் யாரையும் எதையும் கேட்டு வாங்க லச்சைப்பட்டு தமது சம்சாரத்திற்கு அவள் தகப்பனரால் போடப்பட்டிருந்த நகைகளைவிற்று கொஞ்சநாள் ஜீவனம் செய்ததாகவும், தமது மாமன்மார்கள் தம்மைக் கண்டால் பேசுவதுகூட கிடையாது, இனித் தாம் அங்கிருப்

பதில் பிரயோசனம் இல்லை என்றும், தகப்பன் ஊரான அவ்வூருக்காவது வருவோமென அங்குவந்து விசாரித்தத னால் தமது சிறிய தகப்பன் பெரிய தகப்பன் முதலிய யாவ ரும் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டதாகவும், அவர்க ளுடைய புத்திரர்கள் தம்மை அடையாளம் தெரிந்துகொள் ளாதவர்களாய் விசாரித்ததற்குத் தாம், "உங்கள் தகப்பனு ரோடு கூடப்பிறந்த, பிஸ்வந்தராவ் ஹோல்காரின் மகன் மாதவராவ் ஹோல்கா ரல்லவா? இத்தனை நாள் எனது பாட்டன் தேசமாகிய பூஜிலிருந்து உங்களை யெல்லாம் பார்த்துப்போக இங்கு வந்தேன்" என்று சொன்னதாக வும், அதற்கு அவர்கள் தம்மை உபசரிக்காமலும் வீட் டிற்குள் வரும்படி அழைக்காமலும் "எங்கள் தகப்பனு ரோடுகூடப் பிறந்தவர் ஒருவர் இறந்ததாக மட்டும் கேள் வியே தவிர அவருக்கு பிள்ளை ஒருவர் இருக்கிறதாக எங் களுக்குத் தெரியாது. அப்படிக்கு இருந்தால் எங்கள் பிதாக்கள் சொல்லி யிருப்பார்கள்; தாங்கள் சொல்வதை நம்புவதற்கு ஹேதுவில்லை" என்று சொல்லிவிட்டதாகவும், ஒருவேளையாவது சாப்பிட்டுப்போ என்றுகூட சொல்ல வில்லை எனறும், பசியோடு தமது சம்சாரமும் தாமும் மிகுந்த வருத்தத்தை யடைந்து அதே தெருவிலுள்ள ஒரு சாமானியர் வீட்டுத் திண்ணையில்போய் உட்கார்ந் ததாகவும், அவ்வீட்டுக்காரர் தம்மை யார் என்று கேட்க, தாம் சமாசாரத்தைச் சொன்னதாகவும், அவர் தம்மைப் பற்றி கேள்விப்பட் டிருப்பதாகச் சொல்லி மிகுந்த வருத்த மடைந்து சாப்பிடும்படி சொன்னதனால், தாம் சாப்பிட்டுத் தமது குடும்ப விஷயமாகப் பேசுகையில், தமது தகப்பனார் இறந்தபிறகு, மற்ற மூன்று சகோதரர்களும் தங்களுக் குள்ள ஏராளமான சொத்துக்களை வைத்துக்கொண்டு ஒற் றுமையாய்க் குடித்தனம் செய்துகொண்டிருக்க, இருவர்

இறந்ததும் அவர்களுடைய பத்தினிகள், தங்களுக்கு ஆண் மக்கள் இருந்தும் இனி சேர்ந்து குடித்தனம் செய்வது முடியாதென்று சொல்ல, சொத்துக்கள் பங்கிடப்பட்டு, அவரவர்கள் மிகுந்த சௌக்கியத்தோடு வசிக்கிறார்களென்பதையும் தமக்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டிய பாகத்தை மோசஞ்செய்து அவர்கள் மூவரும் பங்கிட்டுக் கொண்டது மெத்த அனியாயம் என்பதையும், எவ்வளவோ தூரத்திற் கப்பாலிருந்து சம்சார சகிதமாய் வெகு சிரமப்பட்டுவந்த தம்மை அலக்ஷியம் செய்து போஎன விடுத்தது பெருத்த அனியாமா யிருக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டதாகவும், அதற்கு, தாம் ஒன்றும் செய்யத் தெரியாதவராய் வருந்தி இனி என்ன செய்யலாம் என்று அவரையே கேட்டதாகவும், அவர், சட்டோஜியின் பேரைச்சொல்லி "அவரே பெரியபிரபு; இப்படிப்பட்ட அனியாயங்களை அவர் கூப்பிட்டு விசாரித்து, தகுந்த ஏற்பாடு செய்விப்பார். அவர் நீங்கலாக வேறு யார் இக்காரியத்திற் பிரவேசித்தாலும் முடியாது" என்று சொன்னதாகவும், அதைக் கேட்ட தாம், சட்டோஜி வீட்டை விசாரித்துக்கொண்டு அங்கு வந்ததாகவும், வேறு எக்கதியு மில்லாமல் நிற்கதியா யிருக்கிறபடியால் தம்மைக் காப்பாற்றுவது சட்டோஜியின் கடமை என்றுங் கூறி அவன் காலில் விழுந்தார். சட்டோஜி, அவருக்கு தேறுதல் சொல்லி, வேண்டிய சகாயம் செய்வதாக ஒப்புக்கொண்டான். மாதவராவ் ஹோல்காரின் சம்சாரம் முகுந்தாபீபீ கொஞ்சம் மறைவாக இருந்தவள், தங்களுடைய நிர்ப்பாக்கிய கதியை நினைத்து, சட்டோஜி கேட்கும்படியாக கோ எனக்கதறினாள். இவன் அவர்களிருவர்களையும் பார்த்து, "உங்கள் காரியம் சாதகமாகிற வரையில் என் வீட்டோடிருக்கலாம். வாஸ்தவமாக நடந்த

விஷயங்களை அறிவித்த உங்களுக்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்து, உரிய சொத்துக்களை பிரியமாய்க் கொடுக்கும்படி செய்விக்காவிட்டால், நான் சட்டோஜியல்ல'' என்று சபதம் செய்தான். முகுந்தாபீபீ, செவந்த நிறத்தோடு கரிய கூந்தலைப் பெற்றவள்; பவழவாயிதழும் பளபளத்த மேனியும் உடையவள்; தான் மூடிக்கொண்டிருக்கும் கோஷாப் போர்வையை முகத்திற்கு நேராகச் சற்றே விலக்கிக்கொண்டு, முகம் மறைபட்டிருக்கும் பாலனையைக் காட்டி, அவன் அனுமதிப்படி, வீட்டிற்குள் சென்றாள். இவர்களிருவரையும் கண்ட சட்டோஜி, அவர்கள் பயந்து சொல்லும் தாழ்மையான உரையிற் கட்டுப்பட்டு, மிகுந்த பரிதாபத்துடன், "இப்படிப்பட்ட சாத்விகர்களுக் கல்லவோ, நான் பேருதவி செய்யவேண்டும்!'' என எண்ணினான். தான் வீட்டிற்குள் வந்து தன்னுடைய சம்சாரம், தவளாபாயை நோக்கி, "வேண்டியபடி இவர்களை உபசரித்து ஆதரி'' என்று கட்டளையிட்டான். ஹோல்காரை உபசாணையாய் நடத்தும்படி வேலைக்காரர்களுக்கும் திட்டம் செய்தான். அன்று மறுநாளே, அவ்வூர் முகம்மல் தெருவிலுள்ள ஹோல்காரின் பங்காளிகளான ராமோஜி முதலிய நால்வர்களைக் கூப்பிட்டுக்கொண்டு வரும்படி செய்தான். அவர்கள் சட்டோஜிக்கு நிரம்ப வேண்டியவர்களானதால், உடனே வந்தார்கள். இவன், மாதவராவ் ஹோல்காரையும் கூடவைத்துக்கொண்டு சமாசாரங்களைத் தெரிவித்தான். ராமோஜி ஹோல்கார், கூடியவரையில் நல்ல யோக்கியமானவர்; பிறர் சொத்துக்களை கொஞ்சம்கூட இலக்ஷியம் செய்யார்; இவர் தகப்பனார், எல்லாக் குடும்பங்களுக்கும் வியாபகமாயிருந்து நடத்தும் பொழுது இவரே சகலத்தையும் கவனித்து வந்தார்; நன்றாகப் படித்தவர்; அந்தக் குடும்பத்தில் இவர் பெயரே

எங்கும் விசாலமாய்ப் பரவிற்று. இவர் சொல்லும் வார்த்தைகளை எவரும் நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்வார்கள். இவ்வளவு நற்குணம்பெற்ற இவர், சட்டோஜி படபடப்பாய்த் தம்மிடத்தில் தெரிவித்த விஷயங்களை, அமைதியாய்க் கேட்டு மிகுந்த சாந்தராய், "எங்கள் சகோதரர் என்று சொல்லும் இவர், தாங்கள் சொன்ன மாதிரியாகவே என்னிடம் வந்து தெரிவித்தார்! முந்தியே, இறந்த எனது சிறிய தகப்பனருக்கு, ஐந்து வயதுள்ள ஒருமகன், பூஜ பட்டணத்தில் தன் பாட்டன் வீட்டில் வளர்ந்திருந்து இறந்துவிட்டதாக எங்கள் குடும்பத் தலைவர் சொல்லிக் கொள்வார்கள். குழந்தையா யிருக்கும்போது இங்கு ஒரு சமயம் வந்திருக்கலாம். அதன்பிறகு உயிரோடிருந்தால் இவ்விடம் கட்டாயம் வந்திருப்பார்; அம்மாதிரி இல்லை யென எங்கள் வீட்டிலுள்ள பெரியோர்கள் யாவரும் சொல்லுகிறார்கள். நாங்கள் எல்லாருமே பங்காளி துரோகம் செய்யமாட்டோம். அப்படிப்பட்ட சகோதரரைப் பெற நாங்கள் மிகுந்த ஆவலுள்ளவர்களாய் இருக்கிறோம். எங்கள் வீட்டில் எத்தனையோ சுப சோபனதிகள் நடந்திருக்கிறது; அந்த விசேஷத் தினங்களில் எங்கள் கூடப் பிறந்த ஒருவரை நீக்கி நாங்கள் நடத்துவோமா? அவராக வராமலிருந்தாலும், நாங்கள் சென்று கைப்பிடியாக அழைத்து வரோமா? அல்லது இவருக்குக் கலியாணம் செய்த காலத்தில், நாங்கள் கட்டாயம் போயிருக்கவேண்டுமே! எங்களுக்குச் சொல்லாமல் செய்திருப்பாரா? இதுகளை யெல்லாம் யோசித்தால், சந்தேகப்பட வேண்டியதாகிறது" என்றார்.

சட்டோஜி — "நீங்கள் சொத்தை அபகரித்துக் கொள்ளத் தப்பு சொல்லுகிறீர்கள்; இத் தம்பதிகள் இருவரையும் பார்த்தால் பரம சாதுக்கள் மாதிரி காண்கிறது.

ஒருவருக்குப் பிறந்து மற்றொருவரைப் பிதாவென்று கூப்பிட யார்தான் மனம் துணிவார்கள்? இதர ஜாதிகளில் அப்படி ஒரு சமயம் சொன்னாலும் மகாராஷ்டிர வம்சத்தினர்கள் அப்படிச் சொல்வார்களா! ஒருநாளுமில்லை. நீங்கள் ஏதாபாகமாக சொத்துக்களை பங்கிட்டு அவருக்குக்கொடுக்கவேண்டியதுதான். என்ன சொல்கிறீர்கள்?'' என்றான்.

ராமோஜி ஹோல்கார் — "முக்கியமாய் நான் ஒரு சங்கதி தெரிவிக்கிறேன். நாங்கள் மஹாராஷ்டிர வம்சத்தில் பிறந்த கடை பிராமணர்கள்; இவரும் பிரமணராயிருந்தால், தங்கள் வீட்டில் சம்சாரத்தோடு இறங்கிச் சாப்பாடுசெய்து கொள்வது நியாயமாகுமா?'' என்றார்.

சட்டோஜி — "அவர்கள் தனியே சமையல் செய்து சாப்பிடுகிறார்களே தவிர எங்கள் வீட்டில் சாப்பிடவில்லையே! இந்தக் காரணத்தைத் தப்பும் தவறுமாய்ச் சொல்லி, எய்த்துவிடுவதென்றால் தெய்வ சம்மதமாகாது! உடனே அவ்விதம் சொத்துக்களை ஒழுங்காய்க் கொடுத்துவிடும்'' என்றான்.

ராமோஜி — "தாங்கள் சொல்வது சரியல்ல; வீணை விவகாரத்தை விலைக்கு வாங்கி, வெகுநாளாய்ப் பால்ய முதல் பழகிய நம் சினேகத்தை மறந்து, பொய்யாக ஒருவர் சொல்லும் வார்த்தையை நம்பி, அவரைப் பூஷித்துப் பேசுகிறீர்! தாங்கள் பணக்காரரானதால் தங்களோடு விரோதம் கூடாது. வேண்டுமானால், நான் பாகித்துக் கொண்ட சொத்தில் தங்கள் சினேகத்தின் பொருட்டு, ஏதாவது கொடுத்துவிடுகிறேன்; மற்றவர்களையும் என் போல் கொடுக்கச் சொல்ல எனக்கு அதிகாரம் கிடையாது; அவர்கள் கொடுக்கவும் மாட்டார்கள்'' என்றார்.

சட்டோஜி — "இப்பொழுதுதான் கொஞ்சம் நிஜத்திற்கு வந்தீர்; உம்மை ரொம்ப மதித்திருந்தேன்; மற்றவர்களிடத்திலும் தயை செய்து கலந்துபேசி, ஏதாவது முடிவு செய்து, இதுமுதல் நாலுநாள்களுக்குள் ஏற்பாடு செய்துவிடும்; இல்லாவிட்டால் கிரமப்படி நீங்கள் இவர்க்கு தரவேண்டிய பாகத்தொகையை வாங்கிக் கொடுப்பேன்; அதனால் பெருத்த நஷ்டத்தை அடைவீர்கள்! போய் வாருங்கள்" என்றான்.

ராமோஜி முதலிய நால்வரும் மிகுந்த வருத்தத்தோடு தங்கள் வீடு சேர்ந்தார்கள். இந்தக் குடும்பத்தார் எக்காலத்திலும் விவகாரங்களுக்குப் போவதேயில்லை. வியாஜ்யம் என்றால் அவர்கள் பயப்படுவார்கள்; ஆயினும் இப்போது, நியாயமில்லாமல் சொத்தைக் கொடுக்க இஷ்டப்படவில்லை. "சட்டோஜி அனாவசியமாய் இதில் பிரயத்தினப்பட்டு நமக்கு துன்பத்தை விளைவிக்கிறானே! இவனுக்கு யார் சொல்வது?" என நினைந்தார்கள். "மறுநாள் நாம் போய் எதைத் தெரிவிக்கிறது? போகாமலிருப்பதே மேல். எதுவந்தாலும் அனுபவித்துத் தீருகிறதே தவிர வேறு என்ன இருக்கிறது?" எனப் பேசாம லிருந்துவிட்டார்கள்.

சட்டோஜி, இவர்கள் போனவுடன், மாதவராவ் ஹோலகாரைப் பார்த்து, "இது ஏதாவது ஒருவழிக்கு வருமென்று நினைக்கவில்லை. அடியோடு சாப்பிட்டுவிட யோசிக்கிறார்கள். கொஞ்சம் கடுமையாய்க் கேட்டதனால், தங்கள் சிநேகிதத்திற்காக வேண்டுமானால் ஏதாவது கொடுக்கிறேன் என்றான் ராமோஜி; இக்காலத்தில் சிநேகிதர்களுக்குச் சாதிப்பதுதான் விசேஷமாயிற்றே! இந்தவார்த்தைகளை யெல்லாம் நான் நம்புவேனே! ஒருநாளுமில்லை" என்றான்.

மாதவராவ் — "தாங்கள் இந்த விவகாரத்தில் எவ்வளவோ சாமர்த்தியமாய்ப் பேசியிருக்கிறீர்கள்; தெரியாமலா ஊரில் உள்ளவர்கள் உங்களிடம் என்னைப் போகும்படி அனுப்பினார்கள்?" என்றான்.

சட்டோஜி — "எங்களுக்கு அதுவிஷயத்தில் கொஞ்சம் கௌரவம், தகப்பனார்நாள் முதல் உண்டு; எந்த விவகாரத்தையும் நியாயமாய்ப் பேசித் தீர்த்துவைப்போம். நாங்கள் தீர்த்து பைசல்செய்த விவகாரத்தில் ஒருவரும் பிசகு சொல்லமாட்டார்கள்; எங்கள் முன்னிலையில் எத்தனையோ சிக்கலான விவகாரங்கள் பைசலாகியிருக்கின்றன. வரவரக் காலம் கெட்டுப்போய் விட்டபடியால், ஜனங்கள் தப்பு வழியில் நுழைய ஆரம்பித்து விட்டார்கள்; என்ன செய்யலாம்!" எனத் தன்னைப் பெருமைப்படுத்திப் பேசிக் கொண்டான். அன்றிரவு எல்லாரும் உலக வியாபார விஷயமாய்ப் பேசிச் சந்தோஷத்தை அடைந்தார்கள். மறுநாள் மாதவராவ், சட்டோஜி யிடத்தில், "இனி நடத்த வேண்டிய விஷயங்கள் யாவும் தங்கள் பொறுப்புத்தான்; என்னிடத்தில் காலணா இல்லை; வீட்டுப் பெண்பிள்ளை எல்லாவற்றையும் தங்களுக்கு ஒப்புக்கொடுத்துவிடும்படி சொல்லிவிட்டாள்; உங்களுடைய மேன்மைக்கும் நியாய குணத்திற்கும் மிகுந்த சந்தோஷப்பட்டு, உங்களைப்போல நல்ல மனிதர் உலகில் உண்டா என்கிறாள். அவள் உங்களைப்பற்றி சொன்ன வார்த்தைகளை அப்படியே எனக்குச் சொல்லத் தெரியவில்லை" என்றான்.

சட்டோஜி — "தாங்கள் சொன்னது வாஸ்தவமே: அந்தம்மாள் சந்தோஷப்பட்டதாக என் சம்சாரம் கூட என்னிடம் சொன்னாள்; இன்னும் இரண்டு தினம் பார்ப்போம்; ஒன்றும் சரியாய் வராவிட்டால், நானே வியாஜ்யம் போட்டு சகல காரியங்களையும் நடத்துகிறேன்; தாங்

கள் கவலைப்படவேண்டாம்; நான் இந்தமாதிரி சொன்னதாக அந்த அம்மாளிடம் தெரிவித்து விடுங்கள்; வியாஜ்யம் முடிகிறவரையில் நமது வீட்டிலேயே நீங்கள் இருவரும் இருக்கலாம்'' என்றான்.

மாதவராவ் — "எப்படியோ தங்களை நம்பி வந்துவிட்டோம்; எங்களைக் காப்பாற்றவேண்டியது உங்கள் கடமை; நான் இன்ன வம்சஸ்தன் எனத் தங்களுக்குத் தெரியும். என் சம்சாரமோ பெரிய இடத்துப்பெண்; அவள் தகப்பன் வீட்டை குபேரன் மாளிகையென்று சொல்லலாம்; நான் ஏழையாய்ப் போய்விட்டபடியால், அவள் தகப்பனார் வீட்டுக்கு என்னை அழைத்துப்போக அவளுக்குக் கொஞ்சம் இஷ்டம்தான்; எனக்கு அதில் அவ்வளவு சம்மதமில்லை; இதை அவள் ஜாடையாய்த் தெரிந்துகொண்டு, 'கஷ்டமோ சுகமோ உம்மோடு கூடவேயிருந்து அனுபவிக்கிறேன்' என்று, நான் சொன்னபடி அவள் தாய்வீடு போகவும் இஷ்டமில்லாமல், என் பின்னாலேயே வந்துவிட்டாள். என்னிமித்தம் எத்தனையோ கஷ்டங்களையெல்லாம் அனுபவித்து விட்டாள். அவள் சரீரம் சுவர்ண மயமாயிருந்தது; நல்ல சௌக்கியமில்லாமல் இளைத்துப் போய்விட்டது'' என்றான்.

சட்டோஜி — "இவன் சுத்த பேதை மனுஷனாக இருக்கிறான்; தன் சம்சாரத்தின் சமாசாரங்களை நம்மிடம் சொல்லுகிறான்; அந்தம்மாளால்தான் இவன் நடத்தப்படுகிறான்போல் காண்கிறது; அவளுடைய குணம் எப்படிப்பட்டதோ தெரியவில்லை; நம்மோடு பேசினால் சகலத்தையும் நன்றாய் அறிந்துவிடலாம்'' என எண்ணங்கொண்டு, மாதவராவைப் பார்த்து, "தங்கள் சம்சாரத்திற்கு என்ன வயதாயிற்று?'' என்றான்.

மாதவராவ் — "தங்கள் பத்னிக்கு எவ்வளவு வயதோ அவ்வளவுதானிருக்கும்" என்றான்.

"என் மனைவிக்கு இருபது வயதாயிற்று" என்றான் சட்டோஜி.

"இவளுக்கும் அதேதான் வயது; கொஞ்சம்கூடத் தாங்கள் வித்தியாசமாகவே நினைக்கவேண்டாம்; நடை உடை பேச்சு சுவபாவம் எல்லாவற்றிலும் தங்கள் சம்சாரமென்றே சொல்லலாம்" என்றான் மாதவராவ்.

சட்டோஜி — "இவனென்ன கேவலம் முட்டாள்தனமாய்ப் பேசுகிறான்; இவன் சுவஸ்தியானதால்தான் அவர்கள் இவனை ஏய்க்கிறார்கள்; அந்தம்மாள் நல்ல கெட்டிக்காரியாக இருக்கலாம்; இனி எந்த விவகாரமும் அவளிடத்தில்தான் பேசவேண்டும்" எனத் தீர்மானித்து, "தங்கள் பத்னியிடம் சகோதர பாவமாக நான் பேசலாமோ?" என்றான்.

"திவ்யமாய்ப் பேசுகிறது! அதற்கென்ன ஆக்ஷேபமிருக்கிறது? நான் கூப்பிடுகிறேன்; வேண்டுமானால் இப்போதே கூப்பிடுகிறேன்" என்றான் மாதவராவ்.

சட்டோஜி — "இங்குக் கூப்பிடாதேயும்; உமக்கு உலக வியாபாரம் தெரியாதுபோலிருக்கிறது. நான் அந்தம்மாளிடம் பேசவேண்டுமானால், என் சம்சாரம் தவளாபாயையும் கூட வைத்துக்கொண்டு பேசவேண்டும்; தனியே பேசுவது தர்மமல்ல; பார்ப்பவர்கள் பரிகசிப்பார்கள்" என்றான்.

"அப்படியே தங்கள் இஷ்டம்போலப் போசுகிறது; எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை" என்றான் மாதவராவ்.

சட்டோஜி, அன்று சாயங்காலம் இவர்களுடைய விர்த்தாந்தங்களைத் தன் சம்சாரத்தினிடம் சொல்லி, முகுந்

தாபாயை அழைத்துவரும்படி கட்டளையிட்டான். நிஷ்கபடமான அப்பெண்மணி புருஷனுடைய உத்தரவை மிகுந்த பணிவுடன் ஏற்று, முகுந்தாவைத் தன் பர்த்தா அழைப்பதாகக் கூப்பிட்டாள்; கரவடமே ஓர் உருவாய்க் கொண்ட முகுந்தா, தன்னைக்கூப்பிடுவதில் மிகுந்த பிரீதியை அடைந்தவளாய், "நான் அவர் முன் எப்படி வருவேன்? என்றாலும், விவகார விஷயமாய் அவரிடம் நான் பேசாமலிருக்க முடியாது; என் செய்வது?" எனச் சற்றே தயங்குதல் அடைந்தவள்போல நடித்து, பிறகு அவள் பின் வந்து சட்டோஜி உட்கார்ந்திருக்கும் ஹாலில், உள் பக்கமாய் இருக்கும் அறைக்குள் புகுந்து, தான் மறைந்தபடியே நின்றுகொண்டு, "நாங்கள் மகாபுண்ணியம் ஜன்மாந்திரத்தில் செய்திருந்ததால் உத்தம குணத்தோடு கூடிய பிரபுவான தங்கள் ஆசிரயம் எங்களுக்குக் கிடைத்தது; விஷயங்கள் யாவும் எனது பர்த்தா தங்களிடம் சொல்லியிருப்பார். தங்களுக்குச் சிரமம் கொடுக்க வந்துவிட்டோம்; அநாதியாய் வந்தவரை ஆதரிப்பது தங்கள் கடமை; எப்படியாவது தாங்கள் கொஞ்சம் சிரமம் வகித்து, எங்கள் ஆகாரத்திற்குப் போதுமானமட்டும் எங்கள் பங்காளிகளிடமிருந்து வாங்கிக் கொடுத்தால் பெரும் புண்ணியம்" என்று விசனமான குரலோடு சொன்னாள்.

சட்டோஜி, இவ் வார்த்தையைக் கேட்டவுடன், "அதற்காகத் தாங்கள் யோசிக்கவேண்டாம்; எப்படியாவது உங்கள் பாகச் சொத்துக்கள் உங்களுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்கிறேன். தங்கள் புருஷர் அதிக சாமர்த்தியக்காரரல்லபோலிருக்கிறது; அதனால்தான் தாங்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதாகிறது" என்றான்.

முகுந்தா — "அதனை நினைத்தால் எனக்குப் பரம துக்கம் உண்டாகிறது. நான் என்ன செய்வேன்? பதி பூஜை செய்தபலன் அவ்வளவுதான்! எல்லாரும் சொல்வதுபோல நானும் சொல்லிவிட்டால், பிறகு என்னை உத்தம ஸ்திரீயென யாராவது நினைப்பார்களா? அதற்காக ஏதோ இழுத்து மூடிக்கொண்டு காலம் தள்ளுகிறேன்; அவரை அழைத்துக்கொண்டு என் தகப்பன்வீடு போவதும் அவமானம் என எண்ணி, அங்குப்போக இஷ்டமில்லாமலிருக்கிறேன். ஒவ்வொரு சமயம் நல்ல ஞாபக சக்தியோடு கெட்டிக்காரத் தனமாய்ப் பேசுவார்; சில சமயம் அசட்டுத்தனம் வந்துவிடும்; எல்லாம் சமாதானப் படுத்திக்கொண்டுதான் நடக்கிறேன். தாங்கள் எப்படியாவது விவகாரத்தை நடத்தி, சொத்து கிடைக்கும்படி செய்து, எல்லாம் தாங்களே எடுத்துக் கொள்ளுங்கள்; எங்கள் சாப்பாட்டிற்கு மட்டும் ஏதாவது கொஞ்சம் கொடுத்தால் போதுமானது; அவர்கள் சரியாய் வராவிட்டால் விவகாரம் செய்யாமல் இருக்கக் கூடாது" என்றாள்.

சட்டோஜி — "நான் விவகாரம் செய்யத் தடையில்லை; கச்சேரியில் வந்து இவர் ஏதாவது கட்டுக்கட்டிச் சொல்லிவிட்டால் என்ன செய்கிறது என்றுதான் யோசிக்கிறேன்."

முகுந்தா—"அவ்வளவு தவறுதலாய்ப் பேசமாட்டார்; அவர்க்கு எப்பொழுதும் என்மீது மிகுந்த பிரியம் உண்டு; சதா என் விஷயமாகவே ஏதாவது சொல்வாரே ஒழிய மற்றப்படி வேறு எந்தக் கெடுதல்களும் அவரிடத்தில்லை."

சட்டோஜி — "தாங்கள் சொல்வது வாஸ்தவம்தான்; அதனால்தான் சந்தேகப்பட்டேன். என்னிடத்தில் தாங்கள் சொல்வதுபோலவே பேசியிருக்கிறார்."

முகுந்தா — "என்ன சொன்னார்?"

சட்டோஜி — "என்னவோ சொன்னார்; அதற்கென்ன?"

முகுந்தா — "தாங்கள் சொல்ல யோசித்தாலும் நான் சொல்லிவிடுகிறேன். அதாவது, நான் அழகுள்ளவள் என்பார்; சரீரம் இளைத்து வாடிப்போய்விட்டேன் என்பார்; மிகுந்த பணக்காரர் வீட்டுப் பெண்பிள்ளை என்பார்; 'எல்லாம் அவள் சொன்னாள் — என் சம்சாரம் தங்களுக்குச் சொல்லும்படி சொன்னாள்' என்று என்னை பகிரங்கத்தில் இழுத்துப் பேசுவார்; இதனால் கேட்பவர்கள் ஏதாவது விகல்பமாய் நினைக்கக்கூடும்; கொஞ்சநாள் அவரோடு பழகிவிட்டால் பிறகு 'இவ்வளவுதான் இந்த மனிதன் சுவபாவம்' என்று தெரிந்துவிடும். வெட்கமில்லாத குல புருஷர்கள், தகுந்த சிநேகிதர்களோடு பேசிக்கொண்டிருக்கும் காலத்தில், தங்கள் பத்தினிமார்களின் பூர்த்தியான திருப்தியைச் சிலாகித்துப் பேசுவது வழக்கம்; இது கேட்போர்கள் இஷ்டப்படி பெண்டுகளும் ஒப்புக்கொண்டார்களென்று சந்துஷ்டியை அடைவார்கள்; தங்களைப்போன்ற புத்திமான்கள் கேட்டால் மனதில் கஷ்டத்தை அடைவார்கள். இவ்வளவுதான் அவர் சொல்லியிருக்கக் கூடும். அதற்காக தாங்கள் யோசிக்கவேண்டாம்."

சட்டோஜி — "ஒரு யோசனையுமில்லை; இரண்டு தினம் பார்ப்போம். அதற்குள் சரியாய் வராவிட்டால் வியாஜ்யம் செய்துவிடுகிறேன்."

முகுந்தா — "தங்களுக்கு எப்படிச் சௌகரியமோ அந்தப்படி செய்யுங்கள்; நாங்கள், புத்தியானான தங்களுக்கு அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை" என்று தான் மிகுந்த நல்லவள் போலவும் கெட்டிக்காரி போலவும் நடித்து, "அன்னியர்களை அண்ணாந்து பார்த்துப் பேசுவது எனக்கு வழக்கமில்லை; தாங்கள் மகா ரூபமான புருஷராய் இருப்ப

தாலும், எங்களுக்கு உதவிசெய்ய முன் வந்த பரமோபகாரி ஆசையாலும் ஏதோ முன் வந்து பேசிவிட்டேன்'' என்று முகத்தை அசைத்துக் கண்ணை ஜாடை காட்டித் திருப்பிச் சொல்லிவிட்டுப் போனாள்.

சட்டோஜி — ''இவள் கூடியவரையில் அழகுள்ள பெண்ணாய் இருக்கிறாள்; நல்ல சாமர்த்தியமாயும் பேசுகிறாள்; இவளோடு கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருப்பதே மனதிற்குச் சந்தோஷகரத்தைக் கொடுக்கிறது; எனது பத்தினி தவளாபாய் எவ்வளவு அழகுள்ளவளாயிருந்தும், என்ன பிரயோசனம்! அவளிடத்தில் இந்த குணுக்குக் கொஞ்சம்கூட கிடையாது; இவ்வளவு புத்திசாலியான ஒரு பெண், கேவலம் முட்டாளான ஒருவனை விவாகம் செய்து, அவனைக் கட்டிக்கொண்டு அழுகிறாள்; நான் இம்மாதிரியான மனைவியை அடைந்திருந்தால், எவ்வளவோ சுகபுருஷனாயிருப்பேன்!'' என மனதில் விகாரமான எண்ணம் கொண்டவனாய், பேரவா, பெருமூச்சு விடும்படி செய்ய, மனம் தத்தளித்து, தன் அறைக்குச் சென்று அங்கே உட்கார்ந்தான். தன் மனதில் ஏதோ ஒருவிதமான கவலை ஏற்பட்டு எக்காரியத்தைப் பற்றியும் யோசித்து ஸ்திரப்படுத்த முடியாமல் தவித்தான். தன் புத்தியை முருந்தாளிடமே செலுத்திவிட்டான். இவன் அசட்டுத்தனம் பெற்ற சமர்த்தனானாலும் அதுவரையில் அன்னிய ஸ்த்ரீகளைக் கனவிலும் நினைத்ததில்லை. இவன் மனம் சஞ்சலமடைந்தது, காலவித்தியாசமே தவிர வேறு இல்லை. வெகுநேரம் தன் ஞாபகமே இல்லாமல் உட்கார்ந்திருந்தான். வேலைக்காரர்கள் அவனை எத்தனை கூப்பிட்டும் அவர்களை அவன் அலக்ஷியமாய்ப் பேசி, போகும்படி வெருட்டினான். அவனது சம்சாரமாகிய தவளாபாய், அச்சமாசாரத்தைக் கேள்விப்பட்டு, ''எதற்காக கோபித்துக்

கொண்டிருக்கிறாரோ தெரியவில்லையே! அவர் இஷ்டம் போல் நடப்பதற்கு நான் கொஞ்சம்கூட பின் வாங்குவதில்லையே! தன் தகப்பனார் தேடிவைத்த ஏராளமான சொத்துக்கள் அநியாயமாய்ப் போய்விட்டதென்று துக்கிக்கிறாரோ! எதையும் இலக்ஷியம் செய்பவரல்லவே! வேலைக்காரரிடம் எப்போதும் விசுவாசமாய்ப் பேசுகிறவர் இப்பொழுது கோபித்துக்கொள்ள என்ன காரணம்? முகுந்தா அம்மாளிடத்தில் பேசிப் போனதைப்பற்றி யாராவது ஏதாவது சொன்னார்களோ! வெகுநேரம் ஆகியும் சாப்பாடு முதலியவற்றைக் கவனியாமல், இப்படியேன் உட்கார்ந்திருக்கவேண்டும்!" எனக் கவலைகொண்டவளாய்ப் புருஷன் இருக்கும் அறைக்குச் சமீபமாய் வந்து, எட்டிப் பார்த்தாள்; சட்டோஜி, சாய்ந்த நாற்காலியில் படுத்துக்கொண்டு உதட்டை விரல்களால் தடவினபடியே, ஆகாசத்தை அண்ணாந்து பார்த்து, எதையோ குறித்துச் சிந்திப்பவன்போல இருந்தான். தவளாபாய் சற்றுநேரம் சும்மா நின்றாள்; அதை அவன் கவனிக்கவில்லை. பிறகு அவள், அறையின் கதவைச் சற்று ஓசைபடும்படி செய்தாள். அவன் ஒன்றும் பேசவில்லை. தவளாபாய், தனது மனதைத் திடப்படுத்திக்கொண்டு அறைக்குள் சென்று, அவன் பக்கத்தில் நின்றாள்; அதை அவன் கவனியாததைக் கண்டு, "நாழிகை ஆய்விட்டதே! சாப்பிடவேண்டாமா" என்றாள்.

சட்டோஜி திடுக்கிட்டவன்போல் எழுந்து, "என்ன சொல்கிறாய்? சாப்பிடவேண்டாம் என்கிறாயோ? நீ பேசுகிற பேச்சும், உன் அழகும், கிளி கொஞ்சுகிறதே! போ, போ, போ, என்முன் இனி வராதே" என்றான்.

இதைக் கேட்ட தவளாபாய் கிடுகிடென நடுங்கிப் போய், மலமலவெனக் கண்ணீர் விட்டுச் சற்று அப்பால் ஒதுங்கி நின்றாள்.

சட்டோஜி — "என்ன ரோஷம்! தாங்கவில்லையோ? 'கீலிக்குக் கண்ணீர் நிமையிலே' என்றபடி, கண்ணீர் விடுவதில் என்ன பிரயோசனம்! உன்னைப் பார்த்தால் பொம்மை மாதிரி அழகாய், சிற்பி செய்தது போலிருக்கிறாய்; உன் ஊற்றைவாய் உன்னைக் கெடுத்துவிட்டது; என் செய்யலாம்? ஜன்மாந்திரத்தில் நான் செய்த பாபம், வாய்திறந்து நல்ல வார்த்தை பேசத்தெரியாத பெண்பிள்ளையைக் கட்டிக் கொண்டேன். ஏன் இங்கே நிற்கிறாய்? போ; ஏதாவது சோறு இருந்தால் இங்கேயே அனுப்பிவிடு; போ; இனி என் எதிரில் வராதே" என்றான்.

கபடமின்மையும் பதியிடம் பரமபக்தியும் பெற்ற தவளாபாய் ஒன்றுமே பதில் பேசாமல், "எதை உத்தேசித்து வருந்துகிறாரோ தெரியவில்லையே! எனது பரம புருஷரைத் திருப்திசெய்ய எந்த வார்த்தைகளை இனிக் கற்றுக் கொள்வேன்!" என மனவருத்த மடைந்து தனது இருப்பிடம் சென்றாள்; அவன் இருக்குமிடத்திற்கு சாப்பாடு அனுப்பும்படி அங்குள்ள வேலைக்காரர்க்குச் சொல்லி விட்டு, தான் தரையில் படுத்துக் கொண்டு விசனப்பட்டாள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் முக்தாபாய் அங்கு வந்து, தவளாபாய் தரையில் படுத்திருப்பதைப் பார்த்து, மிகுந்த வருத்தப்பட்டவள் போல, "என்ன அம்மா! ஏன் விசனப்படுகிறாய்! சதா சிரித்த முகமாகவே இருப்பாயே! இன்று என்ன நேர்ந்தது உனக்கு? உனது புருஷரால் ஏதாவது உபத்திரவம் நேர்ந்ததா? அப்படியும் அவர் சொல்லப்பட்டவரல்லவே! உன்னிடத்தில் பரம பிரீதி உடையவராயிற்றே! விஷயத்தை விடாமல் சொல்லம்மா" என்றாள். தவளாபாய் இவளைக் கண்டவுடன் எழுந்து உட்கார்ந்து, "அம்மா! எனக்கு ஒரு விதக் கவலையும் இல்லை; என் புருஷர் எதையோ குறித்து விசாரப்பட்டுக்

கொண்டிருக்கிறார்; இது வரையில், சாப்பிட வர இல்லை, வேலைக்காரர்களை அனுப்பிக் கூப்பிடச் சொன்னேன். அவர்கள் கூப்பிட்டதற்கு கோபித்துக் கொண்டாராம். பிறகு நானே சென்றேன்; என்னைப் பரிகசித்து அலக்ஷியமாய்ப் பேசினார். இது வரையில் இம்மாதிரி என்னிடம் அவர் நடந்துகொண்டதில்லை; கோபம் அவரிடத்தில் இருக்குமென்பதே எனக்குத் தெரியாது: சில சமயங்களில் வேலைக்காரிகளும் இன்னும் மற்றப் பெண்டுகளும் என்னிடம் வந்து, 'எங்கள் புருஷர்கள் எங்களை அடித்தார்கள், எங்களைத் திட்டினார்கள்; கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார்கள்' என்று சொல்லிக் கொள்வார்கள். அவ்வார்த்தைகளைக் கேட்க எனக்கு ஆச்சரியமாயிருக்கும்; அதேமாதிரி என் புருஷரும் என்னிடம் நடந்து கொள்ளப் பிரியப்பட்டு, நான் அவரைப் பார்த்து, 'என்னையும் நீங்கள் கோபித்துக் கொள்ளுங்கள், திட்டுங்கள்' என்று கெஞ்சுவேன், அதற்கு அவர், 'உன்னிடம் எனக்கு கோபம் வரவில்லையே! உன்னைப்பார்த்தால் எனக்கு ஏதாவது கோபமிருந்தாலும் போய்விடுகிறதே!' என்பார். அவ்வளவு கருணையை வகித்த என் புருஷர் மனம் ஒரு க்ஷணத்தில் மாறிவிட்டதே! இது என்ன காலகதியோ! நான் என்ன செய்வேன்!" என்று அழுதாள்.

முகுந்தாள் — "அம்மா! நீ பேசுவது நன்றாயிருக்கிறதே! 'காகம் கர் என்றதாம், குடத்தைக் கீழே போட்டுவிட்டுக் கணவனைக் கட்டிக் கொண்டாளாம்' என்றது போலிருக்கிறது. புருஷர்கள் எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் இருப்பார்களோ! ஒரு சமயம் கோபிப்பார்கள்; மறுசமயம் சந்தோஷிப்பார்கள்; அவர்களுக்குக் கோபம் உண்டாகிற போது, எப்படியாவது நாம் சமாதானப்படுத்த வேண்டியது தான்; அப்படி சமாதானிக்கத்

தெரியாத ஸ்த்ரீ எதற்குப் பிரயோசனம்? இம்மாதிரி நீ அழுதுகொண்டு படுத்திருந்தால், அவர் எப்பொழுது சமாதானத்தை அடைந்து சாப்பிடுவார்? எழுந்திரு'' என்றாள்.

தவளாபாய் — ''நான் எப்படி அவரைச் சமாதானப் படுத்துவது என்பது எனக்குத் தெரியவில்லையே!''

முகுந்தா — ''நீதான் பிழைக்கப்போகிறாய்! நீ பரம சாதுவாய் இருப்பதால்தான் உன் புருஷர் உன்னைக்கண்டு ஏய்க்கிறார்; நான் உன்போலிருந்தால் அடிக்கடி என்னிடம் வந்து அவர் என்னை ஸ்தோத்திரம் செய்யும்படி நடந்துகொள்வேன்''

தவளாபாய் — ''எனக்கு அம்மாதிரியான பழக்கங்கள் தங்களால்தான் உண்டாகவேண்டும்; என் புருஷர் என்னிடம் இப்பொழுது கோபித்துக்கொண்டதுபோல் அடிக்கடி இனி கோபித்துக்கொள்ள ஆரம்பிப்பார்! அப்படி அவர் இனி இராமல் என்னிடம் சதா அன்புள்ளவராய் இருக்க நான் நடந்துகொள்ள வேண்டியதை ஒரு பாடமாகக் கற்பிக்கவேண்டும். இதுவரையில் நான் வெகு சாதாரணமா யிருந்துவிட்டேன்''

முகுந்தா — ''உனக்குப் பழக்கம் போதாது; புருஷன் ஏதாவது நம்மிடம் சொல்லிக்கொள்ள வந்தால், அப்பொழுது நாம் மிகுந்த பிகுவோடிருக்கவேண்டும்; கவட்டுத்தனமா யிருக்கவேண்டுமே ஒழிய, அசட்டுத்தனமா யிருக்கக்கூடாது; சில சமயங்களில் நாம் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டுமே ஒழிய, ஓயாது பணிவிடைசெய்து கும்பிடக்கூடாது; இவைகளை யெல்லாம் கொஞ்ச நாளைக்குள் நான் உன்னைப் பழக்கிவிடுகிறேன். நான் சொல்கிறபடி மட்டும் நீ கேட்கவேண்டும். ஏதாவது

தவறிவிட்டையோ, தலைக்கு வந்துவிடும் தீம்பு; இக்காலத்தில் ஒருவரை ஒருவர் நம்பி ஒரு காரியத்தைச் செய்ய முடியாது. நீ நல்லவளானதால் ஸ்த்ரீகள் புருஷர்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய விஷயங்களை உனக்குக் கற்பிக்கலாம் என்று தீர்மானித்தேன்''

தவளாபாய் — "தாங்கள் எது சொன்னாலும் கேட்கிறேன்; என் புருஷர்மட்டும் இப்பொழுது எழுந்து வந்து சாப்பிட்டால் போதுமானது''

முகுந்தா — "உன் புருஷனை ஒரு நொடியில் எழுந்து வரும்படி செய்கிறேன், யோசிக்காதே; இதோடு போதுமென்கிறாயே! இந்தச் சமயம் சொல்வதைக் கேட்போம், பிற்பாடு பார்த்துக்கொள்வோம் என்கிற யோசனையோ?''

தவளாபாய் — "அதேதன் அப்படி நினைக்கிறீர்கள்! என் ஆயுசு பரியந்தம் தாங்கள் சொல்வதையெல்லாம் கேட்பேன''

முகுந்தா — "உன் புருஷரை விட்டு ஒரு சமயம் வெளியே புறப்படு என்பேன்; அது ஏதாவது ஒரு காரியத்தை உத்தேசித்ததாயிருக்கும். அப்பொழுது மாட்டேன் என்று சொல்லக்கூடாது''

தவளாபாய் — "எல்லாம் புருஷனை உத்தேசித்துத் தானே பேசுகிறது. அவரைப் பிரிந்தால் என் உயிர் இருக்குமா?''

முகுந்தா — "பேஷ், நல்ல கெட்டிக்காரிதான், நான் சொல்வதையெல்லாம் கேட்கிறேன் என வெளிக்குச் சொன்னயோ? நீ நல்ல சாமர்த்தியக்காரிதான்; போதும், உனக்குச் சிட்சை சொல்லிக்கொடுக்க முடியாது; வாய்வார்த்தையில் கூட சொல்லமாட்டேன் என்கிறாயே! நான் சொன்னால் புருஷனைவிட்டுப் பிரிந்து விடுவாயோ? நீ அம்

மாதிரி பிரமாணமாய் ஒப்புக்கொள்ளவேண்டும். உன் புருஷன் உன்னிடம் விசுவாசமாய் இனிப்பிரவேசிப்பதில்லை; நானும் அதற்காகவேயன்றிய பிரயத்தனமும் செய்யமாட்டேன்''

கவளாபாய் — "தாங்கள் சொல்வதைக் கட்டாயம் கேட்கிறேன்; என் புருஷனை எனக்கு சம்மதமாய் இப்பொழுது வரும்படி செய்யுங்கள் பார்ப்போம்''

முகுந்தா — "புருஷனைவிட்டுப் பிரிந்து ஜீவிப்பேன் என்றால் அப்படியே செய்யவேண்டும்''

கவளாபாய் — "சரி, அப்படியே ஆகட்டும்''

முகுந்தா — "அந்தப்படி பிரமாணமாய்ச் சொல்ல வேண்டும்''

கவளாபாய் — தன் புருஷனிடத்தில் உள்ள விசுவாசத்தினாலும், அவர் சீக்கிரம் வசமாய்த் தனக்கு கட்டுப்படவேண்டும் என்கிற கோரிக்கையாலும், பிரமாணமாகச் சொன்னாள்.

முகுந்தா, கவளாபாயை அழைத்துக்கொண்டு சட்டோஜி இருக்கும் அறைக்குள் வந்தான்; முகுந்தாள் வரவைக் கண்ட சட்டோஜி பரம சந்தோஷமடைந்து, தான் சுவர்க்கலோகத்தில் இருப்பதைப் போல நினைத்துக்கொண்டான். அவனுடைய முகம் படபடப் படைந்து, வருக வருக என்று பார்வையைக் காட்ட ஆயிரம் தடவை அசைத்தது. முகுந்தாள், தான் வைத்த பொடி சரியாய்ப் படிந்து விட்டது; இனிக்காரியம் பூர்த்தி ஆகும் என நினைத்துக்கொண்டாள். முகுந்தா அங்கிருந்த கதவின் மறைவில் நின்றுகொண்டு, "ஐயா! இப் பெண்மீது அவ்வளவு கோபம் வைத்துக்கொள்ளலாமா! தாங்கள் சகலமும் தெரிந்த புத்திமானாயிற்றே! ஒரு காரியத்தைக்

குறித்து கவலை ஏற்பட்டால், அவளை நினைத்துக்கொண்டு உடலைவிடுப்பது போல வேறொருவரை அவமரியாதை செய்வது பாபமல்லவா! கிணற்று நீரை வெள்ளம் அடித்துக் கொண்டு போகாது, சாப்பிடாமல் விசாரத்தை மனதில் நினைந்து உட்கார்ந்திருந்தால் அது தானாக நீங்கி விடுமா? விவகாரம் ஒரு புறம் நடந்துகொண்டிருக்க வேண்டியது தான்: விஷயத்தைப் பற்றி முடிக்கப் பிரயத்தனப் படவேண்டியது தான்; தவளாபாயை சமாதானப் படுத்துங்கள், சாப்பிட எழுந்திருங்கள்" என்றான்.

சட்டோஜி — "இவள் சொன்ன வார்த்தையில் எனது எண்ணம் விளங்குகிறது. இனி எனது எண்ணம் பூர்த்தி பெற ஆக்ஷேபமில்லை" என்று சந்தோஷமடைந்து, "நாம் வந்த பிறகு இனி நான் சாப்பிடாமல் நிற்பேனோ?" என்று உடனே சாப்பாட்டிற்கு எழுந்து தவளாபாயோடு சென்றான்; முகுந்தா முகத்தை மூடிக்கொண்டபடியே வேறு பக்கமாய் தான் இருக்குமிடம் சென்றாள்.

தவளாபாய் தன் புருஷன் சந்தோஷமாய் எழுந்து வந்து தன்னிடம் பிரியமாய்ப் பேசி சாப்பிட்டதற்கு மனமகிழ்ந்தவளாய், முகுந்தாளின் கெட்டிக்காரத் தனத்திற்கு மெச்சினாள். இவள் தன் புருஷனிடம் அவநம்பிக்கை ஒரு நாளும் பட்டிராதவளாதலாலும் அம்மாதிரியான நோக்கம் இன்னதென்பதே அறியாதவளாதலாலும், 'வெளுத்தது பால் கறுத்தது தண்ணீர்' என்ற கொள்கையோடு, உலக நடையும், முகுந்தாளின் மோச எண்ணமும் அறியாமல் அவளைப் புகழ்ந்தாள்.

சட்டோஜி சாப்பிட்டுப் போனபிறகு முகுந்தாள் வர, அவளைத் தவளாபாய் நமஸ்கரித்து, அவள் எது சொன்னாலும் கேட்பதாக ஒப்புக்கொண்டு, அவளது

கெட்டிக்காரத் தனத்திற்கு அவளைப் புகழ்ந்தாள். முகுந்தாள் அந்த வீட்டிற்கு அதிகாரத்தை வகிக்க வல்லவளென வேலைக்காரர் முதலிய யாவரும் கொண்டாடினார்கள். சட்டோஜி இவளது மாயமாகிய வலையில் பலமாகச் சிக்கிக் கொண்டான். மாதவராவ் இக் குடும்பத்திற்கு முக்கியமான வேலைக்காரனானான்; யாரும் இவனை அலக்ஷியமாய் நினைத்தார்கள்; சட்டோஜி முகுந்தாளுக்காகவே மாதவராவை வாதியாக்கி, மற்றவர்கள்மேல் வழக்குத் தொடுத்தான்; வியாஜ்யத்தில் ஏராளமான திரவியம் செலவாயிற்று. மாதவராவ், ஹோல்கார் வம்சத்தைச் சேர்ந்தவன்தான் என்பதற்குச் சரியான சாக்ஷியம் கிடைக்காததால் சட்டோஜி அநேக பொய்சாக்ஷிகளை மிகுந்த திரவியம் கொடுத்து சம்பாதித்து சித்தஞ் செய்துயிருந்தான். மெய்க்கு முன் எந்தப் பொய்தான் நிற்கும்? அச் சாக்ஷிகளால் ஒன்றும் பிரயோசனமில்லாமல் போகவே, கோர்ட்டில் வாதி, சொந்தக்காரன் என்பதற்கு அத்தாக்ஷியாக சில புனைசுருட்டுத் தஸ்தாவேஜுகள் தாகல் செய்யப்பட்டன; அவைகள் பொய்யான தஸ்தாவேஜுகள் என ருசுவாக்கப்பட்டதனால், மாதவராவ் ஹோல்காரை சிக்ஷை விதிக்க விசாரணை ஆரம்பமாயிற்று. மூன்று வருஷகாலம் வியவகாரம் நடந்துகொண் டிருந்தது. இதன் மத்தியில் முகுந்தாள் தனக்கு வேண்டிய உயர்ந்த நகைகளைச் சிறுகச்சிறுகச் சட்டோஜியைக் கேட்டுப் பண்ணிப் போட்டுக்கொண்டாள். அவள் அவனை நோக்கி, "விவகார மத்தியில் தங்களுடன் எவ்வித சல்லாபமும் வைத்துக் கொள்ள மாட்டேன்; வியாஜ்யம் ஜெயமோ, அபஜயமோ எதாவது ஒரு வழியாக முடிந்துவிட்டால் என்னைக் கட்டாயம் தங்களுடைய சம்சாரமாகவே வைத்துக் கொள்ளலாம்" என்று நிச்சயமாய்ச் சொல்லிவிட்டாள். சட்

டோஜி, விசாரணைக்காலம் குறிக்கப்படும்போதெல்லாம், 'இதோடு கேஸ் பைசலாகிவிடும்' எனப் பத்துத்தினம், ஒருமாதம், ஒருவருஷம் ஆகக் காலக்குறிப்பிட்டு வருஷம் மூன்றும் கழிந்தன. இவனது குடும்பத்தில் ஏராளமான கடன்கள் ஏற்பட்டு, கடன் கொடுத்தவர்கள் யாவரும் ஒவ்வொருவராய் பிரியாது செய்ததனால் பணத்திற்கு மிகுந்த தொல்லையை அடைந்தான். தவளாபாய், முகுந்தாள் எப்படி சொன்னாலும் அந்தப்படியே நடந்துவந்தாள்; மாதவராவ் பொய் தஸ்தாவேஜு செய்தவனென கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு, இவனை விசாரித்தார்கள்; இவன் தனக்கு ஒரு தகவலும் தெரியாதென்றும் எல்லாம் சட்டோஜியின் ஏற்பாடு என்றும், தன்னை அநியாயமாய் குற்றவாளியாக்கித் தண்டிப்பது தர்மமல்லவென்றும் கேட்டுக்கொண்டான். உடந்தைக் குற்றத்திற்கு சட்டோஜியும் சார்ஜு செய்யப்பட்டு, விசாரணைக்குள்ளானான். கொஞ்சம் மிச்சம் மீதியிருந்த சொத்துக்களும் தீர்ந்துபோயின.! அவன், 'உடம்பு வேண்டாம்; கை, விட்டால் போதும்' என்ற நிலைமைக்கு வந்து பரிதபித்தான்; தான் துன்பமடையாமல் விடப்பட்டால், முகுந்தாளோடு எங்கேயாவது அன்னியதேசம் ஓடிக் காலம் தள்ளலாம் என நினைத்தான். தன் சம்சாரத்தினிடத்தில் உள்ள நகைகள் யாவும் விற்றுக் கோர்ட்டுச் செலவு நடந்துவிட்டது. முகுந்தாளுக்கு சட்டோஜியால் செய்து போடப்பட்ட நகைகளையும் விவகாரச் செலவிற்குக் கேட்டுப் பார்த்தான்; அவள் எல்லாவற்றையும் கழற்றி ஒருவருக்குந் தெரியாமல் அடக்கம் செய்துவிட்டு, 'யாரோ வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் அடித்துக் கொண்டு போய் விட்டார்கள்; என்ன செய்வேன்!' எனப் பெருங் குரலெடுத்து அழுதாள். சட்டோஜிக்கு முகுந்தாளை சமாதானப்படுத்துவது பெருத்த கஷ்டமாய் முடிந்தது. வீட்டு வேலைக்

காரர்களுக்குச் சம்பளம் சரிவர செலுத்தாமையால், அவரவர்கள் நின்று விட்டார்கள். இவன் பெரிய மநுஷன் வீட்டுப் பிள்ளையாயிருந்தும் இவனது சிநேகிதர்களும் மற்றவர்களும் இவனைப்பற்றி கவனிக்கவேயில்லை. 'வீட்டில் யாரையோ, விபசாரியை வைத்துக்கொண்டு, அவளுக்காக அக்கிரமத்தில் பிரவேசித்துச் சொத்துக்களை நாசம் செய்தான்; மகா பாபி' என யாவரும் இவனை இகழ்ந்து பேச ஆரம்பித்தார்கள். 'நல்ல குடித்தனத்தை நாசம்செய்ய வந்தானே! பாவி' என இவனை எவரும் அலக்ஷியம் செய்தார்கள். முகுந்தாளிடம் சட்டோஜி எவ்விதமான உல்லாசத்தையும் அடையாதவனாயிருந்தும், துஷ்ட ஸ்த்ரீயாகிய அவளை வீட்டில் கொண்டுவந்து வைத்ததிலிருந்து இவனது கௌரவமும் நாணயமும் போனதன்றி, பலபேர் பழிக்கவும் ஆயிற்று. முகுந்தாள் சிற்சில சமயங்களில், சட்டோஜியைப் பார்த்து, "எங்களுக்காக ரூபா செலவிடுகிறேனென வீணுகச் சொல்லிக் கொள்கிறீர்களே ஒழிய, நாங்கள் அடைந்த லாபம் ஒன்றுமில்லை; உங்களை நம்பி வந்ததை விட்டு வேறு யாராவது ஒரு பரதேசியிடம் அல்லது பிரதிவாதிகளிடமாவது போய்க் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்தால், நாங்கள் எவ்வளவோ சௌக்கியமாக விருப்போம்; தெரியாத்தனமாய் உங்களிடம் வந்து விட்டோம்; இப்பொழுதாவது எங்களை விட்டுவிட்டால், நாங்கள் எங்கேயாவது போகிறோம். ஊரான் பெண்டாட்டி உங்களுக்கு உடந்தையாவாள் என மனப்பால் குடித்துக்கொண்டு இருக்க வேண்டாம். நாங்கள் அப்படிப்பட்ட வம்சத்தைச் சேர்ந்தவர்களல்ல" என உறுத்தலாய்ப் பேசுவாள். சட்டோஜி இவ் வார்த்தையைக் கேட்டு மனம் தாளாதவனாய், "விழலுக் கிறைத்த நீராயிற்றே" என ஏக்கம்கொண்டு தவிப்பான். கேஸ் விஷயமாய்த் தோல்வி யடையாவிட்டால்

முகுந்தாள் தன் வசம் எப்படியும் ஆய்விடுவாள் என்பதை எண்ணி எண்ணி ஏங்குவான். கேஸ் தோற்றுவிட்ட விசனத்தால் முகுந்தாள் இணங்காதவள்போலப் பிணங்குகிறாள் எனத் தைரியம் கொள்வான்; தவளாபாய் தன் புருஷன் பெரிய விவகாரத்தில் அகப்பட்டுக்கொண்டு கஷ்டப்படுகிறாரே என வருந்துவாள்; தன் தாய்தகப்பன்மார், தன்னை, தங்கள் ஊருக்கு வந்து விடும்படி அழைத்தும் இவள் போகவில்லை. இவள் புருஷனும், இவளிடத்தில் அதிக அன்பு வைத்தவனாகவும் இல்லை; விவகாரத்தில், வீட்டில் உள்ள பண்டங்களை விற்றுச்செலவுசெய்யுங் காலத்தில் தவளாபாய் எதுபோனாலும் போகட்டும் தன் புருஷன் மீண்டுவந்தால் போதுமென நினைத்திருந்தாள். மாதவராவ் குற்றவாளியென முந்தியேகோர்ட்டாரால் கூறப்பட்டு சட்டோஜியின் ஜாமீன்பேரில் விடப்பட்டிருந்ததால், அவன் ஒருவரிடமும் சொல்லாமல் எங்கேயோ போய்விட்டான்; அவனைச் சித்தப்படுத்துவது சட்டோஜியின் கடமை; இல்லாவிட்டால் ரூபா ஐயாயிரம் கோர்ட்டுக்கு நஷ்டமிறுக்கவேண்டியவனாக ஆய்விட்டான். இவன் ஓடிப்போன சமாசாரத்தை முகுந்தாளிடம் தெரிவித்தபோது, அவள், "அவர் சுத்தப் பைத்தியம பிடித்தவரெனத் தங்களுக்குத் தெரிந்திருந்தும், அவருக்காகத் தாங்கள் ஏன் ஜாமீன் கொடுக்கவேண்டும்? அவர் ஓடிப்போனது உங்களுக்கு அதிர்ஷ்டம்தானே! ஒரு ஸ்த்ரீயை சுயேச்சையாய் அனுபவித்துக் கொள்ள ஐயாயிரம் ரூபா செலவிடக் கூடாதா!" என்றாள். இந்த வார்த்தையைச் சட்டோஜி கேட்டதும், தான் எவ்வளவு துன்பத்தை அனுபவித்தாலும் இந்த ஸ்த்ரீ தன்வசம் ஆய்விடுகிறது ஒன்றுமட்டும் தனக்குப் போதுமானது என நினைத்து தன் வீட்டைக் கிரயம்செய்வதாகப் பேசி, கோர்ட்டுக்குக் கட்டவேண்டிய ரூபாவை வாங்கிச் செலுத்திவிட்டான்.

பொய் தஸ்தாவேஜு தாக்கல் செய்ததற்கு உடந்தைக் குற்றம் இவனை விட்டுப் போகவில்லை; இவன் அந்தக் கேஸ் தன்னை ஒன்றும் பாதிக்கமாட்டாது என நினைத்திருந்தான்; இவன் நினைத்ததற்கு விரோதமாக இவன் மீது விசாரணை தொடுக்கப்பட்டு, அரசாக்ஷியார் கேஸை நடத்தினார்கள்; தப்புவது, முடியாமல் போயிற்று; இந்தச் சமயத்தில் இவன் செலவு செய்து, கேஸை நடத்துவதற்குக் காலணாவும் கையில் இல்லை; கடன் கேட்கவும் வழியில்லை; என்ன செய்வான் பாவம்! தவித்துத் தண்ணீராய் உருகுகிறான். இவன் பத்தினி தவளாபாய், முகுந்தாளின் துற்போதனையால் மனச்சஞ்சலத்தைக் கொஞ்சம் பெற்றிருந்தாலும் தன் புருஷன் அறியாத்தனத்தால் அடைந்த ஆபத்தை நினைந்து மனமுருகினாள்; முகுந்தாளைப் பார்த்து, "அக்காள், நான் என் செய்வேன்! என் புருஷருக்கு வந்த ஆபத்து அவரை விட்டு நீங்குமா? எங்களை ஆசீர்வதித்து நல்ல வார்த்தை கூறுங்களேன்" என்பாள்.

முகுந்தாள் — "நீ என்ன சுத்த அசட்டுத்தனமாய்ப் பேசுகிறாயே! காலத்துக் கேற்றபடி உனக்கும் புத்தி குறைந்து கொண்டே வருகிறது. நாம் எந்தக் காரியம் செய்தாலும் அது கடவுளுக்கு திருப்திகரத்தைக் கொடுக்கக் கூடியதாகவேயிருக்கவேண்டும். அதாவது, சர்வஜன சம்மதமான ஒரு காரியமானது, கடவுளுக்கு சம்மதமென நான் உனக்கு சொல்ல வேண்டியதில்லை; எவருக்கும் திருப்தியில்லாத காரியத்தை ஒருவன் செய்தால், அதற்கு மன்னிப்பு ஒரு நாளுமில்லை. உன் புருஷர் செய்த காரியமோ, ஆதிமுதல் தப்பாகவே சர்வஜனங்களாலேயும் மதிக்கப்பட்டிருக்கின்றது. என்னுடைய அனுபவமான சுவல்ப காலத்திலும், அவர் மிதமிஞ்சி ஒரு காரியத்தைச் செய்யப் பிரவேசிக்கிறார் என்றும், சாமான்யத்தையும் கொஞ்சத்தில் விடுகிற

தில்லை என்றும் அறிந்தேன். நான் உங்கள் வீட்டில் உண்டு உடுத்து, வேண்டிய சௌக்கியத்தையும் அனுபவித்தேன். எங்களுக்கு அனுகூலமாகவே அவர் விவகாரமும் நடத்துகிறார். நானும் அவர் விஷயத்தில் குறை சொல்லுகிறேனென நினைக்காதே! எந்தக் காரியத்தையும் நான் உள்ளது உள்ளவாறு சொல்வேனே யொழிய அசத்தியம் ஒருநாளும் பேசமாட்டேன். ஒரு காரியத்தை உத்தேசித்து ஒருவரை நான் ஸ்தோத்திரித்துப் பேசுவது வழக்கமில்லை. நீயே நன்றாக யோசித்துப்பார். இவர் தகப்பனார் இவருக்காக எவ்வளவு சொத்து சேர்த்து வைத்திருந்தார். அவ்வளவையும் வியர்த்தம் பண்ணினாரே! மகாபாபியான இவருக்காக நீயும் வருத்தப்படுகிறாய்! புருஷன் புருஷனென்ற வீண் பயித்தியம் உன் தலைக்கு மேல் ஏறிக்கொண்டிருக்கிறது. இவ்வளவு செலவு செய்தாரே, உனக்கு ஏதாவது இருபதினாயிரம் ரூபாய்க்கு உயர்ந்த நகைகளாவது பண்ணிப்போட்டாரா? அல்லது உன் தகப்பனார் போட்ட நகைகளையாவது பிடுங்கிக் கொள்ளாமலிருந்தாரா? அழகுள்ள துரை என்றால் அடிவயிற்றுக்குக் கஞ்சி வேண்டாமா? பர்த்தா பர்த்தா வென்று சொல்லிப் பதிவிரதம் கொண்டாடி, எத்தனையோ பாடுபட்டு வளர்த்த உன் தாய்தகப்பன்மாரையும் வேண்டாமென வெறுத்தாய்! நாளைக்கு உன் புருஷன் ஜெயிலுக்குப் போய்விட்டால் நீ எந்த சந்தியில் போய் நின்று தவிப்பாயோ! எங்களால் தானே, இக்கதி நேர்ந்தது எனக் கனவிலும் நினைக்காதே! நான் அப்படிப்பட்ட பொல்லாதவளல்ல. வியாச்சியம் வேண்டாம் வேண்டாமென்று எத்தனையோ தடவைகளில் தடுத்துப் பேசியிருக்கிறேன்; அதைக் கொஞ்சம்கூட அவர் கவனிக்கவில்லை. நாங்கள் வந்தபடியால் இந்தமட்டாவது ஒரு வழியாகப் போயிற்று; இல்லாவிட்டால் முந்தியே காலியாய்ப் போவ

தன்றி உன்னையும் விற்று முதல் செய்து ரூபா வாங்கியிருப்பார். நல்லவேளையாய் உன்னைத் தப்புவிக்க நான் வந்து சேர்ந்தேன்''

தவளாபாய் — "ஐயோ! அக்கா! என்னைக் கூடவா விற்று விடுவார்?"

முகுந்தாள் — "விற்ருல், வேண்டாமென்று தடுத்து விடுவாயோ? அது ஒரு நாளுமில்லை''

தவளாபாய் — "என்மீது எவ்வளவோ விசுவாசமுள்ள எனது புருஷர் என்னை விற்றுவிட மனம் துணிவாரா? என் அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

முகுந்தாள் — "அசடே! வாயை மூடு! பரப்பிர்மம் ஜகந்நாதமாய் எனக்கு இப்படி வருவாயா! ஐயோ பாபம்! உன்னைப் பெற்ற தாயிருந்தால் உன்னைப் பார்த்து ஆயிரம் அடி அடிவயிற்றில் அடித்துக்கொள்வாள்! என்னமோவா உன் தாய்க்கு சமானமாக நான் ஒருத்தி வந்தேன். இதுவும் உன் அதிர்ஷ்டம்தான்; நல்லதிருக்கட்டும்; நான் ஒன்று கேட்கிறேன்; உன் புருஷர் உன்னை ஒரு நாள் வைதாரே, அது முதல் உன்னிடம் சௌகர்யமாக விருக்கிருரா? அது எப்படி, இது எப்படி யென வாஸ்தவத்தைப் பேசி பிரியமாயிருந்ததுண்டா?"

தவளாபாய் — "இல்லை"

முகுந்தாள் — "அதற்கென்ன காரணம்?"

தவளாபாய் — "விவகாரத்தில் அலைந்து திரிந்து கஷ்டப்படுவதால் ஒரு சமயம் மனதுக்கு சமாதானமில்லாமலிருக்கலாமென நினைத்தேன்"

முகுந்தாள் — "நீ நினைப்பதுபோல் அனுகூலமான புருஷராயிருந்தால் தமக் கேற்பட்ட வருத்தத்தை தமது

மனமொத்த மனைவியிடம் சொல்லி அதற்கு பரிகாரத்தைத் தேட வழிகேட்க மாட்டாரா ?"

தவளாபாய் — "தாங்கள் சொல்வதுபோல் என்னிடத்தில் அவர் தெரிவிக்காததைக் கொண்டு நான் குற்றமாகப் பாவிக்கவில்லை"

முகுந்தாள் — "சரிதான்: தப்பு உன்னிடத்தில் தான் இருக்கிறது; அதனாலேதான் அவர் உன்னை ஏய்க்க ஆரம்பித்துவிட்டார்; அவருக்கு பணிவிடை செய்ய வந்த ஒரு வேலைக்காரியைப்போல் நினைத்துவிட்டாரே ஒழிய, அக்னி சாக்ஷியாக கலியாணம் செய்துகொண்ட ஸ்த்ரீ இவள், நமது சுகதுக்கங்களுக்கு பாத்தியப்பட்டவள் எனக் கொஞ்சங் கூட நினைக்காமல், உன்னை அடிமைக்காரியைப்போல் கடன் உபத்திரவத்திற்காக, விற்றுவிடவும் யோசித்துவிட்டார்"

தவளாபாய் — "அக்கா! என்னவோ தலையில் நெருப்பை வாரிக்கொட்டுகிறது போல் பேசுகிறீர்களே! முதலில் என்னை விற்றுவிடுவார் என்றீர்கள்; இப்போது விற்கத் தீர்மானித்து விட்டதுபோல் சொல்லுகிறீர்கள். இது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா? என்னை அவர் விற்றுவிடுவாரா ? அவர் விற்பதுதான் நியாயமாகுமா ?"

முகுந்தாள் — "ஏன் நியாயமாக மாட்டாதோ தெரியவில்லை! நீ உத்தம ஸ்த்ரீதானே! புருஷன் சொல்லுக்குக் கட்டுப்பட்டவளதானே! அவர் விற்க யத்தனிக்கும் பொழுது அவர் படும் தாபந்தரியத்தைப் பார்த்து, நீ மாட்டேனென்று சொல்லப்போகிறதில்லை. நீ சரிதானென்று பேசாமலிருப்பாய்; உன்னை விலைகொடுத்து வாங்கிக்கொள்பவர் உன்னை ஹிம்ஸிக்கும்போது நீ படும் கஷ்டம் ஈசனுக்குத்தான் தெரியும்!"

தவளாபாய் — "தன்னுடைய சம்சாரத்தைக் கடனுக்காக விற்றுக்கொடுப்பதாக இக்காலத்தில் நான் கேள்விப்படவில்லை. நீங்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது"

முகுந்தாள் — "ரொம்பத் தெரிந்தவள் மாதிரிப் பேசுகிறாயே! இந்தமாதிரி அசட்டுத்தனமாய் நீ பேசுவதனால்தான் எனக்குக் கோபம் உண்டாகிறது. எல்லாம் தெரிந்தவள் போல, தற்கால முற்கால வழக்கங்களை எல்லாம் எடுத்துப் பேசுகிறாய். அரிச்சந்திரன் தன் கடன் தீர்க்கும் பொருட்டுத் தன் மனைவியை விற்கவில்லையா! அவள் ஓர் அந்தணரிடத்தில் அடிமையாகி அரிய கஷ்டங்களை அபாரமாக அனுபவித்தாளே! அச் சரித்திரத்தைப் புஸ்தகத்தில் படித்திராவிட்டாலும் யாராவது சொல்லக் கேள்விப்பட்டிருக்கலாமே"

தவளாபாய் — "ஆம். அக்காள்! கேள்விப்படிருக்கிறேன். என் புருஷர் என்னை விற்றுவிட்டால் என்னை வாங்குவோர் என்ன செய்வார்களோ தெரியவில்லை!"

முகுந்தாள் — "செய்வதென்ன? அவர்கள் உன்னை எந்தவிதமான காரியத்தையும் செய்யும்படி சொல்லலாம்!"

தவளாபாய் — "முடியாதகாரியமானால் ?"

முகுந்தாள் — "அவர்களுக்கு இஷ்டமானால் பேசாது இருப்பார்கள்; இல்லாவிட்டால், கண்டம் கண்டமாய் வெட்டி எறிவார்கள். இந்த அரசு நீங்கலாக ஆங்கிலேயர்களால் ஆளப்படுகிற சுற்றுப் பிரதேசங்களில் இவ்வித கொடுமைகள் ஓங்காது: கர்னாடகத்தை யவாரித்து நமது தேசத்தரசர் இராஜ்யபரிபாலனம் பண்ணுகிறார்கள். இதுவும் ஆங்கிலேயர்களுக் குட்பட்டுவிட்டால் இம்

மாதிரி கொடுமைகள் நடக்காது. ஒவ்வொருவரும் சுயேச்சையாக இருக்கலாம். அப்படிப்பட்ட காலம் வெகு சீக்கிரம் வந்துவிடும். நமது அரசனும் அவர்களுக்கு பயந்து நியாய விசாரணை சபைகளும் குற்றவிசாரணைக் கோர்ட்டுகளும் ஏற்படுத்திக் கொஞ்சம் முன்பின் சரிவர நடத்துவதாகவே தெரிகிறது. என்றாலும், பழைய கொடிய வழக்கங்கள் ஒழிந்தபாடில்லை. சில காலத்துக்கு முந்தி, பலவானான ஒருவன், அனேக ஸ்த்ரீகளையும் அனேக புருஷர்களையும் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்வது வழக்கம்; அவன் அவர்களைத் தன் மனம்போனபடி நடத்துவான். ஒரு காலத்தில் அவன் அனேக கர்ப்ப ஸ்த்ரீகளை சிறையிலடைத்து அவர்களுடைய வயிற்றிலுள்ள கருக்களை அறுத்தெடுத்துக் கனச்சு ஏற்பட்டிருந்த அசாத்தியமான இரணங்களுக்கு வைத்துக் கட்டியிருப்பதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். இம்மட்டோடு நில்லாமல், அற்பகுற்றம் ஒருவன் செய்ததாக பாளையக்காரர் அல்லது ஜமீன்தார் அரசனுக்குத் தெரிந்துவிட்டால் குற்றவாளிகளைக் கொடுமை செய்வது கணக்கு வழக்கில்லை. அவர்கள் கண்களைக் கத்தியால் தோண்டிப் பிடுங்கி யெடுத்து விடுவதும் காதுகளை அறுப்பதும் மூக்கை மூளி செய்வதும் உதடுகளைப் பிய்த்தெறிவதும் மாறுகால் மாறுகைகளை வாங்கிவிடுவதும் கழுமரத்திலேற்றி நிறுத்தி வைப்பதும் தலையைமட்டும் வெளியே வைத்து மற்றப் பாகங்களைப் பூமிக்குள் புதைத்துவிட்டு யானையின் காலால் இடறச் செய்வதும் முதலிய கோரமான தண்டனைகளிருந்தன. அவைகளெல்லாம் இப்பொழுது வரவர ஒழிந்துவிட்டனவென்றே சொல்லலாம். ஆதலால் நீ இனி எதற்கும் முன் ஜாக்கிரதையாக இருப்பது நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது" எனத் தனக்குத் தோன்றியவாறு இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி உத்

தமியான தவளாபாயின் மனதை கலவரப்படும்படி செய்தாள்.

தவளாபாய் உலகவிவகாரம் ஒன்றுமே அறியாதவள்; செல்வவான் வீட்டில் பிறந்து செல்வமாகவே வளர்க்கப்பட்டு, தக்க ஸ்ரீமானையே புருஷனாக அடைந்தவள். கஷ்டங்கள் இன்னவைகளென்று இவள் கேள்விப்பட்டிராள். ஆகையால், முகுந்தாள் சொல்வதை யெல்லாம் வாஸ்தவமென நம்பிப் பெருந் திகிலடைந்து, தான் எப்படி தப்புவதென அவளைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டாள். முகுந்தாள், ஏதோ, தான் எவருடைய நல்வாழ்வையும் நலமாகக் கருதுபவள்போல் நடித்து, "எப்படியாவது நான் உன்னை நல்ல நிலைமையிலிருக்கும்படி செய்கிறேன். நான் சொல்வதெல்லாம் நீ கேட்பதாய் ஏற்கனவே வாக்களித்திருக்கிறாய். நீ எப்பொழுதும்போல் உன் புருஷரிடத்தில் மிகுந்த அனுதாபத்தைக் காட்டிக்கொள்பவள் போல நடி. அவருக்கு உற்ற பணிவிடை செய்யும் பத்தினியைப் போல் பிடிவாதம் பிடி. சுவல்பதினத்திற் கெல்லாம் உனக்கு க்ஷேமகாலம் உண்டாகும்படி கடவுள் கிருபைசெய்வார். உன் புருஷன்மேல் நீ கொண்ட ஆசையை அடியோடு இன்றுமுதல் விட்டுவிடு. என்னை உனது சகோதரிக்கு சமானமாக உன் மனப்பூர்வமாக நினைந்துகொள்" என்று சொல்லிவிட்டு எழுந்துபோய் விட்டாள். தவளாபாய் தனக்கு ஏதோ பெருத்த ஆபத்து வந்துவிட்டது போலவும் அதை நீக்கிவைக்க, முகுந்தாள் உருவமாக அம்பாளே வந்ததுபோலவும் நினைத்துக் கொண்டாள். அன்று முழுவதும் இவள் புருஷன் சட்டோஜி வீட்டிற்கு வரவேயில்லை. மறுநாட் காலையில் ஒருசேவகன் சட்டோஜி வீட்டிற்குவந்து, "தவளாபாய் அம்மாள் இருக்கிறார்களா?"

என்று விசாரித்தான். இதை அறிந்த தவளாபாய் சேவகன் தன் வீட்டிற்குவந்த விபரத்தை விசாரித்தாள்.

அவன், "நான் ஆபீசில் வேலை பார்க்கிற சேவகன்; சட்டோஜி பான்ஸ்லேயை, கோர்ட்டார், தப்புக் கையெழுத்து செய்ததற்காக குற்றவாளியாக்கி ஜெயிலில் அடைத்து விட்டார்கள். அவருக்கு யாராவது ஜாமீன் கொடுத்தால், விசாரணை பூர்த்தியடையும்வரையில் வெளியேபோகும்படி விட்டுவிடுவதாககோர்ட்டார்சொன்னார்கள். அவருக்குத்தெரிந்த எத்தனையோ சிநேகிதர்கள் பந்துக்களிருந்தும் எல்லாரும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துச் சென்றார்களே ஒழிய ஒருவரும் முன்வந்து ஜாமீன் கொடுக்கவில்லை. சட்டோஜி தம் பரிதாபமான நிலையை உணர்ந்து நொந்து நீரானார். இரவு ஆகாரம் அருந்தவேயில்லை. நேற்று காலையில் எப்பொழுது சாப்பிட்டாரோ! இராத்திரி தூக்கமே யில்லாமலிருந்தார். இதைக் கவனித்த நான் மிகுந்த வருத்தப்பட்டு அவரிடம் போய், 'தங்களுக்கு என்னால் ஏதாவது செய்யக் கூடுமானால் செய்யச் சித்தமாயிருக்கிறேன்' என்றேன். அவர் மனத்துயரம் கொண்டு, 'என் வீட்டிற்குச் சென்று இந்த சமாசாரத்தை எனது பத்தினி தவளாபாயிடம் தெரியப்படுத்து. அவளே எனக்காக வந்து ஜாமீன் கொடுத்தாலும் போதும்; நான் வெளிப்பட்டால் குற்றவாளி யல்லவென்று நிரூபித்துக் கேஸைத் தள்ளிக் கொள்வேன். அவளுக்கும் இஷ்டமில்லாவிட்டால் நான் ஜெயில் வாசியாயிருந்து சாகவேண்டியதுதான் என்பதையும் தெரிவித்து விடு' என்று சொன்னார். இதைச் சொல்வதற்காகவே இங்கு வந்தேன். பிறகு உங்கள் இஷ்டம்" என்றான்.

தவளாபாய், இதைக் கேட்டதும் இடிவிழுந்த அரவம் போல்திகைத்து நின்றாள். கண்களிற் கண்ணீர் பலபலவென

உதிர்ந்தன. "என் புருஷரை விட இச்சரீரம் எனக்கு உயர்வா? அவருக்காக நான் ஜெயிலில் அடைபட்டு அவரை மீட்கிறேன்" என மனதில் தைரியம் கொண்டாள். பாலும் சாதமும் பசுமுற உண்ணும் என் நாதன், படுக்கப்பாயற்றுப் பட்டினியோடு பரதவித்து நிற்பாரா? என்ன செய்வேன்! நான் மகாபாவி! இப்படிப்பட்ட துக்ககரமான வார்த்தைகளைக் கேட்கும்படியான கதி வந்ததே! எங்கள் சொத்துக்கள் போனதை நான் பெரிதாக நினைக்கவில்லையே! கபடமில்லாத மனத்தூய்மைபெற்ற என் மாணிக்கத்தை ஜெயிலில் வைத்தார்களென்ற வார்த்தையைக் கேட்டு இன்னும் உயிரோடிருக்கிறேனே! நான், சாகமாட்டேனோ! ஏ, காசி விசுவேசா! இது உன்னருளோ! மாசில்லாத குணக்குன்றமபோன்ற என் நாதன் ஜெயிலில் வசிக்கவும் நான் வீட்டிலிருக்கவும் நீதியோ! இது உத்தம ஸ்த்ரீகளுக்கு அழகோ" எனக் கதறினாள். இவள் அழுவதைக் கேட்டுக்கொண்டிருந்த முகுந்தாள், விஷயத்தை முந்தியே தெரிந்துகொண்டவளானதால மிகுந்த வருத்தப்பட்டவள்போல இவளிடத்தில் வந்து, "எதற்காக பிரமாதமாய் அழுகிறாய்? நம் தலையிலெழுதினபடி அனுபவிக்க வேண்டிய கஷ்டங்களை அனுபவித்துத் தானே ஆகவேண்டும்: நம்மை அருமையாயும் பெருமையாயும் வளர்த்துப் படுபாவிகளுக்குக் கலியாணம் செய்து கொடுத்துக் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும்படி விட்டார்கள் நமது பெற்றோர்கள். யாரைச்சொல்லி ஆவதென்ன? கொஞ்சநாள் பார்க்கலாம; பிறகு ஏதாவது வழி தேடிக் கொள்வோமென நினைந்திருந்தேன்; அதற்குக் கூட சுவாமிக்குச் சம்மதமில்லை; எழுந்திரு, இங்கு உட்காராதே! பார்க்கிறவர்கள் பரிகாசம் செய்யப் போகிறார்கள்!" என்று தவளாபாயின் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு பின் பக்கமாயிருக்கும் அறைக்குப் போனாள். அங்கே சென்ற

தும் தவளாபாய், “அக்காள்! சேவகர்வந்து தெரிவித்தாரே, அதற்கு ஒன்றும் பதில் சொல்லாமல் வந்துவிட்டோமே!” என்றாள்.

முகுந்தாள் — “அவனிடத்தில் என்ன பதில் சொல்ல வேண்டியதிருக்கிறது? அவன் சொல்ல வேண்டியதைச் சொல்லிப்போய் விட்டான்”

தவளாபாய்—“நான் வந்து ஜாமீன் கொடுக்க வேண்டுமென்று சொல்லியனுப்பினாரே! வருகிறேன் என்றாவது அல்லது வேறு சமாதானமாவது சொல்லியனுப்ப வேண்டாமா?”

முகுந்தாள் — “தவளா! நேற்று நான் சொல்லியிருந்ததெல்லாம் மறந்து விட்டாயோ! ஜாமீன் என்றால் என்ன என்று நினைத்தாய்? அவனுக்குப் பதிலாக நீ யிருக்க வேண்டியது. இது புருஷரா யிருந்தால் அதிக விசுவாசமுள்ளவர்களுக்கு ஒரு சமயம் ஒப்புக் கொள்ளலாம்; பெண்டுகள் போய் ஜாமீன் கொடுத்தார்கள் என்று நான் இதுவரையில் கேள்விப்பட்டதில்லை. நீயும் கேள்விப்பட்டிருக்க மாட்டாய்; நான் சொல்வது பிசகென்று நீ நினைத்தாலும் இங்கு வந்து சொன்ன சேவகனையாவது கேட்டுப் பார்; இது என்னவோ பிசகான வியாபாரமாயிருக்கிறது. நான் சொன்ன விஷயத்திற்கு இது ஒரு ருசுவென நினை; வீணாக கல்லோலப் படுத்தாதே! உன்னை சர்வஜாக்கிரதையாய் உன் தகப்பனார் வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேன்; பிறகு உன் இஷ்டம் எதுவோ அந்தப்படி செய்; உன் புருஷன் உன்னைக் கண்டிப்பாய்க் கெடுத்து விடப்போகிறான்; பிறகு நீ ஒன்றுக்கும் பிரயோசனமற்றவளாய் எல்லாராலும் இகழ்ச்சி யடைந்து திண்டாடுவாய்; ஒருஸ்த்ரீ செய்யக்கூடாத காரியத்தை, ஒரு புருஷன் செய்யும்படி சொன்னால், அவன் எண்ணம் கொடிது

என்று நீ அறியவேண்டும். இப்பொழுது சமீபமாக கொஞ்ச நாளைக்கு முன் உன் புருஷனைப்போலக் கொடிய சுபாவமுடைய ஒருவன் தன் செலவிற்கு ரூபா இல்லாமல் கஷ்டப்படும் போது, தாய் வீடு சென்றிருந்த தன் சம்சாரத்தைப் போய் அழைத்து வந்தால், அவள் வசம் இருக்கும் நகைகள் யாவும், தான் செய்யும் துர்விநியோகத்திற்கு உபயோகமாகும் என்ற கொடிய எண்ணங்கொண்டு, தன் மாமியார் வீட்டிக்குச் சென்றான். இவன் வரவைக்கண்ட இவன்மனைவி, மிகுந்த சந்தோஷமடைந்து, சோரநாயகி ஆசையால் தன்னைக் கைவிட்டதைக் கொஞ்சம் கூட நினையாமல், 'புருஷர் நற்புத்தி யடைந்து வந்துவிட்டார்; இனி நாம் சௌக்கியமாய் வாழலாம்' என்ற எண்ணத்தோடு அவனுக்கு வேண்டியது உபசரித்து, பெரிதும் கொண்டாடினாள். மகளுடைய சந்தோஷத்தை மனப்பூர்த்தியாய்க் கருதும் தாய் தந்தையர் அவள் விருப்பத்திற்கு இணங்கி மருமகனிடத்தில் அத்தியந்த பிரியமாய் நடந்தார்கள். இவனும் தான் அது வரையில் செய்தது தவறுதலென்றும் அதனால் பொருளெல்லாம் போய் விட்டதற்கு மிகுந்த வருத்தப்படுவதாகவும், இனி அப்படிப்பட்ட துன்மார்க்கங்களில் நுழையாமல், நன்மார்க்கங்களில் நுழையும் நற்புத்தி தனக்கு வந்துவிட்டதாகவும், எங்கேயாவது கூலிக்கு வேலை செய்து மகா உத்தமியான தன் சம்சாரத்தைக் காப்பாற்றப் போவதாகவும் சொல்லி, அவர்களைச் சந்தோஷப்படுத்தி, "நான் இங்குவந்து வெகுநாளாய் விட்டபடியால், இனி நான் ஊர்க்குப் போகவேண்டும்; ஒரு பெரிய மனுஷனிடத்தில் வேலை பார்ப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறேன்; தயவுசெய்து என் அருமைக் காதலியையும் என்னையும் சீக்கிரம் பயணப்படுத்தி அனுப்பிவிட வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டான். இவன் வார்த்தையில்

கொஞ்சம் கூட நம்பிக்கையில்லாத அடுத்த வீட்டுப்பெண், தனது தோழியான இவனது சம்சாரத்திற்கு எவ்வளவோ சொல்லியும், அவள் கேட்காமல், தன்னுடைய ஆபரணங்கள் எல்லாவற்றையும் அணிந்துகொண்டு, தாய் தந்தையர் ஒருவாறு விடையளிக்க, தன் புருஷனோடு குதூகலமாய்ப் புறப்பட்டாள். இவர்கள் குறுக்கே ஒரு காட்டின் வழியாகச் சென்றார்கள். நடுக் காட்டில் போனதும், புருஷன் தனது ஸ்திரீயைப் பார்த்து, "பெண்ணே! உன் உயிர்மேல் வைத்திருக்கும் ஆசையை விட்டுவிடு; உன் நகைகள் எல்லாவற்றையும் கழற்றிக் கீழேவைத்துவிடு; இதோ இருக்கும் இந்த பெரிய தூரவில் உன்னைத் தள்ளி விட்டுப்போகப் போகிறேன்" என்றான். இந்த வார்த்தையைக் கேட்டதும், புருஷன் தன்னைப் பரிகாசம் செய்கிறானெனச் சிரித்தாள். 'சிரிக்கிறாயா, மூளி?' என்று அறைந்தான். கன்னத்தில் இரண்டறை பட்டதும் அவள், "ஐயோ, சிவனே! சிவனே!" எனக் கீழே உட்கார்ந்து, "என் நகைகளை கழற்றித் தந்துவிடுகிறேன்; என்னைக் கிணற்றில் தள்ள வேண்டாம்" எனக் கெஞ்சினாள். "உன்னை உயிரோடுவிட்டால் நீ எல்லாரிடமும் என் விர்த்தாந்தங்களைச் சொல்லி விடுவாய், பிறகு எனக்கு உன்னால் கெடுதல் சம்பவிக்கும். ஆகையால் உன்னைவிடேன்" என அவள் நகைகள் எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு அவளைப் பாழும் தூரவில் தள்ளிவிட்டுச் சென்றான்; நல்லவேளைக் கடையாளமாக கிணற்றில் அதிக ஜலம் இல்லை. அவள் தள்ளப்பட்டும் சரீரத்தில் எந்த இடத்திலும் அடிபடவில்லை. தன்னைக் கரையேற்ற யாராவது அப்பக்கம் வரமாட்டார்களா என்று அவள் அண்ணாந்து பார்த்து அபயமிட்டுக் கொண்டிருந்தாள். அன்று சாயந்திரம் காட்டுவேடர்கள் அக்கிணற்றில் ஜலம் எடுக்க வந்தார்கள். இவள் கிணற்றில் இருப்ப

தைக்கண்டு கரையேற்றினார்கள்; பிறகு வேடர்களின் துணையால், தான் பிறந்த வீடுவந்து சேர்ந்து, உள்ளதை உள்ளபடி தன் பெற்றோர்களுக்குச் சொல்ல வெட்கப்பட்டு, தங்களைக் கள்வர்கள் வழிமடக்கி அடித்து நகைகளைப் பிடுங்கிக் கொண்டு, தன்னைக் காப்பாற்றப் பாடுபட்ட தன் புருஷனையும் அடித்துப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்களென்று சொல்லிவிட்டாள். ஆதலால் புருஷர்கள் தங்கள் பத்தினிகளின்மீது அபிமானம் வைத்திருப்பார்களென்று நம்பக்கூடாது. இது சமீபத்தில் நடந்த சம்பவமென உனக்கு உதாரணம் சொல்லிவிட்டேன்''

தவளாபாய் முகுந்தாள் வார்த்தைக்கு இணங்கித் தன் புருஷனுக்கு எந்தவித உபகாரமும் செய்யத் தோன்றாதவளாய், சேவகனை அழைத்து, "இதுவரையில் ஒரு புருஷனுக்காக எந்த ஸ்திரீயாவது ஜாமீன் கொடுத்திருக்கிறாளா?" என்று கேட்டாள்''

அவன், "கிடையாது; இது ஏதோ விபரீதமாகத்தான் இருக்கிறது; நானும் சமுசயப் பட்டுக் கொண்டுதானிருக்கிறேன். தங்கள் இஷ்டம் எதுவோ அந்தப்படி யோசித்துச் செய்யுங்கள். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பதுபோல, அவர், அவஸ்தையை முன்னிட்டு மானமாயிருக்கிற தங்களை எதுவேணுமோ அதைச் செய்யச் சொல்ல சித்தமாயிருக்கிறார். புருஷன் சொற்படி நடக்க வேண்டியது அவசியம்தான்; ஆனால் அதில் ஒரு கிரமம் இருந்தால் பார்க்கிறவர்களுக்கு நன்றாயிருக்கும். இதைத் தான் நான் ஏன் சொல்லவேண்டும்! சொன்னதைச் சொல்லிவிட்டுத் திரும்பிப் போகிறவனுக்கு இந்த விவகாரமேன்? என்ன பதில் சொல்லுகிறீர்கள்?'' என்றான்.

முகுந்தாள் —"தெரிவிப்பதென்ன விருக்கிறது? எல்லாம் வருவாள்; வரமாட்டாளா; போம்'' என்றாள். சேவ

கன் போய், சட்டோஜிபான்ஸ்லேவைக்கண்டு, தான் சங்கதிகளைச் சொன்னதாகவும், அவன் மனைவி மிகுந்த விசாரப்பட்டு அடித்துக் கொண்டு அழுது, கடைசியாக, தான் வந்து அவனுக்கு ஜாமீன் கொடுக்க அவ்வளவு திருப்தி யில்லாமல் இருக்கிறதாகவும் சொன்னான். இன்னும் அவன், "நான் அப்பொழுதே தெரிவித்தேன்! வீணாக என்னை அலையச் சொன்னீர்கள்; போனதற்கு ஏதாவது காலணா பிரயோசன முண்டா? இந்தக் காலத்தில் புருஷனாவது! பெண்டாட்டி யாவது! நீர் ஏமோ மலைக்கிறீர். புருஷனிடத்தில் ரூபா நிறைய இருந்தால், பெண்டாட்டி பிள்ளை சிநேகிதர் சுற்றத்தார் முதலிய யாவரும் வந்து சுற்றுவார்கள்: அவன், திரவியம் இல்லாதவ னாயின், "இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாய் வேண்டாள்; செல்லாது அவன் வாயிற் சொல்" என்றபடி அவனைவிட்டு நீங்குவார்கள். ரூபாவை அதிகமாகச் செலவு செய்யாமல், செட்டும் கட்டுமாய் நல்ல ஏற்பாடோ டிருந்தால் இந்தக் கஷ்டம் அநுபவிக்க வேண்டிய தில்லை; நீரே யோசியும்! யாரையும் நம்புகிறது; அவர்கள் சொல்கிறபடி யெல்லாம் கேட்கிறது; ரூபாவைக் கணக்குப் பாராமல் செலவு செய்கிறது; சொத்தெல்லாம் போனபிறகு, 'நீ கொடுக்கிறாயா? நீ கொடுக்கிறாயா?' எனப் பல்லிளித்துப் பரக்க விழித்துப் பரிதபிக்கிறது; போம்; அநுபவிக்க வேண்டிய கஷ்டத்தை அநுபவியும்: நான் போகிறேன்" என்று சொல்லிப் போய் விட்டான்.

சட்டோஜி, "எனக்கு இச்சமயம் உதவி செய்ய யாருமில்லையே! நான் என்ன செய்வேன்! யாரோ ஒருவன் எதையோ சொன்னா னென்று அவன் வார்த்தையை நம்பி மாயவலை வீசும் அற்ப ஸ்த்ரீயை இச்சித்து இக்கதிக்கு உள்ளானேனே! என் சொத்துக்கள் யாவும் போய்விட்டனவே;

எனது பிரியத்திற்கு என்றும் பாத்திரமான மகா பதி விரதையான தவளாபாயையும் அந்த மோசக்காரி கெடுத்து எனக்கு உபகாரம் செய்ய வரவொட்டாமல் தடுத்திருப்பாள்! சில தினங்களாக அவளும் ஒரு மாதிரியாகவே இருந்தாள்; என்னைப் பற்றிய விசாரம் காரணமாக அப்படியிருக்கிறாள் என நினைத்தேன்! என்னைத் தனியே விடுத்துத் தகப்பன் வீட்டிற்குக் கூட, போகப் பிரியப்படாத எனது பத்தினி இந்த சமயம் வந்து உதவி செய்யாத காரணம் நான் என்னவென்று சொல்வேன்! எனது சொத்துக்கள் யாவும் போனதற்கு விசாரப் படுவேனு! மித்திர பேதத்தினல் எனது பத்தினி என்னை இச்சமயம் கை விட்டதற்கு வருந்துவேனு! நான் தற்காலம் ஜெயிலில் அடைபட்டிருப்பதற்கு துக்கப் படுவேனு! எதற்கு நான் விசாரப் படப்போகிறேன்! தலைக்கு மேல் வெள்ளம் ஏறி விட்டது! அது எவ்வளவு ஏறினல் தான் என்ன? ஈசுவரன் விட்ட வழி கண்டு கொள்ளுகிறேன்" எனச் சற்றே தைரியம் கொண்டு, கோர்ட்டார் தன்னைக் கூப்பிடும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். பகல் போஜனம் பண்ண இவனுக்கு இஷ்டமில்லை யாயினும், ஜெயில் அதிகாரிகளுடைய கடும் சொல்லிற்குப் பயந்து கொஞ்சம் சாப்பிட்டான்: சுமார் ஒருமணிக்கு இவனை விசாரணைக்குக் கூப்பிட்டார்கள்; இவன் கோர்ட்டார் முன் போய் நின்றதும், "பொய் தஸ்தாவேஜை நான் தயார் செய்ய வில்லை; வாஸ்தவ மாகவே மாதவராவ் ஹோல்கார் இவ்வூர் ஹோல்கார் வம்சத்தைச் சேர்ந்தவனென நம்பி, அவன் என்னிடம் காட்டிய இரக்கமான மொழிக்கு இணங்கி விவகாரம் நடத்தினேன். அவன் கேட்கும் செலவிற் கெல்லாம் கொடுத்தேன்; கடைசியாக அவன்மீது ஏற்பட்ட குற்றத்திற்கும் விசாரணை பூர்த்தியாகும் வரையில், நான் ஜாமீன்

கொடுத்தேன்; என்னிடம் இருந்த ரூபா யாவும் செலவு செய்தேன். என்னை மோசம் செய்து மகா பாபி எங்கேயோ ஓடிவிட்டான்! அவன் சம்சாரம் மிகுந்த பாசாங்குக்காரி, என்னை பிரமிக்கும்படி செய்ததால் அவள் இஷ்டப்படி வேண்டியதைக் கொடுத்தேன். நான் சுபாவமாகவே ஒருவருக்குத் தீங்கு செய்ய எண்ணம் கொள்ளவில்லை; கண்டவர்கள் பேச்சைக்கேட்டு அதன்படி நடந்தபடியாலும் கடைசியாக அற்ப எண்ணத்தை ஒரு ஸ்த்ரீயின் நிமித்தமாய்க் கொண்டபடியாலும் என் சொத்துக்கள் யாவும் போய் ஜெயிலில் வசிக்கும்படிக்கும் காலம் நேர்ந்தது; மகா உத்தமியான எனது பத்தினியை என் வீட்டில் வைத்துக்கொண்டிருந்த மாதவராவ் ஹோல்காரின் மனைவியாகிய முகுந்தாள், மகா பாதகி, எந்தவிதமான உபதேசம் செய்து ஏமாற்றினளோ அறியேன்; எனக்கு சாக்ஷி சொல்வாருமில்லை; ஜாமீன் கொடுப்பாருமில்லை; கக்ஷியாட கையில் ரூபாவுமில்லை: தர்ம துரையாகிய தாங்கள் எந்தவிதமான சிக்ஷை செய்தாலும் உட்பட சித்தமாயிருக்கிறேன்'' என்றான்.

நியாயாதிபதி, ஏற்கெனவே ''இவன் விஷயமாக ரிக்கார்டுகள் யாவும் பார்த்து, இவன் மீது குற்றமில்லாமையால், இவனுக்கு நற்புத்தி உபதேசித்து விட்டுவிடுகிறது'' என்ற எண்ணத்தோடு வந்திருந்தார். சட்டோஜி தன் குற்றத்தைத் தானே ஒப்புக்கொண்டதற்கு அவர் சந்தோஷித்து, இவனைப்பார்த்து, ''உம் மீது குற்றம் இல்லாமையால் விட்டுவிட்டோம். உமது தகப்பனர் இவ்வூரில் மிகுந்த செல்வவானாகவும் தர்மிஷ்டராகவும் எல்லாராலும் அரசாங்கத்தாராலும் கொண்டாடப்பட்டவராகவு மிருந்தார். அவர் மரபில் உதித்த நீர், உம்மை வசப்படுத்திக் கொள்ளமாட்டாதவராய் மனம்போனபடி திரிந்து, சொத்துக்களை எல்லாம் அநியாயத்தில் அழித்த தன்றி அவமானத்தையும் அடை

ந்தீர். இனிமேலாவது உமக்குத் தெரிந்த கைத்தொழிலைக் கொண்டு திரவியம் சம்பாதித்துச் சிக்கனமாய் குடித்தனம் செய்து, கூடியவரையில் பரோபகாரியாயு மிருந்து, உமது காலத்தைக் கழிப்பது மேலானதா யிருக்கும். சிற்ப சாஸ்திரத்தில் நீர் நிபுணரெனக் கேள்விப்பட்டேன்; அவ்வகைக் கைத்தொழில் உமக்குத் தெரிந்திருப்பதால், உம்மிடம் உள்ள திரவியம் விருதாவாய்ப் போனதற்கு, நீர் மனஸ்தாபமடைய வேண்டியதில்லை. தொழில் தெரிந்தவன் கஷ்டப் படவேண்டியதில்லை. உம்முடைய ஸ்திதி நல்ல நிலைமையில் இருப்பதாக நான் கொஞ்சநாளைக்கெல்லாம் கேள்விப் படவேண்டும்; போய்வாரும்" என்று சொல்லி அனுப்பினார்.

சட்டோஜி, இந்த ஆபத்தி லிருந்து நீங்கியதற்கு மிகுந்த சந்தோஷ மடைந்து, "இனி எப்படி யாவது ஆகிறது; பார்த்துக் கொள்ளலாம். எனது அருமைச் சண்மணியை, கூட அழைத்துக் கொண்டு எங்கே யாவது போய் விடுகிறேன். நான் வீட்டிற்குப் போனதும் அந்தப் பாதகி முண்டையை வீட்டை விட்டுத் துரத்தி விட்டுக் கிரயதாரனிடம் வீட்டை ஒப்புவித்து விட்டு புறப்பட்டு விடுகிறேன்" என்ற எண்ணத்தோடு வேகமாய் தன் வீடு நோக்கி வந்தான். வீட்டின் தெருக் கதவு சாத்திப் பூட்டியிருந்தது. ஒரு சமயம், வீட்டைக் கிரயம் பெற்றவர், உள்ளிருந்தவர்களை அப்புறப் படுத்தி விட்டு வீட்டைப் பூட்டிக்கொண்டு போய்விட்டாரோ என நினைத்து, அடுத்த தெருவில் வசித்த கிரயதாரரிடம் சென்று விசாரிக்க, அவர், "ஐயா! இன்று காலை, பத்து மணிக்குத் தாங்கள் வந்து விட்டீர்களா என்று பார்க்க, வீட்டிற்கு வந்தேன். வீடு வெறும் வீடாய் இருந்தது; மனிதச் சந்தடி ஒன்றுமில்லை. அதனைக் கண்ட நான் உள்ளே சென்று பார்த்தேன், அங்கு யாருமில்லை; கொஞ்சநேரம் காத்திருந்தேன்; யாரும்

வாராமையால் பூட்டு ஒன்று தருவித்து பூட்டிக்கொண்டு வந்தேன்'' என்றார். இவ்வார்த்தையைக் கேட்ட சட்டோஜி மனம் திடுக்கிட்டு, "ஐயோ! என்னருமைக் காதலி! என்னை மோசம் செய்து எங்கேயோ போய்விட்டாயே! நல்ல பாவம் வாய்ந்த உன்னை, மோசக்கார முகுந்தாள் என்ன செய்தாளோ! நீ ஒன்றும் தெரியாத பேதையா யிற்றே! உன்னை வஞ்சிக்கக் கூடிய கவட்டுத் தனமான காரியங்கள் எத்தனையோ செய்தேன்! அவைகளை யெல்லாம் நீ கொஞ்சம்கூட கவனிக்க வில்லையே! நான் அநியாயமாய் வாங்கிச் செலவு செய்த கடன்களைத் தீர்க்க வேண்டிய தற்காக, உன் நகைகளை விற்கக் கேட்டபோது நீ வெகு சந்தோஷத்துடன் கொடுத்தாயே! சொத்துக்களெல்லாம் போனதற்குக் கவலைப் படாமல் என்னுடைய சந்தோஷத்தையே பெரும் செல்வமாகக் கருதினையே! நான், வீட்டையும் ஜாமீன் கொடுக்கும் தொகைக்காக விற்று விட்டேனென மனஸ்தாப மடைந்து சென்றாயோ! உன்னை வஞ்சகி முகுந்தாள் எந்தவிதமான மோசம் செய்து கொண்டு போனாளோ! என்னிடம் அடிக்கடி அவள் பேசின சாமர்த்தியமான வார்த்தைகளை நினைந்து அவளைச் சிலாகித்தேன்! மாசில்லாக் குலதில் பிறந்து, என்னை மணந்து, சத்தியமான மொழிகளைப் பெற்று, வந்த விருந்தினர்க்குப் பிரியத்தோடு அன்னமிடும் பக்தியோடு கொஞ்சமேனும் கோப மென்பது இல்லாதவளான உன்னைத் துவேஷித்தேன்! அதை நீ கொஞ்சம் கூட கருதாமல் என்மீது மெய்யன்பு பாராட்டி வந்தாய்! உன்னை நான் விட்டுப் பிரியும்படியான காலம் நேர்ந்ததே! இனி எங்கு உன்னைக் கண்டு தேடிசந்திக்கப் போகிறேன்! ஒரு சமயம், உன் தாய் தந்தையர் வீடு சென்றிருப்பாயோ! அங்கும் நீ போகப் பிரியப்படாதவ ளாயிற்றே! இவ்வுலகில் எனக்கேற்பட்ட பொருள்க

ளெல்லாம் போய்விட்டது! நீ ஒருத்தியே மிகுதியாக இருந்தாய்! இன்று நீயும் என்னைவிட்டுப் பிரிந்தாய்! இனி எனக்கு வேறு கதி என்ன இருக்கிறது! 'இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை' என்றபடி நான் அநியாயமாய்ப் போய்விட்டேன்! எனப் பலவாறு நினைந்து கதறினான். அன்றிரவு பன்னிரண்டு மணிவரையில் தெருத் தெருவாய் அலைந்து தேடினான். ஊரில் உள்ளவர்கள் யாவரும் இதைக் கேட்டு அனுதாபப்பட்டார்கள். அவனுடைய சிநேகிதர்கள் அவனுடைய கேவலஸ்திதியை உணர்ந்து, ஒருவரும் கிட்ட நெருங்காமல் விலகியிருந்தார்கள். என்றாலும் துக்ககரமான அச்சமயத்தில் அவனைவிட்டுவிடக் கூடாது என்றவர்களாய், அவனைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துப் போய், வேண்டியபடி உபசரித்து, சமாதானஞ் செய்து, சாப்பாடு செய்துவைத்து, "தவளாபாய் தன் தகப்பன் வீட்டிற்கே சென்றிருப்பாள்; நாளையதினம் ஆளை அனுப்பி விசாரிக்கிறோம்; பயப்படவேண்டாம்" என சமாதானம் சொன்னார்கள். என்ன சமாதானப்படுத்தியும் இவன் கேட்காமல் மறுநாள் காலையில் யாரிடத்திலும் சொல்லாமல், புறப்பட்டு, பாடலிபுரத்தை நோக்கிச் சென்றான். இவன் கையில் செலவிற்குக் காலணாகூட இல்லை; வழி நெடுக நடந்து, "எனது சம்சாரத்தைக் காண்பேனோ!" என்ற ஏக்கம் கொண்டவனாய், தெரியாத இடங்களிலெல்லாம் சாப்பிட்டு, நடக்க முடியாமல், அசக்தம் ஏற்பட்டகாலத்தில், தன்னையறியாது எந்த இடத்திலும் படுத்து உறங்கி, பத்து நாள் பிரயாணஞ்செய்து தன் மாமனார் ஊரான பாடலிபுரம் வந்து, தன் இல்லாள் உறையும் இல்லம் ஏக, வெட்கப்பட்டு, தனது ஆடைகளைப்பார்த்துத் தானே லஜ்ஜைப்பட்டு, தன் அந்தஸ்து இவ்வளவு தாழ்ந்த ஸ்திதிக்கு வருமா என

மனஸ்தாபத்தை வகித்தவனாய், பசியால் வருந்தி இளைத்த சரீரத்தோடு, தன் வேட்டகத்துக்குச் சமீபத்திற் சென்று, பக்கத்து வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்து, "என் சம்சாரம் இங்கிருந்தால் வெளியே வரமாட்டாளா! பார்த்துக் கொண்டு பிந்தி சௌகரியமானால், அவ்வீட்டுக்குள் பிரவேசிக்கலாம்" என்ற எண்ணத்தோடு, வெகு நேரம் வரையில் காத்திருந்தான். அவ்வீட்டிலிருந்து இவனைத் தெரிந்தவர்கள் யாரும் வெளியே வரவில்லை. இவன் உட்கார்ந்திருந்த வீட்டுக்காரர்மட்டும் அடிக்கடி வீட்டிற்குள்ளிருந்து வெளிவருவதும், இவனைப் பார்ப்பதும் ஒன்றும் வினவாது உள்ளே போவதுமாக இருந்தார். கடைசியாக அவர், "இவன் யாரென்றுதான் விசாரிப்போமே!" என்ற எண்ணத்துடன், "ஐயா! தாம் யார்? வெகுநேரம் இங்கு உட்கார்ந்திருக்கிறீரே! எதை உத்தேசித்து எதிர்பார்க்கிறீர்? உம்மைப் பார்த்தால் பசியால் அதிகம் பீடிக்கப்பட்டவராகத் தெரிகிறதே? இங்கு ஒருவேளை சாப்பாடு கிடைக்குமோ என யோசிக்கிறீரோ? பசி மிகுதியானால் சொல்லலாம்; என் வீட்டில் உள்ள உணவை உமக்குக் கொடுத்து உபசரிக்கச் சித்தமாயிருக்கிறேன்; சங்கோசப்பட வேண்டாம். உம்மைப் பார்த்தால், பெரிய பிரபுவின் வீட்டுப் பிள்ளைபோல் தோன்றுகிறது; ஏதோ காலகதியால் இப்படி வந்துவிட்டீர். எழுந்து உள்ளே வாரும்" என்றான். இவ்வினிய மொழியைக் கேட்ட சட்டோஜி, ஒருவாறு முகமலர்ந்து, "அரும்பசியை யறிந்து அன்னமளிக்க அன்பு கூர்ந்த புண்ணியவானே! தாங்கள் இச்சமயம் எனக்கு ஏற்பட்ட இன்னலைத் தணித்தீர்; இப் பேருதவிக்குக் கைம்மாறாக நான் என்ன செய்யப் போகிறேன்!" என அவருக்கு வந்தனமளித்து, அவ் வீட்டிற்குள் சென்றான். வீட்டுத் தலைவர் உத்தரவின் படியே,

வேலைக் காரர்கள், இவனுக்கு ஸ்நானம் செய்வித்து, நல்லுடை நல்கி, அன்புடன் அறுசுவையோடு கூடிய அன்னத்தைப் படைத்தார்கள். சட்டோஜி திருப்தியான போஜனம் அருந்தி, வீட்டு எஜமான ரிடத்திற்கு வந்து, "என்னை இச்சமயம் காப்பாற்றிய புண்ணியவானே! என் உயிர் உள்ள வரையில் தங்களை மறக்காம லிருக்கும்படி செய்தீர்கள். நான் இருப்பது ஊமர் கோட்டை; தேச சஞ்சாரியாய்ப் புறப்பட்டு வந்தேன்" என்றான்.

அவ்வீட்டு எஜமானர்—"ஐயா! தாம் ஊமர்கோட்டை என்கிறீரே! அவ் வூரில் உமக்கு எல்லாரையும் தெரியுமோ?" என, சட்டோஜி தெரியும் என்றான். அவர், "சட்டோஜி பான்ஸ்லே என்கிற ஒரு பெரிய பிரபுவின் புத்திரர் இருக்கிறாரே! அவரைத் தெரியுமா?" என்றார்.

சட்டோஜி — "திவ்யமாய்த் தெரியும்" என்றான்.

"அவர் தமது சொத்துக்களைக் கண்டபடி செலவிட்டுக் கடைசியாக யாரோ ஒருவனை நம்பி, அவன் பொருட்டு மீதி உள்ளதையும் செலவழித்து ஜெயிலில் கூட வாசம் பண்ணினாராமே! வாஸ்தவம் தானே அது?" என்றார் வீட்டுக்காரர்.

சட்டோஜி—"சொத்துக்கள் போனதெல்லாம் வாஸ்தவம்தான்; கோர்ட்டார் எந்த விதமான சிக்ஷையும் செய்யாமல் விட்டு விட்டார்கள். அவருக்கு இந்த ஊரில் தானே மாமி வீடு?" என்றான்.

"ஆமாம்! மெள்ள பேசும்; பக்கத்து வீடுதான். அவர்கள் நல்ல ஸ்திதியில் இருக்கிறார்கள். பெண்ணையும் போய் அழைத்தார்களாம்; அப்பெண் வரமாட்டேன் என்று சொல்லி விட்டதாம்: எப்படியாவது கெட்டலைந்து நாசமாய்ப் போகட்டுமென, தாய் தகப்பன் அண்ணான்

தம்பி எல்லாரும் ஒரே மனதாய் இருக்கிறார்கள். எங்கள் சுஜாதியைச் சேர்ந்தவர்கள் தான். முதலில் அந்தப் பெண்ணை எனக்குக் கலியாணம் செய்து கொடுப்பதாகப் பேசி ஏற்பாடாயிற்று; பிறகு அவன் அதிக பணக்காரன் என அந்தக் கொண்டு போய்க் கொடுத்தார்கள்; அதன் கதி அதோகதியாயிற்று; பாவம்!" என்றார் வீட்டுக்காரர்.

"அந்தப் பெண் அங்கேயும் இல்லையாம்; தாய் வீடு போய் விட்டதாகச் சொல்லுகிறார்கள்" என்றான் சட்டோஜி.

"எப்படி! எப்படி!! எத்தனை நாளாய் இல்லை; அதன் நிச்சயம் உமக்கு நன்றாகத் தெரியுமோ?" என்றார் வீட்டுக்காரர்.

"ஆம் தெரியும்; எங்கள் வீட்டிற்குப் பக்கத்துவீடு தான்; நான் அவ்விடம்விட்டுப் புறப்படும் காலத்தில் அப் பெண் அங்கு இல்லை" என்றான் சட்டோஜி.

"இங்கு வர இல்லையே! வேறு எவனாவது அடித்துக் கொண்டுபோய்விட்டானோ! அல்லது தானாகவே ஓடிப்போய் விட்டாளோ! ஒருசமயம் இன்று காலையில்வந்திருப்பாளோ! பார்த்து வரச்செய்கிறேன்" என்று ஒருவேலைக்காரனைக் கூப்பிட்டு, "பக்கத்துவீட்டுக்கு ஏதோ காரியமாகப் போவது போலப் போய் தவளாபாய் வந்துவிட்டாளா, பார்" என்றார் வீட்டுக்காரர். அவன் போய்ப் பார்த்துவிட்டு, "வர இல்லை; அந்தவீட்டு சமையல்காரனையும் கேட்டேன். வீட்டுப் பெரிய அம்மாள், 'தவளா? தவளா? நீ என்ன கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறாயோ!' என ஓயாது அழுதுகொண்டிருக்கிறாள்; நிச்சயமாகவே வர இல்லை" என்றான். இவ்வார்த்தையைக் கேட்டதும் சட்டோஜி படபடத்துப்போய்,

கண்களில் நீர் பெருக, ஒன்றும் சொல்ல வாயெழா மல், நின்றான். வீட்டு எஜமானர் "என்ன ஐயா! வருத் தப்பட்டவர்போல நிற்கிறீரே! உமக்கென்ன சம்பந்தம்?" என்றார்.

சட்டோஜி — "சுவாமி! அந்தப் பெண் மகா உத்தமி! இரப்போர்க்கு இல்லை யென்று சொல்லாதவள்; நான், அந்தம்மாள் கையாலேதான் ஆதரிக்கப்பட்டுவந்தேன்; அக் குடும்பத்திற்கு ஏழ்மைத்தனம் ஏற்பட்டுவிட்டதால், ஊர் ஊராய் அலையவேண்டியதாயிற்று: அங்கு அப்பெண் இல்லை யென்று நான் கேள்விப்பட்டதும் தாய்வீடு சென்று எப்படியாவது சௌக்கியமா யிருக்கட்டும் என்று நினைத்தேன்: இங்கு இல்லை யென்று கேட்ட போது, மன திற்கு வருத்தம் உண்டாயிற்று" என்றான்.

வீட்டுக்காரர் — "அங்கிருந்து அந்தப்பெண் போய் விட்ட விஷயமாய், அவள் புருஷர் என்ன சொல்லுகிறார்? போனது நல்லதாயிற்று என்கிறாரோ!" என்றார்.

சட்டோஜி, "அதென்னவோ எனக்குத் தெரியாது" என்றான்.

"அந்தப் பெண் போன விஷயமாய் அங்கு என்ன சொல்லிக் கொள்கிறார்கள்?" என்றார் வீட்டுக்காரர்.

"சொல்வதென்ன? அவர்கள் வீட்டில் வஞ்சகக்காரி ஒருத்தி வந்திருந்தாள்; அவளால் தான் அந்தக் குடும்பம் முற்றிலும் நாசமாயிற்று. அவள், ஒருவேளை அப்பெண்ணை ஏமாற்றிக் கொண்டு போயிருப்பாளென சமுசயிக்கிறார் கள்" என்றான் சட்டோஜி.

"பேஷ், அந்த யோசனை வாஸ்தவமே! அப்படியே தான் நடந்திருக்கும். தடை யில்லை —" என்றார் வீட் டுக்காரர்.

சட்டோரி — அவர் பேசும் விவகாரங்களுக்கு இரண்டொரு வார்த்தையில் பதில் சொல்லி விட்டு, "நேரமாய் விட்டது; போய் வர உத்தரவு தரவேணும்" என அவரிடத்தில் விடை பெற்று, வெளியே வந்தான். தவளாபாய் தாய் வீட்டி லிருப்பாள், தான் பார்க்கலாம் எனத் தான் கொண்ட எண்ணமும் விருதா வாயிற்று: இனித் தனது அருமைப் பத்தினியை உயிரோடு காணப் போகிறதில்லை யெனத் தீர்மானித்தான். "பெண்டாட்டி யில்லாமல் மாமியார் வீட்டில் மறுபடியும் போவதில்லை. போனால் என்ன பிரயோசனம்? எங்கேயாவது தேச சஞ்சாரியாய்த் திரிய வேண்டியது தான்!" எனத் தீர்மானித்துக் கொண்டான். தான் தவளாபாயை விவாகம் செய்து கொண்ட காலத்தில், ஒரு தடவை மட்டும் அவ்வூர்க்கு வந்தவனாதலால், தன்னை யாரும் அறிந்துகொள்ள வில்லை; ஆனாலும் அவன் தலை மறைவாய் இருக்கும்படி துணியால் மூடிக் கொண்டு அவ்வூரை விட்டு வெளி யேறினான். தான் இன்ன இடம் போகிறது என்று தெரியாமல், அகப்பட்ட இடத்தில் போஜனம் செய்வதும் அகப்படாத இடத்தில் பட்டினியினால் பரதவிப்பதுமாக அலைந்து, சிந்து நதிப் பிரதேசத்தில் கொஞ்சம் சஞ்சரித்து, அதற்கு மேற்கில் உள்ள ஹாலா மலைத் தொடரில் மத்திய பாகத்தில் பிரவேசித்தான்.

மூன்றும் அத்தியாயம்.

ரஞ்சிதசிங்கு, கணவாய்ப் பிரதேசத்தில், தன்னோடு வந்த கூட்டத்தாரைப் பிரிந்து, துஷ்டர்களான மலைக் குறவர்களை, எப்படியாவது கண்டுபிடித்து உலகத்துக்கு க்ஷேமத்தைக் கொடுக்காமலிருப்பதில்லை என்ற எண்ணத்தோடு, அவர்கள் கொள்ளையாடின சந்திரக் கோட்டை என்ற ஓர் ஊருக்குச் சென்றானென முன் அத்தியாயத்தில் சொன்னோம், இவன் அவ்வூருக்குப் போனதும், தன்னால் தன் தாய் மிகுந்த கஷ்டப்படுவாளெனக் கருதி, நாயின் மூலமாக அவளுக்குச் சமாச்சாரம் அனுப்பிவிட்டு, அங்குள்ள சிலரைக்கண்டு, "அடிக்கடி இவ்விடம் வந்து கொள்ளையடித்துக் கொண்டுபோகும் குற்றவாளிகள் இன்னாரென உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" எனக் கேட்டான். அவர்களில் ஒருவன், "தெரிந்திருந்தால் அவர்களைப் பிடித்துவிடமாட்டோமா? யார் யார் என்னென்ன பிரயத்னம் செய்தும் துஷ்டர்களைக் கண்டுபிடிக்கவில்லையே! நீர் விசாரிப்பதைப் பார்த்தால் திருடர்களை உடனே பிடித்துவிடுவீர்போலிருக்கிறதே! நீர் இருப்பது எந்த ஊர்?" என்று கேட்டான். ரஞ்சிதசிங்கு, "ஐயா நானிருப்பது பார்த்தபுரி; ஓர் யுத்தவீரனுடைய மகன்; சென்ற இரண்டு தினங்களுக்கு முன், சில திருடர்கள், கணவாய்க் காவலர்களைக் கலங்க அடித்து கடும் போர்புரிய வந்தார்களென நானும் எனது கூட்டாளிகளும் கேள்வியுற்று, கணவாய்க்குச் சென்றோம். அவர்கள் சில ஆயுதங்களையும் துப்பாக்கி மருந்துகளையும் திருடிக் கொண்டு ஓடிப்போகும் போது, இவ்வூரிலும் கொள்ளை யடித்துச் சென்றார்களெனக் கேள்விப் பட்டோம். என்னோடு கூட வந்தவர்களெல்லாரும் இதனால் மிகுந்த அனுதாபத்தை யடைந்து தங்க

ளால் ஒன்றும் முடியாதெனை, ஊர்க்குச் சென்றார்கள். நான் மட்டும் ஊர்க்குப் போக விரும்பாமல், கொள்ளையடிக் கப்பட்ட இவ்வூரில் வந்து ஏதாவது புலம் தெரியுமானால் கொள்ளைக் கூட்டத்தாரைக் கண்டு பிடிக்கப் பிரயத்னம் செய்யலா மென்கிற எண்ணத்தோடு இங்கு வந்தேன். என் னால் அந்தக் காரியத்தையும் செய்து முடிக்க சாத்தியப் படா விட்டாலும், உங்களைக் கண்டு பேசியாவது எனது எண்ணத்தை முடித்துக் கொள்ளலா மென நினைத்தேன்'' என்றான். இதைக் கேட்ட அவர்கள், "அப்பா! நீ அதி பாலியனா யிருந்தும், இரக்கமுள்ள சுபாவத்தை வகித்த வனா யிருக்கிறாய்! நீ இவ்வளவு அனுதாபப் பட்டுப் பேசு வதற்கு நாங்கள் மிகுந்த சந்தோஷப் படுகிறோம். நீ காலை முதல் ஆகாரம் ஒன்றும் உட்கொள்ள வில்லை எனத் தெரிகிறது. ஆகையால் எங்கள் வீட்டிற்கு வந்து கொஞ் சம் போஜனம் செய். பிற்பாடு புலம் தெரிவிக்கிறோம்'' என்றார்கள். ரஞ்சித்சிங்கு, அவர்கள் சொல்லிற்கு இண ங்கி "ஸ்வாமிகளே! க்ஷத்திரிய குலத்தோ னாகிய நான் தங்கள் வீட்டில் உண்ண இயலுமோ!'' என்றான். அவர்கள், "யாராயினும் என்ன! பிராமணர்கள் வீட்டில் எவர்களும் உண்பார்கள். நீ சாப்பிடுவதால் எங்களுக்கு என்ன குறை யும்? என்று தங்கள் வீட்டிற்கு அழைத்துப் போய், சிறு வனை உபசரித்து சிற்றுண்டிகளோடு மற்றுண்டியும் அளித் தார்கள். ரஞ்சிதசிங் அவைகளை ஆனந்தத்தோடு புஜித்து சிரம பரிகாரமாகி, அவர்களை வணங்கி "பிராமணோத்தமர் களே! நான் க்ஷத்திரிய னாகையால் உங்களைப் போன்ற உத்தமப் பிராமணர்களுக்கு சதாசர்வ காலமும் உபத் திரவத்தைக் கொடுக்கும் கொடிய மலைக் குறவர்களை எப் படியாவது கண்டு பிடித்து சிறைச் சாலையில் விடுக்கிறேன். அப்படி யில்லாவிடில் என் உயிரை அவர்களுக்காக மடிக்

கிறேன். தாங்கள் அவர்களுடைய பழக்க வழக்கங்களை மட்டும் கொஞ்சம் சொன்னால் போதுமானது'' என்றான்.

பிராமணர்கள் — "அப்பா! அவர்கள் சதா மலையடியிலேயே சஞ்சாரம் செய்துகொண்டு திரிகிறார்கள். அவர்களைப் பிடிக்க யாராலும் முடியாது; தனியாக அகப்படும் ஒருவனைப் பிடிக்கப் பிரயத்னப்பட்டாலும் அல்லது துப்பாக்கியால் சுட முயன்றாலும் அதைத் தெரிந்த அவன் பெரிய மலைப்பாறையிலிருந்து அதிகப் பள்ளத்திலுள்ள தாழ்வரையில் குதித்து தன்னை ஒரு நிமிஷத்திற்குள் மறைத்துக் கொள்வான். அவர்கள் கூட்டமாக இருந்தால், பிடிக்க வருகிறவர்கள் எத்தனை பேர் ஆனாலும், அவர்களை எவ்விதமான சூழ்ச்சிகளோ செய்து, கொன்று விடுவார்கள். அவர்கள் ஒரு கிராமத்துக்குள் புகுந்தால், ஜனங்களுக்கு எத்தனையோ விதமான ஹிம்சைகளைச் செய்து, திரவியங்களை எடுத்துக் கொண்டு போவார்கள். அதோடு நில்லாமல், அவர்கள் குறிப்புக்கு அனுகூலமான பெண்டுகளையும் பிள்ளைகளையும் தூக்கிக் கொண்டு போய் விடுவார்கள். அவர்கள் கொள்ளை யடித்துப் போன கிராம மானது க்ஷேமத்தை யடைய மறுபடியும் எத்தனையோ நாட்கள் செல்லும். அவர்கள் பார்வைக்கு பயங்கரமாகக் காணப்படுவார்கள். சுமார் ஏழடி எட்டடி உயரத்துக்குக் குறைந்தவர்களாக இருக்க மாட்டார்கள். ஒவ்வொரு கையும், காலும் ஒரு பெரிய ஸ்தம்பம் போல் இருக்கும். அவர்கள் காலால் ஓர் உதை உதைத்தால், வீட்டின் ஜன்னல்கள் தெருக் கதவுகள், சுக்கல் சுக்கலாய் உடைந்து விழுந்து விடும். அவர்கள் எப்பொழுதும், கருப்பு அங்கிகளையே போட்டுக் கொள்வார்கள். அவர்கள் செவந்த மேனியை யுடையவர்களாயினும் முகமானது, மீசை தாடி முதலிய மயிர்களால் மூடப்பட்டு, அரக்கர்களைப் போல் காணப்

படுவார்கள். அவர்கள் வருவது முதலில் யாருக்கும் தெரிவதில்லை. அவர்கள் இராக் காலங்களில் சுமார் பத்து மணிக்குள்ளாக, பகிரங்க மாகத் தெருவழியே வந்து, அவ்வூரப் பெரிய தனக்காரனை விசாரித்துத் தெரிந்து கொண்டு, அவனது வீட்டுக்குள்ளே போய் உட்கார்ந்து, தாங்கள் வந்த விஷயத்தைத் தெரிவிப்பார்கள். பெரிய தனக்காரன் தகவல் சரியாகக் கொடுக்கா விட்டால், அவன் சரீரத்தைப் பிளந்து தெருவிலேயே நெருப்பிட்டுக் கொளுத்துவார்கள். பெரிய தனக்காரன் மிகவும் பயந்த சுபாவத்தோடு தன்னிடம் உண்டான நகைகள் முதலிய திரவியங்களை அவர்கள் முன் கொண்டு வந்து வைத்துவிட்டுக் காலில் விழுந்து, மற்றவர் இன்னார் இன்னாரிடம் இன்னின்னவைக ளிருக்கின்றன என்று அவர்களுக்குத் தெரிவித்து அவைகளைத் தருவித்துக் கொடுத்து விட்டால், அவர்கள் சந்தோஷத் தோடு பெற்றுக் கொண்டு, இனி இவ்வளவு காலம் வரையில் அவர்கள் ஊருக்கு வருவதில்லை யெனச் சொல்லிப் போய் விடுவார்கள். இன்னும் சில கிராமங்களில், தங்கள் ஊர்களுக்கு இவர்கள் கொள்ளைக்கு வராம லிருக்க வேண்டி, ஒரு கப்பணத் தொகை இவ்வளவு என்று கணக்கிட்டு வருஷத்திற்கு ஒரு முறை அவர்கள் மனிதன் யாராவது ஒருவன் வரும் போது, அவனிடம் கொடுத்து விடுவார்கள். இக்கிராமத்திலும் அவ் வழக்கமே வெகு நாளாக நடந்து கொண்டு வந்தது. சென்ற வருஷத்தில் ஊருக்குள் கலகம் நேர்ந்து கொள்ளைக் காரர்களுக்கு மாமூலாய்க் கொடுக்கவேண்டிய கடமைகளைச் சேர்க்காமல் போகவே, 'உடன்பாடில்லாத ஊர் பாழ்' என்றும் 'பல தானம் இல்லாத ஊர் பாழ்' என்றும் சொல்வதற்கேற்ப, அவர்கள் வந்து இவ்வூரைக் கொள்ளை யடித்தார்கள். ஊரார்க ளெல்லாரும் ஒன்று

சேர்ந்து, கொள்ளைக்காரத் தலைவன் காலில் விழுந்து தங்கள் கையில் உள்ள எல்லா வற்றையும் கொண்டு போய் அவன் முன் காணிக்கைகளாக வைத்துக் கும்பிட்டு, 'இனி நாங்க ளெல்லாரும் எப்போதும் போல் நடந்து கொள்ளுகிறோம்' என வேண்டிக் கொண்டார்கள். அதனால், அவர்கள், இந்த ஊராரை மன்னித்து, இவர்கள் கொடுத்ததைப் பெற்றுக் கொண்டு போனார்கள். நாங்கள் அதிக கஷ்டத்திற்கு உள்ளாகாமல், இந்தத் தடவை தப்பித்துக் கொண்டோம். இந்த அவஸ்தைக்குப் பயந்து வெகு பேர் தமதூர்களை விட்டு விந்து நதிப் பிரதேசம் போய் விட்டார்கள். நாங்களும் போய் விடுவோ மென்றால், மனம் துணியவில்லை. நவநிதிகளும் உண்டாகக் கூடிய இந்த இடங்களை விட்டு அன்னிய தேசம் போனால், அங்கே என்ன கஷ்டப்பட வேண்டி வருமோ எனப் பயந்து பிறந்த ஊரை விட்டுப் பிரிய மனமில்லாமல் இருக்கிறோம். இந்தப் பக்கங்களில் வசிப்பவர்களுக்கு இந்த உபத்திரவம் ஒன்று தவிர வேறு எக்குறையும் கிடையாது. வேறு என்ன விஷயம் உனக்குத் தெரிய வேண்டும்? அவர்கள் இருக்கு மிடத்தைக் கண்டு பிடித்துச் சொல்ல ஒருவராலும் முடியாது! அப்படிச்சொன்னாலும், அங்குப் போனவர்கள் மீண்டு வரமாட்டார்கள்; அரசாங்கத்தார் இத் துஷ்டர்களைக் கண்டு பிடிக்கிறவர்களுக்கு, வேண்டிய வெகுமதி அளிப்பதாக அடிக்கடி பிரசுரம் செய்கிறார்கள். செய்தும் என்ன பிரயோசனம்? எவரும் இக் காரியத்தில் துணிவதில்லை. ஒரு காலத்தில், அரசாங்கத்தாரால் அளிக்கப்படும் பிரயோசனத்தை இச்சித்து, பக்கத்துக் கிராமத்திலுள்ள ஒருவன், வருஷா வருஷம் கொள்ளைக் காரர்களுக்குக் கொடுப்பதாக கிராமத்தார்கள் ஒப்புக் கொண்டிருக்கும் தொகையைப் பெற்றுக்கொள்ள வந்த அக் கூட்டத்தாரில்

ஒருவனை, அவன் வந்திருக்கும் சமயத்தில், போலீஸாருக்குக் காட்டி விட்டான். போலீஸார் அனேகம் பேர் துப்பாக்கி பிரங்கிகளோடு, உடனே அவனைப் பிடிக்கப் பிரயத்னப் பட்டார்கள். தான் வந்திருக்கும் சமாசாரம் இன்னுல்தான் வெளியானது என்று அக் கொள்ளைக்காரன் அறிந்துகொண்டு, அவன் இருக்குமிடம் சென்று தன் கையிலுள்ள கத்தியால் அவனை ஒரே வெட்டாய் வெட்டி எறிந்து விட்டு அவன் வீட்டை விசாரித்துக் கொண்டு வந்து, அவனைச் சேர்ந்த யாவரையும் வதம் பண்ணி விட்டான். போலீஸார் இவனைப் பார்த்தும் கிட்ட நெருங்கிப் பிடிக்கப் பயப்பட்டார்கள். துப்பாக்கியால் சுட்டுக் கொல்லவும் அவர்களுக்கு அதிகார மில்லை. இந்த நிலைமையில் அவன் வெளியே ஓடிப் போய் விடாதபடி, அவர்கள் அவனைச் சுற்றிக் காவலாக இருந்தார்கள். இதற்குள் பெரிய துரை ஒருவர் குதிரைமீது ஏறிக் கொண்டு வந்தார்; அவர் வந்ததும் சில சேவகர்களை ஏவிக் கொள்ளைக்காரனைப் பிடிக்கும்படி செய்ய, அவர்கள் அவன் முன் தைரியமாய்ச் சென்று பிடிக்கும்போது அக் கொடியோன், அனேகரைப் படுகாயப் படுத்தி விட்டான்; அவனை இருப்புச் சங்கிலியால் பிணித்துக் கட்டினார்கள்; சங்கிலிகள் முறிந்தன; கைவிலங்குகள் தறிந்தன. பிறகு, எத்தனையோ பலமான கருவிகளால் அவனைக் கட்டிக்கொண்டு போனார்கள். கோர்ட்டார் அவனை விசாரித்தார்கள். அவன் தன் வாயைத் திறக்கவே இல்லை. கடைசியாக அவனைச் சித்திர வதை செய்து, கணவாயில் கட்டித்தொங்க விட்டார்கள். அதனல், மலைக் குறவர்கள், பகை மிகுந்து உளவு சொன்னவன் ஊரையே நாசமாக்கி விட்டார்கள்! இப்பொழுது அவ்வூரில் யாருமே இல்லை. இந்தக் காரியம் நடந்தது முதல் அவர்களை நன்றாக அறிந்தவர்க ளாயினும் யாரும் அவர்களைப் பற்றி வெளியிட மாட்டார்கள். அவர்

களுக்கு அநேக பச்சிலே மூலிகைகள் தெரியும்; அவைகளின் உபயோகத்தால் தங்களை அன்னியர்கள் காணுதபடி மறைத்துக் கொள்வார்கள். இருப்புப் பூட்டுகளையும் கதவு களையும் பச்சிலே பிரயோகத்தால் தூளாக இடித்து விடு வார்கள்; இருட்டில் வெகுவேகமாய் சண்தெரிந்து நடப் பார்கள்; அவர்களுக்குச் சில சமயங்களில் படும் காயம் குண்டு பட்டிருந்தாலும் ஒரு நிமிஷத்தில் ஆற்றிக் கொள் வார்கள்; அவர்கள் கொள்ளையடிக்கும் தொகை மிகுதி யாக யிருந்தால், அதைத் தங்கள் தேசத்து மருதிகளுக்கு இனுமாக அளிப்பார்கள்: இப்படிப்பட்ட கொடியவர்களை யார்தான் பிடிக்க முடியும்? அவர்கள்தாமே ஒவ்வொ ருவராக ஒழிந்தாலல்லது, தேசத்திற்கு நல்ல காலம் பிறக்காது'', என்றூர்கள். இதைக்கேட்ட ரஞ்சிதசிங், ''சரி தான்! பிராமணர்கள் மெத்தப் பயந்தவர்கள் போலக் காண்கின்றது; இவர்களிடத்தில், நாம் செளரியம் காட்டிப் பேசினுல், 'சரிதான் போய்வா' என்று சொல்லி விடுவார் கள். எப்படியாவது அக்கூட்டத்தார்களில், ஒருவனை நாம் தெரிந்து கொண்டால், பிறகு பார்த்துக் கொள்ள லாம். மகாபலமும் தந்திரமும் கொண்ட அத் துஷ்டர் களை, எதிர்த்துப் பிடிப்பது, நம்மால் முடியாத காரியம். ஆதலால், நாமும் தந்திரம் செய்து பிடிக்கப் பிரயத்னப் பட்டுப் பார்க்கலாம்,'' என்று தீர்மானித்து, ''பிராம ணேத்தமர்காள்! தாங்கள் சொல்வதைப் பார்த்தால் எனக்கே பயமாயிருக்கிறது! அவர்கள் சாமானிய திரு டர்களாக இருக்கலாம்; ஏதோ பிரயத்னம் பண்ணிப் பார்க்கலாம் என நினைத்தேன்; அது முடியாத காரியம்; ஆனல் ஒன்று மட்டும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்: அவர்களில் யாரையாவது ஒருவரைப் பார்க்கவேண்டு மென்ற எண்ணமிருக்கிறது'' என்ருன்.

பிராமணர்கள் — "பார்த்து, நீ என்ன செய்யப்போகிறாய் ?"

ரஞ்சித் — "பச்சிலைகள் அவர்களுக்குத் தெரியுமென்றீர்களே; அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று தான்"

பிராமணர்கள் — "நீ போய் அவர்களைக் கண்டு கேட்டதும் உடனே அதைக் காண்பித்துக் கொடுத்துப் போய் வா என்று சொல்லி விடுவார்களோ? சிறுபிள்ளையோ இல்லையோ! எல்லாம் அவசரமாகத் தானிருக்கிறது. முதலில் அவர்களைக் கண்டுபிடித்து இராஜாங்கத்தில் சன்மானம் பெற வேண்டுமென்று புறப்பட்டு வந்தாய்; இப்பொழுது அது முடியாதுஎனத் தெரிந்தும், அவர்களைக்கண்டு, மூலிகைகள் அறிந்து அதன் பிரயோகத்தை அனுபவிக்க யோசிக்கிறாய்; எல்லாம் வேடிக்கையும் விளையாட்டுமாக இருக்கிறது! நல்லது; உனக்குத் தாய் தகப்பன்மார் இருக்கிறார்களோ?"

ரஞ்சித் — "தகப்பனார் இல்லை; ஆபிரிக்கா தேசத்து யுத்தத்தில் இறந்துவிட்டார்; தாயார் மட்டும் பர்த்தபூரில் இருக்கிறார்கள்"

பிராமணர்கள் — "உனக்கு ஏதாவது சொத்துக்கள் இருக்கிறதோ ?"

ரஞ்சித் — "ஏதோ இருக்கிறது; அன்ன வஸ்திரங்களுக்குக் குறைவில்லை"

பிராமணர்கள் — "உனக்குகலியாணம்ஆய்விட்டதா ?"

ரஞ்சித் — "இன்னும் இல்லை"

பிராமணர்கள் — "அடா, பயித்தியமே! நல்ல பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்து கொண்டு, இருக்கிற சொத்துக்களைச் சீர்படுத்தி விர்த்தி பண்ணிச் சௌக்கிய

மாய் வைத்துக் கொண்டு சந்தோஷமாய் இருப்பதை விட்டு, விளையாட்டுத் தனமாய் இப்படி அலைய ஆரம்பித்து விட்டாயே! உன் தகப்பனர் இருந்தால் இந்த ஸ்திதியை நீ அடையமாட்டாய்; நல்ல வேளையாய் எங்களை வந்து கேட்டாயே! விசேஷந்தான்; வேறு யாரையாவது, மலைக் குறவர்களைப் பற்றிக் கேட்டிருந்தால், உன்னைச் சீண்டி விட்டு வேடிக்கைப் பார்ப்பார்கள்; நீ திருடர்களையும் பார்க்க வேண்டாம்; பச்சிலைகளைத் தெரிந்து கொள்ளவும் வேண்டாம்; ஊர்க்குப்போய், தாய்க்குப் பிள்ளையாய்ச்சேர்; வீண் பிரயத்தினங்களெல்லாம் செய்ய ஆரம்பிக்காதே; கடைசியில் ஆபத்தாய் முடியும்; இனிமேல் நீ தனியே புறப்பட்டுப் போகவும் முடியாது; இன்றிரவு இங்கிருந்து விட்டு நாளைய காலமே ஊர் போய்ச்சேர்"

ரஞ்சித் — "ஐயா! தாங்கள் சொல்வது நியாயமான காரியம் தான், நான் இனி ஊர் போய்ச்சேருகிறேன்; இங்கு இருக்கமாட்டேன்; ஆனால் இவ்வளவு தூரம் வந்து விட்டு யாராவது ஒருவனைத் தூர நின்று கண்ணால் பார்த்துவிட்டுப் போனால், எனக்குத் திருப்தியாயிருக்கும்; தாங்கள் சொன்னதுபோல, அவ்வளவு செளரியமான ஒருவனைப் பார்க்காமற் போனால், என்னோடு கூட வந்த மற்றெல்லாரையும் போலத்தான் ஆவேன்"

பிராமணர்கள் — "உனது ஆசை பலமாயிருக்கிறது! யாராவது ஒரு காடூமியைப் பார்த்துவிட்டு, ஊருக்குப் போனால், உனது சினேகிதர்கள்முன் 'நீங்களெல்லாரும் பேசாமல் வந்து விட்டீர்கள்! நான் வெகு சிரமப்பட்டு ஒருவனைப் பார்த்து வந்தேன்' எனப் பெருமை பேசிக் கொள்ளலாம்; சரிதான்! 'ஆடியோடி அமர்ந்த தேவரே' என்பது போலவும், 'உலக்கைக்கு உத்தேசித்து அரிவாள் பிடிக்கு!, ஆயிற்று' என்றபடிக்கும், ஆனைப்பார்

த்து விட்டு ஓடிப்போகிறேன் என்கிறாய்! நீ நினைக்கிற படி அவர்களை வெகு இலகுவாய் நீ அடையாளம் கண்டு பிடிக்க முடியாதே! எல்லாரையும் போல வெகு சாமானிய மனிதர்களாய்க் காணப்படுவார்கள்; அவர்கள் சில வேளைகளில் பணக்கார உடைதரித்துக் கொண்டு, இத்தேசத்தவர்கள் போலக் காணப்படுவார்கள்; இன்னும் சில சமயங்களில், காபூல் தேசத்துப் பெரிய வியாபாரிகள் போல இருப்பார்கள்; வேறு சில சமயங்களில், பிச்சைக்காரர்கள் போலத் திரிவார்கள். அவர்கள் இன்னாரென்று அறியவேண்டுமானால், அக் கூட்டத்தார் ஒவ்வொருவருக்கும், ஒரு அடையாளமுண்டு; அது வெகு நாள் பழகினவர்களுக்குத்தான் தெரியும்; அதாவது, இடதுகைக் கட்டை விரலின்மேல் உள்பக்கமாய் ஒரு மருகியைப் போலக் குற்றுருவத்தில் பச்சை குத்தப்பட்டிருக்கும்; அது நன்றாய் ஊகித்துப் பார்த்தாலன்றி, வேறு யாருக்கும் தெரியாது; அவ்வாறு அவ்வளவு சிறிய உருவம் செய்யவும், எவராலும் முடியாது; அவ்வடையாளம் தெரிந்தால், அவர்கள் தான் மலைக்குறவர்கள்; இது தவிர அவர்களைப் பார்க்க வேண்டுமானால், வேறு அடையாளமும் உண்டு; மலையின் மேல் ஏறி வெகு தூரம் வடக்கே போகவேண்டும்; போகும் பாதைகளில் பெரிய மரங்கள் குத்துச் செடிகள் அடர்ந்த இடங்களில் சரியான வளைவு போட்டதுபோல அச்செடிகளின் தழைகள் காணப்படும்; அதுவும் நன்றாய் ஊகித்துப் பார்த்தாலன்றி தெரியாது. அவ்விடங்களில் போய் நின்று, 'ஹா! ஹா! பிஸ்மில்லா!' எனப் பெரிய சத்தமிட்டால், அச்செடிகளின் உள் வாயிலிருந்து, அவர்கள் மெள்ள மெள்ள எட்டிப்பார்த்துக் கொண்டு வெளியே வருவார்கள்; அப்பொழுது அங்கே போகிறவன் அவர்களைப் பார்த்து, மிகப் பயந்தவன்போல, ஆண்டவனைத்

தொழும் பாவனை காட்டி, மண்டியிட்டு, நாலு தடவை சலாம் செய்தால், அவர்கள் உபசரித்து ஏதாவது சாப்பாடு வேண்டுமானால் கொடுத்துப் 'போய்வா' என அனுப்பி விடுவார்கள்; அப்படிக்கல்லாமல், தைரியம் கொண்டு நின்றால், அவன் அங்கேயே தீர்ந்து போக வேண்டியவன் தான்; அவர்களைப் பார்க்க இவ்வளவு சிரமம் உண்டு; இனி உன்னிஷ்டம் போலப் போய்ப் பார்த்து விட்டு ஊருக்குப் போய்ச்சேர்"

ரஞ்சித்—"சுவாமிகாள்! சிறுவன்மேல் இவ்வளவு தயவு வைத்து விஷயம் தெரிவித்ததற்கு மிகவும் சந்தோஷப் படுகிறேன்: தாங்கள் சொல்வதைக் கேட்க எதுவும் அசாத்தியமான காரியமாயிருக்கிறது! வந்த வழியைப் பார்த்துக் கொண்டு பேசாது ஊர்க்குப் போவது தான் உசிதமெனத் தீர்மானித்துக் கொண்டேன்; தாங்கள் எனக்கு ஆகாரம் முதலியது கொடுத்து வேண்டிய புத்திமதிகளைச் சொன்னதற்காக நான் என்ன பதில் உபகாரம் செய்யப் போகிறேன்! எப்பொழுதும் உங்கள் ஞாபகமே என் மனதில் குடிகொண்டிருக்கும். ஒருநாளும் மறக்கமாட்டேன்"

பிராமணர்கள்—"அப்பா நீ எங்களுக்கு எவ்வித பதில் உதவியும் செய்ய வேண்டாம்; உன்னைப் பார்த்தது முதல் எங்களுக்கு உன்னோடு பேசுவதில் வெகு திருப்தியாயிருந்தது; யாரிடத்திலும் தெரிவிக்கக் கூடாத பரம ரகசியமான காபூலியர்கள் செய்கைகளை உன்னிடத்தில் வேடிக்கையாகச் சொல்லிவிட்டோம்! சொன்ன பிறகு, என் சொன்னோம் என, மனம் பதைக்கிறது! ஆகையால், நீ தயவு செய்து யாரிடத்திலும் நாங்கள் சொன்னவைகளைத் தெரிவிக்காமலிருந்தால், நீ எங்களுக்கு எத்தனையோ உபகாரம் செய்தவன் போல நினைத்துக் கொள்வோம்"

ரஞ்ஜித் — "பிராமணர்களே! தாங்கள் அது விஷயமாய்க் கவலைப்பட வேண்டாம்; தாங்கள் அவர்களுக்கு விரோதமாய் ஏதுவும் சொல்லவில்லை; அப்படிச் சொன்னதாகத் தாங்கள் நினைத்தாலும், நான் தெய்வ சாக்ஷியாக யாரிடத்திலும் சொல்ல வில்லை; தயவு செய்து உத்தரவு கொடுத்தால், பொழுது போகுமுன் வேறு எந்த ஊரிலாவது போய்த் தங்கி விட்டு, நாளையதினம் பார்த்தபுரி நோக்கிச் செல்கிறேன்"

பிராமணர்கள் — "இப்பொழுது விளக்கு வைக்க இரண்டு நாழிகை கூட இல்லை; நீ புறப்பட்டுப் போனால் வழியில் அவதிப்படுவாய்; இன்றிரவு இங்குத் தங்கி விட்டு, நாளைய காலையில் ஊர்க்குப் போகப் பிரயாணப்படு; நாங்கள் கொஞ்ச நேரம் வெளியே போய் விட்டுத் திரும்புகிறோம். இந்த ஊர் துஷ்டர்கள் அடங்கிய ஊர்; இவர்கள் யாரையும் வலிய சண்டைக்கு இழுப்பார்கள்; நாங்கள் போய் வரும் வரையில், எவரோடும் பேசாதே; சீக்கிரமாக வந்து விடுகிறோம்" என வெளியே சென்றார்கள்.

ரஞ்ஜித்சிங் பிராமணர்கள் வெளியே போனபிறகு, தான் இனிச் செய்ய வேண்டிய விஷயங்களைக் குறித்து யோசித்தான்; "மலையின் மேலேறி, அநேக நாள் பிரயாணம் செய்ய வேண்டி வந்தால் ஆகாராதிகளுக்கு என்ன செய்வேன்! நான் வரும் பொழுது என் செலவிற்குக் கூட எதுவும் கொண்டுவர இல்லையே! ஏதாவது ஒருவாரத்திற்கு மட்டும் போதுமான உணவு கையில் கொண்டு போனால், பிந்திப் பார்த்துக் கொள்ளலாம். என் கையில் ரூபா இல்லாவிட்டாலும், நல்ல மோதிரமும் உயர்ந்த சட்டை பொத்தான்களு மிருக்கின்றன; அவைகளில் எதையாவது ஒன்றை விலைக்குக் கொடுத்து, அதனால் கிடைக்கும் ரூபா

வைக்கொண்டு, ஆகாரப் பொருள்கள் வாங்கிக் கொள்ளலாம். மலைக் குறவர்களை எவ்விதமான தந்திரம் செய்தாவது, ஒருவர் பாக்கி யில்லாமல் எல்லாரையும் பிடித்துக் கருவறுத்தா லன்றி, இந்தப் பக்கங்களில் உள்ளவர்கள் க்ஷேமத்தை யடைய மாட்டார்கள். இக்காரியத்தைச் செய்து முடிப்பது எனக்கு பிரமாதமாகத் தோன்றவில்லை; இதைச் செய்யச் சாத்தியப் படாமல், அவர்களால் நான் இறக்கும்படி நேரிட்டாலும், தேச க்ஷேமத்தின் பொருட்டு நான் உயிர் துறக்க மிகுந்த சந்தோஷ மடைவேன். எவ்வளவு ஆபத்து வந்தாலும் மலை மீது ஏறிச் செல்லாம லிருப்பதில்லை'' என்த் தீர்மானித்து அவ் வீட்டின் தெருத் திண்ணையில் உட்கார்ந் திருந்தான். வெளியில் சென்ற பிராமணர்கள் ஒவ்வொருவராய் இரவு சுமார் ஏழு மணிக்குத் திரும்பி வந்து, தெருத் திண்ணையில் தனியே உட்கார்ந்திருக்கும் சிறுவனைப் பார்த்து, தாங்கள் சொன்னபடி அவன் யாருடனும் பேசாம லிருந்ததற்குச் சந்தோஷப் பட்டார்கள். அவர்களில் முதலாளி "அப்பா! நான் போனது முதல், சும்மா உட்கார்ந் திருக்கிருயோ?" என்ருன்.

ரஞ்சித் — "ஆம், யாரிடமும் பேசவில்லை"

பிராமணன் — "பிறகு என்ன யோசித்துக் கொண்டிருக்கிருய்?"

ரஞ்சித் — "எந்த யோசனையுமில்லை; ஊர்க்குப் போவதைக் குறித்து யோசித்துக் கொண்டிருக்கிறேன்"

பிராமணன் — "நீ, சொன்னதைக் கேட்டு, நடக்கும் சுபாவம் உடையவன் எனத் தெரிந்து கொண்டேன்; அதோடு, சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவதிலும், மிகுந்த சிரத்தையை வகித்தவனுகவும் இருக்கிருய்! உன் மீது எனக்கு மிகுந்த அனுதாபம் ஏற்பட்டுவிட்டது;

உன்னை வா; உனக்கு ஒரு யந்திரம் போட்டுத்தருகிறேன்; அதை நீ சதா இடுப்பிலேயே கட்டிக்கொண்டிருக்க வேண்டியது; அதை எக் காரணத்தாலும், கீழே அவிழ்த்து வைக்காதே! அந்த யந்திரம் உன்னிடம் இருப்பதிற் பிரயோசனம் என்னவென்றால், எக் காலத்திலும் உன் மேல் கோபங் கொண்டு உன்னை எதிர்ப்பவர் யாரும் இரார். அன்றியும், சத் விஷயமாய், நீ பிரவேசிக்கும் எந்தக் காரியமும், உனக்கு அனுகூல மாகவே முடியும்; இவ்வளவுதான்" எனத் தன் அறைக்குள் ரஞ்ஜித சிங்கோடு சென்று, கால் கை சுத்தி செய்து, மடி கட்டிக்கொண்டு, தான் வைத்து பூஜை செய்யும் ஸ்வாமி சன்னிதியில் போய் உட்கார்ந்து, ரஞ்ஜித சிங்கை ஒரு பக்கமாய் உட்காரச் சொல்லி விட்டு, தான் ஏற்கனவே சித்தஞ் செய்து வைத்திருக்கிற பொன் தகட்டில் ஒன்றை எடுத்து, அதில் யந்திரம் போட்டு, பஞ்ச கந்தம் கொடுத்து, தூபதீப முதலிய ஆராதனைகளைச் செய்து, அபிமந்திரித்து, சுருள் செய்து, அதை வெள்ளி கூட்டிற்குள் போட்டு, ரஞ்ஜித சிங்கிடத்தில் ஆசீர்வதித்துக் கொடுத்தான். ரஞ்ஜித் அப்பிராமணோத்தமனை நமஸ்காரம் செய்து, யந்திரத்தைப் பெற்றுக் கொண்டான்.

பிராமணன்—"அப்பா குழந்தாய்! நீ க்ஷத்திரிய குலத்தில் பிறந்த அதி சூரனாய் காணப் படுகிறாய்; நியாயத்தோடு உன் மனம் தைரிய மடைந்திருக்கிறது என அறிந்து கொண்டேன். செய்தொழிலில் துணிகரமும் பெரியோர்களிடத்தில் மரியாதையும் கீழ்ப் படிகிற சுபாவமும் உன்னிடத்தில் குடிகொண்டிருக்கின்றன. உன்னோடு எவ்வளவு காலம் பழகினாலும், யாரும் வெறுப்படைய மாட்டார்கள். உன்னிடத்தில் ஒரு பிற்பகல் மட்டும் நான் பழகினதால், எத்தனையோ காலம் பழகிய ஒரு சிநேகித

னைப் போல நினைத்துக் கொண்டேன். பர்த்தபூரில் இறந்து போன உன் தகப்பனார் பேரென்ன? உன் தாய்பேரென்ன?" என்று வினவினான்.

ரஞ்சித்—"ஸ்வாமி! என் தகப்பனார் பெயர் சங்காசிங்; தாயார் பெயர் சுகுணாபாய்; என் பெயர் ரஞ்சித் என்று கூப்பிடுவார்கள். சேனாதிபதி—ரஞ்சிதசிங் பங்களா எது என்றால், பர்த்தபூரில் உள்ள யாரும் சொல்லுவார்கள்; நான் ஊர்க்குச் சென்றால், உடனே தங்களுக்குத் தெரிவிக்கிறேன்; தாங்கள் தக்ஷணமே எங்கள் கிருகம் வந்து சேர வேண்டும்; எங்களைக் கிருதார்த்தர்களாகும்படி செய்யவேண்டும்" என்று மறுபடியும் நமஸ்கரித்துக் கேட்டுக் கொண்டான்.

பிராமணன்—"குழந்தாய்! நான் கட்டாயம் வருகிறேன்; உனது பாணிக்கிரகண வைபவம் நடக்கும் காலத்தைக் குறிப்பிட்டு எழுதினால், வந்து தம்பதிகளைப் பார்த்து ஆனந்திக்கிறேன்; எழுந்திரு, நாழிகையாய் விட்டது; கால் கை சுத்தி செய்து கொண்டு, சாப்பிட வா; எனத் தான் முந்திப் போய் போஜனம் செய்து கொண்டான்; இவன் சாப்பிட்டானதும், ரஞ்சித சிங்கும் சாப்பிட்டு எழுந்தான். இவன் "எனக்கு வழியில் சாப்பிட ஆகாரம் வேண்டுமே! இவரை எப்படிக் கேட்கிறது! கேட்டால் இவர் இனாமாய்க் கொடுக்கச் சித்தமா யிருப்பார்; இவரிடத்தில் இனாம் வாங்கிக் கொள்ள இஷ்டமில்லை. இவர் என்மீது மிகுந்த பக்ஷ முடையவராய், நான் இனிச் செய்யும் காரியம் ஜயத்தையே அடைய வேண்டுமெனப் பிரார்த்தித்து மந்திரம் ஜபித்த யந்திரம் ஒன்று கொடுத்தார். இதை யெல்லாம் உத்தேசித்து, முதலில் இவர் கை விரலில் என்னிடத் துள்ள மோதிரத்தைப்

போட்டு விட்டால், அதன் பின் எனக்கு ஆகவேண்டிய காரியத்தைச் சுலபமாய்த் தெரிந்துக் கொள்ளலாம். இவர் சம்மதிக்காத வரையில் காலமே இவ் வூரிலுள்ள வேறு யாரிடமாவது அதை விற்று முதல் செய்து வேண்டியதை வாங்கிக் கொண்டு போகிறேன்'' என எண்ணங் கொண்டு, சாப்பிட்டுவிட்டுத் தாம்பூலம் தரித்துக்கொண்டிருந்த பிராமணோத்தமனிடம் சென்று, மறுபடியும் நமஸ்கரித்து "ஸ்வாமி! தங்கள் ஞாபகம் எனக்கு எப்போது மிருக்கும்படி எனக்கு அனுக்கிரகம் செய் திருக்கிறீர்கள்! அது போலவே என் ஞாபகம் தங்களுக் கிருக்க இச்சிறு விரல் மோதிரத்தைத் தங்களுக்குக் கொடுக்க இச்சிக்கிறேன். தயவு செய்து அங்கீகரித்து என்னைக் கிருதார்த்த னாக்கப் பிரார்த்திக்கிறேன்'' என வேண்டி அவர் முன், அணிந்து கொள்ளும்படி மோதிரத்தைக் கீழே வைத்தான்.

பிராமணன் — மோதிரத்தைக் கையில் எடுத்துப் பார்த்து, இரு புறமும் உயர்ந்த பச்சைகள் வைக்கப் பட்டு, நடுவில் ஒரு வைரமும் பதிப்பிக்கப் பட்டிருந்ததைக் கண்டு, மெத்த ஆச்சரியமுற்றவனாய், "இவன் ஏற்கெனவே தனவானா யிருக்க வேண்டுமென்று மதித்தேன். அது வாஸ்தவமென இம் மோதிரத்தால் எனக்கு நன்கு விளங்குகிறது. நல்லது, இம் மோதிரத்தை நான் கிரகித்துக் கொள்ள அருகனோவேனோ! என்பது மட்டும் என மனத்தில் போராடுகிறது. சாதாரணமான அந்தஸ்தையுடைய நான், ஏதோ இருப்பதைக் கொண்டு க்ஷேத்ராடனத்தைப் பூர்த்தி செய்து, கூடிய வரையில் பரோபகாரம் செய்ய எண்ணங் கொண்டவனாய்க் காலந் தள்ளுகிறேன். இம் மோதிரத்தை நான் அணிந்து கொண்டால், பார்ப்பவர்கள், 'இது ஏது?' என்று கேட்பார்க ளாயின், அதற்கு நான் என்ன விடை யளிப்பது? அல்லது, ஒரு

வருக்கும் தெரிய வேண்டா மென்று, பெட்டிக்குள் அடக்கம் செய்து வைத்திருந்தால், யாருக்கு என்ன சந்தோஷத்தை அது கொடுக்கும்? வகிக்க வேண்டியவர்கள் வகித்தாலன்றோ, பொருள்கள் பெருமைப்பாடு அடையும்! நமக்குபயோக மில்லாத வஸ்து எவ்வளவு உயர்ந்ததாயினும் என்ன? அல்லது, இதை வேறு யாரிடத்திலாவது விற்று, அதனால் வரும் தனத்தைக் கொண்டு சீர செளக்கியம் தேடிக் கொள்ளலா மென்றாலோ, 'அளவுக்கு மிஞ்சினால், அமுதமும் விஷமாகும்' என்பது போல நான், மித மிஞ்சி யிருப்பதை அன்னியர்கள் கண்டு, என்னைக் கொள்ளையிடச் சித்தமா யிருப்பார்கள். அதனால், எனக்கு எப்போதும் ஏற்பட்ட சொத்துக்களும் போய் விடும். 'அதிக ஆசை அதிக நஷ்டம்' என்பது எனக்குத் தெரிந்த விஷயமே! ஆகையால் இம் மோதிரம் எனக் குரியது அன்று, என்பது நிச்சயந்தான். எனக் குரியதாயுள்ள ஒன்றைக் கொடுத்தால், நான் பெரியதாக நினைத்து அங்கீகரித்துக் கொள்வேன்" என்ற எண்ணங் கொண்டவனாய் ரஞ்சிதசிங்கைப் பார்த்து, தனது உள்ளக் கருத்தை உதா கரணத்தோடு வெளியிட்டான். ரஞ்சித சிங்கு, அவன் சொல்வது வாஸ்தவமென உணர்ந்து, மோதிரத்தை மீளவும் எடுத்துக் கொண்டு, தன்னுடைய சட்டையில் போட்டுக்கொண்டிருந்த பொத்தான்களில் நாலுஎடுத்து, பிராமணன் கையில் கொடுத்தான்; அதையும் அவன் மறக்க முடியாதவனாய், ஏற்றுக் கொண்டான். சற்று நேரம் இருவரும் ஏதோ பொது விஷயமான சில காரியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். கடைசியாகப் பிராமணன், "உன்னை யிப்போதே ஊருக்கு அனுப்ப எனக்கு இஷ்டமில்லை; நாலு தினம் என்னோடு கூடவே யிருந்து, பிறகு போவாயானால், நான் திருப்தியுள்ளவனா யிருப்பேன்" என்றான்.

ரஞ்சிதசிங்கு —"ஸ்வாமி! எத்தனை நாள் வேணுமானாலும் தங்களோடு நானிருக்கச் சித்தமா யிருக்கிறேன்; என் மனதில் ஓர் அவா தோன்றி விருத்தி யடைந்திருக்கிறது. அதனால் இங்கிருக்க முடியாததற்கு வருந்துகிறேன். நாலு நாள் தங்கள் வீட்டில் நானிருப்பதுபோல, தாங்கள் நினைத்துக்கொண்டு, அந் நாட்களுக் குண்டான ஆகாரங்களுக்கு வேண்டிய சாமான்களை தயவுசெய்துகொடுங்கள்; அதை நான் வழியில் வைத்துக்கொண்டு சாப்பிட்டுச் செல்லுகிறேன்" என்றான்.

பிராமணன் —"அப்பா! நீ மனதிலுள்ளதை ஒளிக்காமல் கேட்பதற்கு மிகுந்த சந்தோஷப் படுகிறேன்," என்று சொல்லிப் பதினைந்து நாட்களுக்கு ஆகும்படியான ரொட்டி, பால், பிஸ்கோத்து முதலியவைகளும், அனேக பக்ஷியங்களும் சித்தம் செய்து, பொழுது விடியுமுன், அவனுக்குக் கொடுக்கும்படி தன் மனைவியிடத்தில் உத்தரவுசெய்தான். பிறகு, பிராமணன், ரஞ்சித சிங்கை நல்ல ஓரிடத்தில் படுக்கும்படி செய்து, தானும் சயனத்துக்குச் சென்றான். பதி சிசுருஷையில் மகா பக்தியைப்பெற்ற பரம பாக்கியவதியான அந்தப் பிராமணோத்தமனுடைய மனைவி, தன் புருஷன் உத்தரவுப்படி இரவு முழுவதும் கண் விழித்துக் கொண்டு, நாட்பட இருக்கும்படி, வேண்டிய ஆகாரங்கள் சித்தஞ் செய்து, ஒரு சிறு மூட்டையாகக் கட்டி, சூரிய உதயத்துக்கு முன் பிராமணனிடத்திற் கொண்டு வந்து வைத்தனள்.

ரஞ்சித்சிங்கு அதி காலையில் எழுந்து, தந்த சுத்தி முதலானவைகளைச் செய்துகொண்டு, பிராமணனால் உபசரித்துக் கொடுக்கப்பட்ட காலை ஆகாரத்தை அருந்தி, அவன் தனது கையிற் கொடுத்த ஆகார மூட்டையை

யும் எடுத்துக் கொண்டு பிராமண தம்பதிகள் இருவருக்கும் வந்தனம் செலுத்தி, வெளியே வந்தான். தான் இந்தப் பக்கமாக இன்ன இடம் போகிறது என்று தெரிவிக்காமல் மலையடி வாரத்தை உத்தேசித்து ஏதோ ஒரு வழியாக நடந்தான். இவன் போகும் வழி, சரியான பாதையல்லாமல் குறுக்கு வழிகளாகவே யிருந்தன. இவனது வலது கையில் துப்பாக்கியும், இடது புயத்தில் ஆகார மூட்டையும், தோல்வாரினால் இறுக்கப்பட்டு, தோளில் மாட்டிக்கொண்டிருந்த தோல் பையில் துப்பாக்கி மருந்துகளும், தன்னுடைய உடைகளுமிருந்தன. மிகுந்த பலமுடைய சிறுவனாதலால், அவ்விதக் கொடிய வழியையும், இலக்ஷியம் செய்யாமல் சிறிய கால்வாய்களைத் தாண்டிக் குதிப்பதும், பெரிய கற்பாறைகளின்மேல் எழும்பி ஏறுவதும், மரங்கள் செடிகள் அடர்ந்திருந்தால் அவைகளைத் துப்பாக்கிக் கட்டையால் விலக்கிக்கொண்டு போவதுமாக அன்று பகல் முழுவதும் நடந்தான். இதோ மலையடிவாரம் சமீபத்தி லிருக்கிறது என்று இவன் நினைத்துச் சென்றால், இன்னும் சமீபத்தி லிருக்கின்றன என்று மலைகள் காணப்பட்டனவே யல்லாமல் அவன் அவைகள் சமீபத்தில் வந்த பாடில்லை. மலையின்மீது உற்பத்தியான நீர் ஓடைகள் சல, சல வென்ற சத்தத்தோடு வெகு வேகமாக ஓடுவதையும், மனித ஜாதிகள் எவருமே கண்களுக்குப் புலப்படாமல் காட்டுமிருகங்கள் ஆங்காங்கு ஓடிக்கொண்டிருப்பதையும், ஆகாயமளாவிய விருக்ஷங்களின் பயங்கரமான தோற்றத்தையும் எதிரே கண்டு மனதில் கொஞ்சங்கூட சஞ்சலத்தை யடையாதவனாய், இருட்டிப்போய் விட்டபடியால், அப்பால் நடந்து போக முடியாதென்றுணர்ந்தும் மனோதைரியத்தோடு நடந்துவந்தான்; களைப்பு என்பதை இவன் கவனிக்காவிட்டாலும், சிரமமானது, தானே

இவனை அழுத்திக் கீழே தள்ளிற்று. ஒரு நீர் ஓடையின் பக்கமாயுள்ள ஆலவிருக்ஷத்தின் கீழ் அமைந்துள்ள கற்பாறையின்மீது உட்கார்ந்தான். மலைக் காற்றானது சிலுசிலுவென்றடித்து இவன் உடம்பு குளிர்ந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் நிலவு தோன்றிற்று. மூட்டைகளையும் துப்பாக்கியையும் கற்பாறையின் மீது வைத்துவிட்டுக் காட்டருவியில் கால் கைகளை சுத்திசெய்துகொண்டு, தான் கொண்டுவந்த ஆகாரத்தைக் கொஞ்சம் எடுத்து அருந்தினான். அவ்வினிய ஆகாரத்தைப்போல், தான் அதுவரையில் சாப்பிட்டதில்லையென சந்தோஷங்கொண்டான். 'மலைக்குறவர்களைக் கண்டு பிடித்து அவர்களைச் சித்திரவதை செய்வேனே, என ஆசைப்பட்டான். நிலவு வெளிச்சமாயினும், மரத்து நிழலில், இவன் தங்கியிருந்தபடியால், ஒரு வீட்டிற்குள் வசிப்பது போலிருந்தது. காலைமுதல் நடந்ததனாலுண்டான சிரமத்தால் இவனையறியாமல் தலை சுற்றியடிக்க, அக் கற்பாறையின் மீது, தன்னிடத்தில் உள்ள கம்பளியை விரித்துத் தோற்பையையும் ஆகார மூட்டையையும் தலைக்கு உயரமாக வைத்துக்கொண்டு பக்கத்தில் துப்பாக்கியை வலது கையால் பிடித்தபடியே படுத்து நித்திரை செய்தான். இவனுக்கு அன்றிரவு எந்த விதமான தொந்தரவும் மிருக ஜாதிகளாலேனும் வேறு இதர பிராணிகளாலேனு மில்லை. மறுநாள் காலையில் அதிக நேரம் கழித்து எழுந்து பார்த்தான். காலை பத்து மணி ஆய்விட்டதாகத் தெரிந்தது; மலைக்கு அதிக சமீபத்தில் படுத்திருந்தவனாதலால், மலைச் சாரலினால் உண்டான சிலுசிலுப்பும் அசாத்தியமான குளிரும் இவனைப் படுக்கையில் அழுத்தின. இவன் எழுந்ததும் அதிக நாழி தூங்கிவிட்டோமே எனக் கவலையடைந்தவனைத் தனது படுக்கைக் கம்பளியைச் சுற்றிப் பையில் வைத்துவிட்டு,

கொஞ்சம் ஆகாரம் செய்து கொண்டால், நடப்பதற்கு அனுகூலமாக இருக்கும் என யோசித்துக் கால் கை சுத்தி செய்துகொண்டு அந்நீரோடைக் கரையில் உட்கார்ந்து கையிலுள்ள ஆகாரத்தில் கொஞ்சம் சாப்பிட்டான். பிறகு மூட்டைகளை எப்போதும்போல எடுத்துக்கொண்டு, மலையை நோக்கிச் சென்றான். கொஞ்சதூரம் போகுமுன், இவன் சற்று ஏற்றத்தில் செல்லும்படியாக இருந்தது; மலையில் உள்ள மரங்களின் மறைவினால், இவன் மலைமீதுஏறிப் போவதாகவே தெரியவில்லை. சுமார் பன்னிரண்டு மணிக்கு மரங்களில்லாத வெட்டவெளிச்சமான ஓரிடத்திற்கு வந்தான். அப்பொழுதுதான், சூரியனுடைய பிரகாசம் மலையடிவாரங்களில் பரவுவதாகக் காணப்பட்டது. அம்மலைத் தொடர் ஒரே அளவாய் நேராய் உயர்ந்திருக்காமல், கொஞ்சதூரம் சமவெளியாகவும் அதன்மேல் கொஞ்சம் உயரமாகவும் இப்படிப் படிப்படியாக இருந்தது; சூரிய வெளிச்சம் படுமுன், நெடுந்தூரத்தில் நீல நிறமாய், மேலே பனி படர்ந்து, ;அம்மலை ஆகாயத்தோடு ஆகாயமாகக் காணப்பட்டதேயன்றி பூமண்டலத்தைச் சேர்ந்ததாகக் காணப்படவில்லை. மலைச் சிகரங்கள் மாசு மறுவற்று கன்னங்கறேலென்று ஆகாய மண்டலத்தை அளாவியிருந்தன; இவ்வாறு படிப்படியாய் ஆகாயமளாவி உயர்ந்திருக்கின்ற அம்மலையைப்பார்த்து 'மிகப்பெரிதான இம்மலையினது கம்பீரமான காக்ஷியினும் பெருமைபெற்ற காக்ஷி வேறொன்று உலகில் உண்டோ!' என ஆச்சரியமடைந்தான்.

அம்மலையில் ஓரிடத்திலிருப்பதுபோல மற்றோரிடத்தில்லாமல் வெவ்வேறு விதமாக இருக்கும் விநோதக் காக்ஷிகளைக் கண்டு களிப்படைந்து கொண்டே தன்னை மறந்தவனாய், ஈசுவரசிருஷ்டியின் பெருமைகளை நினைத்துச் சந்தோஷித்து, மேலும் மேலும் நடந்து சென்றான். மலைச் சிகரங்

களினின்றும் பெருகுகின்ற நீரெல்லாம் அங்குள்ள கானாறு கள் தாங்கமாட்டாமையால், புரண்டோடி அடிவாரங்களில் விழுவதையும், சதுப்பு நிலமல்லாமல் சூரிய உஷ்ணம் படக்கூடிய விடத்தில் அபரிமிதமான விநோதச் செடிகள் முளைத்துப் பூமியை மூடிக்கொண்டு அங்குமிங்கும் செல்ல வழியின்றித் தடுத்துக் கொண் டிருப்பதையும், சில பிர தேசங்களில், செடிகளும் தழைகளும் வளர்ந்து முழுதும் இருள் மூடியது போல பயங்கரமா யிருப்பதையும், தரை யில் கால் வைக்கக் கூடாமல் புற்களும் முட் செடிகளும் அமிதமாக முளைத் திருப்பதையும், சிற்சில இடங்களில் காணப்படும் பயங்கரமான காடுகளில் யானை புலி முதலிய பல துஷ்ட மிருகங்கள் நிர்ப்பயமாய்ச் சஞ்சரிப்பதையும், சற்று வேற் புறத்தில், அம்மலையில் பலவிதமான பழச் செடிகளும் பூஞ்செடிகளும் நிறைந்து அழகான சுனைவாய் களும் கம்பீரமான கொடி முடிகளு மிருப்பதையும், ஆனால், அம் மலையானது முழுவதும் காடுகளால் சூழப்பட்டிருப்ப தையும், மா, பலா முதலிய சில செடிகள் மாத்திரம் அல் லாமல் தேவதாரு முதலிய மகா விருக்ஷங்களும் தாமாக முளைத்து வளர்ந்து அழிந்து போயிருப்பதையும், பிரம் மாண்டமான மரங்களின் இடையே பல புதர்கள் வளர்ந்து அவற்றில் பல பூக்களும் பழங்களும் நிறைந் திருப்பதையும் கண்டு, “சிருஷ்டிப் பொருள்கள், காலம் தேசம் சீத உஷ்ணத்திற்குத் தக்கபடி கடவுளால் உண்டா க்கப்பட் டிருக்கின்றனவே! இவ்வளவும் அறிந்து செய்த சர்வேசுவர [illegible] ஆன அவனது பெருமையை மறந்து, அவனை மனமாரத் தோத்திரஞ் செய்யாமலும் அவனது சிருஷ்டிப் பொருள்களிடத்தில் அனுதாபத்தைக் காட்டாமலும் சுய நயம் பாராட்டித் திரியும் பேதையர்கள் இவ்வற்புதங்களைக் காணின் நல்லறிவு உண்டாகி, நாவாரக்

கடவுளை வாழ்த்தும் குணம் அமையாமற் போகாது'' என, ஈசுவரனை ஸ்தோத்திரஞ் செய்தவனாய், மேலும் மேலும் நடந்து சென்றான். அங்கு நடந்து போகும் பாதைகள் எதுவும் இவன் காணவில்லை; பிராமணர் மலைமீது ஏறி வடக்கு நோக்கிச் செல்ல வேண்டு மென்றார். எந்த இடத்திலிருந்து வடக்கு நோக்கிச் செல்ல வேண்டியது என்பதை இவன் கேட்காதபடியால், "எப்பக்கம் போகலாம், எந்த இடத்திலும் வழியைக் காணோமே! என் செய்வது?'' எனச் சஞ்சலத்தையடைந்தான். மறுபடியும், "இம்மலை முழுவதும் தேடியலைவது என்றால், எனது ஆயுள்காலம் போதாது, மலையின் உச்சியில் அவர்கள் ஒரு நாளும் சஞ்சரிக்க மாட்டார்கள்; அங்கே ஒரு பகல்கூட ஒரு மனிதனும் வசிக்க முடியாது; கீழ்ப் பக்கங்களில் வசிக்கலாமோ என்றால் மரங்களடர்ந்து நோய்க் கிடமான தாழ்வரையாக இருக்கிறது. அதனால் அவர்கள் அங்குமிருக்க மாட்டார்கள்; அவர்கள் தங்குமிடம் தேக ஆரோக்கியத்திற்கு யோக்கியமாயும், சூரிய வெளிச்சம் படக் கூடிய இடமாயும் இருக்க வேண்டும்; ஆதலால் மேல் நோக்கிச் செல்லாமலும், கீழ்ப்பக்க மில்லாமலும், நடுப் பக்கமாகவே சென்றால் மனிதர் சஞ்சாரம் செய்யக் கூடிய இடங்களை எவ்வித அடையாளத்தாலாவது கண்டு கொள்ளலாம்'' எனத் தீர்மானித்து மலைச்சரிவின் மத்திய பாகத்தின் வழியே சென்றான்.

காடுகள் விசேஷமாகக் கீழ்ப் பக்கமாக இருந்ததே ஒழிய நடுப் பக்கத்தில் அவ்வளவு அதிகமாக இல்லை. கீழ்ப் பிரதேசத்தில், தான் கண்ட யானை, வேங்கை முதலியவைகள் அங்கே யில்லை. காட்டுப் பன்றி, கரடி, காட்டுப் பூனை முதலியவைகள் தாம் அவ்விடத்தில் சூறையாடுசிற மிருகங்களாகக் காணப் பட்டன; அங்குள்ள காட்டாடுகள் ஒரு பாறையி லிருந்து மற்றொரு பாறைக்குச் சாயாமலும்

சறுக்காமலும் எழும்பித் தாவுவதையும், பலவிதமான மான்கள் நிறைந்திருப்பதையும், மனிதர் ஒரு பொழுதும் கால் வைக்க மாட்டாத பெரிய பாறைகளின் இடையே மிகச் சிறந்த கஸ்தூரி மான் நிற்கிறதையும், காட்டுப் பறவைகள் பறந்து தங்களைப் பிடிக்க வருகிறவர்கள் கையில் அகப்படுவதுபோல் ஆகாசத்தில் ஜாடை காட்டிக்கொண்டு திரிகின்றதையும், வீட்டுப் பறவைகளான கோழி முதலிய பக்ஷிகளும், பருந்து கருடன் முதலிய பக்ஷிகள்போல் ஆகாயத்தில் உயர எழும்பிப் பறப்பதையும், கௌதாரி முதலிய பல ஜாதிப்பக்ஷிகள் தங்கள் தங்கள் மெல்லிய குரலால் சத்தமிட்டு அங்குமிங்கும் உலவுவதையும் கண்டு களித்துப் பரமானந்தம் கொண்டான். "மலைச்சஞ்சாரத்தைத் தவிர, வேறெதுவும் மனோகரத்தைக் கொடுக்காது. நாட்டில் வசித்து நானாவிதமான பொருள்களிடத்தில் மனதை நாட்டிப் பிரயோஜனமில்லாத திருப்தியை அடைவதை விட, இக்காட்டு மலை வாஸமானது எத்தனையோ மடங்கு மேலானது" என்றவனாய், கற்பாறை, குத்துச்செடி, முட்புதர் முதலிய எதையும் இலக்ஷியம் செய்யாமல், சரீரபலத்தோடு மனோபலமும் வகித்த ரஞ்சிதசிங், பிராமணர்களால் குறிக்கப்பட்ட அடையாளத்தை மனதில் நினைந்து நினைந்து, ஆங்காங்கு பார்த்துக் கொண்டே சென்றான். சூரியாஸ்தமன மாகும் சமயம் ஆயிற்று; இவன் எந்தவிதமான அடையாளங்களையும் அறிந்து கொண்டவனாகக் காணப்படவில்லை. பத்துமணி முதல், மேட்டிலும் பள்ளத்திலும் நடந்தபடியால் களை மேலிட்டது; தான் நடக்க சக்தி யற்றவனாய் ஓர் அருவியை நாடிப்போய் அதன் சமீபத்தில் உட்கார்ந்தான். கூரிய கற்பாறைகளிலும் முட் புதர்களிலும், நடந்தபடியால், இவன் காற் செருப்பு அனேகமாய்ப் பிய்ந்துவிட்டது. ஜோட்டைக் கழற்றிப் பார்த்தான்; உள்ளங்கால்கள்

சிவந்து, இரத்தம்போல் இருந்தது. அடித் துடைகள் இற்றுக் கீழேவிழுந்து விடுவதுபோல ஆயிற்று. அருவியின் பக்கத்தில் உட்கார்ந்து ஜலத்தைத் தொட்டான். அது மயிர் சிலிர்க்கும்படி ஜில்லென்றிருந்தது; அதை எடுத்துக் கால் கைகள் அலம்பவும், இஷ்டப்படாதவனாய், "கொஞ்சம் வெந்நீர் அகப்பட்டு, அதைக் கால்களில் ஊற்றிக் கொண்டால், இவ்வளவு வலிப்பதற்குக் கொஞ்சம் அனுகூலமாக இருக்கும்! என்செய்வது! இக்காட்டில் நமக்கு வெந்நீர் யார் வைத்துக்கொடுக்கப் போகிறார்கள்? மனித சஞ்சாரமேயில்லாத இந்த இடத்தில் நான் நல்ல யோசனை பண்ணுகிறேனே! அசாத்தியமான காரியத்தில் பிரவேசித்து விட்டேனே! காரியம் முடிவடைகிறதாகவும் தோற்றவில்லை; பிராமணர் வீட்டைவிட்டு இரண்டு பகல் யாத்திரை செய்து மலைக்குவந்தேன். நான் எந்த இடத்தையும் கண்டதாக இல்லை; எத்தனை நாள் இந்தப் பாறைகளில் நடந்தாலும், இப்படியேயிருந்தால், நான் என்ன செய்ய முடியும்! போகவேண்டாமென்று தாயார் புறப்படும் பொழுது தடுத்தாள். 'தாய் சொல் துறந்தால் வாசகமில்லை' என்றபடி அவள் வார்த்தைக்கு, விரோதஞ் செய்து வந்ததின் பலனோ இது? அல்லது மகா உத்தமரும் சத் கர்மாக்களை வகித்து உத்தம சுபாவம் பெற்றவருமாகிய பிராமணர் சொல் கேளாததின் பிரயோஜனமோ? நான் ஒன்றும் அறியேன்! இந்த இடத்தில் ஒன்றியாய் வந்து விட்டேன்; 'இனி உயிர் தப்பி எப்படி ஊர்க்குப் போகப் போகிறேன்!' என்பதற்கு நான் விசாரப் படவில்லை; உயிர் போவதைப் பற்றி விசாரமேயில்லை. 'பரோபகாரமான காரியத்தில் பிரவேசித்து என்றால் ஒருவித அநுகூலமும் இல்லாமல் போனால், என் செய்வது?' என்பதற்கு மட்டும் விசாரப் படுகிறேன்; இரண்டு தினங்களாய் மலைப் பிர

தேசங்களில், சஞ்சாரம் செய்ததனால் மலைக்காற்று உடம்பிற்கு ஒத்துக் கொள்ளாமல் மண்டையை இடிக்கிறது; தலை கிறு கிறுத்து கீழே கொண்டு போய்த் தள்ளுகிறது! அடடா! என்ன ஆச்சர்யம்! இவ்வளவும் நான் உட்கார்ந்த க்ஷண நேரத்தில் உண்டாயிருக்கிறதே! இந்த நீரோடையின் ஜலத்தைக் கையால் தொட்ட விசேஷமா! அல்லது விடாது அலைந்த அதிர்ச்சியினால் உண்டாயிற்று! எனக்கு இப்பொழுது ஒன்றுமே தெரியவில்லை; தாகம் அசாத்திய மாயிருக்கிறது! இங்குக் கீழே படுத்துக்கொள்ளவும் இடம் சௌகரியமாக இல்லை; நான் என்ன செய்வேன்! மண்டையிடி அசாத்தியமா யிருக்கிறது! என்னை எங்கேயோ கட்டித் தூக்கிக் கொண்டு போகிறதுபோல இருக்கிறதே! அம்மா! இதுவரையில் உன்னை விட்டு ஒரு நாளும் பிரிந்ததில்லை; ஏதோ என் காலவித்தியாசத்தால் பிரிந்தேன்! எனது சரீரம் இனித் தாங்காத நிலைமையிலிருக்கிறது! நான் ஊரிலிருந்து இவ்வித வேதனை எனக் கேற்பட்டால், உன் பிராணன் துடிக்குமே! எத்தனையோ வைத்தியர்களைத் தருவித்து என்னை சௌக்கியப் படுத்தும்படி செய்வாயே! யாருமில்லாத இந்த மலைப்பிர தேசத்தில் ஒன்றியாக வந்து துன்பப்படுகிறேனே! நான் இனிப் பிழைக்கமாட்டேன்! நான் தாயிடம் கடிதம் எழுதிக்கொடுத்து அனுப்பியிருந்ததைப் படித்துப் பார்த்தும், நான் ஊருக்கு எல்லாரோடும் சேர்ந்து வராமைக்கு மிகுந்த வருத்தப்பட்டிருப்பாய்! கடிதத்தைப் பார்த்து உன் மனம் பொறுமல் என்னபாடு பட்டாயோ! அல்லது என்னைத் தேடிக்கொண்டுதான் வீட்டைவிட்டுப் புறப்பட்டு விட்டாயோ! இனி நான் உன்னைச் சந்திக்கப்போவதில்லை. உடம்பு முழுவதும் ஊசியால் குத்துவதுபோலச் சுரீர் சுரீரெனக் குத்துகிறது; என்னால் தாங்கமுடியவில்லை; பிரா

ணன் போய்விடுவது நிச்சயந்தான்; நான் யாருக்கும் பிரயோசனமற்றவனுய்ப் போய்விட்டாலும், எனது சரீரத்தை இக் காட்டு மிருகங்கள் சந்தோஷமாய் உண்டுகளிக்கட்டும், அம்மா! நான் இறந்துபோனதாக உனக்கு சமாசாரம் தெரியப் போகிறதில்லை! வெகுநாள் வரையில் வருவான் வருவானென வழிபார்த்துக் கொண்டிருப்பாய்; பிறகு என்னைவிட்டுப் பிரிந்ததால் உண்டான துக்கத்தை நீ சகியாமல் சாவாய். ஐயோ, உனக்கு எவ்வித உதவியும் செய்யவில்லையே! நீ வீரனது பத்தினியாகையால், முதலில் என்னைப் போகவேண்டாமென்று தடுத்தாலும் பிந்தி, பத்துப் பேருக்கு உதவியான ஒரு காரியத்தில் பிரவேசிப்பது உசிதம்தான், போய்வா என்றுயே! எனக்குத் திடீரென ஆபத்து நேர்ந்துவிட்டதே!'' எனப் பலவாறு நினைந்து நீரோடையின் பக்கத்தி லுள்ள சமமான ஓரிடத்திற்குத் தட்டுக் கெட்டுத் தடுமாறி நகர்ந்து போய், தன்னிடம் உள்ள கம்பளியையும் எடுத்து விரித்துப்போட்டுக் கொள்ள சக்தி யற்றவனுய், உடம்பு முழுவதும் அசாத்திய நோயினல் பிடிக்கப்பட்டு மூட்டைகள் நீரோடையின் பக்கத்தில் கிடக்க, அதையும் எடுத்து வந்து பக்கத்தில் வைத்துக் கொள்ள முடியாமல் கீழே விழுந்துவிட்டான். சற்று நேரத்துக்கு ஒரு முறை "ஆஹா! ஆஹா! அம்மா" எனக் கதறுவான்; சரீரத்தில் இவனுக்குச் சரியான உணர்ச்சியும் இல்லா தொழிந்தது. இரவு வெகு நேரத்துக்குப்பின் கொஞ்சம் ஞாபகம் ஏற்பட்டுத் தன் சமீபத்தில் யாரோ சிலர் உட்கார்ந்து கொண்டு உபசாரம் செய்வதையும், உடம் பெல்லாம் உஷ்ணம் உண்டாகும்படி பக்கத்தில் கட்டைகளைப் போட்டுக் கொளுத்திக்கொண் டிருப்பதையும் தன்னைப் பிடிக்கின்ற அசாத்தியமான நோவானது ஒருவாறு குறைந்தும், மயக்க மட்டும் பூர்த்தியாகத்



தன் சமீபத்தில் யாரோ சிலர் உட்கார்ந்து உபசாரம் செய்வதை உணர்ந்தான் — (134-ம் பக்கம் பார்க்க)

தெளியாதவனாய், தன் தாயே சிலவேலைக்காரர்களோடு தன் சமீபத்தில் வந்து உபசரிப்பதாக நினைத்து, "அம்மா! முன் போல் அவ்வளவு வலியில்லை; நான் ஒன்றியாகப் புறப்பட்டு வந்தேனென என்னைத் தேடிக் கொண்டு என் பின்னோடு வந்தாயோ? உன்னை நான் மனமார நினைத்ததால், சமயத்தில் எனக்குதவிசெய்ய வந்தாய்; கால் பக்கத்தில் மட்டும் வலி அசாத்தியமா யிருக்கிறது. கொஞ்சம் வெந்நீரால் ஒத்தடம் கொடுப்பாயானால் சற்று நேரத்துக் கெல்லாம் சௌக்கியத்தை யடைந்து, எழுந்து உட்கார்ந்து விடுவேன். நாளையதினம் கூலியர்களைக் கட்டாயம் கண்டு பிடித்து விடுகிறேன்," என்று மெள்ள மெள்ள ஒவ்வொரு வார்த்தையாகச் சொன்னான். அவைகளைக் கேட்டிருந்த மாதொருத்தி உடனே அவன் சொல்லியபடி காலுக்கு வெந்நீர் வார்த்து நன்றாய்க் கொதிக்கும் ஜலத்தில் துணியை நனைத்து ஒத்தடம் கொடுத்தாள்.

ரஞ்சிதசிங்குக்கு இப்பொழுது முற்றிலுமே மயக்கம் தெளிந்தது; கண்ணைத் தாராளமாய் விழித்துப் பார்த்தான். சில கோஷா ஸ்த்ரீகள் சற்று அப்பால் நின்றுகொண்டு கட்டைகளைப் போட்டு எரிப்பதையும் பெரிய கடாரத்தில் வெந்நீர் காய, அதை ஒரு * மங்கை எடுத்து வந்து தனக்கு ஒத்தடம் இடுவதையும் கண்டு, "இது என்ன அதியாச்சரியமாக இருக்கிறது! தேவதா ஸ்த்ரீ போன்ற இம் மங்கை என் பக்கத்தில் வந்து சிசுரூஷை செய்ய என்ன காரணம் ஏற்பட்டது! இவர்கள் யாவரும் இவ்வனத்தில் வாழும் தேவதைகளோ! அல்லது பிராமணோத்தமர் அனுக்கிரகித்துக் கொடுத்த யந்திரத்தின் விசேஷமோ! அல்லது இம்மலைப் பிரதேசத்தில் வாசம் செய்வதாகச்

* மங்கை = பருவமடைந்த சிறுமி.

சொல்லப்படுகிற கபூலியர்களின் உறவினர்களோ! இந்த அர்த்த ராத்திரி வேளையில் இவர்கள் என்பக்கத்தில் வந்து உபசரிக்க என்ன நியாயம்! இவர்களைப் பார்த்து நீங்கள் யார் என்று கேட்பதற்கும் எனக்கு இலச்சையா யிருக்கிறது. என்றாலும் இவ்வளவு தூரம் உபசரித்து உயிர் போகும் ஸ்திதியிலிருந்த என்னை, நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்த பாக்கியவதிகளான இந் நங்கையர்களை விசாரித்து அவர்களுக்கு என்மனப் பூர்த்தியான நன்றியைச் செலுத்தவேண்டாமோ!" என்று எண்ணங் கொண்டு தன் சமீபத்தில் உட்கார்ந்திருந்த இளம்பிராயமுள்ள பெண்ணைப் பார்த்து, "தாயே! நீங்கள் யார்? அநியாயமாகச் சாகும் என்னை உயிர் பெறும்படி காப்பாற்றினீர்களே! புண்ணியசீலினிகளான நீங்கள் இவ்வனத்தில் வாழும் தேவதைகளோ!" என்றான். அப்பெண், "ஐயா! எங்களைப் பற்றித் தாம், பிந்தி விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்; தாங்கள் பசியோடு இருப்பதாகத் தெரிகிறது! பசிப்பிற்கேற்ற புத்தாகாரம் சித்தமாயிருக்கின்றது; இதோ பக்கத்திலிருக்கிறது. அதை அருந்துவீர்கள்" என்றாள். ரஞ்சிதசிங்கு, அப்பெண் சொன்ன பிரகாரம், தான் பசியாற எண்ணி, "ஆஹா! அப்படியே உங்களுத்தரவுக்குக் காத்திருக்கிறேன்" என்றனன். அப்பெண்மணி ஆகாரத்தை எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாய் இவன் கையில் கொடுக்க அது தேவாமிருதம்போ லிருந்தபடியால் வாங்கிச் சாப்பிட்டான். பின்பு நல்ல வெந்நீர் கொடுத்தாள்; அதையும் குடித்தான். இவனது சரீரத்தில் கொஞ்சமேனும், சிரமமில்லாமல் முற்றிலுமே களை தெளிந்தவனாக எழுந்து உட்கார்ந்துகொண்டு, "அம்மைமீர்! உங்கள் எல்லாருக்கும் என் வந்தனத்தைச் செலுத்துகிறேன்; நீங்கள் சிறு பிராயமுள்ளவர்களாக இருந்தும், பரோபகார சிந்தை யுற்றவர்க

ளாக இருக்கிறீர்கள். இனி உங்கள் வேலையைக் கவனித்துக்கொண்டு நீங்கள் போகலாம். இவ்வளவு நேரம் என்னைக் காப்பாற்றும் பொருட்டுத் தாழ்த்து நின்றீர்கள். தாங்கள் இன்னாரெனத் தெரிவித்தீர்களானால், எனக்கு மெத்த சந்தோஷமாயிருக்கும்; தெரிவிக்காவிட்டாலும் பாதகமில்லை, கடவுள் உங்களுக்கு எப்போதும் க்ஷேமத்தையே கொடுப்பாராக” என்றான்.

அப்பெண்மணி — “எங்களைப் பற்றிப் பிந்தித் தெரிவிக்கிறோமென்று முந்தியே சொன்னோமே! தாங்கள் இனி இந்த இடத்தில் இருக்கக்கூடாது; இனிமேல்தான் குளிர்காற்று மிகுதியாக உண்டாகும். அது தங்கள் சரீரத்தில் பட்டதானால், மறுபடியும் அசௌக்கியத்தை அடைய வேண்டியதுதான். உடம்பு அசௌக்கியம் அடைந்ததற்குக் காரணம் வேறுண்டு. தாங்கள் திடத்த சரீரியாயும், வரும் நோயை அலக்ஷியம் செய்பவராயும் இருக்கிறபடியால், இந்த ஆபத்திலிருந்து நீங்கித் தப்பித்துக்கொண்டீர்கள். மற்றவர் யாரானாலும் இவ்விஷக்காற்றால் மாண்டுபோயிருப்பார்கள். இது தங்கள் தாயின் அதிர்ஷ்டமே! இனி நீங்கள் தனியே இருக்கவேண்டாம், அதோ தெரிகிற எங்கள் வாசஸ்தலத்திற்கு எழுந்து வாருங்கள்; போகலாம். அங்கே தங்களுக்கு உடம்பு பூர்த்தியாய் சௌக்கியத்தை அடையும் வரையில் நீங்கள் தங்கி இருந்து, பிந்தித் தங்கள் இஷ்டம் போலப் போகலாம்” என்று அழைத்தாள்.

ரஞ்சிதசிங்குக்கு அப்பெண்மணி சொன்னபடி சரீரத்தில் குளிர்ச்சி அதிகமாகப் பட்டதால், “எப்படியோ நடக்கிறது! இவ்வளவு தூரம் நமக்கு உபகாரம் செய்யும்படி இவர்களை ஏவிய கடவுள் இனியும் நம்மை விட்டுவிடவா போகிறார்! பார்ப்போம்” என்றெழுந்தான். அப்பெண்மணிகளில் சிலர்,

முன் செல்ல, சிலர், வெளிச்சத்திற்காக கட்டைகளைக் கொளுத்திக்கொண்டு உடன் செல்ல, இவனது சமீபத்திலிருந்து உபசரித்த பெண், நெருங்கிச்செல்ல, இவன், அவர்கள் பின்னால் அவர்கள் இடத்திற்கு சென்றான்; முதலில், பிராமணர் சொன்னபடி, இவள் பிரவேசித்த இடத்தின் முன் பக்கத்தில், அனேக செடி கொடிகள் தழைத்துப் பூத்த காய் கனிகளோடு பிறைச் சந்திரன் போல வட்டமாயிருந்தன. அவர்கள் அந்தச் செடி கொடிகளின் பக்கத்தில் அவர்களுக்கு மட்டும் தெரியக் கூடிய சிறிய சிறிய இடை வெளிகளின் வழியாக உள்ளே போனதும், பெரிய இரண்டு கற்பாறைகளின் நடுவே ஓர் இருண்ட வாசற்படி தெரிந்தது. அதனுள் சென்றதும், அவ்வாயில், நேராகப் போகாமல், வளைவு வளைவாகச் சென்றது. கடைசியாக ரஞ்சித் விஸ்தாரமான பெரிய இடத்தில் போய்ச் சேர்ந்தான்; அவ்விடம் இவன் பார்ப்பதற்கு மிகுந்த ரமணீயமாயிருந்தது. அனேக கூடங்கள் எங்கே பார்த்தாலும் நிறைந்திருந்தன: ஒவ்வொரு கூடமும் ஒவ்வொரு ஸ்திரீ வசிக்குமிடமாகவிருக்குமென நினைத்தான். அந்தக் கூடங்களில் ஒன்றில் இவன் போனதும் ஜில்லிட்டிருந்த இவனது சரீரமானது நல்ல வெப்பத்தைக் கொடுத்தது; அவ்விடத்தில் ஏராளமான படிகங்களும் விளக்குகளும் நல்ல வெளிச்சத்தோடு பிரகாசித்தன; பூமியில் உயர்ந்த நேர்த்தியான இரத்தினக் கம்பளங்கள் பரப்பப்பட்டிருந்தன. அங்குப் போடப்பட்டிருந்த ஸோப்பாக்களுக்கும் நாற்காலிகளுக்கும் கணக்கு வழக்கில்லை. நாற்பக்கமுமுள்ள சுவர்களில் உயர்ந்த படங்களும், நிலைக் கண்ணாடிகளும் தொங்கவிடப்பட்டிருந்தன. தன் முன்னால் வந்த பெண் அங்குள்ள உயர்ந்த வாத்தியப் பெட்டிகளுள் ஒன்றுக்குச் சாவி கொடுத்து

விட்டு, இவன் பக்கம் வந்து, "இதோ இந்த ஸோப்பாவில் படுத் துறங்குங்கள்; பொழுது விடியும் நேரம் கொஞ்சமாகத்தா னிருக்கிறது; அதிகாலையில் தாங்கள் எழுந்திருக்க வேண்டு மென்கிற அவசிய மில்லை; எப்பொழுது தங்களுக்குச் சௌகரியமோ அப்பொழுது எழுந்திருக்கலாம்; இதோ வெளியே இருக்கிற இப் பெண்கள் யாவரும் எனது விருப்பத்தை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருப்பவர்கள்; இங்குள்ள பன்னிரண்டு கூடங்களும் என் ஒருத்தியின் உபயோகத்திற்காகவேதான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உங்களுக்கு ஏதாவது ஆக வேண்டு மானால் இந்த மேஜையின் மேலுள்ள மணியை, அழுத்துவீர்களானால், உடனே உமது உத்தரவுக்கு அநேகர் என்னை உட்படக் காத்துக்கொண் டிருப்போம்; நானும் படுத்துக் கொள்ளப் போகிறேன்; தாங்களும் சயனித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி இவனை விட்டு வேறு கூடத்துக்குப் போய்விட்டாள். ரஞ்சிதசிங், "நாம் ஏதோ தேவலோகம் வந்து விட்டோம்" என நினைத்தான். வாத்தியப் பெட்டி வாசிக்கும் ஆனந்தமான பாட்டைக் கேட்டு, மனோற்சாகம் கொண்டான்; "இவர்கள் இன்னாரெனச் சொல்லமாட்டோ மென்கிறார்களே! என்னை யேன் இவ்வளவு தூரம் உபசரிக்க வேண்டும்! யாராவது உபசாரம் செய்யும்படி ஏற்படுத்தி யிருக்கிறார்களா! ஒன்றும் தெரியவில்லையே! இந்த ஸோப்பா எத்தனை சொகுசாக விருக்கிறது! இதற்கு ஏற்றபடி உயர்ந்த பட்டு எங்கிருந்து தருவித்தார்களோ! இங்குள்ள விநோதங்களைப் பார்க்க எத்தனையோ கண்கள் வேண்டுமே! வாஸ்தவ மாகவே நான் இவ்வளவு அதிசயத்தையும் சுவபாவத்தில் அனுபவிக்கிறேனா அல்லது எனக்கு ஏற்பட்ட மயக்கத்தால், சொற்பனம் காண்கிறேனா! என்ன அதிசயம்! ஈசுவரன் என்மீது

பூரண தயவைச் செலுத்தியிருக்கிறார். என்றாலும் காலையில் பார்ப்போம். எல்லாம் விசதமாகும். நானும் சற்று நேரம் கண்ணயர்கின்றேன்" என அந்த ஸோப்பாவில் படுத்துக்கொண்டான்; தனக் கேற்பட்ட அசாத்திய சந்தோஷத்தினால், மனம் பட படவென அடித்துக்கொண்டது. கொஞ்சம் கூட தூக்கம் வர இல்லை; தனக்குத் தாகம் அதிகமாக இருந்ததை உத்தேசித்து, அப்பெண் சொன்னபடி மேஜையின் மேலிருந்த மணியை அழுத்தினான்; இருவர் வேகமாக ஓடிவந்து இவன் முன்னால் நின்று, "தங்கள் ஏவல் ஏதுவோ? அதைச் செய்யச் சித்தமாயிருக்கிறோம்" என்றார்கள். தனக்குள்ளே ரஞ்சிதசிங் மன மகிழ்ச்சி அடைந்து, "எனக்குத் தாகமாக இருக்கிறது; இவ்வளவு குளிர்ச்சியான இக் காலத்தில் எனக்குத் தாகம் ஏற்படக் கூடியதாயில்லை; அன்றியும் சரியான தூக்கமும் பிடிக்கவில்லை. ஆகையால், நீங்கள் மதுரமான உண்ணீர், வெந்நீர் கொண்டு வந்து கொடுக்க விரும்புகிறேன்" என்றான். அவ் வேலைக்காரிகள், "ஐயா! தங்களுக்கு இயற்கையாக தாகம் ஏற்படாவிட்டாலும், இவ்விட விசேஷத்தால் நீர் வேட்கை உண்டாயிற்று. இது எங்கள் எஜமானி அம்மாளின் அதிஷ்டமே! தங்கள் இஷ்டப்படி, இக்ஷணமே வெந்நீர் கொண்டு வருகிறோம்" என்று அவர்கள் அப்பால் அகன்று தங்கப் பாத்திரத்தில் திராக்ஷை ரஸம் கலந்த சுத்தமான ஜலத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். சிறுவன் அதைவாங்கி, அது வாய்க்கு அதிக ருசியுள்ளதாயிருந்ததால், அப்படியே சாப்பிட்டுவிட்டான். அது மதுசம்மந்தமாயிருந்தபடியால், மயக்கம் மேலிட்டு ஸோப்பாவில் சாய்ந்து அயர்ந்து நித்திரைபோனான். அவ்விடத்தில் வாஸம்பண்ணும் எல்லாப் பெண்களும், அதிகாலையில் எழுந்து தங்கள் எஜமானியாகிய உட்டாணி அம்மாளுக்கு

வேண்டிய ஆகாராதி விவகாரங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். உட்டாணியோ, அதிகாலையில் வழக்கம் போல எழுந்திராமல் இரவு வெகு நேரம் கண்விழித்தவளானதால், நேரம் பொறுத்து எழுந்திருந்து, 'இராஜ பக்கத் துக்கூடத்தில் படுத்துக்கொண்ட உத்தமர் சௌக்கியமாக இருக்கிறாரா?'' என வினவினாள். அதற்குத் தாதிகள் 'அம்மையே! சௌக்கியமாகத்தான் படுத் துறங்குகிறார்; இரவு தூக்கம் வாராமல் தாகவிடாய் மேலிட்டிருந்ததாகத் தெரிவித்தார்; உடனே திராக்ஷாரஸம் கலந்த தெள்ளிய நீரைப் பருகும்படி கொடுத்தோம்; அதைத் திருப்தியாகச் சாப்பிட்டுப் படுத்துக்கொண்டு நித்திரை போய்விட்டார். இன்னும் எழுந்திருக்கவில்லை; வேணுமானால் வந்து பார்க்கலாம்'' என்றார்கள்.

உட்டாணி, உடம்பு பூரித்தவளாய், அந்த விடுதிக்குள் தன் சேடிகளோடு சென்று, அயர்ந்து தூங்கும் அற்புத ரூபம் வாய்ந்த ஆண் சிங்கத்தைக் கண்டு, கை கூப்பித் தொழுது, அவனது காலைத் தொட்டுக் கும்பிட்டு, "பிரபோ! அடியேன் கவலையை ஒழிக்க வந்த புண்ணியவானே! எனது வேண்டுகோளுக் கிரங்கி, என்னைக் கடைத்தேறச் செய்யாவிடில், நான் இனி உயிர் பெற்று வாழேன்; என்னைச் சிறையில் அடைத்ததுபோல மகாபாவி, எனக்குப் பிதா வென்று சொல்லப் படுகிற சண்டாளன், நான் வேறு எக்கதியும் அடையாத படியும், சந்தோஷத் தோடு வாழ்வைப் பெறாத படியும் செய்திருக்கிறான். நான் நேற்றுத் தற்செயலாய் எனது சேடிகளோடு மாலைப் பொழுதை மனோகரமாய்க் கழிக்க இவ்விடம் விட்டு வெளியே வந்தேன். மயில்கள் தோகைகளை விரித் தாடுவதையும், பக்ஷி ஜாதிகள் தங்கள் தங்கள் பேடுகளோடு இனிய கீதம் பாடித் தங்கள் கூட்டை அடைவதையும், கற்

பாறையின் இடையே, மான்கள் தங்கள் குட்டிகளுக்குப் பால் கொடுத்துக் கொண்டிருப்பதையும், எங்குப் பார்த்தாலும் நீரருவிகள் சல சல வென்னும் சத்தத்தோடு பூமியைப் பிளந்து கொண்டு அதிவேகமாக ஓடுவதையும் ஆச்சரியமாகக்கண்டு சந்தோஷமடைந்து, நெடுக நடந்தேன். 'அம்மா! அம்மா!' என்கிற பெரிய சத்தம் என் காதில் பட்டதனால், நான் திடுக்கிட்டு 'மனிதக் குரல் இங்கு உண்டாகக் காரணமில்லையே!' என அதிசயித்துக் குரலோசை வந்த இடத்தை நோக்கி, அங்குப் பார்த்துக்கொண்டே வந்தேன். சகல தேஜஸோடும் கூடிய தாம் நோயால் வருந்துவதைக் கண்ட நான், மனம் தாளாமல், நோய்க்குக் காரணம் இன்னது என நன்றாய் அறிந்ததால், அதற்கு ஏற்ற சிகிச்சை என்னால் கூடியதைச் செய்து, தங்களை எழுப்பி உட்காருவித்து, இங்கு அழைத்துவந்தேன். கடவுளருளால் இப்பேதைக்குக் கிடைத்த பாக்கிய ரஸத்தை, நான் என்றென்றைக்கும் அனுபவிக்கும்படி கிருபை செய்ய வேண்டும், பிரபோ!'' என்று அவனது முகத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்தத்தை அடைந்தவளாய், சற்று நேரம் நின்றாள். பிறகு, ''பிரபுவின் தூக்கத்திற்கு எந்தவிதமான விகாதமும் ஏற்படக்கூடாது. சுபாவமாக எப்பொழுது எழுந்திருக்கிறாரோ அப்பொழுது எழுந்திருக்கட்டும்; அவர் எழுமுன், உபசரிக்கவேண்டிய சிற்றுண்டிகள் சித்தம் செய்கிறேன்'' என்று வேலைக்காரிகளில் இருவர்க்கு, அவர் எழுந்திருக்கும் சமயத்தைப் பார்த்து, உடனே தெரிவியுங்கள் என்று உத்தரவிட்டு, தான் வெளியேவந்து, காலைக்கடனை முடித்துக்கொண்டு, தனது காதலன் எழுந்திருந்ததும் உபயோகிக்க நல்ல வாஸனைஊட்டிய வெந்நீரும் மற்றும் வேண்டிய உணவுகளும் சித்தஞ் செய்து காத்துக்கொண்டிருந்தாள். தான் எந்தவிதமான ஆகார பானங்களையும் விரும்ப

வில்லை. தன் ஆசைக்குகந்த காதலன் அன்போடு ஆகாரம் அருந்தினால், அதுவே, தான் உண்டதுபோல ஆகும் என்று நினைத்தாள். பொழுதுவிடிந்து பத்துமணியாகியும், ரஞ்சித் எழுந்திருக்க வில்லை. மதுவின் மயக்கம் தெளிந்தாலொழிய எழுந்திருக்க மாட்டாரென அங்கு அனுபோகமுள்ள வேலைக்காரி ஒருத்தி சொன்னாள். அவளே கொண்டு வந்த ஒரு மூலிகையைக் கசக்கி, ரஞ்சிதசிங் மூக்கின் சுவாசத்தில் உள்ளே கிரகணமாகும்படி காட்டினாள். அவன் உடனே எழுந்திருந்தான்; இவன் எழுந்து கண்விழிக்கு முன், பக்கத்தில் யாருமில்லாமல் வெளியே போய் விட்டார்கள். ரஞ்சிதசிங் கண்களை விழித்துக்கொண்டு சுற்றி முற்றும் பார்த்து, "ஓகோ, வெகுநாழிகை தூங்கிவிட்டோமே! நேற்றிரவு நாம் பார்த்த ஸ்த்ரீகள் யாரும் இப்பொழுது காணப் படவில்லை; கூட மட்டும் இரவு கண்டது போல அப்படியே யிருக்கிறது; இரவில் சஞ்சாரம் செய்யும் வன தேவதைகளானால் பகல் பொழுதில் கண்ணில் தென்பட மாட்டார்கள். எவ்வளவோ பிரியத்தோடு எமக்கு வேண்டிய சிசுருஷை செய்த பவளக் கொடிக்கொப்பான அவ் விளம் பெண் தேவ லோகத்தில் வசிக்கும் பெண் தான்; அதற் காக்ஷேப மில்லை. பொழுது விடிந்து இவ்வளவு நேரம் எம்மை எழுப்பாம லிருந்தபடியால், இங்கு யாரு மில்லை யென நிச்சயமாகத் தெரிகிறது; எமக்கு இப் பொழுது பசியும் மிகுதியாகவே இருக்கிறது; நாம் கொண்டு வந்த மூட்டை முதலியவைகள் எங்குக் கிடக்கின் றனவோ! இவ்வளவு பெரிய விசாலமான கட்டடம் யாரு மில்லாமல் நிர்சப்தமாயிருக்கிறதே! இது யாராவது அரக்க னுடைய மாளிகையாக இருக்குமோ! அவ்வரக்கனுடைய ஆகாரத்திற்காக எம்மை இப்படி உபசரித்துக்கொண்டு வந்து விட்டனர்களோ!" என்று எண்ணி, "இராத்திரி

அவர்களைப் பார்த்து 'நீங்கள் யார்?' என்றேன்; 'அதைப் பற்றிப் பின்பு தாங்களே தெரிந்து கொள்வீர்கள்' என்றார்களே! என்னுடைய ஜன்மாவில் கிஞ்சித் போகம் கிடைக்கும் என விதித் திருந்ததால் இப்படிப்பட்ட சுவல்ப சௌக்கியம் எனக்குக் கிடைத்ததோ! ஒன்றும் தெரிய வில்லையே! ஏ பிராமணோத்தமா! உமது யந்திரத்தின் மகிமை தான் இது! இது நிச்சயம் தான்! சந்தேக மில்லை! நான் எடுத்துக் கொண்ட காரியம் எனக்குக் கை கூடும்படி அனுக்கிரகம் செய்யும்; நான் இப்பொழுது எங்கு எழுந்து போவ தென்று எனக்குத் தெரிய வில்லை" என்று கூறிச் சற்று நேரம் பிரமை பிடித்ததுபோல உட்கார்ந் திருந்து, "நல்லது! ஞாபகத்திற்கு வந்தது! மேஜையின் மேலுள்ள மணியைத் தட்டுவோம், யாராவது வேலைக்காரிகள் இராத்திரி வந்து உபசரித்தது போல வருகிறார்களா பார்ப்போம்" என்று எண்ணங் கொண்டு மணியை அழுத்தினான். உடனே இரண்டு கோஷா ஸ்த்ரீகள் இவன் முன்வந்து நின்று 'பணிவிடை செய்ய காத்திருக்கிறோம்' என்றார்கள். இவன் அவர்களைப் பார்த்ததும், தைரியங் கொண்டு "ஏ ஸ்த்ரீகளே! நீங்கள் யார்?" என்றான். அவர்கள், "நாங்கள் வேலைக்காரிகள்" என்றார்கள். ரஞ்சித், "யாரிடம் வேலை செய்கிறவர்கள்?" என்று கேட்டான். அவர்கள், "அதைப் பின்பு தெரிந்து கொள்வீர்கள். இப்பொழுது எங்களால் ஆகவேண்டிய தைத் தெரியப்படுத்தக் கோருகிறோம்" என்றார்கள்.

ரஞ்சித் — "எனக்கு உடம்பெல்லாம் அழுக்கேறி, அசுத்தமாயிருப்பதால், முதலில் ஸ்நானம் செய்து கொள்ளக் கொஞ்சம் வெந்நீர் வேண்டும்" என்றான். அவர்கள் "எல்லாம் சித்தமாயிருக்கிறது; எழுந்து வந்தால், திவ்யமாய் ஸ்நானம் செய்து, ஆகாரமும் அருந்தலாம்" என்றார்கள்.

ரஞ்சித், உடனே எழுந்து வெளிப்பக்கமாக வந்து பார்த்தான். வானமானது நீல நிறமாய் இருந்தது. சூரியனது கிரணங்கள் அந்த மாளிகைக்குள் பயந்து உலவுவது போலக் காணப்பட்டன. இரவு, தான் பார்த்த அற்புதமான எல்லாக் கூடங்களும் ஒரு வரிசையாகவே கட்டப்பட்டிருந்தன. அடுப்பு எரிவதால் உண்டான புகையினால் பாகசாலை சற்று வடாது புறமாக இருந்ததாகத் தெரிந்துகொண்டான். அதன் பக்கத்தில், காம்கரம்பின்றி சிங்காரமான தோட்டம் ஒன்று தென்பட்டது; நாற்பக்கமும் உள்ள மலைகள் அந்த பங்களாவைச் சுற்றிலும் மதில்கள் போலக் காணப்பட்டன; "இவ்வளவு பெரிய மலையில் இந்த அற்புதமான கட்டடத்தைக் கட்டியிருப்பது, மானிட சிருஷ்டியென்று சொல்லமுடியாது. தேவதைகளால் நிர்மாணிக்கப்பட்டிருக்கவேண்டும்!" என நினைத்தான்; ரஞ்சித், பல் தேய்த்து முடியுமுன் ஸ்நானம் செய்ய வெந்நீர் சித்தமாயிற்று. உடனே அவன் ஸ்நானம் செய்தான். அதற்குள், அவன் உடுத்திக்கொள்ள உயர்ந்த உடுப்புகளை அந்த ஸ்திரீகள் கொண்டுவந்து வைத்தார்கள். அவைகளைத் தரித்துக்கொள்ள இவனுக்கு இஷ்டமில்லாமல் தனது தோல் பையைக் கொண்டுவரச் செய்து, அதிலிருந்து தன் ஆடையை எடுத்துக் கட்டிக்கொண்டான். ஆகார மூட்டை எங்கே என்று விசாரித்தான். அதையும் எடுத்துவந்து அவனிடம் வைத்தார்கள். ரஞ்சித் அதை அவிழ்த்து அதிலுள்ளதை எடுத்து உண்ண ஆரம்பித்தான். அதைப் பக்கத்தில் மறைவாக நின்று பார்த்துக் கொண்டிருந்த உட்டாளி, மனம் பொறுக்காமல், ஓடிவந்து, "பிரபோ! நாங்கள் சித்தஞ் செய்த ஆகாரத்தை அருந்தக் கூடாதா?" என்றாள்.

ரஞ்சித் — அவள் மிகுந்த அனுதாபத்தோடு சொல்லும் வார்த்தையைக் கவனித்து, "அம்மணி! தாங்கள் யா

ரோ! எந்த ஜாதியாரைச் சேர்ந்தவர்களோ! விவரம் அறியாமல் நான் எப்படி ஆகாரம் அருந்துவேன்?"

உட்டாணி — "நாதா! நாங்கள் க்ஷத்திரிய ஸ்திரீகள்; எங்களைப் பார்க்குமுன் நீங்கள் அறிந்து கொள்ளக் கூடாதா! நேற்றிரவு, தங்களை நான் பார்த்தவுடனே, சில அடையாளங்களால், தாங்கள் க்ஷத்திரியரெனத் தீர்மானித்து உபசரித்தேனே!"

ரஞ்சித்—"அப்படியானால், எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. உன்கையால் எனக்கு வேண்டிய ஆகாரங்களைக் கொடுப்பாய்! நீ பார்ப்பதற்கு உத்தமமான சரீரத்தோடு, இலக்ஷணவதியாகக் காணப்படுவதால், நீ ஆகாரம் அளிக்க, நான் சாப்பிட மிகுந்த திருப்தி உள்ளவனாயிருக்கிறேன்" என நிஷ்கபடமாய், தன்னை நாதா! எனவும் அன்பரே எனவும் அவள் அழைத்ததற்கு அர்த்த பாவம் அறிந்து கொள்ளாமல் பேசினான்.

உட்டாணி — அவ் வார்த்தையால் பரம சந்தோஷமடைந்து, "நம்மை இவர் அறிந்து நிச்சயமாகவே அங்கீகரித்துக் கொள்ளச் சித்தமா இருக்கிறார்; நாம் இதுவரையிற் பிரார்த்தித்திருந்த தெய்வங்கள் இப்பொழுது தான் அனுக்கிரகம் செய்தன" என உள்ளுக்குள்ளேயே சந்தோஷமடைந்து ரஞ்சித் சிங்குக்கு ஆகாரம் கொடுக்க, அவன் அதை மிகுந்த திருப்தியோடு புசித்தான். தான் சாப்பிட்டானவுடன், உட்டாணியையும் தன் எதிரே சாப்பிடும்படி ரஞ்சித் உபசரித்தான். உட்டாணி உடல் பூரித்து, "நம்மிடத்தில் எவ்வளவு விசுவாஸமா யிருக்கிறார்! 'இவர் நம்மை விரும்புவாரோ!' என விசாரப் பட்டுக் கொண்டிருந்தோமே! நல்ல வேளைக் கடையாளமாக நமக்குக் கடவுள் கிருபை செய்து விட்டார்! இனிமேல், நாம் யாருக்கும் பயப்

படவேண்டியதில்லை; நம்முடைய குறைகளை இந்த மகானுபாவரிடத்திற் சொன்னால், நம்மை இவர் ரக்ஷிக்காமல் விடமாட்டார். பார்த்துக் கொள்ளலாய்!" என்று பரம சந்தோஷமடைந்து தான் அவற்கெதிரில் உட்கார்ந்து, வேலைக்காரிகள் தன்னை உபசரிக்கச் சாப்பிட்டாள். ரஞ்சித், "அந்த அம்மாளுக்கு நன்றாய்ப் பரிமாறுங்கள்" என்று சொல்லிக்கொண்டிருந்தான். இவள் சாப்பிட்டவுடன், இருவரும் ரஞ்சித் இருந்த ஹாலுக்குப் போனார்கள். அங்கே இவர்கள் இருவரும் உட்கார்ந்து கொண்டு, பேசும் படிக்கு போக்கியமாக, உட்காரும் நாற்காலிகளும் மேஜைகளும் போடப்பட்டிருந்தன. முன் அந்த ஹாலில் இருந்தது போல இல்லாமல் வேறு நூதனமான பொருள்களும் காணப்பட்டன; நேர்த்தியான பொருள்களை ரஞ்சித் பார்த்தபடியே இருந்தான். அப் படங்களையும் பொருள்களையும் அவன் உற்று நோக்கிக் கொண்டிருப்பதை உட்டாளி கவனித்து, "இம்மாதிரியான சாமான்களை இவர் இதுவரையில் பார்த்திரார்போ லிருக்கிறது!" என்று எண்ணிக் கொண்டாள். ஆதலால் அவள், "பிரபோ! இவைகள் என்ன அவ்வளவு அதிசயிக்கக் கூடிய பொருள்கள்! தாங்கள் இதுவரையில் இவைகளைப் பார்த்ததில்லையா! நாகரீகம் பெற்ற தங்கள் நாடுகளிலிருந்து தானே இவைகள் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன!"

ரஞ்சித் — "பெண்ணே! நான் அனேகம் பொருள்களும் அதிசயிக்கத் தக்க படங்களும் பார்த்திருக்கிறேன். என்றாலும், இவைகள் மிகவும் சிலாக்கியமா யிருக்கின்றன. இதோ இந்தப் படத்தைப் பார்! இதில் மரப் பிளாச்சினால் பின்னப்பட்ட அடைப்புக்கு வெளியே உள்ள ஒருவன், உள் பக்கமாக உள்ள ஒரு சிறு பெண்ணைக் கோபித்துக் கொண்டு, அவள் கன்னத்தைக் கடிக்கிறானே! இந்த அழ

கிய பெண்ணினிடத்தில் இவன் ஏன் கோபித்துக் கொள்ள வேண்டும்? அப்பொழுது நான் பார்த்திருந்தால், அவனைத் துப்பாக்கியால் சுட்டிருப்பேன்''

உட்டானி — "நாதா! தாங்கள் அப்படி நினைக்கலாகாது; அவன் அப்பெண்ணினிடத்தில் மிகுந்த பிரியத்தோடு முத்தம் கொடுக்கிறான்''

ரஞ்சித் — "நீ சொல்வது அவ்வளவு திருப்திகாமான பதில் அல்ல; உனது இனிய மொழிக்கு இணங்கிப் பேசாமலிருக்கிறேன்! இதைப் பார்; இதென்ன கொடுமை இந்த பொம்மைகளை இம்மாதிரி வைப்பானேன்? மிகுந்த ஆகிருதி உள்ள ஒரு புருஷன், தனது சிரசை, நல்ல இளம்பிராயம் வாய்ந்த ஒரு பெண்ணின் மடிமீது வைத்துக்கொண்டு, தனது கால்கள் இரண்டையும் இரண்டு ஸ்த்ரீகள் பிடிக்கப் படுத்திருக்கிறான். இம்மாதிரி நல்ல பெண்களை அடிமை வேலை செய்யும்படி எவ்வளவு செல்வாக்குள்ள புருஷனானாலும் செய்யலாமா? அப்படிச் செய்வது பாவமல்லவா? புருஷனைப் போல ஸ்த்ரீகளும் கடவுளுடைய சிருஷ்டிப் பொருள்கள் தாமே! இது மெத்த அநியாயம். விந்தையினும் விந்தை!''

உட்டானி — "நாதா! இது மரத்தினால் செய்யப்பட்ட பிரதிமைகள். இவைகளை வேடிக்கையின் பொருட்டு இப்படி வைத்திருக்கிறார்கள்''

ரஞ்சித் — "நீ சொல்வது நியாயமல்ல. இம்மாதிரி எல்லா ஸ்த்ரீகளும் புருஷனுக்குச் செய்யவேண்டுமெனக் கெட்ட எண்ணத்தோடு இந்த ரூபங்களைக்கொண்டு நிரூபித்துக் காட்டியிருக்கிறான்; இந்த பொம்மைகளைச் செய்த வேலைக்காரனை நான் இப்பொழுது பார்த்தால் அவனுக்கே புத்தி கற்பித்துவிடுவேன்''

உட்டானி — "புருஷர்களுக்கு ஸ்த்ரீகள் கட்டாயம் சிசுரூஷை செய்யவேண்டியதுதான்; அதுதான் சாஸ்திர சம்மதமானது"

ரஞ்சித் — "அதேமாதிரி ஸ்த்ரீகளுக்கும் புருஷன் சிசுரூஷை செய்யவேண்டியதுதான்; அதுவும் சாஸ்திர சம்மதமே"

உட்டானி — "தங்களுக்குத் தெரியாதென்று நான் சொல்லவில்லை. ஒரு புருஷன் ஒரு குடும்பத்திற்கு வேண்டிய சகலத்தையும் சித்தஞ் செய்து கொடுக்க, வெளியில் போய் பெரும்பாடு படுகிறுன்; அவன் அதிக சிரமத்தோடு வீட்டிற்கு வந்தால், அவனது பத்தினி, தன் புருஷனுக்குச் சிரமபரிகாரம் செய்து போஜனம் அளித்து, அவனது சரீரம் விச்ராந்தியாகும்படி செய்தால், பாடுபட்டுப் பணம் சம்பாதிப்பவனுக்கு மனம் உற்சாகத்தைக் கொடுக்கும், மேலும் மேலும் பொருள்தேட விரும்புவான்; அப்படிக்கல்லாமல், அவன் வெளியேபோய் அலைந்து திரிந்து வீட்டுக்கு வந்தவுடன், அவனுடைய சிரமத்திற்குப் பதின்மடங்கு அதிகமாக வீட்டிலுள்ள ஸ்த்ரீ அவனை வருத்தி, அவன் தனக்கு சிசுரூஷை செய்யும்படி வருத்திஞல், புருஷன் மனம் பொறுக்காமல் அபலைகளான ஸ்த்ரீகளை விட்டுவிட்டுப் போய்விடுவான். அதனுல் அந்த ஸ்த்ரீகள் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதாக நேரிடும். ஆதலால் இவைகள் பரஸ்பரம் உதவியே ஒழிய, குற்றமாக மாட்டாது"

ரஞ்சித் — "நீ ஒவ்வொன்றுக்கும் ஏதோ சமாதானம் சொல்வாய்போலிருக்கிறது! வேண்டாம். இனி உட்காரலாம்" என்றுன்; நாற்காலியில், தான் உட்கார்ந்து, உட்டானியையும் உட்காரும்படி உபசரித்தான். அவள்

மிகுந்த சங்கையோடு உட்கார்ந்தாள். ரஞ்சித் பார்வைக்கு கம்பீரமான தோற்றமும், முகவசீகரமும், ஆண்மையும் பெற்று இருப்பதற்கு அனுகூலமாக, உலகவியாபாரமும் தெரிந்தவனாயிருந்தால், பாலோடு கற்கண்டு சேர்ந்ததுபோ லிருக்கும். "இவர் எதையும் அறியாதவரென்று தெரிகிறது; மனதில் கொஞ்சங்கூட கபடமில்லாமல் பேசுகிறார்! சாக்ஷாத் எம்பெருமான், கோபாலனது அனுக்கிரகத்தால் கிடைத்த இவ்வுத்தம ரத்தினத்தை, ஆபரணங்களுக்கு ஏற்றவாறு பதித்துக்கொள்கிறேன்; இவர் இருப்பது எந்த தேசமோ! எதை உத்தேசித்து இம்மலைக்கு வந்தனரோ! விசாரிக்கிறேன்" என்று உட்டானி தனக்குள்ளேயே நினைந்து, ரஞ்சித்தை அதிக பிராந்தியோடு பார்த்து, தனது ஆவல் விச்ராந்தி யடைந்தவளாய், "ஏ! பரம புருஷா! தாங்கள் இருப்பது எந்த ஊர்? கற்களும் முட்களும் காட்டுவிருக்ஷங்களும் சூழ்ந்த இம்மலைக்கு யாது காரணமாக வந்தீர்கள்? தயை செய்து சொல்லக்கேட்டுக் கொள்கிறேன்" என்றாள்.

ரஞ்சித் — "பெண்ணே! முதலில் நான் உங்களை யாரெனக் கேட்டதற்கு, நீங்கள், 'பிந்தி நீங்களாகவே தெரிந்து கொள்வீர்கள்' என்று சொல்லிவிட்டீர்கள். என்றும், நீ கேட்ட அளவில் என் விஷயத்தைச் சொல்ல நான் சித்தமாயிருக்கிறேன். உலகில் சிலர், 'நீங்கள் யார்?' என்று ஒருவர் கேட்டால், அதற்குப் பதில், 'நீங்கள் யார்' என்று கேட்பது வழக்கம். இதனால் ஒருவருக்கொருவர் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள், வெளியாகாமலும், மற்றொருவர் வந்து அதைத் தெரியப்படுத்தும்படிக்கும் ஏற்படும். அப்படிப்பட்ட விஷயங்கள் எனக்குப் பொருந்தா. நானிருப்பது பார்த்தபுரி, என் தகப்பனார் யுத்த வீரராயிருந்து ஒவ்வொரு தேசத்துக்கும் சென்றதனால், கொஞ்ச

காலத்துக்குமுன் இறந்தனர். அவரது ஒரே மகனுன நான், ஏதோ கொஞ்சம் வித்தியாப்பியாசம் செய்து கொண்டிருக்கும்போதே, உலகத்திற்கு நன்மை செய்ய வேண்டுமெனக் கருதி, என் தாயிடம் விடை பெற்று வந்தேன். புறப்பட்டு வந்தபிறகு, எந்த விதமான நன்மையும் என்னால் செய்ய முடியாததை உத்தேசித்து, ஓர் அந்தணர் அனுக்கிரகம் பெற்று, இம்மலைப் பிரவேசமாகித் திரிந்து கொண்டிருந்தேன். நீங்கள் என்னைப் பார்த்த நேரோடையில், ஆகாரம் அருந்தலாமென வந்தேன். திடீரென்று தலையில் அபாரமான நோய் ஏற்பட்டதனுல் கீழே விழுந்துவிட்டேன். நீங்கள் வந்து, என்னைக் காப்பாற்றினீர்கள். இவ்வளவுதான் எனது சமாச்சாரம்''

உட்டாணி — "தங்களுக்கென்ன வயதாயிற்றே?"

ரஞ்சித் — "எனக்குப் பதினெட்டு வயது நிறைந்து பத்தொன்பதாவது ஆரம்பமாகிறது"

உட்டாணி — "சரிதான் எனக்குப் பதினேழு வயது நிறைந்து பதினெட்டு ஆரம்பமாகிறது"

ரஞ்சித் — "நீங்கள் யார்? எனக்குத் தெரியவில்லையே! கொஞ்சம் சொல்லக்கூடாதா! நானே தெரிந்து கொள்ளு மட்டும் பொறுக்க மாட்டேன்"

உட்டாணி — "என்ன, நீங்கள், நீங்கள் என்று கூப்பிட்டால் என்மனம் கஷ்டத்தை யடையும்? நீ, என்று கூப்பிட்டால் சந்தோஷப் படுவேன்"

ரஞ்சித் — "எனக்கு வேண்டிய உதவிசெய்து என் உயிரைக் காப்பாற்றிய தங்களை ஏக வசனமாக அழைப்பதற்கு என்னுலாகாது. தப்பித்தவறி, நீ என்று சொல்லியிருந்தாலும், கோபிக்க வேண்டா; க்ஷமிக்க வேண்டும்"

உட்டானி — "உங்களை நீரோடையில் பார்த்த போதே தங்களுக்கு நான் அடியாளென்று எண்ணிவிட்டேன். தங்கள் குற்றேவல்களை அன்பாக ஏற்று குதூகலத்தோடு செய்யச்சித்தமா யிருக்கின்றேன். தங்களுடைய பாத சேவை செய்ய இச்சிக்கும் என்னைப் பெருமைப் படுத்திப் பேசுவது தங்களுடைய அன்புக்கு அழகாகாது"

ரஞ்சித் — "உட்டானி! உன் பெயரை நான் கேட்டுத் தெரிந்து கொண்டேன். நீ இட்ட வேலையைச் செய்ய உனக்கு வெகுபேர் காத்துக்கொண் டிருக்க, எனக்கு நீ வேலை செய்வேன் என்று சொல்வது, ஏதோ பரிகாசத்துக்காகச் சொல்லுகிற வார்த்தைபோல் இருக்கிறது. என்றால் உனக்கு ஏதாவது காரியம் ஆக வேண்டுமானால், அதனை நான் செய்யச் சித்தமா யிருக்கிறேன். நான் நல்ல வேளைக் கடையாளமாக உன்னைச் சந்தித்தேன். நீ எனக்கு வேண்டிய உபகாரத்தைச் செய்தாய்; உன்னை இன்னாளென்று வெளிப்படுத்திக்கொள்ள உனக்கு இஷ்டமில்லை யென்று நீ மறைத்துப் பேசுவதால் தெரிகிறது. உன் விஷயம் இன்னதென்று எனக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை. எப்போதாவது உன் ஞாபகம் எனக்கு வந்தால், அப்போது இன்னார், இன்ன இடத்திலிருந்து, இன்ன உதவியைச் செய்தார்களென, நினைத்துச் சந்தோஷத்தை யடைவேன். எனக்கு மலையில் சஞ்சாரம் பண்ண வேண்டிய வேலை வெகு அதிகமா யிருக்கிறது. தயைசெய்து எனக்கு விடையளித்தால், அதிக சந்தோஷமா யிருக்கும்"

உட்டானி — "ஆஹா! வெகு நேர்த்தி; நன்றாயிருக்கிறது. என்னிடத்தில் ஓர் உத்தம புருஷர் அகப்பட்டுக் கொண்டார் என்று சந்தோஷங் கொண்டேன். "அடா, டா, டா! அற்ப சந்தோஷத்தையா வகிக்கும்படி ஈசுவரன்

எனக்கு கருணைபுரிந்தான்! ஐயோ! இவர் எனது இயற்கையை அறியாமல், தாம், போய்விடுவதாகச் சொல்கிறாரே! பிரபோ! உங்களை விட்டுவிடுவதற்கா, அந்நீரோடைக் கரையில் உயிர்போகக் கிடந்த உங்களை, என்னுடைய வேலைக்காரிகளைக் கொண்டு வேண்டியபடி உபசரித்துக் காப்பாற்றினேன்! என்னை விட்டுத் தாங்கள் பிரிந்தால், அந்நீரோடையிலேயே ஆகாசவாணி, பூமாதேவி சாக்ஷியாகப் பர்வதராஜனை முன்னிட்டுக் கொண்டு, நான் தங்களுக்குச் சத்தம் செய்த என் ஆவியானது இனி இக்கூட்டில் நில்லாது; உடனே பிரிந்து விடும் என்பதை அறியுங்கள். பிராண சகாயா! இப் பிறப்பில் நான் எனக்கிசைந்த இனிய புமானோடு வாழ்வே னென்கிற எண்ணங் கொண்டு, இப்பர்வத ராஜனுடைய தனயையான பார்வதியை மனப் பூர்வமாக வழிபட்டு, எனது எண்ணம் பூர்த்தி அடையு மட்டும் பூசை செய்தேன். என்னுடைய பிதாவோ, இம்மலையில் வாழும் மகா கொடுமைகளைச் செய்து, திருட்டுத் தொழிலோடு கூட கொலைத் தொழிலும் புரிந்து, அதனால் தமக்குக் கிடைக்கும் ஏராளமான சொத்துக்களை, சற்பாத்திரத்தில் விநியோகிக்காமல் கள் குடித்து, வெறி கொண்டு, தர்மாதர்மம் இல்லாதவராய், 'கண்டதே காக்ஷி, கொண்டதே கோலம்' என்று நினைத்துக்கொண்டு அக்கிரமமான காரியத்தில் சதா பிரவேசித்து, பரமசண்டாளராய் மிருக ரூபிகளாய்ச் சஞ்சரிக்கும் கொடிய கபூலியர்களான துஷ்டர்களுக்குத் தலைவராயிருக்கின்றனர். அவரிடத்தில் சந்தோஷ மென்பதை எப்பொழுதும் யாராலும் காண முடியாது: சதா கோபத்தையே ஆபரணமாகக் கொண்டவர்; தன்னைத் தனியே வசிக்கப் பிரியப்பட்டவர்; இம்மலையி லிருந்து ஒரே பாய்ச்சல் பாய்ந்து, தான் குறிப்பிட்ட இடத்துக்குச்

செல்லும் பராக்ரமசாலி; எத்தனை பேர்கள் அவரை வந்து எதிர்த்தாலும் அவர்களைத் தன் கையால் ஒரே அறை அறைந்து எமனுலகம் ஏற்றிவிடுவார்; ஜாதியாசாரப்படி எவ்விதமான கொள்கைகளையும் அவர் அனுஷ்டிக்கிற தில்லை; தாம் க்ஷத்திரிய ராயினும், ரஜபுத்திர வீரனுக் குகந்த யுத்தப் பிரியம் ஒன்று தவிர வேறு எந்த விதமான ஆசார வியவகாரங்களும் அவர்க்குக் கிடையாது. அவ ருடைய ஒரே புதல்வியாகிய, என்னிடத்தில் வேண்டா வெறுப்பாக அபிமானம் வைத்திருக்கிறாரே யன்றி, உள் ளன்புடன் ஒரு நாளும் என்னை அபிமானித்த தில்லை. முற்காலத்திய அரசர்களுக்குள் ராஜரீக கலகங்கள் ஏற் பட்டபோது, தமது உயிருக்கே ஹானி வரும் சந்தர்ப்பம் நேர்ந்ததனால், அவர்கள், யாருக்கும் தெரியாமல் வாழ, இம்மலையின் கண்ணே ஓர் உன்னதமான இம் மாளிகையை அமைத்து இருந்தனர். சென்ற அனேக ஆண்டுகளாக ராஜ கலகமில்லாமல் எல்லாரும் அமைதியாய் வாழ்வதால் இம் மாளிகை பாழடைந் திருந்தது. நான் யுவதி ஆன தும், என் தாய் இறந்தாள்; அந்தம்மாள் மகா பதிவிரதை. என் தந்தைக்கும் அவளுக்கும் எத்தனையோ வித்தியாசம்; ஆகையால் அவள் சீக்கிரம் மாண்டாள். அவள் மாண்ட உடனே என் பிதா, தங்கள் கூட்டத்தாரோடு என்னைச் சேர்த்து வைத்துக்கொள்ள இஷ்ட மில்லாமல், இம்மாளி கையைச் சீர் படுத்தி பத்துப்பேர் வேலைக்காரிகளை எனக்கு ஏற்படுத்தி இங்குத் தனியே வசிக்கும்படி விட்டிருக் கிறார். இந்தக் கட்டடத்தில், அவர்கள் திருடிக் கொண்டு வருகிற அதிசயமான சாமான்கள் யாவும் வைக்கப் பட்டிருக்கின்றன. இம் மாளிகையைப் புதுப்பித்தவர் கள், என் தகப்பனார்க் கடங்கியுள்ள கூட்டத்தார்களே! அவர்களில் ஒவ்வொருவனும் எந்தவித வேலை செய்யவும் பழ

கினவன்: என் தகப்பனார், அடிக்கடி இங்குவந்து எனக்கு வேண்டியவைகளை எவ்விதக் குறைவு மில்லாமல் கொடுக்கச் செய்வார். இப்பொழுது சில காலமாக, அவர் இங்கு வருவதில்லை. அவர் வேறொரு ஸ்திரீயைச் சிறையெடுத்து வந்து, வைத்துக்கொண்டு வாழ்கிறார். எனக்கு வேண்டிய யாவும் வழக்கம்போல வந்து கொண்டிருக்கின்றன. கபூலியர்கள் என்னிடத்தில் அத்தியந்தப் பிரியமுடையவர்கள். அவர்கள் கொள்ளையடித்து வந்த பொருள்களில் ஏதாவது அதிசயிக்கத் தக்கதாயும் உயர்ந்ததாயு மிருந்தால், எனக்கே தான் கொண்டுவந்து கொடுப்பார்கள். இங்கு வேலை செய்யும் யாவரும், அன்னிய நாட்டுப் பெண்களே! இவர்கள் தங்கள் தாய் தந்தைகளையோ புருஷர்களையோ அநியாயமாய் விடுத்து இந்த மகா பாபியின் கையில் அகப்பட்டுக் கொண்டு வருந்துகிறார்கள். இவர்கள் யாரெனக் கேட்கப் புகுந்தால், பரம துக்கமா யிருக்கும். அதை நான் விசாரிக்காமல், அவர்களை அன்போடு நடத்துகிறேன்; என்னைப் பற்றி கவனிக்காமலிருக்கிற என் பிதாவினிடத்தில், எனது குறைகளைச் சொல்லிக்கொள்வதில்லை. சொன்னாலும் பிரயோசனமில்லை; அவர் என்ன செய்வார்! அபால்யத்திலேயே, அவர் கெட்ட புத்தியைக் கொண்டவராய்க் கொள்ளைக்காரரோடு சேர்ந்து, துஷ்ட செய்கைகள் செய்தார். அரசாங்கத்தார் அவரைப் பிடித்துச் சிக்ஷை செய்யப் பிரயத்னப்பட்டார்கள். அதனால், அவர் ஸ்வதேசத்தில் இருக்கமுடியாமல், மலையில் மறைந்துகொண்டு வாசம் செய்கிறார். இவரது புஜபலபராக்கிரமத்தால் எப்போதும் இங்குக் கொள்ளைத் தொழிலையே குலத்தொழிலாகக் கொண்டு வாழும் கபூலியர்களுக்கு நேசமானார்; நாளடைவில் அவர்களுக்குத் தலைவராக ஏற்பட்டார். இதன் மத்தியில் சுதேசத்தில் தனியே விட்டுவந்த எனது தாயையும் தம்மோடு

கொண்டுவந்து சேர்த்துக் கொண்டார். என்னைக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டுமானால், எங்கள் ஜாதியில் மணம் முடிக்கவேண்டும்: ஒரு ரஜபுத்திர வீரன், மலையில் கொள்ளை யடித்து வாழும் ஒருவனது பெண்ணை, தெரிந்து மணக்க வருவானா! அல்லது; மறைந்து வாழும் இவர், தன்னை இன்னாரென வெளிப்படுத்திக் கொண்டு நாட்டிற்குப் போவாரா! ஒன்றும் முடியாத காரியம்; இதனை உணர்ந்த எனது பிதா பிரஷ்டர்களாகத் தங்கீழுள்ள இதரர்களுக்கு இதைச் சொல்ல முடியாமல் பேசாம லிருக்கிறார். என் பிதா அபிமானித் திருக்கிற ஸ்திரீயோ கொடியவ ளல்லள்; அவள் எந்த சீமான் வீட்டுப் பெண்ணோ! என்னுடைய நிலைமையை உத்தேசித்து, அடிக்கடி வருந்துவதாகத் தெரிகிறது: நான் இதுவரையில், எந்தப் புமானையும் மனதில் நினைந்து பேசினது இல்லை. இந்த இடத்தில் எனக்கு வேலை செய்கிற இந்த ஸ்திரீகள் யாவரும் நன்றாகப் படித்தவர்கள்; அவர்களால் நன்றாய்ப் படிக்கக் கற்றுக் கொண்டேன்: எனக்கு வேண்டிய புஸ்தகங்கள் யாவும், நான் நினைக்குமுன், கபூலியர்கள் கொண்டுவந்து கொடுப்பார்கள். புஸ்தகங்களை அடிக்கடிப் படிப்பதால், நான்கு வருணத்தாருடைய தர்மம், இன்ன தின்னதென அறிந்திருக்கிறேன். ஆதலால் உங்களை நான் க்ஷத்திரியரா யிருக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். பரோபகாரார்த்தமாய்த் தாங்கள் புறப்பட்டு வந்ததாகச் சொன்னீர்கள். அது நிறைவேற வில்லை யென்றும் சொன்னீர்கள். தங்களை ஆசிரதம் செய்த ஒரு ஸ்திரீயைக் காப்பாற்றும் தர்மம் பரோபகார குணமல்லவோ! என்னிடம் விடை பெற்றுப் போகவா, உங்களை நான் அழைத்து வந்தேன்! தாங்கள் போவதானால், அதை நான் தடுக்கவில்லை. கூட, என்னை

யும் அழைத்துச் செல்லுங்கள்; ஊன்று கோலில்லாமல் தவிக்கும் முடவனுக்கு, அது கிடைத்ததானால் அதனை இழந்து விடப் பிரியப் படுவனோ? பற்றிக் கொண்டு படர வகையில்லாமல் தவிக்கும் கொடிக்கு, பிடித்துக் கொண்டு படர ஒரு மரக்கிளை அகப்பட்டால், அதைப் பிடித்துக் கொள்ளாமல் விட்டு விடுமோ? அதுபோல தங்களை, பற்றுதலுக்கு ஓர் கருவியாகக் கொண்ட நான், மறுபடியும் விட்டு விடுவேனோ? ஒரு நாளுமில்லை" என்றாள்.

ரஞ்சிதசிங் உட்டாணி சொன்ன அவளது வார்த்தைகளைக் கேட்டு, சந்தோஷமடைந்து, "நான் நினைத்து வந்த காரியம் ஒருவாறு நிறைவேறும் என்பதற்குத் தடையில்லை; இவள் தன்னிடம் இருக்கும்படி, ஏதோ ஒருவிதமாக உபசரிக்கிறாள்; இவளது அபிப்பிராயம் இன்னது என எனக்கு நன்றாய் விளங்கவில்லை; ஒரு சமயம் தன்னைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்கிற பிரியமிருக்குமோ! அப்படி இவள் எண்ணினால், நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்; எனக்கேன் கலியாணம்! நான் எவ்வளவோ சிரமப்பட்ட தெல்லாம் இந்த அற்ப விஷயத்திற்காகவா? அப்படியிருந்தாலும், நானோ என் தாயார் சம்மதமில்லாமல் கலியாணம் செய்து கொள்ளலாமா? இவள் என்னைக் காப்பாற்று என்கிறாள், கூடவருகிறேன் என்கிறாள், ஒன்றுமில்லாத அநாதையைக் காப்பாற்ற வேண்டுமேயல்லது, ஏராளமாய்ப் பொருள் வைத்துக்கொண்டு சௌக்கியமாய் இருப்பவர்களை என் காப்பாற்ற வேண்டும்? நல்லது; இவள் மூலமாய்ச் சில உளவுகள், நான் தெரிந்து கொள்ளவேண்டியவைகளாயிருக்கின்றன. என் எண்ணத்தை இவளிடத்தில் வெளியிடாமல், இவள் சொல்லுகிறபடி நான் கேட்பதுபோல நடித்து, விஷயத்தைக் கிரகித்துக் கொண்டு, துஷ்டர்களை வதைக்க ஏதாவது தகுந்த ஏற்பாடு செய்ய

வேண்டும்:'' எனத் தீர்மானித்தவனாய், "உட்டானி! உனக்கு நான் செய்யவேண்டிய தென்ன இருக்கிறது? தயவு செய்து சொல்ல வேண்டும்'' என்றான்.

உட்டானி — "தாங்கள் என்ன, ஒன்றும் தெரியாதவர்கள்போலப் பேசுகிறீர்களே! நானென்ன பதில்சொல்லுகிறது?''

ரஞ்சித் — "வாஸ்தவத்தில் உன் அபிப்பிராயத்தை நான் தெரிந்து கொள்ளாதவனாயிருக்கிறேன்''

உட்டானி — "அப்படியா? என்னைத் தாங்கள் மணம் புரிந்துகொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்''

ரஞ்சித் — "நிரம்ப சந்தோஷம், நான் இப்படிப்பட்ட பாக்கியம் பெறப் புண்ணியம் செய்தவனாகிறேன்; மகா சூரான உனது பிதா, உன் அபிப்பிராயத்திற்கு இணங்குவாரா?''

உட்டானி — "நான், அவரிடத்தில் உங்களைப் பற்றி எனது வேலைக்காரிகள் மூலமாய்த் தெரிவிக்கிறேன். அவர் சரியான வழிக்கு வராத பக்ஷத்தில் எனக்குள்ள ஏராளமான நகைகளை எடுத்துக் கொண்டு, தங்கள் பின் வந்து விடுகிறேன். நாம் இருவரும் நாட்டிற்குப் போய், இஷ்டம்போல மணம் புரிந்து கொள்ளலாம்.

ரஞ்சித் — "உன் பிதா, கொள்ளை யடித்து ஜீவனம் செய்கிறவர்; அவரை நான் கொள்ளை யடித்தால் கொடிய பாவமல்லவா?''

உட்டானி — "ஸ்திரீகளைச் சிறை யெடுத்துக் காந்தர்வ விவாகம் செய்துகொள்வது க்ஷத்திரிய தர்மமாயிற்றே! பாவமென ஏன் சொல்கிறீர்கள்?''

ரஞ்சித் — "பெரியோர் பேச்சைத் தட்டக் கூடாது! அவரை நான் நேரில் பார்த்துப் பேசி, விவாகம் ஆகும்படியான ஏற்பாடு செய்கிறேன்"

உட்டானி — "அவரோடு சமயம் அறிந்து பேசுவது மிகுந்த துர்லபம்! புதியவர்களை அவர் ஒருநாளும் நம்புவதில்லை; கோபம் மீறி வெட்டி எறிந்து விட்டால், நான் என்ன செய்வேன்?"

ரஞ்சித் — "எப்படிப்பட்ட கொடியவ ராயினும் அவர்க்கு, ஒரு ஜீவனைத் திடீரென்று வதைக்க மனம் வராது! ஏதாவது ஒரு குற்றம் கண்டுதான் கொலைபுரியப் பிரயத்னப் படுவார்; அப்படிப்பட்ட குற்றத்தை நான் எவ்வகையிலும் காண்பிக்காமல், என்னைக் காப்பாற்றிக் கொள்ளச் சித்தமா யிருப்பேன்! மீறி என்னைக் கொலை புரியப் பிரயத்னப் பட்டாரானால், என் கை ஆயுதம் அவரைச் சித்திர வதை செய்யாமல் விடாது"

உட்டானி — "நீங்கள் தைரியசாலி என்பதில் ஆக்ஷேபமில்லை; அவரிடத்தில் தாங்கள் போகாமலே காரியத்தைப் பூர்த்தி செய்துகொள்கிறேன்; தயை செய்து, தாங்கள் இந்த இடம் விட்டுத் தனியே எந்த இடத்திற்கும் என்னோடு அன்றி வேறு யாரோடும் போகாதிருக்க விரும்புகிறேன்"

ரஞ்சித் — "நீ சொல்லுகிறபடி, நான் கேட்கும்படியான நிலைமையில் என்னை வைத்திருக்கின்றாய்! இனி, நீ, எப்படிச் சொல்கிறாயோ, அப்படி நான், நடக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனால், மிகுந்த பராக்கிரமமுள்ள கபூலியர்களையும், உன் பிதாவையும் பார்க்கவேண்டு மென்கிற அபேக்ஷை எனக்கு அதிகமாயிருக்கின்றது; தூரமாக, மறைவிலிருந்தாவது, அவர்களை, எனக்குக் காட்டுவாய்!" என்றான்.

உட்டாணி — "அப்படியே செய்கிறேன். அவர்கள் இருப்பிடத்திற்குப் போவதென்றால் மிகுந்த கஷ்டமாம். இங்கிருந்து, சற்று தூரத்திற்குள்தான், அவர்கள் வசிக்கிறார்கள்; சேர்ந்தாற்போல் யாரும் வசிப்பதில்லை: தனித்தனி ஒவ்வொரு கற்பாறையின் மறைவில், தங்கள் தங்கள் விடுதிகளை அமைத்துக்கொண்டு, குடும்பங்களோடு வாழ்கிறார்கள்; ஒவ்வொருவராக உங்களுக்குக் காட்டுகிறேன்; வெள்ளிக்கிழமைதான் அவர்கள் கொள்ளைக்குப் போவதில்லை; மற்ற நாட்களில் சிலர் இருப்பார்கள்; சிலர் வெளியே போயிருப்பார்கள்," என அவர்களுடைய செய்கைகளைக் கொஞ்சம் சொன்னாள்.

ரஞ்சித், உட்டாணியின் உபகாரத்திற்கு மிகுந்த மகிழ்ச்சி அடைந்து, அவளோடு சில தினங்கள் இருந்தான். தினம் கொஞ்சம் கொசஞ்மாய் கள்ளர்களுடைய விவரங்களைத் தெரிந்துகொண்டான்; உட்டாணி, தன்னை மிகுந்த அன்போடு ரஞ்சித் விசுவாசிக்கிறான், என்று எண்ணியிருந்தாள். ரஞ்சித் தனது காரியத்திலேயே கண்ணுள்ளவனாய், ஒவ்வொரு சமயத்தில் நல்ல சூரிய வெளிச்சத்தில் உட்டாணியோடு வெளியே போவதும், வேடிக்கையாக எதாவது விஷயங்களைப் பேசுவதும், ஒவ்வொரு கபுலியினுடைய இடத்தையும் விடாமல் அறிந்து கொள்வதுமாய் இருந்தான்.

நான்காம் அத்தியாயம்

"சட்டோஜி தனது ஸ்த்ரீ தன்னை விட்டுப் பிரிந்ததால் உண்டான துக்கத்தைத் தாள மாட்டாமல், கண்ட இடங்களிலெல்லாம் அலைந்து, ஹாலா மலைத் தொடரை அடுத்து, அதன் மத்திய பாகத்திற் பிரவேசித்தான்" என முன் அத்தியாயத்தில் சொன்னோம். மலைமீது செல்லும்போது, தன்னை அடியோடு மறந்துவிட்டா னாயினும், தனது பிராண நாயகியான தவளாப்பாயை மறக்கவேயில்லை. "தவளா! என்னை இப்படி அநியாயமாய் அலையவிட்டு எங்குச் சென்றாயோ? உன்னை அநியாயம் செய்து கொண்டு போன மகா பாவியைக் கண்டுபிடித்துச் சிக்ஷை செய்விக்க இவ்வுலகில் யாருமில்லையே! உன்னை சதா நினைத்துக் கொண்டிருப்பதற்குத் தான், மெலிந்த இந்த சரீரத்தில் உயிர் நிலைத்திருக்கிறது போலக் காணப்படுகிறது?" என சதா துக்கப் பட்டுக் கொண்டு யாருமில்லாத இடத்தில் தனியே உட்கார்ந்து கதறுவதும், மலைமீது ஏறிச் சென்று ஈசுவரனைக் குறித்துத் தபசு செய்யலாம் என நினைப்பதும், எதையும் இலக்ஷியம் செய்யாமல், ஏதாவது பசிக்குக் கிடைக்கும் பழங்களையும், உதிர்ந்து கிடக்கும் சருகுகளையும் ஆகாரமாக உண்ணுவதும், நினைத்த இடத்தில் படுப்பதுமாக மலைப் பிராந்தியத்திலுள்ள மிருகாதிகளுக்கும் பயப்படாதவனாய், அலைந்து கொண்டிருந்தான். இவனது சரீரம் முழுவதும் இளைத்துப் பழுப்பழுவாய் மார் எலும்புகள், வெளித் தோன்றி, இரத்தமில்லாமல் சுண்டி வதங்கின தோல் மூடி, கண்கள் படுகுழியில் பதிந்து கிடப்பன போல வெளிக்குத் தோற்றாமல் இருக்க, கால்கள் கணுக்களைப்பெற்ற இருகழிகளைப்போலப் பின்னிக் கொண்டு தட்டுத் தடுமாற, ஒடிந்து சாய்ந்த

மரக்கிளைகள் போலக் கைகள் தொங்க, அழுக்குப் படிந்து
சடையிட்டு, முறுக்கப் பட்ட தலை மயிரை உடையவ
னாய், நடக்கச் சக்தியில்லாமல் ஆமை போல நகர்ந்து
செல்வா னாயினான். அப்பொழுது இவனை யாராவது
பார்த்தால் சித்தப்பிரமை கொண்ட பைத்தியக்கார
னெனக் கருதுவார்கள். இவன் இந்த நிலைமையில்,
சுமார் ஒரு வருஷகாலமாக மலையில் சஞ்சாரம் செய்து
கொண்டிருக்கையில், ஒருநாள், தனக்கு ஆகாரம் தேடவும்
முடியாமல், ஒரு மலையருவியின் சமீபத்தில் வந்து, தண்
ணீர் குடிக்கப் பிரயத்னப் படும்போது, அவ் வருவியின்
பக்கத்தில் உள்ள பாசிபிடித்த கற்பாறையின்மீது, ஒரு
காலை ஊன்று முன் வழுக்கி விட்டதனால் கீழே விழுந்து,
ஒருகால் ஜலத்தில் மிதக்க மறுகால் மடக்குண்டு, குப்புறக்
கிடந்தான்.

இவன் மெல்ல மெல்ல நடந்து போனதையும்,
நீரருவியின் பக்கத்திலுள்ள கற்பாறையில் கால் வழுக்
குண்டு குப்புற விழுந்ததையும், அந் நீரோடையின், மேல்
பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஒரு புமான்,
தன்னோடு நின்ற ஸ்திரீயைச் சீக்கிரம் வா என்று சொல்லி
விட்டு, தான் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, ஒரு நிமிஷ
நேரத்தில் இவன் பக்கம் வந்து, மெள்ளத் தூக்கி ஆசுவாசப்
படுத்தியும் உயிர் போகும் நிலைமையிலிருந்த படியால்,
"இதென்ன பாபம்! இந்த உத்தமமான மகரிஷிக்கு, இப்
படிப்பட்ட ஆபத்து வந்து சம்பவிக்குமா! ஓடோடியும்
வந்து தூக்கி யெடுத்தும் பிரயோசன மில்லாமல் போயிற்
றே!" என வியாகூலப்பட்டுத் தான் இருக்கு மிடத்திற்கு
வந்து சேர்ந்த ஸ்த்ரீயிடம், விசனத்தோடு சொன்னான்.
அம்மாது, "பிரபோ! நாம் என்ன செய்யலாம்! ஈசன்
செயல் இப்படி நேர்ந்தது! ஒரு நாழிகைக்கு முன்னே

நடந்து சஞ்சாரம் செய்து கொண்டிருந்த இந்த புண்ணியாத்மா, பரலோக பிராப்தியாகும் தருணத்தி லிருக்கிறார். இவ்வளவு காலம் இந்த ஆத்மா இக் கூட்டில் வாழும் என்ற நம்பிக்கை யில்லாத நாம், சாசுவதமான வாழ்வை அடையப் போகிறோம் என்ற எண்ணம் கொண்டு, சத்துரு பாவம், மித்துரு பாவம் கொண்டு மனம் போனபடி காரியங்களைச் செய்யத் துணிந்து, காலத்தைக் கழிக்கிறோம். இருக்கிற வரையில், சுகத்தை அனுபவித்துச் சந்தோஷமாகக் காலம்கழிக்க யாரும் பிரியப்படுகிறதில்லை. இதோ பாருங்கள்! இந்த மகரிஷி, தமது தவத்தில், மிக வல்லவராயினும், நிர்யாண காலம் இவ்வளவு சமீபத்தி லிருக்கிறது என்பதை, அறியாமல் இந்நீரோடையில் வந்து விழுந்தார்; இவரை, நாம், இங்கு வைத்துக் கொண்டு, சிகிச்சை செய்வதென்றால், முடியாத காரியம்; உயிர்போகும் தறுவாயி லிருக்கிற இவரை இங்கு விட்டுப் போவதும் மகாபாவம். ஆகையால் மெள்ள இவரை எடுப்பித்துக் கொண்டு நமது இடம் போய்ச் சேர்ந்து விட்டால், பிழைக்கக் கூடிய மார்க்கம் தேடலாம். ஒரு சமயம் இறந்து விட்டாலும், அங்கேயே நல்ல இடத்தில் சமாதி வைத்து விடலாம்," என்றாள். ரஞ்சிதசிங், "நீ சொல்கிறபடியே செய்வது தான் உசிதம். சாவு தலைமேலே இருக்கிறது என்பது உலகத்திலுள்ள பகுத்தறிவுள்ள யாவரும் தெரிந்து கொண்ட விஷயமே! அதை அறிந்து, செய்தொழிலை மறந்து, எல்லாரும் ஞானவான்களாய் விளங்கினால், சிருஷ்டி திதி சம்மார கர்த்தர்களான பிரமா முதலிய மூவருக்கும் தொழிலேது? அவரவர் தங்கள் தங்கள் வேலையை விட்டுத் தங்களை உண்டாக்கினவனிடத்தில் போய்ச் சேரவேண்டியது தான்; அப்பொழுது உலகமே இல்லாதொழியும்; நீ சொல்லுகிறபடி

பிரளைய காலத்தில் ஜனங்கள் சேர்ந்து நினைத்துக் கொண்டால், காலமுடிவைக் கணக்குப்படி வரையறுத்துக்கொள்ளலாம். அதன் முன் உலகபாசத்திற்குக் கட்டுப்பட்டு ஆயுள் காலம் தீர்க்கமா யிருக்கிறதென ஒவ்வொன்றையும் விஸ்தாரமாய் யோசித்து முறைப்படி செய்வதுதான் உசிதமாகும்''

ஸ்த்ரீ — "நான் எது சொன்னாலும் அதை மறுத்துப் பேசுகிறீர்கள். நிர்மானுஷ்யமான இந்த இடத்தில், ஒரு ஸ்த்ரீபுமான் எவ்வளவு சந்தோஷமாய்க் காலம் தள்ளலாம்! பருவமடைந்த மங்கையாகிய என்னிடத்தில் கொஞ்சம் கூட தயவு வையாத தங்களுக்கு என்னைப் போன்ற பெண்களைத் தபிக்கச் செய்யும் சுந்தர ரூபத்தைக் கடவுள் ஏன் உண்டாக்கினார்! தாங்கள் மரத்தினால் செய்த மாம்பழத்திற்கு ஒப்பானவராக இருக்கிறீர்களே!''

புமான் — "நீ என்ன ஓயாது உபத்திரவஞ் செய்கிறாய்! பருவகால மல்லாத மற்றக்காலத்தில் மரங்கள் பலத்தைத்தருமா? உன்னை விவாகஞ் செய்து கொள்ள, நான் ஒரு காலத்தைக் குறித்திருக்கிறேன். அது வரையில் நாம் சாமான்னிய நேசர்களாய்ப் பழகவேண்டும்; இப்பொழுது இந்த ரிஷிக்கு வந்திருக்கும் ஆபத்தைத் தீர்க்க என்ன செய்யலாம்? இறந்து விடுவார்போலிருக்கிறதே!''

ஸ்த்ரீ — "இவரேன் சாவார்! இந்த இடத்தில் தபசு செய்யும் அநேக ரிஷிகள் இம்மாதிரியான ஸ்திதியை அடைவதும், அவர்களை நாங்கள் தூக்கிக் கொண்டு போய் உபசரித்துத் தேற்றி அனுப்புவதும் சகஜம் தான்; காய சித்தி பெற்ற இவர்கள், சாகமாட்டார்கள்; தாங்கள் தவிக்க வேண்டாம். இவரைத் தூக்கிச் செல்ல நம்மால் முடி

யாது. நம் ஜாகைக்குச் சென்று வேலைக்காரர்களிடத்தில் தெரிவித்தால், அவர்கள் இவரைத் தூக்கிக் கொண்டு வந்து விடுவார்கள். போகலாம் வாருங்கள்''

புருஷன் — "இந்தஸ்திதியில் இவரைத் தனியே விட்டுப் போகலாமா? மிருக ஜாதிகளால் இவர்க்கு ஏதாவது கெடுதி நேர்ந்தால், என்ன செய்கிறது? நான் தூக்கிக் கொண்டு வந்து விடுகிறேன்; போகலாம்''

ஸ்த்ரீ — "இந்த இடத்தில் காட்டு மிருகங்களைத் தாங்கள் வந்தகாலம் துவக்கிப் பார்த்திருக்கிறீர்களா? அவைகள் மலையடிவாரங்களை விட்டு மேலேறி வருவதில்லை. அப்படி வந்தால் உடனே ஒழியும். அது, இங்கு வாஸம் செய்யும் மகரிஷிகளின் சாபம்! அதற்காகத் தாங்கள் அஞ்சவேண்டாம்; போகலாம் வாருங்கள்''

புருஷன்—"கூடாது; நான் எடுத்துக்கொண்டு வருகிறேன்: இளைத்த சரீரத்தோடு உயிருக்குப் போராடும் இவரை ஒன்றியாய் விட்டு வருவேனா? இவருக்காக இச்சமயம் என் பிராணனையும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். இவரைப் பார்த்து இரக்கத்தை வகிக்க மாட்டாத கபோதியா நான்! அல்லது, தூக்கிக் கொண்டு நடக்க முடியாத முடவனா! பற்றி எடுக்கமாட்டாத நொண்டிக்கையனா! இரக்க மில்லாத கல் நெஞ்சம் பெற்றவனா!'' என்று அவரை மெள்ளத் தனது கைகளால் பற்றித் தூக்கிக்கொண்டு செல்ல, அந்த ஸ்த்ரீயும் பின்னே சென்றாள். தங்கள் ஜாகையைச் சேர்ந்தார்கள். அங்கே, பெரியவரைக் கீழே கிடத்தி, அவருடைய உடல் உஷ்ணமடையுமாறு வேண்டிய சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஆகாரம், ஏற்றுக் கொள்ளாமல் வாய் மூடித் தொண்டை நெருக்கப்பட்டிருந்ததால், கொஞ்சம் கொஞ்சமாக மாவாகாரங்களைத் திரவ ரூபமாகக் கரைத்துக் கொடு

த்துக்கொண்டேயிருந்தார்கள். பெரியவர் என்று அவர்கள் எண்ணின சட்டோஜி, கண்ணைத் திறந்து பார்த்தான். வாய் திறந்து பேசமாட்டாமல் ஜாடையால் வியவகாரங்களைத் தெரிவித்தான். தேகத்தில் சக்தி பெற்றான். சிசுருஷைசெய்த புமான் மெத்த சந்தோஷமடைந்து, "இன்று நாம் கிருதார்த்தரானோம், பெரியோருக்குச் செய்த உபகாரம், இம்மைப் பயனுக்கு ஹேது இல்லா விட்டாலும் மறுமையில் கட்டாயம் பலனுக்கு ஹேதுவாகும்" என நினைந்து, தான் எந்த வேலையையும் கவனிக்காமல் இவரைத் தேற்றுவதிலேயே திருஷ்டியுள்ளவனாக இருந்தான். இவனுக் கனுகுணமாகவே மற்றவர்களும் நடந்து கொண்டார்கள். நான்கு தினம் விடாது உபசரித்து வந்ததால் நல்லறிவு பெற்று நடக்கச் சக்தியுள்ளவனாகவும், பேச வல்லமை உள்ளவனாகவும் ஆனான் சட்டோஜி.

தானின்னானென வெளிப்படுத்திக் கொள்ள இஷ்டமில்லாமல், அவர்கள் நினைக்கிறபடியே, அவன், மகரிஷியென எண்பித்து, அப்படியே மௌனியாகி, பேசவேண்டிய ஆவசியகமில்லாத காலத்தில், ஏதோ ஜபம் செய்கிறவன் போல வாயால் முணுமுணுத்துக்கொண் டிருந்தான். நமது ஸ்திரீ புமான்கள் இன்னாரென இதைப் படிக்கும் போதே தெரிய வரும். அவர்கள் ரஞ்சிதசிங்கும் உட்டாணியும் தான்; வேறு யாருமல்ல.

ரஞ்சிதசிங் — "உட்டாணி! இந்த ரிஷி இவ்விடத்திலேயே இருப்பாரோ? அல்லது போய் விடுவாரோ?"

உட்டாணி — "இவரைப் பார்த்தால், வெகு நாட்களாய் தவம் புரியும் ரிஷிகளைப் போல் காணப்படவில்லை. ஏதோ, காலத்திற் கேற்ற கோலம் கொண்டவர் போல் தெரிய வருகிறது. ஆகார முதலியவைகளைக் கொடுத்து

உடம்பை நன்றாகத் தேறச் செய்தால், நம்மிடத்திலிருக்கிற வேலைக்காரிகளில் ஒருத்தியை, இவர் கலியாணம் செய்து கொண்டு சௌக்கியமாக வாழ்வார்".

ரஞ்சித் ;— "நீ என்ன அப்படிச் சொல்லுகிறாய்! 'ஸ்தீரீ புருஷன், புருஷன் ஸ்தரீ, அப்படி யிருக்க வேண்டும், இப்படி யிருக்க வேண்டும்' என ஓயாது சொல்வது தான் உனக்கு வேலை! முதலில் நீயே ரிஷி என்றாய்; இப்பொழுது நீயே அல்லவென்கிறாய்"

உட்டாணி — "நான் முதலில் ரிஷியாகத்தான் இருப்பாரென நினைத்தேன்! இப்போது அவருக்குச் சரீரத்தில் புஷ்டி உண்டானதும், எங்களை அவர் உற்றுப் பார்ப்பதனால் உலக வாழ்க்கையில் பற்றுடையவ ராகக் காணப்படுகிறார். அதனால்தான் அப்படிச் சொன்னேன்!"

ரஞ்சித் — "போகட்டும்; நீ அபிப்பிராயப் படுகிறது போலத்தா னிருக்கட்டுமே! அதனால் என்ன தோஷம்?"

உட்டாணி — "தோஷ மொன்று மில்லை; இவர் ரிஷியாக இருந்து தவஞ் செய்ய, நாட்டில் உள்ள தம்முடைய சிற்றின்பங்களையும், உறவினர்களையும் துறந்து, இம்மலையில் வாழ்கிறார். இப்படி வாழும் காலத்திலும், ஸ்த்ரீகளோடு சேர்ந்து வாழ இச்சைப்படுகிறார். தாங்கள் மட்டும் கல் நெஞ்சம் படைத்தவராய், வலிய வந்து உபசரிக்கும் ஒரு ஸ்த்ரீயை உதாசனித்துத் தள்ளுகிறீர்கள். எந்த ஜீவவர்க்க மாயினும், விருக்ஷவர்க்க மாயினும் செடி கொடிக ளாயினும் பருவ காலத்தை யடையும் போது, அததற்கு ஏற்றவாறு சுகத்தை யனுபவிக்கிறது. விர்த்திக் கேதுவான காரியங்களை, அநேகமாகச் செய்கின்றது. சாயங் காலத்தில் செடிகளில் உண்டான புஷ்பவகைகளைச் சேர்ந்த அரும்புகள், தளையவிழ்ந்து மலர்ந்து தமது இனிய வாசனை

யை வெளிவீசத் தென்றல்காற்று உதவுகிறது. புஷ்பத்தோடு புஷ்பம் சேராமல் எப்படிக் கரு உய்க்கும்படி கடவுள் ஏற்படுத்தியிருக்கிறார் என்றாலோ, அவைகளிலுள்ள மகரந்தப் பொடிகள், காற்றின் உதவியால் மற்றொரு கோசத்தை வகிக்கப்பெற்ற புஷ்பத்தில் போய்ப் பாய்ந்தவுடன் வண்டுகள் புஷ்பத்திலுள்ள மதுவை உண்ணும் போது, தம்மீது ஒட்டிக் கொண்ட பூந்தாது பெண் பூவில் சேரச் செய்கின்றன. அப்பொடிகள் அவைகளில் பதிந்து கோசம் விருத்தி யடைந்து, புஷ்பத்தின் கீழ் இனிய காயாகிப் பழுத்து, பிராணிகளுக்குப் பேருதவியாக வெளிப்படுகின்றன. அற்பஜாதியாயினும், அதற்கிசைந்த ஆண்களோடு, கூட்டுறவு பெற்று குடிவாழ்வு அடைகின்றனவே! தாங்கள் சகலவித குணங்களைப் பெற்றிருந்தும் ஒரு ஸ்திரீக்கு ஒரு புருஷன் செய்ய வேண்டிய கடமைகளை செய்யா தொழிகின்றீர்கள்! இது எனது துர்ப்பாக்கியமே! காந்தர்வமாக என்னை மணந்து கொள்ளுங்க ளென்று கதறுகிறேன்! கேட்கமாட்டேன் என்கிறீர்கள்! இராக்காலத்தில் என்னோடு இருப்பது உங்களுக்கு மிகுந்த கஷ்டமென நினைந்து எங்கேயோ போய் ஒளித்துக்கொள்ளுகிறீர்கள்! நான் ஒரு புருஷனை மணந்துகொள்ள பிரியமுள்ளவளா யிருக்கிறேனென, இங்கு அடிக்கடி வரும் கபூலியர்களிடம் சொல்லி என் பிதாவிடம் தெரிவிக்கச் சொன்னேன். அவர் ஒன்றும் பதிலளிக்காமல் இருக்கிறதாகத் தெரிகிறது. இப்படியே நெடுங் காலத்தை வளர்த்திக் கொண்டு போனால் என் கதி என்னவாகும்! உங்களுக்கு என் மீது இஷ்டம் இல்லாத பக்ஷத்தில், அதைக் கண்டிப்பாய் இப்போதே தெரிவித்து விடுங்கள். என் வாழ்நாளை வீணாக அதிக நாள் வளர்த்திக் கொண்டிருக்க இஷ்டமில்லை; இப்போதே கிளம்பிப் போய் உன்னதமான மலையுச்சியி

சேரிப் பள்ளத் தாக்கில் கிடந்து பிராணனை ஒழித்துக் கொள்ளுகிறேன்" என்றாள்.

ரஞ்சிதசிங் —"இவள் ஒரே பிடிவாதக்காரியாயிருக்கிறாள்! இவளிடத்தில் ஏதோ ஒரு வழியாக நான் அநுகூலமாகப் பேசி, இத்தனை நாள் காலம் தள்ளினேன். இவள் என்னிடத்தில், தன் தகப்பன் உலாவும் இடங்களையும் மற்றும் அவன் செய்யும் செய்கைகளையும் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிவித்தாள். அதைக் கொண்டு நான் இராக்காலங்களில் அவர்கள் இல்லாத சமயம் தெரிந்து மற்றக் கைதியர்கள் வசிக்கும் இடங்களையும் தலைவன் வசிக்கும் இடத்தையும் அவன் தூங்கும் விதத்தையும் அவன் வைத்துக் கொண்டிருக்கிற ஸ்திரீயையும் பார்த்துத் தெரிந்து கொண்டேன். கைதியர்களை எல்லாம் ஒவ்வொருவராகப் பார்த்துத் தெரிந்து கொண்டிருக்கிறேன். தலைவனை மட்டும் இன்னும் பார்க்கவில்லை! அவன் மகா வல்லாளகண்டனாயிருப்பதாக இங்குள்ளோர் யாவரும் சொல்லுகிறார்கள். அவன் தன் இடத்தில் தனியே உறங்கும் காலத்தில் நான் சென்று எனது துப்பாக்கியால் சுட்டுவிடத் தீர்மானித்துவிட்டேன். அவன் சுடப்பட்டு இறந்தவுடன் வெடிச் சத்தம் கேட்டு அவனது உதவிக்கு வரும் மற்றவர்கள் கண்முன் நான் படாமலிருக்க வேண்டிய ஏற்பாடுகள் மட்டும் நான் செய்து கொள்ள வேண்டியது; உட்டாணி சொல்வது போல இங்கு வந்திருக்கிறவர், ரிஷியல்லாமல் சாதாரண மனிதராயிருந்தால், அவரால் சில உதவியை நான் தேடிக் கொள்ளுவேன். உட்டாணி எனக்குச் செய்த பேருதவியை நான் ஒரு நாளும் மறக்க முடியாது. அவளை எப்படியும் என் தாயார் அனுமதியின் பேரில் நான் விவாகம் செய்து கொள்ளத் தடையில்லை. நான் எங்கு, ஓடிப்போய் விடுவேனோ எனப் பயந்து

என்னை அடிக்கடி நிர்ப்பந்திக்கிறாள். அவளுக்கு உறுதியான ஓர் ஏற்பாடு இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். கூடிய சீக்கிரத்தில் இவ்வேலைகளை முடித்துக் கொண்டு புறப்பட வேண்டும். என்னை உட்டானியின் தகப்பன் கண்டு, வேறு விதமான அபிப்பிராயம் கொள்ளாதிருக்கும்படி நான் நடக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது; தன் தகப்பன் இறப்பதனால் உட்டானி மனவருத்த மடைவாளென்று நான் நினைக்கவில்லை; எனக்கு எந்த விதமான விபரீதமும் ஏற்படாது இருக்க வேண்டுமேயென்று மாத்திரம் கவலைப் படுகிறாள்; இங்கிருக்கிற வேலைக்காரிகள் யாவரும் தங்களுக்குள் எந்த விதமான கலகவார்த்தைகளும் பேசுகிறதில்லை. நான் அவர்களின் க்ஷேமத்தின் பொருட்டு வந்திருப்பதாக அவர்கள் நடந்து கொள்ளும் குறிப்பால் உணர்த்துகிறார்கள். உன்னத ஸ்திதியிலிருந்து உதாசனிக்கப்பட்டு, ஊதியம்செய்யும் இவ்வுத்தம ஸ்த்ரீகளை நான் காப்பாற்றாமல் விட்டு விடுவேனா! முதலில், தலைவனைக் கொன்று, அபரிசுத்தமான அவனுடைய இரத்தத்தைப் பூமியில் சிந்த விட்டு, நல்லவர்களின் க்ஷேமத்தின்பொருட்டு அவிர்ப்பாகம் பெறும்படி, பூமிதேவியைப் பிரார்த்திக்கிறேன்" என நினைந்து, உட்டானியைப்பார்த்து, "கண்மணி!" என்றான். என்றதும் உட்டானி, "ஐயோ! ஐயோ! எனக்கு எத்தனையோ பாக்கியங்கள் வந்தது போலாயிற்றே! உங்கள் வாயிலிருந்து, இவ்வினிய சொல் தவறிக் கீழே விழ நான் எவ்வளவு தவம் புரிந்தேன்! வாய்க்குள் அடைபட்டுக் கிடக்கும் இனிய காதல் மொழிகளான அமிர்தத்தை வெளிப்படுத்தாமல் கபாடம் போலிருக்கிற ஏ உதடுகளே! உங்களுக்கு ஆயிரம் முத்தம் தருகிறேன். உங்கள் காவலை விட்டு விலகி யிருங்கள்" என்று சொல்லிக் கொண்டே, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தங் கொடுத்தாள் —

ரஞ்சிதசிங்—"தன் தாயின் ஆதரணையின்கீழ் இருந்து, அவளது லாலனம் பெற்று, தான் விடுபட்ட காலமுதல், தன்னை எந்த ஸ்திரீயும் தொட்டதில்லை. ஆதலால் அவளது சரீரம், இவன் மேற்பட்டதும், தன்னை அறியாதவோர் ஆனந்த சாகரத்தில் அழுந்தினவன் போல், சற்று நேரமிருந்து பிறகு ஒன்றும் சொல்லத் தோன்றாமல், தன்னை நிதானப்படுத்திக்கொண்டு, "ஏ பெண்கள் நாயகமே! உன்னை நான் மணம் புரிவது என்பது சத்தியம்! உன்னைத் தவிர்த்து இவ்வுலகில் வேறு எந்த ஸ்திரீயையும் நான் இச்சிப்பதில்லை. இதை நீ பிரமாணமாகக் கொள்வாய்; நான் சில காரியமாக இங்குத் தங்கி யிருப்பதால், எனது கொள்கை நிறைவேறினதும், உன்னை அழைத்துக்கொண்டு ஊர்க்குப் போய், பலபேரறிய என் தாயின் அனுமதி பெற்று மணம் புரிகிறேன். நீ கொஞ்சம் கூட சந்தேகப்பட வேண்டாம். நான் இன்ன காரியத்தை உத்தேசித்து இங்கிருக்கிறேன் என்பதை நீ பிந்தி தெரிந்து கொள்வாய்" என்று சொல்லி விட்டான்.

உட்டாளி, இவ் வார்த்தையைக் கேட்டதும் மனம் பூரித்து, "பிரபோ! தங்களை நான் ஒன்று மறியாதவரென்றும், உலக வியவகாரமே தெரியாதவரென்றும், மரமாம்பழ மென்றும் வாயில் வந்தபடி பேசி விட்டேன்! தங்கள் இஷ்டம்போல நடந்துகொள்ளச் சித்தமா யிருக்கிறேன்! இதோ இருக்கிற இந்த ரிஷிக்குத் தாங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ, அந்தப்படி பணிவிடை செய்யச் சித்தமா யிருக்கிறேன்" என்றாள்.

ரஞ்சித் —"உட்டாளி! இவரை இன்னும் சில நாள் இங்கு இருக்கும்படி செய்து, சரீரத்தில் நல்லபலம் உண்டாக்கி, சடை சடையாய் அடையைப்போல அடைபட்டிருக்கும் இவரது தலை மயிரைச் சிக்கெடுத்து, தைல

ஸ்நானம் செய்வித்து, உடம்பு தேறியதும், இவர் வரலாற்றைத் தெரிந்துகொள்ளலாம்—அதுவரையில் இவரை ஓரிடத்தில் வைத்து உபசரிக்கும்படி செய்வாய்'' என்றான்.

உட்டானி, உடனே தனது வேலைக்காரிகள் இருவரிடத்தில் அவரை ஒப்புவித்துத் தனது காதலன் அபிப்பிராயப்படி செய்யும்படி உத்தரவு செய்தாள். அன்று முதல், உட்டானி ரஞ்சிதசிங்கின் சமீபத்தில் அதிகமாய் நெருங்குகிறதில்லை. அவனிடத்தில் காதலும் நாணமும் கொண்டாள். ரஞ்சிதசிங் எப்போதும் போல இரவு பத்து மணிக்கு மேல் தனது கைத்துப்பாக்கியை மருந்து வைத்துக் கெட்டித்துக் தன் கையில் எடுத்து, மருந்துப் பெட்டியை முதுகில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டவனாய், புறப்பட்டு, தான், பகல் காலத்தில் பார்த்துத் தெரிந்துகொண்ட புது வழியாக, கபூலியர் தலைவன் வாழும் இடத்தை நோக்கிச் சென்றான்; அன்றிரவு கபூலியர் தலைவன் நீங்கலாக மற்ற யாரும் இல்லை; அவர்கள் ஓர் இடத்தைக் குறிப்பு வைத்துப் பகற்பொழுதிலேயே பிரயாணமாகிப் போய் விட்டார்கள். இவ்விஷயம் ரஞ்சித்துக்குத்தெரியும்; தலைவனிடத்தில், எல்லோரும் சேர்ந்து இந்த இடத்திற்கு இத்தனை நாழிகைக்கு வரவேண்டியது என்ற குறிப்பு, மரத்தில் கட்டப்பட்டுள்ள சிவந்த கொடியேயாம். இக்கொடியின் அடையாளம் இம்மாதிரியானது என்ற விபரம் உட்டானியால் ஏற்கனவே தெரிந்துகொண்டிருக்கிறான் ரஞ்சித். "இன்றிரவு கட்டாயம் தலைவனைப் பார்த்துப் பேசவேண்டும்; இதனால் எவ்வளவு விபரீதம் வந்தாலும் வரட்டும்'' என்று முதலில் எண்ணினான்; பிறகு, "நான் நேரில்போனால் வல்லவனென்று சொல்லப் படுகிற தலைவனிடத்தில் கட்டாயம் இரண்டொருவர் காவலிருப்பார்கள் ! அர்வகளைத் தடுத்து உள்ளே போவது சிரமம்; அப்படிப்போனாலும் கொடிய துஷ்டனான பாதகன்,

முன் பின்பாராமல், என்னைத் தன்கையில் எப்போதும் தயாராயிருக்கும் துப்பாக்கியால் சுட்டுவிடுவான். அப்படிச் சுட்டால், நான் நினைக்கிறபடி எவ்வித பிரயோசனமும் உலகத்திற்குச் செய்யமாட்டாதவனாய் ஒழிவேன்; அதில் ஒன்றும் பிரயோசனமில்லை. அவனை எதிரிட்டுக் கொள்ளாமல் மறைந்து சென்று, அவனைச் சுட்டு வீழ்த்துவது தான் நல்லது!'' என்று தீர்மானித்துக் கொண்டான். மறுபடியும், “மறைவிலிருந்து ஒருவனைச்சுடுவது ஆண்மைத்தனமாகுமோ! அது ஒரு வீரனது இலக்ஷணமாகாதே! என் செய்யலாம்!'' என யோசித்தான்! “இன்று எப்படியாவது அங்குச் சென்று அவனது நடவடிக்கைகள் இன்னது என்பதை மறைவாக இருந்துபார்த்துப் பிறகு ஏதாவது ஏற்பாடு செய்யலாம்'' எனத் தீர்மானித்து, தான் பார்த்திருந்த வழியே சென்றான். இவனுக்கனுகூலமாக நிலவு நன்றாய்ப் பிரகாசித்தது. மலையிலுள்ள மேடு பள்ளங்களையும் முட்புதர்களையும் கவனியாமல், கொஞ்சதூரம் சென்றான். தலைவன் வாசம் செய்யும் குகையைக் குறுகினான். அது பெரிய கற்பாறையைத் துளைக்கப்பட்டுள்ள வழியா யிருந்தது. இருட்டுமயமான அவ்விடத்தில், எவரும் பகல் காலத்திலேயே போக அஞ்சுவார்கள்; அதற்குள் இவன் மனோ வேகத்தோடு பிரவேசித்தான். ஒரு பக்கத்துப் பாறையைப் பிடித்துக் கொண்டே சென்றான்; கொஞ்ச தூரத்திற் கப்பால் அந்த குகாத் துவாரத்தில் பெரிய கதவுகள் போடப்பட்டு சாத்தப் பட்டிருந்தது. அக் கதவுகளை இவன் தொட்டுப் பார்த்தான், நல்ல வேளையாய் உள்பக்கம் தாழ்ப்பாள் போடாமல் சும்மா சாத்தப்பட்டிருந்தன. அதைக் கண்டு அவைகளை ஓசைபடாமல் மெள்ளத் திறந்தான்; அதற்குள் விசாலமான ஒரு கட்டடம் வெட்ட வெளியான சம பூமியில் கட்டப் பட்டது போல இருந்தது. கட்ட

டடத்தில் நல்ல வெளிச்சம் இருந்தது. தான் இருக்கும் ஹாலில் உள்ளதுபோல நாற்பக்கத்திலும் மலை சூழ்ந் திருந்ததைக் கண்டான். இவன், உள்ளே வெளிச்ச மில்லாத மலைப்பக்க வழியாகச் சென்று, கட்டடத்தில் மறைவான இடத்தில் போய் நின்று பார்த்தான்; இவனு க்கு ஒன்றுமே தெரியவில்லை. "இவ்வளவு தூரம் வந்து விட்டு, பார்க்காமல் போவது நல்லதல்ல" எனத் தைரி யம் கொண்டவனாய், வெளிச்சம் இருக்கும் பக்கமாய் மெள்ளச் சென்றான். பெரிய அறை ஒன்று காணப்பட் டது. அவ்வறையில் ஏராளமான ஆயுதங்கள் வைக்கப் பட்டிருந்தன. எல்லா ஆயுதமும் அதிகபிரகாசத்தோடு ஜ்வலித்துக் கொண்டிருந்தன. அங்கு வைக்கப்பட்ட கத்தி கள் பளபளப்போடு, தங்கப்பிடிகள் வெள்ளிப் பிடிகள் போட்டவையாயும், ஈட்டி, பாலா முதலிய ஆயுதங்கள் அதிக கூர்மை யுள்ளனவாய் அடிக்கழிகளில் முறுக்கமான வெள்ளிப் பட்டை தங்கப் பட்டைகளால் சுற்றிக் கட்டப் பட்டவைகளாயு மிருந்தன. துப்பாக்கிக் குண்டுகளையும் கத்தி வெட்டுகளையும் சரீரத்தில் பட வொட்டாமல் கையில் பிடித்துக் கொண்டு மறைக்கக் கூடிய குறிய சல்லடை போல் மூன்று நான்கு முண்டுகளைப் பெற்ற ஆயுதங்கள் வரிசை வரிசையாக சுவரில் மாட்டப் பட்டிருந்தன. உலகத்தில் இருக்கும் ஆயுதங்கள் யாவும் அவ்வறையிலிருந் தன. அவைகளைப் பார்த்துக் கொண்டு சற்றுநேரம் பிர மித்து நின்றான். மறுபடியும் அவ்விடம் விட்டு வேறு இடம் போனான். இதே மாதிரியான வேறு அறை ஒன்று இருந்தது. அதில் முன் அறையில் காணப் பட்டது போல விசாலமான ஜன்னல்கள் இல்லை. அது குறுகிய ஜன்னல்களை உடையதாய் இருந்தது. ஒவ்வொரு ஜன்ன லும் சாத்தப்பட்டு மிருந்தது. திறந்திருந்த ஒரு ஜன்னல்

வழியாய் இவன் உள்பக்கமாய் எட்டிப் பார்த்தான். தன க்கு எதிராக பிரம்மாண்டமான ஒரு கட்டிலில் இராக்ஷத னைப்போலுள்ள ஒரு மனிதன், குறட்டை விட்டுக்கொண்டு படுத்துறங்கினன். அவனது சமீபத்தில் வேறு கட்டிலில் மின்னல் கொடிபோன்ற ஒரு ஸ்த்ரீ சகலமான நகைகளையும் பூண்டவளாய்ச் சுருண்டு படுத்துக்கொண்டிருந்தாள்; அவ் வறையின் வாயில் கதவு திறந்து கிடந்தது. வெளிப் பக்கமாய் இரண்டொரு ஸ்த்ரீகளோ அல்லது புமான்களோ படுத்துக்கொண் டிருப்பதாய் அனுமானிக்கும்படி தெரிந் தது. அவர்கள் ஒரு சமயம் வேலைக்காரர்களா யிருக்க லாமோ என ஊகித்தான். அச்சமயத்தில் இவன் துப் பாக்கியால் தலைவனைச் சுட்டு வீழ்த்தி விடலாம் என நினைத் தான். ஒரு சமயம் தான் நினைத்தபடி அவன் தலைவனல்லா மல், வேறொருவனை இருந்தால் காரியம் கெடும் ஆகை யால், “பொறுமையோடு பார்ப்போம்” என மெள்ளமெள் ளச் சற்று அப்பால் போனன். அக்கட்டடத்திற்குள் போ கும்வழி, அகலமாய் இருந்தது; அவ்வழியில் வெளிச்சம் அதிகமாக இல்லை; என்றாலும் அதில் பிரவேசித்து நெடுகப் போனன். கீழ்ப்பக்கத்தில் ஒரு வழியும், மேல் பக்கத்தில் தாழ்வாரம் போன்ற வேறு ஒரு வழியும் இருந்தன. வெளிப் பக்கத்தில் பெரிய முற்றம் இருந்தது. அம்முற்ற வழி யாய்க் கீழ்ப்பக்கம் போனன். தான்முன்பார்த்த அறைகளி ரண்டு மட்டுமே யிருந்தன. எங்கும் ஒரே நிச்சத்தமா யிருந்தது. அதை விட்டு மேற்குப்பக்கமாக போனன்; அங்கே விசாலமான சமையல் அறைகளிருந்தன. அங்கே வெளிச்சமில்லை; என்றாலும் நிலவு வெளிச்சத்தால் சமைய லறை என உணர்ந்து கொண்டான். அதன் சமீபத்தில் சிறிய சிறிய அறைகள் பல இருந்தன. அதில் ஒவ்வொன்றி லும் கூலிய வேலைக்காரர்கள் படுத்துறங்கினர்கள். எல்லா

அறைகளும் திறந்து வைக்கப் பட்டிருந்தனவே யல்லாமல் ஒன்றாவது சாத்தியில்லை. அப்படி அறைகளைச் சாத்துவது வழக்கமில்லை போலும்; கடைசியாக ஓர் அறையை எட்டிப் பார்த்தான். கதவு கொஞ்சம் சாத்தப்பட் டிருந்தது. அதில் மன்மதரூபம் பெற்ற ஒரு வாலிபன் படுத்துறங்கினான். நல்ல வெளிச்சம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவ் வாலிபன் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டிருந்தான். மேல் காதில் உயர்ந்த பச்சைக்கற்களால் கட்டப்பட்டுள்ள உட்டங்கு ஒன்றைத் தொங்க விட்டுக்கொண்டு முகத்தில் கொஞ்சம்கூட மயிர் அரும்பு இறங்காமல், சுத்தமான வெள்ளைச் சட்டை அணிந்து கொண்டு இருந்தான். இவன் முழு நித்திரை செய்யாமல், ஆ, ஆ, என்ற சத்தத் தோடு புரண்டு புரண்டு படுத்திருந்தான். இவனைப் பார்த் ததும் ரஞ்சிதசிங், மனதில் இரக்கம் வகித்து, "இந்த வாலி பன் யார்வீட்டுப் பிள்ளையோ! இந்த கொடிய துஷ்டர்கள் எதற்காக இவனைக் கொண்டுவந்து வைத்திருக்கிறார்களோ, தெரியவில்லை" என விசாரப்பட்டுச் சற்றுநேரம் அங்கேயே நின்று பார்த்தான்.

பிறகு அவன் மெள்ளக் கதவைத் திறந்துகொண்டு அவ் வறைக்குள் சென்று கதவை மெதுவாகச் சாத்திவிட்டு சற்றுநேரம் நின்றான்; மறுபடியும், "அரை விழியும் தூக்கமுமாக இருக்கிற இவன் கண்ணை விழித்துக்கொண்டு என்னைப் பார்த்ததும் கத்தினால் என்ன செய்கிறது! இவனை நாட்டிலிருந்து எதை உத்தேசித்து இங்குப் பிடித்து வந்திருக்கிறார்களோ தெரியவில்லை! என்றாலும் இவனை மெள்ள விழித்துக் கொள்ளும்படி செய்கிறேன்; தூக்கத் தில் பதறிக் கத்தாம லிருக்கும்படி பார்க்கவேண் டும்" என்று நினைத்து அவன் சமீபத்திற்போய் அவனை மெதுவாகத் தொடுமுன், சிறுவன் கண்ணைத் திறந்து

கொண்டு படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்து தாழ்ந்த குரலோடு, "தாங்கள் யார்? இங்கு எப்படி வந்தீர்கள்?" என்றான். ரஞ்சித், "தங்களிடம் தனித்து இரகசியமாக ஒரு சமாசாரம் சொல்ல வேண்டியதா யிருக்கிறது: சற்று வெளிப் பக்கம் வருவீர்களா?" என்றான். அவன், "ஆஹா அப்படியே போவோம். இதோ தெரிகிற இந்தக் குன்றின் பக்கத்தில் கொடிவழி ஒன்றிருக்கிறது; அவ்வழியே சென்றால் கொஞ்ச தூரத்தில் ஒரு சிறிய தடாகம் ஒன்றிருக்கிறது: அதன் கரையில் உட்கார்ந்துகொண்டு பேசலாம்" என இருவரும், மெள்ள அவ்வறையை விட்டு வெளியே கிளம்பி, சிறுவன் காட்டிய கொடி வழியே குளத்தின் சமீபத்தில் சென்று, அங்குள்ள படிக்கட்டில் உட்கார்ந்தார்கள். ரஞ்சித் அக் குளத்தைப் பார்த்ததும், "இக்குளம் நான் பார்த்த குளம் தானே! இங்கிருந்து வெகு சுலபமாக நான் வசிக்கும் இடத்திற்குச் செல்லலாம். அடிக்கடி வேலைக்காரிகள், தலைவாரது இடத்திற்குப் போய் வந்தேன் என்று சொல்லுகிறார்களே! அந்த வழி இதுதானே! நான் ஒருவேளை அவ்விடம் போய்விடப் போகிறேன் என்ற பயத்தால், எனக்குக் காட்டாமல் இருக்கிறார்கள்! நல்லது. இந்தப் பையனை விசாரிப்போம்" என்று எண்ணி, "நண்பரே! உம்மைப் பார்த்தால் நாட்டில் வாழும் பெரிய பிரபுவின் வீட்டுப்பிள்ளை போலக் காண்கிறது. நீர் இருப்பது எந்த தேசமோ? நீர் இம் மலையில் வாழும் கபூலியர்களைச் சேர்ந்தவராகவாவது அல்லது துஷ்டர் செய்கைகளை அனுஷ்டிக்கும் கொடியவராகவாவது இல்லாமல், நாட்டில் வாழும் நல்ல குலத்தைச் சேர்ந்தவராக இருக்கின்றீர். ஏதோ காரணத்தால் பிடிபட்டு இங்கு வந்திருக்கிறீரென நான் தீர்மானித்து, உமது அறையில் பிரவேசித்தேன்; என்னைப் பார்த்ததும் நீர் பயந்து,

எங்கே, இறைச்சலிடப் போகிறீரோ எனப் பயந்தேன். நல்ல வேளைக் கடையாளமாக நீர் சத்தமிடாம லிருந்தீர். உமது பேரென்ன?" என்றான்.

அவன், "ஐயா! உம்மை நான் பார்த்ததும் நீர் எப்படி என் விஷயத்தில் நினைத்தீரோ, அப்படியே நானும் நினைத்தேன்: ஆகையால் நீர் கூப்பிட்ட ஜாடை தெரிந்து, எழுந்துவந்தேன். நான் இந்த இடத்திற்கு வந்து நான்கு மாதங்களாயின. நான் இந்த மாகாணத்தைச் சேர்ந்த ஹோளிங்கார் என்னும் பெரிய ஊரில் வசிக்கும் தனவந்தரும் வியாபாரியுமான ஹவுல் லாலாவின் குமாரன்; உபேந்தரநாத் லாலா என்று என்னை அழைப்பார்கள். நான் என் தகப்பனுக்கு ஒரே மகன். சென்ற ஆறு மாதத்திற்கு முந்தி காஷ்மீர் தேசத்திற்கு யாத்திரை போக உத்தேசித்து என் தகப்பனாரை உத்தரவு கேட்டேன். அவர் என்னைவிட்டுப் பிரிய மனமில்லாமல், போகவே கூடாது என மறுத்துவிட்டார். என் தாயும் ஒரே பிடிவாதமாய்ப் போகக் கூடாது என்றாள். நான் அந்தப் பிரதேசத்தில் உள்ள அதிசயங்களைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல்கொண்டு ஒருநாள் இரவு அவர்களுக்குச் சொல்லாமல், வீட்டிலிருந்த ரூபாயைக் கையில் எடுத்துக்கொண்டு என் சகநேசரான இருவரோடு புறப்பட்டுவிட்டேன். நாங்கள் அநேக ஊர்களையும் அதிலுள்ள அதிசயங்களையும் பார்த்துக்கொண்டு வந்தோம். இம் மலையடிவாரத்தில் ஒரு செங்குத்தான கற்பாறையிலிருந்து அதிக ஆழமான பூமியில் ஜலம் விழுகிறதைப் பார்ப்பதற்கு வெகு விநோதமாயிருக்கும் என நாங்கள் கேள்விப்பட்டு, இரண்டு மூன்று நாளாக பிரயாணம் செய்து அங்கு வந்து வேடிக்கை பார்த்தோம். யாரும் பார்க்கவேண்டிய அதிசயங்களில் அது ஒன்றுதான். நாங்கள் கொண்டுவந்திருந்த சாப்பாட்டை வைத்துக்கொண்டு

சாப்பிட்டு ஒருநாள் தங்கியிருந்தோம். மறுநாள் நாங்கள் பயணமாகும் சமயத்தில் ஒருவன் எங்களிடம் வந்து நீங்கள் யாரென விசாரித்தான். நாங்கள் சமாசாரத்தைச் சொன்னோம். அவன், "இம் மலையின்மேல் கொஞ்ச தூரத்திற்கப்பால் ஒரு பெரிய ஆல விருக்ஷத்தில் மகரிஷிகள் அநேகர் கிளைகளைக் காலில் பிடித்துக்கொண்டு தலைகீழாகத் தொங்கி தபசு பண்ணுகிறார்கள். அவர்களைப் பார்த்து தரிசிக்க வேண்டாமா! இந்த பெரிய நீர் வீழ்ச்சியைப் பார்க்க வருகிறவர்கள் அந்த மகரிஷிகளையும் கண்டு தரிசிக்காமல் போவதில்லை" என்றான். நான், "இன்று அங்கு செல்வதானால் சாப்பாட்டிற்கு வழியில்லையே! என் செய்வது? மகரிஷிகளைக் கட்டாயம் பார்த்துத் தரிசிக்கவேண்டியதுதான். என் செய்வது?" என்றேன். அவன், "சாப்பாட்டிற்கு விசாரப்படுவானேன்! இம் மலையில் உண்டாகும் விளைபொருள்களை உலக முழுவதும் சாப்பிடுகிறார்களே! உற்பத்தியாகும் இடத்திற்கே வந்திருக்கிற நீங்கள், சாப்பாட்டிற்கா கஷ்டப்படவேண்டும்! இம் மலையில் வாழும் வேடர்களிடம்போனால், இஷ்டமானபடி ஆகாரம் கொடுக்கிறார்கள்: போங்கள்" என்றான் "எங்களுக்கு வழி தெரியாதே! தாங்கள் கொஞ்சதூரம் எங்கள் பின்னால் வந்து வழி காட்டினால் ஏதாவது உங்களுக்கு உபகாரம் செய்கிறோம்" என்றேன். அவன், சரியெனச் சம்மதிக்காதவன் போலச் சம்மதித்து எங்கள் பின்னாலேயே வந்தான். நாங்கள் மலையில் வெகுதூரம் நடந்தோம்; அவன், எங்களுக்கு வேண்டிய ஆகாரம் அங்கங்கே சம்பாதித்துக் கொடுத்தான். ரிஷிகள் தொங்குமிடத்தைக் கேட்டோம். 'இதோ இருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே வந்தான். எங்களால் நடக்க முடியாமல், நல்ல நடுப்பகலில், ஒரு மர நிழலில் நாங்கள் படுத்துக்கொண்டோம். எல்லாருக்கும் தூக்கம்

பலமா யிருந்தது. நான் வெகுநேரம் வரையில் தூங்கி விட்டுக் கண்களை விழித்துக் கொண்டு பார்த்தேன். இந்த இடத்தைக் கண்டேன். நான் எப்படி இங்கு வந்தே னென எனக்கே தெரியவில்லை. என்னோடு கூட வந்த வர்களின் கதி எவ்வாறாயிற்றோ! எனக்கு ஏதோ பச்சிலை கொடுத்து மயக்கித் தூக்கிக் கொண்டு வந்திருப்பார்கள் என நினைத்தேன். நான் இங்கு வந்ததும் இங்குள்ள அநேகர் என்னை வேண்டியபடி உபசரித்தார்கள். இந்தக் கபூலிய ரின் தலைவர் வந்ததும் என்னைப் பார்த்துக் கையைக் குலுக்கி விட்டுப் போனார்; நான் இங்கு வந்த சிலநாளைக் கெல்லாம் தலைவர் என்னை மறுபடியும் பார்த்து, "உனக்கு இஷ்டமா னபடி இங்குள்ளோர் உபசரிக்கிறார்களா?" என்றார். நான், எவ்வளவு சௌக்கியத்தி லிருந்தாலும் என் தாய் தந்தை யர்களை விட்டுப் பிரிந்திருக்கும் துக்கம் என்னை ஓயாது வருத்துகிறது. இங்குள்ளவர்களில் சிலர் என்னைக் காளிக் குப் பலி கொடுக்கக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவ் வார்த்தையைக் கேட்குந் தோறும் 'ஐயோ! தாய் தகப்பன் பேச்சைத் தட்டி வந்ததின் பலன் இதுவோ!' என வருந்துகிறேன். சிலர் இத்தலைவனது மகளை எனக்குக் கலியாணம் செய்து கொடுத்து, இங் கேயே வைத்துக் கொள்ளப் போகிறார்கள் என்றார்கள். 'நாட்டில் சிறப்போடு நான் விவாகம் செய்து கொண்டு வாழாமல் கள்ளன் பெண்ணைக் கலியாணம் செய்து துஷ் கிருத்தியங்களை ஆபரணமாய் வகித்து வாழ வேண்டுமா!' என ஏங்குகிறேன். இந்த மலைப் பிரதேசத்தில் இந்தக் கட் டடங்களுக்குச் சமீபமான சில இடங்களுக்குப் போகவும் திரும்பி வரவும் வழி தெரிகிறதே யன்றி மற்றப்படி தப்பி ஓடிப் போவதென்றால் வழியே தெரியவில்லை; நான் என்ன செய்வேன்! ஒரு நாளாவது இரவில் நான் தூங்கும் வழக்க

யில்லை; பகற்காலத்தில் தலைவன், கூலியர்களால் கொள்ளை யிட்டுக் கொண்டு வரப்பட்ட பொருள்களைப் பங்கிடுவான். அவரவர்கள் இன்னின்ன வேலைகள் செய்ய வேண்டியது என்று கட்டளை யிடுவான். நாட்டிற்குப் போய் நல்ல சாமான்கள் வாங்கி வரச் சிலரை அனுப்புவான். அந்தந்த கிராமங்களில் தனக்கு வர்த்தனை யாகக் கிடைக்கும் தொகை சரிவர வசூலாயிற்றா என்று கவனிப்பான். சில குமஸ்தாக்கள் இவன் சொல்கிறபடி கணக் கெழுதுவார்கள். நான் இந்த வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு பொழுது போக்குவேன். தலைவன் இவ்விடத்தை விட்டு வெளியே போவது வெகு அபூர்வம். நான் வந்தது முதல் ஒருநாளாவது வெளியே போகவில்லை; சதா தான் வைத்துக் கொண்டிருக்கிற ஸ்த்ரீயோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருப்பான். அவனைப் பார்க்கவும் பயமா யிருக்கும். இக் கொடியோனை விட்டு நான் எப்படித் தப்பித்துக் கொண்டு போகப் போகிறேன்! நான் ஒருவன் இப்படி அகப்பட்டுக் கொண்டிருக்கத் தாங்கள் இந்த இடத்திற்கு எப்படி வந்தீர்கள்?" என்றான்.

ரஞ்சித் — "சினேகரே! நான் சொல்லும் அந்தரங்கத்தை யாரிடமும் வெளியிடக் கூடாது; இம்மலைக் குறவர்களால் கஷ்டப்படும் உங்களையும் இவர்களால் அடிக்கடி கொள்ளைக் குள்ளாகும் நாட்டுப் பிரஜைகளையும் நல்வாழ்வடையச் செய்யும் பொருட்டு, இங்கு வந்திருக்கிறேன். எப்படியாவது இவர்களைப் பிடித்து வதம் செய்கிறேன். நீர் எப்போதும் போல அவர்களுக்கு நேசமாயிருந்து, நான் எந்தெந்தச் சமயத்தில் எதெது தெரிந்து கொள்ள விரும்புகிறேனே, அததை மட்டும் மனதில் கொஞ்சம் கூட கபடமில்லாமல் எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். நான் இருப்பது பரத்பூர், ஓர் இராணுவ வீரனது மகன்; இக்

கொள்ளைக் கூட்டத்தாரால் அடிக்கடி நேரிடும் துன்பங்களை உணர்ந்து மனம்தாளாமல், நான் செத்தால் சாகிறேன் என்று மனம் துணிந்து இங்கு வந்தேன். இன்றே துஷ்டத் தலைவனை என் கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லத் தீர்மானித்தேன். தூங்குகிறவனைக் கொலை செய்யக்கூடாது என்று பேசாமல் திரும்பினேன்" என்று தன்னுடைய சமாசாரங்களை விபரமாய்ச் சொன்னான்.

உபேந்திரநாத் — "ஐயா! தாங்கள் இவர்களிருக்குமிடத்தைத் தேடி எவ்வளவோ சிரமப்பட்டு வந்ததால், மற்றக் காரியத்தையும் தங்கள் இஷ்டம்போலப் பூர்த்தி செய்வீர்கள். அதற்குத் தடையில்லை. தாங்கள் நினைத்தபடி, இந்தத் தலைவனை முதலில் துப்பாக்கியால் சுட்டிருந்தால், அந்தத் துப்பாக்கிக் குண்டுகள் அவன் மேல் படா. உடனே, அவன் எழுந்து வந்து உங்களைப் பிடித்து வதம் செய்திருப்பான். நல்லவேளை நீர் தப்பித்துக்கொண்டீர்! அவனிடத்தில் ஏதோ ஒருவிதமான வித்தை இருக்கிறதாம். அதனால், அவன் மேல், விழும் குண்டுகளும் கத்தி வெட்டுகளும் படாமல், அவன் காலின் கீழ் விழுந்து விடுமென்று இங்குள்ளார் அடிக்கடி சொல்லிக் கொள்வதை நான் கேட்டிருக்கிறேன். அன்றியும் அவனிடத்தில் அநேக பச்சிலை மூலிகைகள் உண்டு. ஆகையால் அவனை, எவ்வளவு பெரிய இருப்புச் சங்கிலிகளைப் போட்டுக் கட்டினாலும், ஒரு நொடியில் அறுத்து விடுவானாம்! இவ்வித அபூர்வமான செய்கைகள் இவன் வகித்திருப்பதால், இவனை எதிர்த்து வதம் செய்ய எவராலும் முடியாது. அதனால், இவன் வெகு காலமாக தப்பித்துக்கொண்டு வருகிறான். இவன் நீங்கலாக மற்றக் கூலியர்கள் யாராவது சிலரைக் கொல்லலாம். அப்படிக் கொன்றாலும் ஒரு பிரயோசனமுமில்லை" என்றான்.

ரஞ்சித் — இந்த வார்த்தைகளைக் கேட்டதும், "இதென்ன பெரிய விபரீதமாக இருக்கிறதே!" என யோசித்து, "நண்பரே! எப்படியிருந்தாலென்ன! என்றால், ஆனமட்டும் பார்க்கிறேன்! பொழுது விடியும் நேரமாயிற்று; நான் போகிறேன்! நீரும் படுத்துக் கொள்ளச் செல்லும். நாளைய தினம் இராத்திரியும் இங்கு வருகிறேன்; தாங்கள் இங்கு வந்து என்னைச் சந்தியுங்கள். நாளைய பகல் பொழுதில் தலைவனை நான் நேரில் வந்து பார்க்க வேண்டுமானால், எப்படிப் பார்க்கலாம்? எப்பொழுது வரலாம்?"

உபேந்திரநாத் — "அவனைப் பகலில் பார்க்கும் சமயம், சாயங்காலம் ஐந்து மணிக்கு மேல் தான். காலையில் பத்து மணிக்கு மேல் தான், தன் படுக்கையை விட்டெழுந்திருப்பான். அவன் போஜனம் முதலியது செய்து முடித்துக் கொள்ளப் பகல் ஒரு மணி ஆகும். அதற்குமேல், வெளியே சென்றிருப்பவர்களை விசாரிப்பான். ஐந்து மணிக்கு மேல் தான், சற்று ஓய்வு நேரம். அப்பொழுது பார்க்கலாம்"

ரஞ்சித் — "நான் திடீரென அவனை வந்து காணலாமா?"

உபேந்திரநாத் — "முடியாது; முதலில் நீர் வெளியே நின்று, வந்திருக்கும் சமாசாரத்தைத் தெரியப்படுத்த வேண்டும்; அதன்பின் அவன் வரச்சொன்னால், செல்லலாம். இல்லாவிட்டால், போய்விட வேண்டியது தான். இது வரையில், யாரும் இங்குவந்ததில்லை; இங்குள்ள கூலியர்கள் நான் சொல்கிறமாதிரி செய்கிறார்கள்; தங்கள் விஷயத்தில் எப்படி அபிப்பிராயப் படுகிறாரோ, தெரியாது"

ரஞ்சித் — "சரி, போகிறேன்; சௌகரியமானால், வந்து பார்க்கிறேன்" என்று குளத்திலிருந்தபடியே, தன் ஜாகைக்குச் சென்று ஹாலில் படுத்துக் கொண்டான்.

"துப்பாக்கிக் குண்டுக்கும் கத்தி வெட்டுக்கும் சளையாத ஒருவனை, நான் எப்படி ஜயிக்கப் போகிறேன்!" என்கிற மனோ வியாகூலம் அவனை உபத்திரவஞ் செய்தபடியால் தூக்கமில்லாமல், வழக்கம்போல் எழுந்திருந்து, அங்குமிங் கும், அலைந்துகொண் டிருந்தான். அவன் முகம் முற்றி லுமே வேறுபட் டிருந்தது. உட்டானி மட்டும் "தாங்கள் என்ன ஒரு மாதிரியா யிருக்கிறீர்களே!" என்று கேட்டாள். இவன், "அநாவசியமாய் ஒரு மனிதன் எத்தனை நாளைக்கு ஓரிடத்தில் உட்கார்ந்துகொண் டிருப்பான்? ஏதோ காலம் வளர்ந்துகொண்டே வருகிறது! உனது பிதாவிடம் நான் நேரில் சென்று கேட்போ மென்றாலும் வேண்டா மென்கி றாய்; என்ன செய்யலாம்!" என்றான்.

உட்டானி—"போக வேண்டாமென நான் உங்க ளுக்குச் சொல்லவில்லை. என் பிதா என்னைக் கலியாணம் செய்து கொடுப்பதற்காக வெகு நாள் பிரயாசைப்பட்டு நல்ல அழகுள்ள ஒரு வாலிபரைக் கொண்டுவரச் செய் திருக்கிறார்; அவர், தாங்கள் வந்த பொழுதே வந்திருக் கிறாரென நினைக்கிறேன். தங்களை நான் பாணிக்கிர கணம் செய்வதாய் நிச்சயித்த பின், அவரது வரவை இங்கு அடிக்கடி வரும் கூலியர்களால் நான் தெரிந்து கொண்டேன். நான் அவரை, வேண்டாம் என மறுத்து விட்டேன். அன்றியும் அவ் வாலிபர் எனக்கு இளையவ ராம். ஸ்த்ரீகள், இளையவனான புமானை, மணப்பது பாப மல்லவா? இதை நான் சொன்னதனால் என் பிதா, என் மீது கோப மடைந்தார். எதையோ யோசித்துக் கொண்டு ஒன்றும் பதில் சொல்லாம லிருக்கிறார். தங்கள் சமாசாரத் தையும் அவருக்குத் தெரியப் படுத்தினேன். அதற்கும் ஒன்றும் பதில் இல்லை. தாங்கள் இங்கு எப்படி வந்தீர்க ளென விசாரித்தாராம். தாங்கள், தாயிடம் கோபித்துக்

கொண்டு இம்மலைக்குத் தபசுபுரிய வந்ததாகவும், மலையில் கொஞ்ச நாள் வாசம் செய்தபடியால் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாமல் நீரோடையின் அருகில் பிராணபத்தாய் இருந்ததாகவும், அதை நான் கண்டு எடுத்து வந்து காப்பாற்றி வைத்துக் கொண்டிருப்பதாகவும் நான் எல்லாரிடமும் சொன்னபடி கபூலியர்கள் தெரிவித்தார்களாம். தாங்கள் இங்கு இருப்பீர்களோ அல்லது ஓடிவிடுவீர்களோ என்ற சந்தேகம் கொண்டு பேசாது இருக்கிறதாகத் தெரிகிறது. தாங்கள் நினைப்பதுபோல அவரைப் பார்க்கப் போனால், 'நமது எண்ணம் தெரியாமலும், உத்தரவை எதிர் பார்க்காமலும் நமது மகளை, வசியப் படுத்திக் கொண்டானே!' என்று கோபம்கொண்டு தங்களை ஏதாவது செய்துவிட்டால் என்ன செய்கிறது! நான் விசாரித்ததில், யாரும் திருப்திகரமாய்ச் சொல்லவில்லை. அதனால் தான் பயப் படுகிறேன்"

ரஞ்சித் — "உன் பிதா இஷ்டப்படி அவர் கொண்டுவந்திருக்கும் வாலிபனை நீ மணந்து கொள்கிறது தானே!"

உட்டானி — "இந்த வார்த்தையைத் தாங்கள் சொல்வீர்களென்று தான் இது வரையில் பிரஸ்தாபிக்காமலிருந்தேன்"

ரஞ்சித் — "உன் பிதாவை இன்று நான் போய்ப் பார்க்கிறேன்! அவர் உன் விஷயத்தில் சரியான அபிப்பிராயம் கொடுத்தால் பார்க்கிறேன். இல்லாமல், என்னைக் கோபித்து கொண்டு ஏதாவது தண்டனை விதிப்பதானால், என் கைத் துப்பாக்கியால் அவரைச்சுட்டு வீழ்த்தி விட்டு இங்கு வந்து உன்னை தூக்கிக் கொண்டு போய் விடுகிறேன்"

உட்டானி — "ஏன் வீம்பு பேசுகிறீர்கள்? அவரைச் சுடுவது முடியாத காரியம் என்று முன்னமேயே சொன்னேனே!"

ரஞ்சித் — "ஏன் முடியாது? துப்பாக்கிக் குண்டு அவர் மீது பாயாதா?"

உட்டானி — "ஆம், பாயாது: அக்குண்டு அவர் காலில் விழும்; கத்தி வெட்டு அவர் மீது படாமல் பூமியில் விழும்.

ரஞ்சித் — "அதேன் அப்படி?"

உட்டானி — "ஏதோ அவரிடத்தில் உள்ள மந்திர சக்தி என்கிறார்கள்"

ரஞ்சித் — "ஆனல் எத்தனை நாளைக்கு இங்கிருப்பேன்?"

உட்டானி — "தாங்கள் தான் ஏதோ ஒரு காரியமாக இருக்கிறேன் என்றீர்களே!"

ரஞ்சித் — "என்ன காரியம்? உன்னைச் சதா பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்கிற பெரும் காரியம் தான்; வேறு என்ன?"

உட்டானி — "ஓஹோ! இவ்வளவு பிரேமை என்னிடத்தில் வைத்து விட்டீரா!" என நினைந்தவளாய், "தாங்கள் அவரோடு இருப்பது உண்மையானல், இத்தனை நாள் என்னைக் காந்தர்வமாக மணந்து கொண்டிருக்க மாட்டீர்களா? கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று தாங்கள் பிடிவாதம் பிடிப்பதால் தானே, அவர், இவர்கள் எல்லாரையும் யோசனை கேட்க வேண்டியதாகிறது!"

ரஞ்சித் — "உன் இஷ்டப்படி நான் காந்தர்வ விவாகம் செய்து கொண்டால் என்பாடு அதோகதி தான்: உன்னைப்

பத்துப் பேர்றிய கலியாணம் செய்து கொள்ள ஒருவன் உன் தகப்பனுல் நிச்சயிக்கப்பட்டு வந்து நிற்பான். அவனிடத்தில் என்னை ஒப்புவித்துவிட்டு, 'ஓஹ்ஹோ லக்ஷ்மணு!' என்று தலையில் கையை வைத்துக்கொண்டு ஓடவேண்டியதுதான்; ஒரு சமயம் நான் போக இஷ்டமில்லாமல் இங்குத் தங்கினுல், உனக்கு வேலை செய்துகொண்டிருக்கலாம்; நீயும் எனது வேலைக்காரன் இவன் என்று கௌரவமாய், கேட்பவர்களுக்குச் சொல்லிக்கொள்வாய்''

உட்டானி — ''இதனுல்தான் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறீர்களோ! என் உயிர் போகும் வரையில் என் சிந்தையினுள்ளே புதைத்து வைத்திருக்கும் தங்களை விடேன். தாங்கள் மனம்போனபடி வீண் வார்த்தைகள் சொன்னுல், நான் மானம் தாங்கமாட்டாமல் பிராணனை விடுவேன். இனித் தாங்கள் என் விஷயமாய்க்கொண்ட கெட்ட எண்ணத்தை விட்டு விடுங்கள். இது முதல் நான்கு தினத்திற்குள் என் பிதாவைத் தாங்கள் பார்க்கும்படியான ஏற்பாடு செய்கிறேன்; அவர் தங்களைச் சம்மதிக்காவிட்டால், நாம் இருவரும் தப்பித்துக்கொண்டு ஓடிவிடும்படியான மார்க்கத்தைச் செய்கிறேன்''

ரஞ்சித் — ''இங்குள்ள இத்தனைபேர் காவலர்களைவிட்டு எப்படித் தப்பித்துக்கொள்ள முடியும்?''

உட்டானி — ''உங்களிடம் கட்டாயம் சொல்லத்தான் வேண்டுமோ?''

ரஞ்சித் — ''சொன்னுல்தான் நீ என்னிடம் நம்பிக்கையுள்ளவளாக நினைக்கப்படுவாய்''

உட்டானி — ''இங்குள்ள யாவரையும் தூங்கச்செய்து போய்விடுவேன். யாரையும் தூங்கும்படி செய்ய ஒரு

பச்சிலை உண்டு. அதைக் கசக்கி ஒருவர் மூக்கில் காட்டினால், அப்படியே அயர்ந்து தூங்கி விடுவார்கள்''

ரஞ்சித் — "அதை எனக்குக் காட்டக்கூடாதா? உனக்கு யார் காட்டிக் கொடுத்தது?"

உட்டானி — "எனக்கு என் தாயார் காட்டிக்கொடுத்தாள். உங்களுக்குக் காட்டாமல் வேறுயாருக்கு காட்டப் போகிறேன்?" என மலைப்பக்கம் அழைத்துப் போய் பச்சிலையைக் காட்டினாள்''

ரஞ்சித் — "உனக்குத் தெரிந்த இன்னும் இதர மூலிகைகளை எனக்குக் காட்டுவாயா?"

உட்டானி — "எனக்குத் தெரிந்தவற்றைக் காட்டி விடுகிறேன். இதோ பாருங்கள்; இந்தப் பச்சிலை எப்படிப்பட்ட வெட்டுக்காயம் இரணத்தையும் ஒரு நிமிஷத்தில் ஆற்றி விடும். இந்த வேரைப் பாருங்கள்; இதைக் கையில் வைத்துக் கொண்டு, குலைக்கும் நாய்முன் போட்டால், நாய் குலைக்காது; வாயைக் கட்டிவிடும். இதைப் பாருங்கள்; இந்தப் பச்சிலையைக் கண்ணில் பிழிந்து கொண்டால், இருட்டில் நன்றாய்க் கண் தெரியும்; இவ்வளவு தான் எனக்குத் தெரிந்தவை; நான் அறிந்தது கூட இந்த கபூலியரில் சிலருக்குத் தெரியாது. எனது பிதாவுக்கு எத்தனையோ வகைகள் தெரியும். மாந்திரீகத்தில் மகாநிபுணர். தன் மந்திரபலத்தால் புலி, சிங்கம் முதலியவைகளைக் கட்டித் தன் கையில் பிடித்துக் கொள்வார். ஒரு மனிதனைப் பைத்தியம் பிடிக்கச் செய்வார்; தன்னோடு கூடவே எந்த ஸ்த்ரீ புருஷர்களையும், வரும்படி செய்வார். அவரது செய்கை அபாரம்''

ரஞ்சித் — "நல்லது, உட்டானி! நீயும் மற்றவர்களும் உன் பிதாவான கள்வர் தலைவனைப்பற்றி அடிக்கடி பிரமாதமாய்ச் சொல்கிறீர்கள்! அப்படிப் பட்டவரை நான்

பார்த்துத் தரிசிக்காமல் இனி இருக்க மாட்டேன். நீ சொன்ன தவணைப்படி நாலு நாளைக்குள்ளாக அவரை நான் பார்க்கும்படி செய்ய வேண்டும்; இதோ வருகிறது யார்?''

உட்டாணி — "ரிஷி வருகிறார்''

ரஞ்சித் — "நீதான் அவருக்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டுமென்றாய்! எங்கிருந்து அவர் வருகிறார்? ஏது, நடக்கச் சக்தி உள்ளவராக ஆனதன்றி, பார்ப்பதற்கு உடம்பு கொஞ்சம் தேறி யிருக்கிறதாகவும் தெரிகிறது. அவர் யாரென விசாரித்தாயா? பத்து நாளாய் உனது ஆதரணையின் கீழிருக்கிறாரே!''

உட்டாணி — "நான் அவரிடம் என்ன பேசவேண்டி இருக்கிறது? ஒன்றுமில்லை. அவர் இருக்கிற வரையில் இருக்கட்டும். இருக்க இஷ்டமில்லா விட்டால், போகட்டுமெனப் பேசாதிருக்கிறேன்''

ரஞ்சித் — "அவரைக் கூப்பிடுகிறேன். ஓய் பெரியவரே! இப்படி வாரும். தங்கள் நாமதேயம் என்னவோ!''

சட்டோஜி — "என் பெயர் சட்டோஜி''

ரஞ்சித் — "தாங்கள் இம் மலையில் என்ன உத்தேசமாய் வந்தீர்களோ?''

சட்டோஜி — "ஏதோ மனக்கவலை கொண்டு வந்தேன். உயிர் போகுந் தறுவாயிலிருந்த என்னைக் காப்பாற்றும்படி செய்தீர்கள்; உயிர் பிழைத்தேன். நல்ல சாப்பாடு போடுகிறார்கள். உடம்பு தேறிவிட்டது. அனுகூல தம்பதிகளான உங்களைப் பார்த்து ஆனந்தப் பட்டுக் கொண்டிருக்கிறேன்''

உட்டாணி — "இம் மலையில் மனக்கவலையை ஒழிக்க, தவம்புரிய வந்தீரோ!''

சட்டோஜி — "ஆம் தாயே!''

உட்டானி — "தவம் புரிவதை விட்டுவிடும்; இஷ்டமானல் நல்ல பெண்ணைப் பார்த்து, இங்குள்ள கன்னிகைகளில் ஒருத்தியை உமக்கு விவாகம் செய்விக்கிறேன்; தம்பதிகளோடு இங்கிருக்கலாம்"

சட்டோஜி — "இந்த வார்த்தையைக் கேட்டதும், "ஐயோ! தவளா! என்னை அநியாயமாய் யாரும் பரிகசிக்கும்படி விட்டுப் போய் விட்டாயே! நான் என்ன செய்வேனடி என் கண்ணே! படுபாவி முகந்தாள் உன்னை மோசம் செய்தாளே! உன்னால் நான் ஜீவனை விட்டு விட இங்கு வந்தேனே!" என எவ்வளவோ தன் விர்த்தாந்தங்களைச் சொல்லி, அழ ஆரம்பித்தான். இவனது அழுகையை மிகுந்த சிரமப்பட்டு ரஞ்சிதசிங்கும் உட்டானியும் நிறுத்தினார்கள்.

பிறகு ஒருவாறு சட்டோஜி, தனது அழுகையை நிறுத்தி, தனது சமாசாரங்களை ஆதியோடந்தமாய்ச் சொன்னான். இதைக்கேட்ட ரஞ்சிதசிங் மனம் பொறுக்காமல், "ஐயா! தாம் இதற்காக வருந்த வேண்டியதில்லை; நான் கூடிய சீக்கிரம் நாட்டிற்குப் போவேன்; எப்படியாவது தங்கள் சம்சாரத்தைத் தங்களோடு சேர்த்து விடுகிறேன்; பயப்பட வேண்டாம்" என்றான். உட்டானியும் அவனுக்குத் தைரியம் சொல்லி, "தாங்கள் போகும் வரையில், எங்களோடு கூடவே இருங்கள்" என்றாள். ரஞ்சிதசிங்கு, தனியாக இவனை அழைத்துப் போய், "இம்மலையை விட்டு கீழே இறங்கச் சமீபமான மார்க்கம் நான் காண்பிக்கிறேன். அவ்வழியாக நான் சொல்லும் ஊர் சென்று, எழுதிக் கொடுக்கும் கடிதத்தை யார்க்குக் கொடுக்கும்படி எழுதுகிறேனோ, அவர்களிடம் சேர்ப்பிக்க வேண்டும்; இந்த சமாசாரத்தை நீர் யாரிடமும் சொல்லக் கூடாது; நான் இங்கு ஓர் அவசியமான காரியத்

தை உத்தேசித்து வந்திருக்கிறேன்; அதன் விபரம் பின்னல், உமக்குத் தெரியும்: முதலில் உம்மைப் பார்த்ததும் இவ்விதமான என் கோரிக்கைக்கு நீர் உடன் படுவீர் என்று தான் உம்மை நான் இங்கு அழைத்து வந்தேன். நீர் வெளியே போவது யாருக்கும் தெரியக்கூடாது: எங்கே சென்றீர் என யாராவது கேட்டால் மலையிலுள்ள லிங்கஙைத் தரிசிக்கச் சென்றிருந்தேன் எனச் சொல்லி விடும். இந்த உபகாரம் நீர் செய்தால் இதற்குப் பதிலாக உம்முடைய சம்சாரத்தை எங்கிருந்தாலும் கண்டு பிடித்து உம்மோடு சேர்த்துவிடுகிறேன்; என்ன சொல்கிறீர்?'' என்றான்.

சட்டோஜி — ''தாங்கள் சொல்வதைச் செய்ய என்ன ஆக்ஷேபம் சொல்லப் போகிறேன்! என்னை ரக்ஷித்த தங்களுக்கு நான் அடிமை அல்லவோ! தாங்கள் எனக்கு சொல்லும் சமாசாரத்தை எவரிடமும் சொல்ல மாட்டேன். இதை உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்'' என்றான்.

ரஞ்சித் — ''நீர் உண்மையான மனிதர் என்றே நான் தீர்மானித்துக்கொண்டேன். இது முதல் நாலு நாட்கள் வரையில் எனக்கு எந்த வேலையுமில்லை. அதுவரையில், இம் மலையிலிருந்து நேராக புமியிலிறங்கும் மார்க்கம் உமக்குத் தெரியாவிட்டாலும், நான் என்னுடைய ஓழிந்த நேரங்களில் உமக்குக் காண்பிக்கிறேன். நீர் கவனித்துக்கொள்ளும். நான் நேரில் உம்மிடம் பேச சௌகரியமில்லாவிட்டாலும் ஒரு மனிதனை உம்மிடம் அனுப்புவேன். அவனிடம் என்னால் அனுப்பப்பட்ட தபாலை நீர் பெற்றுக்கொண்டு அதன்படி நீர் நடக்கவேண்டியது. இவ்வளவு தான் நான் உம்மிடத்தில் அந்தரங்கமாகச் சொல்லவேண்டிய சமாசாரம். இனி நீர் போகலாம். என்னை நீர்

அடிக்கடிப் பார்க்கும்படி நேர்ந்தாலும் உம்மிடத்தில் நான் பேசவில்லையென மனஸ்தாபம் கொள்ளவேண்டியதில்லை. போய்வாரும்'' என்று சொன்னான். இருவரும் அங்கிருந்து பிரிந்தார்கள். ரஞ்சிதசிங்கு தான் செய்யவேண்டியதைப் பற்றி சற்றுநேரம் யோசித்துவிட்டுப் பிறகு தன்னுடைய இருப்பிடம் சேர்ந்தான். மறுநாள் பன்னிரண்டு மணிக்கு, இவன் வெளியில் போக, சட்டோஜியையும் கூப்பிட்டான். இருவரும் ஏதோ மலைகளில் வேடிக்கை பார்ப்பதுபோல் வெளியில் சென்றார்கள். ரஞ்சித் சட்டோஜிக்கு பூமியிலிறங்கும் மார்க்கத்தைக் காட்டினான். அது முதல், இரண்டு, மூன்று தினங்களும் சட்டோஜிக்குக் குறுக்கு வழியின் மார்க்கத்தைச் சரியாக அறிந்து கொள்ளும்படி தெரிவித்தான். உட்டானி சொன்னபடி தலைவனைப் பார்க்கவேண்டியதற்காக அவள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறாளோவென ரஞ்சித் அவளைக் கேட்க, அவள், "நான் என்னுடைய பிதாவிற்குத் தங்களது வருகையைப் பற்றித்தெரிவித்தேன்; அவர் நாளையதினம் உங்களை வரும்படி சொல்லி யிருக்கிறார். தாங்கள் மிகவும் மரியாதையாக அவரிடத்தில் சென்று தங்களைப்பற்றிய விஷயங்களை விபரமாகச் சொல்லுங்கள். அவர் ஒப்புக் கொள்வார். நான் ஏற்கனவே அவருக்குத் தெரியப்படுத்தின பிரகாரம், அனுசரித்துச் சொல்ல வேண்டியது. நான் ஒன்று சொல்லித் தாங்களொன்று சொன்னால், அவர் வித்தியாசமான எண்ணங்கொண்டு கோபத்தை யடைவார். நமது காரியமும் நிறைவேறாமற் போகும்'' என்று தெரிவித்தாள்.

ரஞ்சித் — "சென்ற நாலு தினங்களாக உபேந்திரனாத் லாலாவைப் பார்க்கவில்லை. அவர் குளத்தங்கரையில் வந்து எனக்காகக் காத்திருந்து போயிருப்பார். நான்

வாராத காரணம் தெரிவிக்க ஒன்றும் இல்லை. இனி என் வார்த்தையை அவர் எப்படி நம்புவார்? 'ஒருவருக்கு ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டு அதற்கு மாறாக நடந்தால், பிறகு எவ்வளவு சமாதானம் சொன்னாலும் பிரயோஜனமில்லை; நான் என்ன செய்வது?'' என மனதில் கொஞ்சம் கஷ்டத்தை வகித்தவனாய், இன்றையதினமாவது இரவில் போய் அவரிடம் சமாசாரத்தைத் தெரிவித்து விடுவோம்'' என்ற உத்தேசத்தோடு இருந்தான். அன்றிரவு பன்னிரண்டு மணிக்கு இவன் முன்செய்யும் வழக்கம்போல, எழுந்து, முன்போன வழியல்லாமல் லாலா காண்பித்த குறுக்கு மார்க்கமாகத் தலைவனது கட்டடத்திற்குப் போக உத்தேசித்துக் குளக்கரையில்போய்ப் பார்த்தான். தான் நான்கு தினங்களுக்கு முந்திப் பேசிக்கொண்டிருந்த தடாகத்தின் படிக்கட்டில் உபேந்திரனைக் உறங்குவதைக் கண்டான்; இவனைப் பார்த்ததும் ரஞ்சிதசிங்கு, ''பார்த்தையா! இவ்வாலிபன் எவ்வளவு நம்பிக்கையுள்ளவனாக இருக்கிறான்? நான் வருகிறேன் என்றவன், வராமலிருந்தும் எனக்காக இங்குவந்து காத்துக்கொண்டிருக்கிறான். என்னைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் இவனுக் கதிகமாக விருக்கிறதென்று தெரிகிறது'' என அவனைத் தட்டி எழுப்ப, உபேந்திரனைத் களங்கமற்ற மனதோடு மெள்ள எழுந்து, இவனுக்கு வந்தன மளித்து, ''நேசரே! உமது வரவை எதிர்பார்த்து மூன்று நான்கு தினங்களாக இவ்விடம் வந்து காத்துக் கொண்டிருக்கிறேன். தாங்கள் ஏதோ நிர்ப்பந்தத்தினால் வாராமலிருக்கிறீர்களென்று தீர்மானித்தேன். இன்றாவது வந்தீர்களே! நிரம்ப சந்தோஷம்'' என்றான்.

ரஞ்சிதசிங், ''தோழரே! நான் வராமைக்குக் காரணம் அதிக விசேஷமானது ஒன்றுமில்லை. பகல் காலத்தில் வேறு ஒரு காரியமாக அதிக நேரம் அலைந்து திரிந்ததனால்,

இரவு நான் பங்களாவுக்கு வந்ததும், போஜனம் செய்து உடனே படுத்துக்கொண்டு அயர்ந்து தூங்கிவிட்டேன். இயற்கையிலேயே இரவில் அதிக நேரம் நித்திரை பிடிக்காத நான், சென்ற சில தினங்களாக என்னையும் அறியாமல் தூங்கி விடுகிறேன். இன்று தங்களை எப்படியாவது பார்க்கவேண்டு மென்று ஒரே பிடிவாதமாய்த் தூங்காம லிருந்து இங்கு வந்தேன். வேறு விசேஷமொன்றுமில்லை. நானிந்தத் தலைவனை ஜயித்து, இந்தக் கூலியர்கள் யாவரையும் வதைத்து, உங்கள் யாவரையும் எப்பொழுது விடுவிக்கப் போகி றேனோ என்ற துக்கம் எனக்கு அபாரமாயிருக்கிறது. ஈசுவரனது கிருபையில்லாமல் உலகத்தில் எக்காரியமும் நடக்காது. 'நான் ஜயிக்கிறேன். நான் அக்காரியத்தை முடிக்கிறேன்' என்று சபதம் கூறுகிறவர்கள் சுத்தபாமரர் களே! நான் அவ்வாறு நினைந்து, நினைந்து, நான் கொண்ட தைரியங்களெல்லாம் விருதாவாய்ப்போயிற்று. இனி ஏதா வது பேதத்தினுல் அல்லது, சமாதானத்தினுல் காரியத்தை நிறைவேற்ற வேண்டுவதில் முயற்சி செய்ய வேண்டியது தவிர வேறு ஒன்றுமில்லை. உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்றே வந்தேன். கடவுள் காப்பாற்றுவார். ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நாளையதினம் தலைவன் தன்னை, நான் வந்து, பார்க்கும்படி உத்தரவிட்டிருக்கிறு ஹம்! அப்பொழுது நான் பகிரங்கமாக வருவேன். நடக்கும் வியவகாரங்களை நீங்களே தெரிந்து கொள்ளலாம். இனி எனக்காகத் தாங்கள் இங்கு வந்து காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. நீங்கள் இங்கு வந்திருப்பதை அவர்கள் அறிந்து கொண்டால் விபரீதமாகும். போங்கள்'' என அவனை அனுப்பிவிட்டு, தான் தனது ஜாகைக்குத் திரும்பி வந்தான். இரவு முழுவதும் தூக்கமில்லாமல் பொழுதுவிடி யும் நேரத்தை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தான். தான்

தலைவனைக் கண்டு பேசவேண்டுமே என்ற கவலையைக் கொண்டான். மறுநாள் பொழுதுவிடிந்ததும் ஏதோ பிரமம் பிடித்தவன்போ லிருந்தான். உட்டானியிடம் இவன் பிரமாணமாய்ச் சொன்ன பிறகு, அவள் அடிக்கடி இவனிடம் வந்து பேசுவதில்லை. ஏதாவது வேலை யிருந்தாலன்றி வரமாட்டாள். காலை ஆகாரம் முடித்துக்கொண்டதும் அவள் வரவை எதிர் பார்த்தான், வரவில்லை. தானும் கூப்பிடச் சொல்ல வெட்கப்பட்டவனாயிருந்தான். பகல் போசனமும் உண்டு, பகல் காலமும் பெரும்பாலும் முடிந்தது. சுமார் நாலரைமணிக்கு, உட்டானி இவனிடம் வந்து, "தாங்கள் போகலாம், தாங்கள் கோரிய சகல காரியமும் முடிந்து ஜயம் பெற்று வரக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். உங்களுக்கு வழிகாட்ட இந்த கபூலியக் காவலன் பின் வருவான்" என்று சொல்லிப் போனாள். உடனே ரஞ்சிதசிங்கு, தனது உடுப்புகளை அணிந்து கைத்துப்பாக்கியைக் கையில் பிடித்துக்கொண்டு, கபூலியன் பின்னால் தலைவனது மாளிகைக்குச் சென்றான். தலைவனைக் கண்டதும், அவனது காலில் விழுந்து, சலாம் செய்ய வேண்டுமென கபூலியன் சொல்லிக் கொடுத்தான். இக்காரியம் செய்வது இவன் மனதிற்கு மெத்த அருவருப்பாயிருந்தது. என்றாலும் பெண்ணைக் கொடுக்கும் முறையில் மாமனுக்குக் காலில் விழுவதனால், ஆண்மைத் தனம் குறையாது என்று எண்ணங் கொண்டான். தலைவன் வசிக்கும் கூடத்திற்குள் இருவரும் சென்றார்கள். தலைவன் ஓர் உயர்ந்த பீடத்தின் மீது உட்கார்ந்து, பின்னால் உள்ள சார்மணையில் சாய்ந்து கொண்டிருந்தான். அவனுடைய கால்களிரண்டும் பின்னப்பட்டதுபோல ஒன்றின்மே லொன்று போடப்பட்டிருந்தன. குளிருக்காக உயர்ந்த கறுப்பு சால்வையைப் போர்த்துக்கொண் டிருந்தான். கண்கள் நெருப்புப் பொறி பறப்

பதுபோல சிவந்த மேனியோடு ஜ்வலித்தன. மீசைகள் பருத்து நீண்டு முறுக்கப்பட்டிருந்தன. இவனைப் பார்த்ததும் ரஞ்சித் “எவ்வளவு கொடிய சுவபாவத்தைப் பெற்றிருக்கிறான், இந்த பரம துஷ்டன்! இவன் ஒழியவேண்டுமே!” என கடவுளைப் பிரார்த்தித்து, அவனை நமஸ்கரிப்பது போல அவன் முன்னால் வணங்கி எழுந்து மிகுந்த பயத்தை அடைந்தவன்போல ஒருபக்கமாய் நின்றான்.

தலைவன் — கபூலியனைப் பார்த்து, “இவன் தான் நமது உட்டாணியால் கோரப்பட்டுள்ள புருஷனோ?” என்றான். அவன் தலைவணங்கி, “ஆம் தங்கள் உத்தரவின்படி இங்கு அழைத்து வந்தேன்” என்றான். பிறகு தலைவன் நிமிர்ந்து உட்கார்ந்து, கொஞ்சம் புன்சிரிப்போடு கூடிய முகத்தை உடையவனாய், இவன் பக்கமாய்த் தனது முகத்தைத் திருப்பி, “அப்பா! உனது பேரென்ன? நீயும் சிறுவனாகத் தான் காணப்படுகிறாய்? ஏன் உன் தாயோடு கோபித்துக்கொண்டு கிளம்ப வேண்டும்?”

ரஞ்சித் — “சகலவித பராக்கிரமத்தோடு ஏகாதிபத்தியமாக இந்த கிரிக்கு அதிபதியாயிருந்து அதனால் அடங்கிய சமஸ்தமான ஆத்மகோடிகளையும் காப்பாற்றி ஆண்டு வரும் அரசே! கம்பீரமான சுபாவத்தோடு பார்ப்பவர்கள், மதிகலங்கி அவர்கள் ஆயுளை உங்கள் கத்திக்குக் கொடுத்து விடச் சித்தமாயிருக்கிறார்கள். ‘உயிர்ப்பிச்சை கொடுத்தால் நாங்கள் பிழைக்கிறோம்’ என எல்லாரும் பிரார்த்திக்கும் படியான வல்லமையைப் பெற்ற புஜபல பராக்கிரமா! கள்வர்களாகிய காட்டு மிருகங்களுக்கு அதிபதியான புருஷ சிங்கமே! ராஜகம்பீரா! ராஜமார்த்தாண்டா! அபயம்! என்னைக் காப்பாற்றும்படி தங்களைச் சரணடைந்தேன். நான் இம் மலையில் பிரவேசித்து, சுமார் நான்கு மாதங்களுக்கு

யோசனை. என் பெயர் ரஞ்சிதஸிங்கு; க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்தவன். தங்கள் குமாரி என்னை மணக்க விரும்பினாள். உங்கள் அனுமதியில்லாமல் நான் ஒப்புக் கொள்ள மாட்டேனென கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டேன். தாங்கள் அதற்காக அனுமதித்தாலும் அனுமதிக்காவிட்டாலும் தங்கள் குற்றேவலர்களில் ஒருவனாயிருந்து காலம் கழிக்கத் தீர்மானித்து விட்டேன்; இது தான் என்னுடைய சமாசாரம் — பிறகு தங்கள் உத்தரவுப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்"

தலைவன் — இவனது ஸ்தோத்திரமான வார்த்தைகளால் உளம்பூரித்து, "நம் குலத்தை மேன்மைப்படுத்த வந்த இளம் காளை — இவனை நான் முன்னமேயே பார்க்காதிருந்தது மதியீனம்! நான் கொண்டுவரச் செய்த வேறு ஜாதியானை இவனிலும் இளையோனை நமது பெண் மணக்க விரும்பாமலிருந்தது நல்லதாயிற்று' தேர்ந்த புருஷனைத் தான் இவள் கோரியிருக்கிறாள்; இவன் நம்மிடத்திலேயேயிருக்கப் பிரியப்படுகிறான் இவனைப் பார்த்தால் நல்ல பராக்கிரமசாலி என்பதற்கு ஆக்ஷேபமில்லை. இப்பொழுதே எனது அருமை மகளை இவனுக்குப் பாணிக்கிரகணம் செய்து என்னோடு கூடவே வைத்துக் கொள்கிறேன்; எனக்கும் வயதாய் விட்டதால் வெளியே போக முடியவில்லை. இவன் எனது தலைமை ஸ்தானத்தை எனக்குப் பின் வகித்து என் பெயர் அழியாதபடி பார்ப்பான்; நான் ஏற்கெனவே கொண்டு வந்த வாலிபன் அழகுள்ளவனாயினும் கொஞ்சம் கூடத் தைரியமில்லாதவன். அவனைக் கொண்டு வந்ததும் வீணாகாதபடி எனது இளைய சம்சாரத்தின் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுக்கிறேன்; அப்பெண் கேவலம் சிறிய பெண்ணாயிருந்தாலும் பாதகமில்லை" என யோசித்தவனாய், "அப்பா சிறுவனே ரஞ்சிதஸிங்கு! நீ எனக்

கேற்ற மருமகனெனத் தெரிந்தேன். நீ என் ஸ்தானத்தை வகித்து, இங்கேயே எப்போது மிருக்கலாம்; வெகு சீக்கிரமாக நல்ல நாளில் உட்டானியை உனக்கு விவாகம் செய்து கொடுப்பதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. உனக்கு வேண்டிய சௌகரியங்கள் எனது மகளால் சரியாக நடத்தப் படுகிறதா? இல்லாவிடில் நீ இங்கேயே யிருக்கலாம்'' என்றான்.

ரஞ்சித் — ''தாங்கள் எப்படி அனுமதிக்கிறீர்களோ, அந்தப்படி செய்யத் தடையில்லை''

தலைவன் — ''நீ எப்போது மிருந்த இடத்திலேயே இருக்கலாம்; அடிக்கடி என்னை வந்து பார்த்துப் போக வேண்டியது; உனக்கு ஆகவேண்டிய காரியம் ஏதாவதிருந்தால், என்னிடத்தில் தெரியப் படுத்தலாம்; உனக்கு வேண்டிய உடைகள் அடுத்த அறையிலிருக்கிறது; இஷ்டமானதை எடுத்துக்கொள்; நாட்டிலிருந்து நல்ல சாமான்கள் ஏதாவது வேண்டுமானால், அப்படியே கொண்டுவரும்படி செய்கிறேன்; நீ தற்காலம் இவ்விடத்து அனுபவம் தெரியும் வரையில், இந்த இடத்தை விட்டு எங்கும் போகக் கூடாது'' என்று சொல்லிக் கொண்டே, சிறுவன் உபேந்திரநாத் லாலாவை ஒரு கபூலியனை விட்டுக் கூப்பிடச் சொன்னான்; உபேந்திரநாத் மிகுந்த வணக்கத்துடன் இவன் முன் வந்து நின்றான்; தலைவன், ''சிறுவனே! உன்னை இங்குக் கொண்டு வந்து வீணாக வைத்திருக்கிறேனெனக் கருத வேண்டாம்; எனது இளைய மகளை உனக்கு விவாகம் செய்து கொடுக்கிறேன்: நீ மிகவும் பயந்தவனாகக் காணப்படுகிறாய்; உன்னை இதோ நிற்கிற இவர் கைவிட மாட்டார்; இருவரும் நேசராக இருந்து உங்கள் காலத்தைக் கௌரவமாகக் கழியுங்கள்; கொஞ்சகாலம் இங்கு வசித்து விட்டா

களே யானல், இங்கிருக்கும் சந்தோஷத்தால் உங்கள் ஊர் ஞாபகம் ஒழிந்து போம்; உனக்கு நான் சொல்கிறபடி செய்துகொள்ளச் சம்மதம் தானே!" என்றான்.

சிறுவன்—"ஆம், உத்தரவின்படி காத்திருக்கிறேன்" என்றான்.

தலைவன் — "நல்லது நீங்கள் போய் வாருங்கள்;" என அனுப்பி விட்டு, அன்றிரவு தனக்கு முக்கிய இஷ்டர்களான இரண்டொரு கபூலியர்களை வரவழைத்துத் தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தான். அவர்கள் அப்படிச் செய்வதுதான் சர்வோத்கிருஷ்டமான காரியம் எனச் சொல்லி விட்டார்கள்; தலைவன் நல்ல நாள் ஒன்று பார்த்து வரும்படிக்கும் மணத்துக்கு வேண்டிய சாமான்கள் சித்தஞ் செய்யும்படிக்கும் உத்தரவு கொடுத்து விட்டான். விவாக முகூர்த்தம் வெகு சீக்கிரமாகவே குறிப்பிடப்பட்டது; உட்டாணி தான், மகா புத்திமானும் அழகனுமான ரஞ்சிதசிங்குக்கு மாலையிடப் போகிறோமென மனமகிழ்ந்து, தன் தகப்பனர் மிகுந்த பக்ஷத்துடன் தனது காதலனை அபிமானித்ததற்காக, ஆனந்த மடைந்தாள். ரஞ்சிதசிங்கு "வந்த காரியத்தைப் பற்றி எந்தவிவகாரத்தையும் காணோமே! இந்த லக்ஷணத்தில் எனக்கு என் கலியாணம்? மாட்டேனென்றால் மகா பாவி சந்தேகம் கொண்டு உபத்திரவஞ் செய்வதுடன், நாம் மேற்கொண்ட காரியமும் முடியாமல் போகுமே!" என மனஸ்தாபமடைந்து, கள்வர் தலைவனை வெறுத்துத் துக்கப்பட்டான்.

விவாகத்திற்கு வேண்டிய பொருள்கள் யாவும் சித்தமாயின; நாட்டிலிருந்து அளவிறந்த சாமான்கள் வந்து கொண்டே யிருந்தன. இவர்களுக்கு வர்த்தனை கொடுக்

கும் கிராமங்களிலிருந்து தலைவன் மகள் கலியாணத்திற்காக, பெண்ணிற்கும் பிள்ளைக்குமாக வேஷ்டி புடவைகள் வந்து கொண்டேயிருந்தன: மலையிலுள்ள பெரிய மரங்களை வெட்டி அவைகளைக் கொண்டு பெரிய மணப் பந்தல், தலைவன் பங்களாவில் போட்டார்கள்; அங்குத் தபசு செய்யும் இருஷிகள் யாவரையும் அவர்களது நிஷ்டைகளைக் கலைத்துக் கலியாணத்துக்காக கொண்டு வந்தார்கள். ரஞ்சிதசிங்குக்கும், உபேந்திரநாத் லாலாவுக்கும், உயர்ந்த உடுப்புகள் நாட்டில் சித்தஞ் செய்து வந்தன; அவர்களுக்கு இஷ்டமானால் அணிந்து கொள்ள நகைகளுக்குப் பஞ்சமேயில்லை: தலைவனது பங்களாவில் அவைகள் மூலைக்கு மூலை மூட்டு மூட்டாகக் கொட்டப்பட் டிருக்கின்றன. கலியாணத்திற்குக் கபூலியர்கள் கூட்டத்தைத் தவிர வேறு யாரிருக்கிறார்கள்? நமது சட்டோஜி ரிஷியானதால் மாப்பிளைத் தோழனாக நியமிக்கப் பட்டான்; சமையல் முதலிய யாவும் கபூலியர்களே செய்தார்கள். கலியாண சாமான் யாவும் சேகரித்தது கபூலியர்களே! அவர்கள் இக் கலியாணத்தில் எந்த வேலைக்கும் உபயோகமாக இருந்தார்கள். இருஷிகள் இவர்களுடைய பயத்தால் மந்திரங்கள் கொஞ்சம் கூட விடாமல் செய்து வைக்கச் சித்தமாய் இருந்தார்கள். குறிப்பிட்ட காலத்தில் நல்ல சுப முகூர்த்தத்தில் உட்டாணிக்கும் ரஞ்சிதசிங்குக்கும், இளைய பெண் ராஜாயிக்கும் உபேந்திரநாத் லாலாவுக்கும் விவாகம் முடிந்தது. கலியாணத்தில் கபூலியர்களின் மேள வாத்தியம் பிரம்மானந்தமான ஒரே சத்தமாய் இருந்தது. கபூலிய ஸ்திரீகள், பெண்களையும், பிள்ளைகளையும் விவாகம் முடிந்ததும் தங்கள் இடுப்பில் தூக்கிக் கொண்டு ஒவ்வொருவராக ஆடினார்கள்: இதற்குத் தக்கபடி, கூட நிற்கிற வேறொருவன் தாளம் போட்டான். இக்கூத்து ஒவ்வொருவருக்கும்

முறை தவறாது விதிக்கப்பட்டிருந்தது. இப்படி நடத்து
வதை வேண்டாமெனத் தடுப்பது வழக்கத்துக்கு விரோத
மான காரியம்! ரஞ்சிதசிங்கு தன்னை ஒரு கடூலிய ஸ்த்ரீ
இடுப்பில் தூக்கிக் கொள்ளும்போது, அவளுக்கு இவன்
குழந்தையாகக் காணப் பட்டாலும் வருத்தப் பட்டான்.
இவர்கள் கூத்து மூன்று மணிக்கு முடிந்ததும், போஜனங்
கள் யாவருக்கும் நடந்தன; கலியாணம் செய்து வைக்க
வந்த ரிஷிகளுக்கு இஷ்டமானபடி பழ வர்க்கங்களும்
இன்னும் அவர்கள் இஷ்டப்பட்டு கேட்டன யாவும் கொடு
க்கப்பட்டன. அவர்கள் சந்தோஷமாய்ப் பெற்றுக்
கொண்டு சென்றார்கள். இக் கலியாணம் இவ்வளவு விசே
ஷமாய் நடந்ததற்குத் தலைவன் மிகுந்த சந்தோஷப் பட்
டான்; மறுநாள் காலையில் மாப்பிள்ளைமார் இருவரும் தங்
கள் வகுப்பில் சேர்ந்து கொண்டார்க ளென்பதற்கு,
அடையாளமாக, இடது கைக் கட்டை விரலில் பச்சை
குத்திவிட்டார்கள்.

ரஞ்சிதசிங்கு இரண்டு மூன்று தினம் வரையில் தலைவன்
ஜாகையி லிருந்து விட்டு, உட்டாணியோடு தான் எப்போ
துமிருக்கும் பங்களாவிற்கு வந்து விட்டான்; அவனோடு
தான் அளவிறந்த சௌக்கியத்தை அநுபவித்தாலும்,
தான் முயன்ற காரியத்தைப்பற்றி மட்டும் அடிக்கடி வருந்
தாமலு மிருக்கவில்லை; தான் அடிக்கடித் தலைவனது பங்க
ளாவுக்குச் சென்று அவனோடு பேசிக் கொண் டிருப்பான்;
திருட்டுத் தொழில் இப்படியென்பதை அவன் தன்னிடத்திற்
சொல்லும்போது வெகு பிரியமாய்க் கேட்பான், துப்பாக்
கிக் குண்டும், கத்தி வெட்டும் அவன்மீது படாமல் பூமியில்
படவேண்டிய நியாய மென்ன என்பதை ரஞ்சிதசிங்கு
ஓயாது யோசிப்பான். மந்திரம் என்பதை இவன் நம்ப
வில்லை. ஏதோ தந்திர மிருக்கு மென்று நிச்சயித்தான்.

அடிக்கடிக் கபூலியர்கள் திருடிவரும் பொருள்களைப் பங்கிடும் வேலையை இவனே ஒப்புக்கொண்டான். தலைவன் தன்னிடம் மிகுந்த நம்பிக்கை பெறும்படி நடந்துகொண்டான். கபூலியர்கள் சொல்லும் விபரங்களைக் கொண்டு, இந்த இடம் போங்கள் கொள்ளைக்கு இந்த இடம் போகவேண்டா மென்பதையும் இவனே சொல்லி வந்தான்; இதனால் கள்வர் தலைவன், சதா இவன் பகற் காலத்தில் தன்னிடத்திலேயே யிருக்கப் பிரியப்பட்டான்.

ரஞ்சிதசிங்கு, இவனோடு இருப்பதில் சில காரியங்களுக்கு அனுகூலமாயிற்று; "துப்பாக்கிக் குண்டும் கத்தி வெட்டும் தன்மீது படாம லிருக்கும்மாய்கையான, அல்லது, சரீரத்தில் படுமுன் கீழே இழுத்துக் கொள்ளக் கூடிய கிராஹிய சக்தி இவனது அடியின் கீழிருக்க வேண்டும்" என யோசித்துத் தீர்மானித்தான்; ஒரு நாள் ரஞ்சித், பரீக்ஷார்த்தமாய், வைரம் வைத்து இழைத்த பிடிகளை யுடைய ஒரு கத்தியை வேடிக்கையாக எடுத்துப் பார்ப்பது போலத் தன் கையில் எடுத்து, அதோடு தலைவன் சமீபம் போய், "இந்தக் கத்தியின் பிடியில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் உயர்ந்த இரத்தினங்களைப் பாருங்கள்; இவைகள் எங்கிருந்து தருவிக்கப்பட்டன?" என்று கேட்டு, கத்தியை அவன் கை மேல் படும்படி வைக்க, அது அவன் காலில் விழுந்தது; ரஞ்சித் அதைப் பார்த்து, மறுபடியும் கத்தியை அவன் கையில் வைக்க, அது காலிலேயே விழுந்தது. தலைவன் சிரித்தான். சிறுவன் வருத்தப்பட்டவன் போலப் பாவனை காட்டினான். உடனே தலைவன், "இதற்காக என் வருத்தப்பட வேண்டும்! இரும்பு சாமான்கள் என் மேல் எதுவும் பட்டுக் காயத்தை உண்டாக்காது; அது மந்திர பலம்; மந்திரம் ஜபிக்காம லிருந்தால், அது என் மேல் படும்; இதோ இப்பொழுது என் கையில் வைத்துப் பார்; நிற்கும்"

எனத் தன் ஜோட்டைக் கழற்றிக் கீழே போட்டுவிட்டு, இப்பால் வந்து நின்று கத்தியை வைக்கச் சொன்னான்; அது அவன் கையில் நின்றது. ரஞ்சிதசிங்கு "இந்தப் பாதரக்ஷையில் ஏதோ கிராஹிய சக்தி இருக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை. அதைச் சோதிக்க வேண்டும்" எனத் தீர்மானித்து விட்டான். இராக் காலத்தில் தான் வழக்கம் போல் வீட்டிற்குப் போய், போஜனம் செய்து, பின் கொஞ்ச நேரம் படுத்துக் கொண்டிருந்து விட்டு, ஒருவருக்கும் தெரியாமல் மெள்ள எழுந்து, கூடத்தின் வெளியே போய், குளத்தின் வழியாகத் தலைவனது பங்களாவுக்கு வந்து விட்டான். தான் ஏற்கெனவே தெரிந்து கொண்டிருந்த பச்சிலையைச் சாயங்காலமே பறித்துத் தன் சட்டைப்பையில் வைத்திருந்தான்; அதை எடுத்து, முதலில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த தலைவனது மூக்கிற் காட்டவே, அவன் முன்னிலும் அதிகமாகத் தூங்கி விட்டான். அவனது சம்சாரத்தின் முகத்தில் கொஞ்சம் காட்ட, அவளும் தூங்கினாள். பிறகு, தலைவனது காலில் மாட்டிக் கொண்டிருந்த பூட்ஸ் மாதிரியாயுள்ள பட்டு ஜோட்டைக் கழற்றிப் பார்த்தான்; அதில் தகடு போன்ற, கடினமான இரண்டு துண்டுகளிருந்தன. அதைக் கையில் எடுத்துக் கொண்டு, "விசேஷங்கள் யாவும் இந்தத் தகட்டிலிருக்கின்றன — இது எவ்வளவு பளுவான இரும்பையும் கிராஹியம் பண்ணிக்கொள்கிற சக்தியைப் பெற்று இருக்கிறது. காந்த சம்பந்தப் படுத்திய ஓர் இயந்தரம்" என அதைத் தன் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு, "இதற்குப் பதிலாக வேறு இதே மாதிரியான தகடு வைக்கா விட்டால், இவன் திடீரெனச் சந்தேகம் கொண்டு விசாரிக்க ஆரம்பிப்பான்; பிறகு ஆபத்தாய் முடியும்" என யோசித்து, அங்குமிங்கும் அலைந்து பார்த்தான். ஓரிடத்திலும் ஒன்றும் கிடைக்கவில்லை; ஆயுதம் வைக்கப்

பட்டிருக்கும் அறைக்குள் போய் சுத்திப் பார்த்தான். மெல்லிய தகடுகளால் செய்யப்பட்ட சுருள் கத்திகள் இருந்தன; அவைகளை எடுத்தான். அவன் கையில் வரவில்லை. "சரிதான் — இயந்திரம் விசேஷமானதுதான்" எனத் தன் சட்டைப்பையிலிருக்கும் தகட்டை எடுத்து, ஓரிடத்தில் வைத்துவிட்டு, அக்கத்தியை எடுத்து இரண்டாய் ஒடித்து, இயந்திரத் தகடுபோன்ற இரண்டு சிறியதுண்டுகளாக ஆக்கினான். அதை எடுத்துத் தலைவனது அறைக்கு வந்து, கால் ஜோட்டிற்குள்போட்டு, அவன் காலில் முன்போல மாட்டிவிட்டான்; இனித் தன் காரியம் பலித்தது எனத் தைரியம் கொண்டு, தன் ஜாகைக்கு வந்துவிட்டான். இவன் வந்ததும் தகட்டை வெகு ஜாக்கிரதையாய், யாரும் அறியாதபடி ஓரிடத்தில் பத்திரம் செய்துவிட்டுப் படுத்துக்கொண்டான். மறுநாள் தான் ஆகாரம் முதலியது செய்துகொண்டு, தலைவனது ஜாகைக்குச் சென்றான். கூலியர்களுக்குள் பைசல் செய்ய வேண்டிய சில விவகாரங்களைப் பைசல் செய்துவிட்டு, அவர்கள் இன்னின்ன இடத்திற்குக் கொள்ளைக்குப் போகலாம் என்று சொன்னான். தலைவன், "துல்பகார் கோட்டையைப் போய் கொள்ளையடியுங்கள்; அதைக் கொள்ளையடிப்பது பிரமாதமான காரியமல்ல; முதலில், கயிறு கட்டிய உடும்பைக் கோட்டைச் சுவர்க்கு அப்பால் போட்டுவிட்டு, கயிற்றின் வழியாக உள்ளே சென்று கதவைத் திறந்து விட்டால், மற்றவர்கள் அதன் வழியாக வந்து சேருவார்கள். அங்கே காவலிருக்கும் போலீஸ் வீரர்கள் மிகக் கொஞ்சம் தான்; அவர்களை வெருட்டி அடிப்பது பிரமாதமல்ல-நீங்கள் யாரும் இங்கு எனக்குக் காவலாயிருக்க வேண்டியதில்லை; ஒருவர் பாக்கியில்லாமல் போகலாம்; ரஞ்சிதசிங்கு ஒருவனே எனக்குப் பெருந்துணையாவான்; ஆள்கள் பிரிந்து பிரிந்து போய்ச் சேர்ந்து கொள்

ருங்கள்; அக்கோட்டையைக் கொள்ளையடிப்பதால், முத லாவது நமக்கு ஆவசியமான துப்பாக்கி மருந்து வேண்டி யது கிடைக்கும்; மற்றப்படி வேண்டிய சாமான்களும் அகப்படும். கொள்ளையானதும் பொழுது விடியுமுன் மலைப்பக்கம் வந்து விடுங்கள்; இக் கோட்டையைச் சென்ற இருபது வருஷத்துக்கு முன் கொள்ளையடித்திருக்கிறேன்: அப்பொழுது வேண்டிய பொருள்கள் அகப்பட்டன: இப் பொழுது கோட்டைகள் நன்றாய்ப் புதுப்பிக்கப்பட்டிருக்க லாம்; சர்வஜாக்கிரதையாயிருந்து, உயிர்ச்சேதம் உண்டா க்கிக் கொள்ளாமல் வாருங்கள்" என்றான்.

கபூலியரில் ஒருவன் — "எஜமான் உத்தர விட்டது போல இங்குள்ள யாவரும் போகவேண்டியது தான்; ஆனால் நன்றாக இருட்டுக் காலம் வந்த பிறகு போவது தான் உசிதமென நினைக்கிறேன். இது முதல் ஒருவாரம் தவணை கொடுக்க வேண்டும்; அடுத்த வியாழக்கிழமை கட்டாயம் போய் விடுகிறோம்: அதற்காக, புதிய சில ஆயு தங்கள் சித்தம் செய்ய வேண்டிய வேலையும் இருக்கிறது" என்றான்.

தலைவன் — "அப்படியே அடுத்த வியாழக் கிழமையே செல்லுங்கள்" என உத்தரவு கொடுத்தான். கபூலியர்கள் போய் விட்டார்கள்; ரஞ்சிதசிங்கு, "இது ஒரு நல்ல சமய மாக இருக்கிறது; இது தப்பினால் வேறு இவ்வளவு சுலபமாக இவர்கள் அகப்பட்டுக் கொள்ளமாட்டார்கள்; கபூலியர்கள் யாவரும் அங்கே ஒழிந்து விட்டால், இங்குள்ள இவனை நான் பைசல் செய்து விடுவேன்" என யோசித்துத் தலைவனிடத்தில் விடை பெற்றுத் தனது ஜாகைக்குச் சென்றான்; தான் எடுத்துப் போன தகட்டைப் பற் றித் தலைவன் கவனிக்காததற்குச் சந்தோஷப்பட்

டான். அடுத்த நாள் கணவாய் காவலில் இருக்கும்
முக்கிய சேனாதிபதிக்கு ரஞ்சித் ஒரு கடிதம் வரைந்தான்;
அதில் துல்பகார் கோட்டை அடுத்த வியாழக்கிழமை
யில் மலைக் குறவர்களால், கொள்ளையடிக்கப்படப் போகிற
தென்றும், கொள்ளைக்கு அனேகமாய் முந்நூறு கபூலி
யருக்குக் குறையாமல் வருவார்கள் என்றும், சுமார் இரண்
டாயிரம்போர்வீரர்களும், நான்கு பீரங்கிகளும், அவ்விடம்
இருந்தால், கோட்டையில் பிரவேசிக்கும் கபூலியர்களைப்
பிடித்துவிடலாம்; அவர்கள் கொள்ளையடிக்காமல் தடுப்ப
தில் பிரயோசனமில்லை; அடிக்கடி தொந்தரவு செய்யும்
கொடியோர்களைக் கண்டு பிடித்து நாசம் செய்ய வேண்டு
மென்ற எண்ணத்தோடு, பர்த்தபூரில் சேனாதிபதியா யிருந்த
சங்கரசிங்கின் குமாரன் ரஞ்சிதசிங்கு என்ற பெயரை உடைய
நான் அனேக துன்பங்களை யடைந்து ஆறுமாதமாய் இங்கு
காத்துக்கொண் டிருக்கிறேன். அங்கு வருகிறவர்களைப்
பிடித்து வதம் செய்துவிட்டால், இந்த மலையில் யாரு
மில்லை; பிறகு சமஸ்தானம் க்ஷேமம் அடையும். அடுத்த
வியாழக்கிழமை இவர்கள் கொள்ளைக்கு வருவார்கள்;
ஆகையால் அதற்குள் சர்வ ஜாக்கிரதையோடு வெளிப் பக்
கத்தில் பதுங்கியிருந்து, கோட்டைக்குள் கபூலியர்கள் பிர
வேசித்ததும், மடக்கிக் கொள்ள வேண்டும் என்றும் எழுதி
யிருந்தது. ரஞ்சித், அதனை, ரிஷியாகிய-சட்டோஜி கை
யில் கொடுத்து, தான் காட்டிய குறுக்கு வழியே போகும்
படி யாருக்கும் தெரியாமல் அனுப்பிவிட்டான்.

ரஞ்சிதசிங்கு — "தனது நாயகியை அழைத்து, "உட்
டானி! நமது சொந்த ஊர்க்குப் போக வேண்டிய காலம்
நெருங்கி விட்டது; நான் சற்று நேரம் முந்திப் படுத்துறங்
கிய போது சொற்பனம் கண்டேன்.

உட்டாணி — “பிரபோ! தங்கள் சொந்த தேசம் போய்த் தாங்கள் இருக்க, அடியாள் கொடுத்து வைக்க வேண்டுமே! அவ்விடத்தில் எனது மாமி முதலியவர்களுக்கும் தங்களுக்கும் வேண்டிய சிசுருஷை செய்து கொண்டிருப்பதில் தான் எனக்கு மிகுந்த திருப்தி; இப்பொழுதே போவோம் வாருங்கள்.”

ரஞ்சிதசிங்கு — “எனக்குத் திருப்திகரமாகப் பேசுகின்றனையோ! இவ்விடத்தில் உனது பிதாவால் நீ அடையும் சௌக்கியத்தையும் இம்மலைப் பிராந்தியத்திலுள்ள அதிசயங்களையும் மற்றும் உனது குற்றேவல்களுக்கு காத்துக் கொண்டிருக்கும் வேலைக்காரர்களையும் விட்டு, நீ நாட்டுப்புறம் வருவாயா? ஒருநாளுமில்லை”

உட்டாணி — “இவ்வுலகில் தங்களை விட எனக்கு வேறு சதம் யாருமில்லை; நான் நேராகத் தங்களுக்கு வேண்டிய அன்னபானாதிகளைச் சித்தஞ் செய்ய எனக்கு மெத்தப் பிரியம்! வேலைக்காரிகள் அவைகளைச் செய்வதில் என் மனம் கொஞ்சம் கூட ஒப்பவில்லை; இவர்கள் எவரும் வேண்டாம்; ‘எனது நாதனுக்கு நான் வேலைசெய்து அடைய வேண்டிய சுகத்தை இவர்கள் வருத்தத்தோடு பங்கிட்டுக் கொள்கிறார்களே! ஏன் இப்படி விட வேண்டும்!’ என்று சில சமயங்களில் கஷ்டத்தை அடைகிறேன்; ஆதலால் தங்கள் பின்னோடு வரச் சித்தமாயிருக்கிறேன்; தாங்கள் தான் தங்கள் மாமனோடு மிகுந்த நேசமாயிருக்கிறீர்கள்! அவரை விட்டுப் பிரிய மாட்டீர்கள்; அவரும் உங்களை அனுப்ப மாட்டார்; இதைப்பற்றி வேடிக்கையாகப் பேசுவதிலும் பிரயோசனமில்லை”

ரஞ்சித் — “சும்மா, கேட்டுப் பார்த்தேன் — ஒரு சமயம் போவதானால் என்ன சொல்கிறாயோ என்று சந்தேகப் பட்

டேன். போகும் காலம் ஏற்பட்டால் பார்க்கலாம்" என்றான். இவன் ஒரு நாளாவது, தலைவனது பங்களாவுக்குச் சென்று அவனோடு வெகு பயந்தவன் போலவும், மிகுந்த பிரீதியும் நம்பிக்கையும் உடையவன் போலவும் நடிக்காம லிருந்ததில்லை; மகாபயங்கரத்தோடு சதா விசாரப் பட்டுக்கொண்டிருக்கும் உபேந்திரநாத் லாலாவை, "கூடிய சீக்கிரம் உனது பிதாவிடம் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன்" எனத் தேறுதல் சொல்லிக் கொண்டே வந்தான். குறிப்பிட்டகாலப்படி, கபூலியர்கள் யாவரும் கொள்ளைக்குப் போய் விட்டார்கள். ரஞ்சித், "அங்கே என்ன நடக்கப் போகிறதோ! நாம் கொடுத்த கடிதத்தைச் சட்டோஜி கொண்டு போய்ச் சேர்த்து இருக்க வேண்டுமே!" என எண்ணங் கொண்டிருந்தான்; வியாழக்கிழமை இரவு முழுவதும் இவன் தூங்கவே யில்லை. "நான் கடிதம் கொடுத்தனுப்பியது கபூலியர்கள் அறிந்து விட்டால், என்னைச் சித்திரவதை செய்வார்கள்" எனத் திகிலடைந்தான். பிறகு, "அவர்களை அங்குப் பிடிக்காமல் விட்டு விட்டால், இங்கு அவர்கள் வந்து சேர்ந்ததும் ஒரு நாளிரவு எல்லோரும் அயர்ந்து தூங்கும் சமயத்தில் நானே வதம்செய்துவிடுகிறேன்" எனத் தைரியங் கொண்டான். பொழுது விடிந்ததும் காலைக் கடனை முடித்துக்கொண்டு உட்டாணியோடு பேசிக்கொண்டிருந்தான்; பகல் போஜனம் சித்தமாயிற்று என வேலைக்காரிகள் சொன்னார்கள். இவன், உட்டாணி உபசரித்திட்ட போஜனம் உண்டு, தாம்பூலம் தரித்து, சற்றுநேரம் இளைப்பாறி, பின் தலைவனது பங்களாவிற்குச் சென்றான். அங்கே அவனோடு பேசிக்கொண்டிருந்தான். அஸ்தமான நேரமாயிற்று. தலைவன், "நேற்றுக் கோட்டைக்குச் சென்ற கபூலியர்கள், இன்னமும் வரவில்லையே! என்ன காரணம்? இத்தனை நாழிகை அவர்கள் வந்து பங்கிட்டுக்கொண்டு திரும்

பிப் போகும் சமயம் ஆயிற்றே! துல்பகார் கோட்டை, சுமார் அறுபது மைலுக் குட்பட்டு தானிருக்கும்; மணிக்குப் பத்து மைல் தூரம் கபூலியர்கள் நடப்பார்களே! எண்பது மைல் நூறு மைல் தூரத்திற் கப்பால் போனாலும், பகல் பன்னிரண்டு மணி நேரத்திற் செல்லாம் திரும்பி விடுவார்களே! துல்பகார் கோட்டையை வெகுபந்தோ பஸ்தாய் அரசாங்கத்தார் காக்கிறார்கள். ஆயிரம் பேர் சிப்பாய்கள் காவ லிருந்தாலும், இந்தக் கபூலியருக்கு லக்ஷிய மில்லையே! தப்பித்துக் கொண்டு வந்து விடுவார்களே! என்ன விசேஷமோ நடந்திருக்கிறது!" என மிகுந்த மனஸ்தாபத்தோடு தெரிவித்தான்,

ரஞ்சிதசிங் — "நான் வந்த நாள் முதல் இம்மாதிரி அவர்கள் வராமல் இருந்த தில்லையே!" என மன நடுக்கத் தோடு சொன்னான்.

தலைவன் — "இன்று இரவு பார்க்கலாம் — அவர்கள் வராவிட்டால் நாளைய தினம நானே நேரில் போய்ப் பார்க் கிறேன். அவர்களைப் பிடித்து அடைத் திருந்தால், அக் கட்டடம் எப்படிப்பட்ட தானாலும் இடித் தெறிந்துவிட்டு, அவர்களை மீட்டுக்கொண்டு வந்து விடுகிறேன்; அவர்கள் சைன்னிய காவலர்களால் கொல்லப்பட் டிருந்தால், நானும் அவர்களோடு சாகிறேன்" என்று மிகுந்த விசாரத்தை யடைந்தான். அவன் அப்பொழுது கர்ச்சித்த கர்ச்சனை யினால் மலையிலுள்ள விருக்ஷங்கள், கட்டடம் முதலிய யாவும் நடுங்கின! மிகுந்த கோபத்தோடு, 'கணவாய்க் காவலர்கள் எத்தனை பேரிருந்தாலும் ஒரு நொடியில் கொலை செய்கிறேன்' எனக் குரோதம் கொண்டான்; அச் சமயத்தில் அவனை நெருங்க யாரும் பயந்தார்கள். ரஞ்சித சிங்கும் அவன் எதிரே நிற்க அஞ்சினவன் போலப் பின்

றக்கு நகர்ந்து தனது மாளிகையை அடைந்தான். அன்றிரவு அவனது பங்களா முழுவதும் அல்லோல கல்லோலமாயிருந்தது. இரவு முழுவதும் அவன் தூக்கமில்லாமல் அங்கு மிங்கும் அலைந்தான். பதில் சமாசாரம் தெரிவிக்க ஒரு கபூலியனாவது வருவானா என்று பார்த்தான்: யாரும் வரவில்லை. கபூலிய ஸ்திரீகளும் குழந்தைகளும் ஒவ்வொருவராய் வந்து விசாரித்தார்கள்; மறுநாள் காலையிலும் யாரும் வரவேயில்லை; பிறகு வெகு நேரம் கழித்து ஒரே ஒரு கபூலியன் மட்டும் திரும்பி வந்து, தலைவனது காலில் திடீரென விழுந்தான். அவனை உபசரித்துத் தலைவன் எழுப்பி, 'நமது கபூலியர்களுக்கு என்ன கெடுதி நேரிட்டது? ஐயோ! எனது உடம்பு பதைபதைக்கிறது, நடந்த சங்கதிகளைச் சொல். இப்பொழுதே போகிறேன்' என்றான். அவன், 'ஸ்வாமி! நாங்கள் யாவரும் தனித் தனியாய்ப் பிரிந்து இரவு பதினொரு மணி சுமாருக்கு, திறந்து கிடந்த வாசலின் வழியாய்க் கோட்டைக்குள் நுழைந்தோம்; அவ்வழியில் எந்த விதமான அரவமும் இல்லை. சிற்றரசன் வாழும் அரண்மனைக் குள்ளும் யாராலும் கொஞ்சம்கூட எதிர்க்கப்படாமல் சென்று விட்டோம்; அரண்மனைக்குள் ஒரு பிராணியாவது காவலில்லை; அரசன் முதலிய யாவருமில்லை; நாங்கள் அவ்வூர் உளவுகாரனால் தெரிந்து கொண்டபடி இரண்டொரு அறையின் கதவுகளை உடைத்துப் பார்த்தோம், ஒன்றும் கிடைக்கவில்லை. இப்படி யிருக்கையில், குண்டு சப்தம் கேட்டது; ஏதோ விபரீதம் இருக்கிறதென வெளியில் வர உத்தேசித்து, அரண்மனை வாயிலுக்கு வந்தோம். கதவு அடைக்கப்பட் டிருந்தது: அக்கதவை உடைத்து வெளியே வர முடியாமையால் நாங்கள், வாசற்படியில் அனேகம் போர்வீரர்கள் துப்பாக்கியோடு நின்று கொண்

டிருப்பதைக் கதவின் இடுக்கு வழியாய்ப் பார்த்து விட்டு, அரண்மனையின், மேல் தளத்தின் வழியாய் ஏறி, வெளியே குதித்து விடலாமென, கீழே குதிப்பதற்கு அனுகூலமான இடத்திற்கு எல்லாரும் சென்றோம். அந்த இடத்தில்தான், வந்து குதிப்பார்கள் என்ற நோக்கத்தோடு, அங்கே சித்தஞ் செய்திருந்த பீரங்கியைச் சில போர்வீரர்கள், எங்கள் கூட்டத்திற்கு நேராக குறிவைத்துச் சுட்டார்கள். முன்னால் நின்ற சுமார் இருநூறுபேர் வரையில் இந்த வெடிகுண்டால் தாக்கப்பட்டு காம்பின் வலுவற்று விழும் மரமல்லிகைப் புஷ்பம் போல் பூமியில் உதிர்ந்துவிட்டார்கள். மற்றவர்கள் எவ்வெவ் பக்கம் குதித்து ஓடிவிடப்பார்த்தாலும், அவ்வவ் பக்கத்திலும் நின்றுகொண்டிருந்த போர்வீரர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே யிருந்தார்கள். இதற்குள் பொழுது விடிந்து போயிற்று; அரண்மனை வாயில் கதவைத் திறந்து கொண்டு சுமார் இரண்டாயிரம் போர்வீரர்கள் உள்ளே வந்தார்கள். நாங்களும் எங்கள் துப்பாக்கியால் வெகு பேர்களைச் சுட்டு வீழ்த்தினோம்; என்றாலும் முடியவில்லை. அவர்கள் எங்கள் அனேகரைக் காலிலும் கையிலும் சுட்டு வீழ்த்தி விட்டார்கள்; எங்களுக்கு எஜமானராய் வந்தவர், தங்களுக்குச் சமாசாரம் சொல்லும் பொருட்டு என்னைக் குறிப்பிட்டார். நான் மார்பில், துப்பாக்கிக் குண்டு பட்டு இறந்தவன் போலக் கொஞ்சம் இரத்த காயம் பண்ணிக்கொண்டு கீழே விழுந்து சுவாசத்தை அடக்கி விட்டேன்; சுமார் ஆயிரம் போர்வீரர்கள் வந்திருந்தார்கள்; அவர்களுக்குத் தலைவராயிருந்தவர், இறந்தவர்களை நெருப்பிட்டுக் கொளுத்தும்படி உத்தர விட்டு, உயிரோடு காயப் பட்டவர்களான சுமார் நாற்பது பேர்களை விலங்கிட்டுக் கொண்டு போய்விட்டார். நான் மதில் ஓரமாய், ஒரு

வரும் கவனிக்காத இடத்தில் விழுந்து கிடந்தபடியால், அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு மெள்ள எழுந்து, அரண்மனையைச் சுற்றிக்கொண்டு அவ்வூரார் உடைகளில் ஒன்றை மாட்டிக்கொண்டு வெளியே வந்து என்னை யாராவது பிடித்துவிடுவார்களோ எனத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு ஓடிவந்தேன். காலை எட்டு மணிக்கு மேல் அங்கிருந்து புறப்பட்டு இவ்வளவு சீக்கிரத்தில் இங்குவந்தேன். இனி நமக்கு எந்த பலமும் கிடையாது; எந்த பாபியோ உளவாயிருந்து இப்படி மோசம் செய்து விட்டான். நாம் இனி என்ன செய்வோம்!' எனக் கதறினான். தலைவன் சற்று நேரம் திகைத்து, "ஆஹா! எனது உயிர்த் துணைவர்களான கபூலியர்கள் யாவரும் ஒருங்கே, மாண்டார்களா! என்ன கொடுமை! சென்ற நாற்பது வருஷகாலமாக அதிகமான செல்வாக்கோடு வாழ்ந்தேன்; எனக்குத் தாழ்வு வந்ததே! எப்படிப்பட்ட மகாவீரர்களுக்கும் எங்களைப் பிடிக்க பிரயத்தினம் செய்து முடியவில்லையே! காப்பாற்ற வேண்டுமென எத்தனையோ பெயர் என் காலில் விழுந்து கேட்டுக்கொண் டிருக்கிறார்களே! சிப்பாய்கள் எத்தனை பேரானாலும் எங்களைப் பிடிக்க முடியுமா? கபூலியர்கள் கொள்ளைக்குப் போவதை முன்னாலேயே இங்குள்ள யாரோ ஒருவன் தெரிவித்திராவிட்டால் சிப்பாய்கள் அவ்வளவு முன் ஜாக்கிரதையாக இருந்திருக்க முடியாது; இவ்விடத்திய உளவைத் தெரிந்து சொன்ன அதமனை இப்பொழுதே இரண்டாய்ப் பிளந்து விடுகிறேன். அடடா! என்ன அதிசயம்!" எனக் கனத்த கோபத்தோடு பல்லை நற நறவெனக்கடித்து மீசைகள் துடிக்க அங்கு நின்ற வீரவிபனைக் கூப்பிட்டு, "அடே! நீயும் ரஞ்சிதசிங்கும் தான் இங்குள்ள அன்னியர்கள்; உங்களால் தான் உளவு வெளிப்பட்டிருக்க வேண்டும்—உள்ளதைச் சொல்லாவிட்டால், நீ

எனது மருமகனெனப் பாராமல் இக்கத்தியால் சில்லு சில்லாய் உன்மண்டையைப் பிளந்து கண்டம் கண்டமாய் உன்னை வெட்டி எறிவேன்'' என்று அதட்டினான். சிறுவன், "நான் ஒன்றும் அறியேனே!'' எனச் சுருண்டு கீழே விழுந்தான். தலைவனது இளையசம்சாரம், ஓடிவந்து, 'ஐயோ! ஒன்றும் அறியாதவனை இப்படி வதைக்கத் துணியலாமா? அவனைக் கொல்வதை விட என்னைக் கொல்லுங்கள். தாய்ப்பால் மாறாத சிறுவன், இப்பெரும் காரியத்தைத் தைரியத்தோடு செய்யத் துணிவானா? ஐயோ! இவன் சரீரம் வாடிப்போயிற்றே! எல்லாம் தெரிந்து மிகுந்த சாமர்த்தியமாய்ப் பேசும் ரஞ்சித சிங்கின் மாயமான காரியமல்லவோ இது! அவனைத் தொந்தரவு செய்யப் பயந்து பரமசாதுவான இவனை வதைக்கிறேனெனக் கத்தியை ஓங்குவது தருமமோ?' எனக் குறுக்கே விழுந்து மறுத்தாள்.

தலைவன் — "இவ்விருவர்களில் யாரோ ஒருவனால் மட்டும் இக் கொடும் தொழில் நடந்திருக்கிறது! ரஞ்சித் கட்டாயம் எங்களை நிர்மூலமாக்க, இங்கு மாறு வேடம் பூண்டு வந்திருக்கிறான். அவன் சேனாபதி மகன் என்ற போதே சந்தேகம் கொண்டேன்; என் மனதை அவன் எத்தனையோ சாமர்த்தியமாய்ப் பேசி மாற்றினான்: அந்தக் கிராதகனைச் சித்திரவதை செய்யாமல் விடுகிறதில்லை'' எனக் கம்பீரமாய்ப் பேசி கபூலியர்களைக் கூப்பிட்டு, "அடுத்த றோவில் ஆனந்தமாய் வசிக்கும் மகாபாபி, சண்டாளன், அந்த பரம துஷ்டனை எனது மருமகனென்று கொஞ்சம் கூட தாக்ஷிண்ணியம் பார்க்காமல், அவன் குடுமியைப் பிடித்துப் பிடரியில் கை கொடுத்து இங்கு இழுத்து வாருங்கள். என்ன அநியாயம்! என்ன மோசம்!'' என்றான்.

கபூலி, உடனே உட்டாணி பங்களாவிற்கு ஓடி, அங்கே தன் சம்சாரத்தோடு மிகுந்த பிரியமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் ரஞ்சிதசிங்கைப் பார்த்து 'தலைவர் உங்களை அழைத்து வரச் சொன்னார்' என்றான்.

ரஞ்சித் — "என்ன விசேஷம்! கொள்ளைக்குச் சென்ற கபூலியர்கள் வந்து விட்டார்களா?"

கபூலி — "அவர்கள் யாவரும் மாண்டார்கள். நான் ஒருவனே தப்பி வந்தேன்."

ரஞ்சித் — "என்னைக் கூப்பிடச்சொல்ல, என்ன காரணம்?"

கபூலி — "இராஜாங்கக் காவலருக்குத் தாங்கள் தான் உளவு சொல்லிக் கொடுத்து, இம்மாதிரி எல்லாரையும் பிடித்துக் கொள்ளும்படி சொன்னீராம்!"

ரஞ்சித் — "நான்தான் உளவு சொன்னேனென்று எப்படித் தெரியும்?"

கபூலி — "இம்மலையில் உம்மைத் தவிர வேறு மனிதர் யாரிருக்கிறார்கள்?"

உட்டாணி — "அவர் அப்படிச் செய்ய வில்லையே! பிதாவுக்கு யார் இந்தத் தப்பு அபிப்ராயம் உண்டாகும்படி செய்தார்களோ!"

கபூலி — "இவர் மாத்திரமல்ல; அவரையும் சேர்த்துத்தான்."

உட்டாணி — "அவர் யார்?"

கபூலி — "சின்ன பெண்ணின் புருஷன்"

உட்டாணி — "மிகுந்த கோபத்தோடுதா னிருக்கிறாரோ?"

கபூலி — "கோபமென்ன இனி? உனது புருஷனால், நாங்கள் யாவரும் நாசமாய்ப் போனோம்! உனது புருஷனைச் சிரச்சேதம் செய்ய, அவன் மயிரைப் பிடித்து இழுத்துவரச் சொன்னார் தலைவர்."

ரஞ்சித் — "என்ன சொன்னாய் மூர்க்கா? உன் உயிரையும் உனது தலைவனது உயிரையும் எமனுலக மனுப்புவேன்!" என்று கோபமாய் எழுந்து கபூலியைப் பிடித்துத் தள்ளினான். இவன் அதிக பலனில்லாத வயது சென்றவனாதலால், மறுபடி ரஞ்சித்சிங்கோடு பேசப் பயந்து தலைவனிடம் தெரிவிக்கச் சென்றான்.

ரஞ்சிதசிங்கின் வரவை எதிர்பார்த்திருந்த தலைவன், அவன் வராமல் கபூலியன்மட்டும் வந்து நின்றதைப் பார்த்து, "என்ன சமாசாரம்! அந்தத் துரோகி எங்கே?" எனக் கபூலி அங்கு நடந்த விஷயத்தைச் சொன்னான். தலைவன் மகாகோபத்தோடு கண்கள் நெருப்புப் பொறிபறக்க, தனது இருப்புக் கச்சையை இறுக்கிக்கட்டி, ஒரு கையில் கடகமும், மறுகையில் வாங்காவும் பிடித்து, தன் பங்களாவை விட்டு,ஒரே பாய்ச்சலாய்க் கிளம்பி உட்டானி பங்களாவில் வந்து குதித்து, கிடு கிடு வென யாரும் நடுங்கும்படி அட்டகாசம் செய்து, "அடே துஷ்டா! என் குலத்தைக் கெடுக்க வந்த பாதகா! மித்துருதுரோகி! புறப்படு வெளியே! உன்னையும் உனது பத்தினியையும் வெட்டிப் போட்டு, நானும் வெட்டிக்கொண்டு மாள்கிறேன்; இனிமேல் எனக்கு இவ்வுலகில் வாழ்வேது? அநியாயமாய் என்னை நாசம் செய்த பதிதனே! எங்கிருக்கிறாய்? வெளியே வாடா" எனக் கத்தினான். இச் சத்தம் கேட்ட ரஞ்சித் மிகுந்த கோபத்தோடு தன் கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வெளியிற் புறப்பட்டான்.

உட்டாணி — ரஞ்சிதசிங்கை மறித்து, "நாதா! வேண்டாம்; அவசரப்பட வேண்டாம். அவர் மிகுந்த கோபங் கொண்டுள்ள இச்சமயத்தில் அவரைத் தாங்கள் எதிர்த்தால், சின்னா பின்னமாய்க் கிழிக்கப் படுவீர்கள்! போக வேண்டாம்," என வழி மறித்து, ஹாலின் கதவைச் சாத்தித் தாளிட்டுப் பூட்டிவிட்டாள்.

ரஞ்சிதசிங் — "பெண் பேதாய்! நீ மெத்த அறியாதவள்; உன் சித்தத்தைச் சுத்தி செய்ய இக்கத்தியால் உன் தகப்பனைக் குத்தி வீழ்த்துகிறேன். உன் தகப்பனுக்கு எதிர் நின்று யுத்தஞ் செய்ய நான் இளைத்தவனென்று நீ எண்ணினையோ! விடு, விடு, தூரநில். நீ வழி மறித்துக் கொண்டால், உன்னைப் பிடித்துத் தள்ளி நான் வெளியே போக எத்தனை நிமிஷஞ் செல்லும்?"

உட்டாணி — "பிரபோ! சவுரியம் பேசி யென்னைச் சாகடிக்கவா நீங்கள் எண்ணங் கொண்டீர்கள்! 'ஆத்திரக் காரனுக்குப் புத்தி குறைவு' என்று சொல்லுவது ஆன்றோர் வார்த்தை யன்றோ? கோபம் பாபமே! அது சண்டாளத் தனத்தைக் கொடுக்கும். அவசரப்பட வேண்டாம்" என்று, அவன் தாளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

ஹாலுக்குள் ளிருந்து தாளிட்டுக் கொண்டதைத் தெரிந்த தலைவன், "ஹா! ஹா! தாளிட்டுக் கொண்டால் உங்களை விட்டு விட்டுப் போய்விடுவேனோ? ஏ துஷ்டை! இந்த க்ஷணமே இக் கதவைத் திறவா விட்டால் இதனைத் தூள் தூளாகச் செய்து, உள்ளே பிரவேசித்து உங்களிருவரையுஞ் சேர்த்து யமலோகம் அனுப்பி விடுவேன்! கதவைத் திறக்கிறையா, இல்லையா!" என்று கத்திக் கொண்டே கதவைக் காலால் திடுக் திடுக்கென உதைத்தான். கதவுகள் இரண்டும் கல கலத்துப் போய் ஆடின. உள்ளே

வெகு நடுக்க முற்று நின்ற உட்டாணி, "பிதாவே! வேண்டாம் — கோபங் கொள்ளாதீர்கள்! எனது பர்த்தா தங்களுக்கு விரோதமாக எந்தக் காரியத்தையுஞ் செய்யவில்லை; தாங்கள் மீறி, அவரைத் தங்கள் கட்கத்திற்கு இரையாகும்படி செய்தால், எனது உயிர் இந்த க்ஷணமே ஒழிந்து போம். ஆகையால் தயவு செய்ய வேண்டும், தங்கள் காலில் விழுகிறேன்" எனக் கொஞ்சினாள்.

தலைவன்—"ஏ பரம துஷ்டை! என் கூட்டத்தார்களான கஜூலியர்களை வஞ்சனையோடு வதம் செய்யத் தூண்டின பரம சாண்டாள துரோகியின் சல்லாபத்தை விரும்பி அவனது உயிரைப் பாதுகாக்க நினைந்த கள்ளீ! உன்னைக் கொல்வேன், அவனைக் கொன்று அவனது உதிரத்தைத் தீர்த்தபானம் பண்ணுவது போல், குடித்தாலன்றி இனி நில்லேன், உன்னையும் முதலில் கொல்லேன், இது சத்தியம் கதவைத் திற" என்று மறுபடியும் கதவைக் காலாலுதைத்தான். இவன் என்ன உதைத்தும் கதவுகள் இருப்புச் சட்டங்களால் பிணைக்கப்பட்டிருந்த படியால் உடைபடாமல், கலகலத்து நின்றன. இவன் என்ன இடித்தாலும், உட்டாணி, கதவைத் திறக்காமலும் தன்னுடைய நாதனை வெளியே விடாமலும் காத்துக்கொண்டிருந்தாள்.

தலைவன் — கொஞ்ச நேரம் பார்த்து விட்டு, கதவு திறவாமைக்கு மிகுந்த ஆத்திரங் கொண்டவனாய், மறுபக்கமாக ஜன்னலின் சமீபம் வந்து, அதன் கதவுகளைத் தன்னுடைய கையினால் ஓங்கி ஒரு குத்துக் குத்தினான். அக்கதவுகள் படாலென உடைந்து திறந்து கொண்டன. 'அடா கொடியவனே! எங்கள் குலத்தை நாசம் செய்ய வந்த யமனே! ஹே பதிதா! வெளியிற் புறப்படுகிறாயா, இல்லையா? கஜூலியர்களைக் கண்டு பிடிக்கும்படி நீ காவலர்களைத் தூண்டினது நிஜமா? உள்ளதைச் சொல்' என்றான்.

ரஞ்சித் — தன்கைத் துப்பாக்கியோடு குகையி விருந்து வெளிப்பட்ட இளஞ் சிங்கம்போல, தான் உட்கார்ந் திருக்கும் இடத்தை விட்டு எழுந்து தலைவனைப் பார்த்து, "அடே! காட்டில் வாழும் காலனே! உன்னையும் உனக்குக் கூட்டுறவாகக் கொள்ளையிட்டு ஜீவிக்கும் கபூலியர்களையும் நாசமாக்கித் தேசத்திற்கு நன்மையைச் செய்ய வேண்டு மென்கிற உத்தேசத்தோடு நான் இங்கு வந்தே னென்பதை அறிவாய்! நீ எனக்குப் பெண்ணைக் கலியாணஞ் செய்து கொடுத்ததற்காக உனக்கு மட்டும் உயிர் பிச்சை கொடுத்து, மற்றக் கபூலியர்கள் யாவரையும் பிடித்து வதைக்கும் படி ஏற்பாடு செய்தேன். நான் உனக்குக் கொஞ்சங்கூட பயந்தவ னல்லன்; உன் உயிரை இக்ஷணமே என் கைத் துப்பாக்கி கிரகித்துக்கொள்ளும். உனக்கு அளவிறந்த சொத்துக்களும், வேலைசெய்ய வேண்டிய ஆட்களும், வசிக்க விசித்திரமான மாளிகையும், அனுபவிக்க அழகான பெண்டிரும் உண்டு. மஹா வல்லமை பெற்ற உனது மருமகனை நான் உனக்கு வேண்டும் உதவிகளைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன். துஷ்டர்களான கபூலியர்கள் மாண்டு போனதால், நீ மனக்கலக்கம் அடையாதே! உன் ஆயுள்வரையில் சவுக்கியமாக இரு; இதை நீ நிச்சயமாக நம்பி உன் இடஞ் செல்வாய்: எனது பிரியத்தை அபகரணம் பண்ணியும், வெளியிற் செல்ல வாய்க்காமல், கடுஞ் சிறையில் இருக்கும் எனது காதலி கண்ணீர் விட்டால் நான் தாளமாட்டேன். அவளுக்காகவும் உன்னை உயிர் தப்பிப் போகும்படி விடுகிறேன்" என்றான்.

தலைவன் —"ஓ ஹோ!நான் இன்னானென நீஇன்னமும் அறியாய் போலும்!என்கையில் துப்பாக்கி இல்லை. ஆதலால் நீ தைரியங்கொண்டு பேசுகிறாய். இதோ ஒரு நொடியில் கொண்டுவருகிறேன்" எனத் தன் வீடுநோக்கிச் சென்றான்.



ரஞ்சித் தலைவனை கண்டதும் தான் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு திடீரென எழுந்து துப்பாக்கியை எடுத்தான் —(218-ம் பக்கம் பார்க்க)

அங்கே துப்பாக்கிகள் மட்டும் ஏராளமாய் இருந்தனவே யன்றி, வெடிமருந்து கொஞ்சங்கூட இல்லை. இதனால் அவன், மனத்துயரங் கொண்டான். "நமக்குச் சாகுங்காலம் நெருங்கி விட்டது. இனி உயிர்தப்பிப் பிழைக்கப் போகிறதில்லை" என்று தைரியங்கொண்டான். துப்பாக்கி மருந்துக்காக கபூலியர்கள் வீடுகள்தோறும் சென்று இரவு வெகுநேரம் வரையில் அலைந்து திரிந்தான். கடைசியாக ஓரிடத் திலும் மருந்து கிடைக்காததால், அலுத்துப்போய்த் தன் பங்களாவில் வந்து விழுந்தான். ஆகாரத்தையும் அபேக்ஷிக்காதவனாய், மனத் துயரம் மேலிட்டுக் கண் ணீர் விட்டுக் கொண்டே அயர்ந்து நித்திரை போய் விட்டான். மறுநாட் காலை பத்து மணி வரையில் இவன் எழுந்திருக்கவில்லை. பிறகு, திடீரென விழித்துக் கொண்டு, "அடே துஷ்டா உன்னைக் கொல்லாமல் விடுவேனோ! நீயிருக்கும் கட்டடத்தை இடித்து, உள்ளே பிரவேசிக்காமல் இனி நிற்பேனோ!" எனத் தன்னிடத்தில் உள்ள மண் வெட்டி, கடைப்பாறைகளைத் தன்னோடு காத்திருக்கும் கபூலியரை யெடுத்துக் கொள்ளச் செய்து, தன் கையில் பிடித்த கத்தி, வாங்காவோடு ரஞ்சித சிங் இருக்கும் ஹாலுக்குச் சென்றான். ரஞ்சித சிங்கோ தன்னை முதல்நாள் வெளிப் போகாமல் மறித்த உட்டா ளிக்குத் தைரியஞ் சொல்லித் தலைவன் போன தக்ஷணமே கதவைத் திறந்து கொண்டு, வெளியே வந்து விட்டான். இரவு முழுவதும் தனது கூடத்துக்குள் போகாமல் தன் கைத் துப்பாக்கியோடு அங்கு மிங்கும் உலவிக் கொண்டு தலைவன் வரவை யெதிர்பார்த்திருந்தான். அவன் வரா ததை கண்டு இனி வரமாட்டானென்று எண்ணங் கொண்டு, தனது அறையில் போய்ப் படுத்துக் கொண்டு நித்திரை செய்தான்.

வைக்கொண்டு, ஆகாரப் பொருள்கள் வாங்கிக் கொள்ளலாம். மலைக் குறவர்களை எவ்விதமான தந்திரம் செய்தாவது, ஒருவர் பாக்கி யில்லாமல் எல்லாரையும் பிடித்துக் கருவறுத்தா லன்றி, இந்தப் பக்கங்களில் உள்ளவர்கள் க்ஷேமத்தை யடைய மாட்டார்கள். இக்காரியத்தைச் செய்து முடிப்பது எனக்கு பிரமாதமாகத் தோன்றவில்லை; இதைச் செய்யச் சாத்தியப் படாமல், அவர்களால் நான் இறக்கும்படி நேரிட்டாலும், தேச க்ஷேமத்தின் பொருட்டு நான் உயிர் துறக்க மிகுந்த சந்தோஷ மடைவேன். எவ்வளவு ஆபத்து வந்தாலும் மலை மீது ஏறிச் செல்லாமலிருப்பதில்லை'' என்த் தீர்மானித்து அவ் வீட்டின் தெருத் திண்ணையில் உட்கார்ந் திருந்தான். வெளியில் சென்ற பிராமணர்கள் ஒவ்வொருவராய் இரவு சுமார் ஏழு மணிக்குத் திரும்பி வந்து, தெருத் திண்ணையில் தனியே உட்கார்ந்திருக்கும் சிறுவனைப் பார்த்து, தாங்கள் சொன்னபடி அவன் யாருடனும் பேசாம லிருந்ததற்குச் சந்தோஷப் பட்டார்கள். அவர்களில் முதலாளி "அப்பா! நான் போனது முதல், சும்மா உட்கார்ந் திருக்கிறாயோ ?'' என்றான்.

ரஞ்சித் — "ஆம், யாரிடமும் பேசவில்லை''

பிராமணன் — "பிறகு என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?''

ரஞ்சித் — "எந்த யோசனையுமில்லை; ஊர்க்குப் போவதைக் குறித்து யோசித்துக் கொண்டிருக்கிறேன்''

பிராமணன் — "நீ, சொன்னதைக் கேட்டு, நடக்கும் சுபாவம் உடையவன் எனத் தெரிந்து கொண்டேன்; அதோடு, சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவதிலும், மிகுந்த சிரத்தையை வகித்தவனாகவும் இருக்கிறாய்! உன் மீது எனக்கு மிகுந்த அனுதாபம் ஏற்பட்டுவிட்டது;

தலைவன் அக் கூட்டத்தைப் பார்த்து, "நாமினிப் பிழைப்பதில்லை; இது நிச்சயந்தான். கத்தி வெட்டால் இவன் சாக மாட்டான். வேறு ஒரு கற்பாறையை யெடுத்து வந்து இவன் தலையிற் போட்டால் இறந்துவிடுவான். பழிக்குப் பழி தீர்த்துவிட்டு நம் பிராணனை யொழித்துக் கொள்ளுவோம்" என ஓடி, ஒரு கற்பாறையைத் தூக்கிக் கொண்டு வந்தான். அருகில் நின்ற சேனாதிபதி, தான் சித்தமாய் வைத்துக் கொண்டிருந்த துப்பாக்கியால் தலைவனது மார்பிற் குறி பார்த்துச் சுடவே, தலைவன், தான் தூக்கி வந்த கற்பாறையைத் தன் மீதே போட்டுக் கொண்டு சாய்ந்தான்.

இதைப் பார்த்த உட்டாணி, தன் தகப்பன் கீழே விழுந்ததை சகியாமல், அவனிடம் ஓடி, "ஐயோ பிதாவே! தாங்கள் சாகவா வேண்டும்? எந்தத் துப்பாக்கி குண்டுகளாலும் சாகாதவரம் பெற்ற தாம், இப்பொழுது மாண்டீரே! தங்களுடைய சவுரியமும் பராக்கிரமமும் எங்கு போய் ஒளித்துக் கொண்டனவோ! எனக்குத் தாய் போன துக்கம் தங்களா லாறிக்கொண்டிருந்தேனே! இனி நான் யாரைப் பிதா வென்று கூப்பிடுவேன்? ஐயோ! துப்பாக்கிக் குண்டு மார்பிற் பட்டு முதுகின் வழியாக ஊடுருவிச் சென்றிருக்கிறதே! பிராணன் துடிக்கிறதே! மூச்சு திணறித் திணறி விடுகிறீர்களே! நான் என்ன செய்வேன்! பரதேசியானேனே!" எனக் கதறினாள். இவள் அழுவதைப் பார்த்த ரஞ்சித் மனம் தாளாமல் இவளிடம் வந்து இவளைத் தேற்றினான். பிரக்கினையோடு இவனைப் பார்த்த தலைவன், ரஞ்சிதசிங்கை கைஜாடை காட்டி, தன் பக்கத்தில் வந்து உட்காரும்படி சொல்லி, பேசச் சக்தியற்றவனாய், தீனசுரத்தோடு, "அப்பா ரஞ்சித்! உன்னால் நான் வதைக்கப் பட்டேனென — கொஞ்சங்கூட

ஆ — ஆ —வருந்த வில்லை! — எத்தனையோ— பாபங்கள்— செய்திருக்கிறேன். — எங்களை — எமனுலகமனுப்பி — நல்வழிப்படுத்த — வந்த — உத்தமன் நீ — எனது புத்திரியைக் கை விடாதே! — எனக்குள்ள — சொத்துக்கள் யாவும்—உன் இஷ்டம்போல்— நீயே— எடுத்துக் கொள்வாய். உன்னால், உலகம் — க்ஷேமத்தை யடைந்து விட்டது — ஏ! குழந்தாய்! — உட்டானி! — நீ கவலைப் படாதே! — நான் இறக்க வேண்டுமென்கிற எண்ணத்தோடுதான் — உன்புருஷனோடு சண்டையிட வந்தேன் — உன்னை — உன்புருஷன் — ஒரு நாளும் கைவிடான் — நீ, உனது இளைய சகோதரியையும் — இளைய தாயையும் — கைவிடாதே!" — என்று சொல்லிக் கொண்டே தன் பிராணனை விட்டான்.

அவன் இறந்ததும் ரஞ்சித சிங்குக்கு மனக்கலக்கமாயிருந்தது.

சட்டோஜியும் சேனாதிபதியும் அவனைச் சமாதானப் படுத்தினார்கள். வந்திருந்த சிப்பாய்களால் மிகுந்த மரியாதையோடு பிரேத சமஸ்காரம் செய்யப்பட்டது.

சிப்பாய்கள் சுமார் ஆயிரம் பேர்களும் தலைவனது பங்களாவில் இருந்த ஏராளமான சாமான்களைக் கொண்டு சமையல் செய்து ஆனந்தமாய்ச் சாப்பிட்டார்கள். முக்கியமானவர்கள் ரஞ்சித சிங்கோடு போஜன முண்டார்கள். தலைவனது இளைய சம்சாரமும் அவள் மகளும் அதிக துக்கப்பட்டார்களாயினும், தமக்கு உட்டானியைத் தவிர, வேறுகதியில்லையென, அவளுடன் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

உபேந்திரநாத் லாலா ரஞ்சித சிங்கைக் கட்டிக் கொண்டு தங்களால் நான் ரக்ஷிக்கப் பட்டேனெனப் புகழ்ந்

தான். அன்று எல்லோரும் நிர்ப்பயமாய்ப் படுத்துறங்கினார்கள். மறுநாள் அவ்விடம் விட்டுப் புறப்பட யாவரும் உத்தேசித்து, அங்குள்ள முக்கியமான சாமான்களையும், நகைப் பெட்டி திரவியப் பெட்டிகளையும், சிப்பாய்கள் மூலமாய் எடுத்துக் கொண்டு பட்டாணியின் வேலைக்காரிகள், தலைவனாது வேலைக்காரர்கள், கபூலிய ஸ்திரீகள், குழந்தைகள் உள்பட ஒரு பிராணியும் அங்கில்லாமல், யாவரும் கணவாயை நோக்கிப் பிரயாண மானார்கள்.

நடக்கச் சக்தி யில்லாதவர்களை டோலி கட்டிக் கபூலிய ஸ்திரீகள் தூக்கிக் கொண்டார்கள். மற்றும் மிகுந்த ஆடம்பரத்தோடு பகல் மூன்று மணி சுமாருக்கு எல்லாரும் கணவாயை யடைந்தார்கள்.

ரஞ்சித்சிங், அங்குள்ள காவலர்களாலும் மற்றும் பெரிய உத்தியோகஸ்தர்களாலும் தகுந்தபடி உபசரிக்கப் பட்டான்.

ரஞ்சித், அன்று இரவு கணவாயில் தங்கிவிட்டு, மறுநாள் கபூலிய ஸ்திரீகள், குழந்தைகள் யாவரையும் காவலர்களிடம் விடுத்து மற்றும் நாட்டி லிருந்து பிடித்து வந்த வேலைக்காரர்களை அவரவர்கள் இஷ்டப்படி தங்கள் தங்கள் ஊருக்குப் போகும்படி சொல்லி, அவரவர்களுக்கு வேண்டிய திரவியத்தைக் கொடுத்துத் தானும் தன்னைச் சேர்ந்த சிலரோடு பல வண்டிகளில் ஏறிக் கொண்டு நூறுபேர் சிப்பாய்கள், தனக்குக் காவலாகவர வழிநெடுக மிகுந்த உபசாரத்தைப் பெற்றவனாய், பார்த்தபூர் வந்து சேர்ந்தான். இவன் வரவை முந்தியே தெரிந்து கொண்ட அவ்வூரார் யாவரும் ஒருங்கு சேர்ந்து, எதிர் கொண்டு போய் சந்தன புஷ்ப தாம்பூலங்களால் உபசரித்து, அழைத்து வந்தார்கள்.

இவன் பங்களா வந்து சேர்ந்ததும், கதவு பூட்டப் பட்டிருந்ததைக் கண்டு, தனது வேலைக்காரர்களை வர வழைத்துத் தன் தாய் எங்கே சென்றாள் என விசாரித் தான். அவர்கள் நடந்ததைச் சொன்னார்கள். இதைக் கேட்ட ரஞ்சித் இடிவிழுந்த அரவம்போல் சற்று நேரம் திகைத்து நின்று, "எவ்வளவோ பிரயாசைப் பட்டு நான் வெற்றி யடைந்து வந்தும் என தருமைத் தாயைக் காணப் பிராப்த மில்லாதவனாகி விட்டேனே! எனக்காக எங்கெங்கு தேடியலைகின்றாளோ! ஒரு நாளும் வீட்டை விட்டு வெளி யே போகாதவளாயிற்றே! அய்யோ! அம்மா! நான் என்ன செய்வேன்! எப்பொழுது உன்னைக் காண்பேன்! நான் ஜெயசீலனாய் வந்ததை நீ பார்த்தால், வெகு சந்தோஷப் படுவாயே!" எனப்பலவாறு சொல்லி வருந்தினான்; அங் குள்ள பெரிய மனிதர்களெல்லாரும், இவனை சமாதானப் படுத்தி, "எங்கிருந்தாலும் தங்கள் வரவைத் தெரிந்து, தங்கள் தாயார் வெகு சீக்கிரமாக வந்து விடுவார்கள்; தாங் கள் கவலைப்பட வேண்டாம். மூலைக்கு மூலை நாங்களே மனிதர்களை யனுப்பிப் பார்த்துவரச் செய்கிறோம்" எனத் தேற்றினார்கள்.

அவர்கள் என்ன சமாதானப் படுத்தியும் இவன், தாளாதவனாய், பங்களாவின் கதவைத் திறக்கச் செய்து, தன்னோடு கூட வந்த யாவரையும் அதற்குள் போகும்படி உத்தரவு செய்தான். அவரவர்களுக்குத் தக்கபடி உப காரஞ் செய்யும்படி தன்னிடம் முந்தியே உள்ள வேலைக் காரர்களுக்குத் திட்டஞ் செய்தான். அன்று முழுவதும் போஜனத்தின் மேல் விருப்பம் இல்லாமலே இருந்தான். மறுநாட் காலையில் அவ்வூரிலுள்ள தகுந்த மனிதர் ஒருவரை வரவழைத்து, உபேந்திர நாத், அவனது சம்சாரம், அவ னது மாமி முதலிய மூவரையும் ஒப்புவித்து, ஹானிங்கர்

பட்டணத்திலுள்ள சிமான், ஹவன் லாலாவிடம் ஒப்பு விக்கும்படி திட்டஞ்செய்து, உபேந்திர நாத்தைப் பார்த்து அவனது பிரிவிக்கு, தான் வருத்தப் படுவதாகவும், அப்போது சமயபேதமா யிருந்ததால் அவனோடு கூடச் சென்று அவன் தகப்பனிடத்தில் அவனை ஒப்புவிக்க முடியாத தாகவும் தெரிவித்தனுப்பி விட்டான்.

தன்னுடைய வருத்தத்தைக் காட்டாமல், தனது நண்பன் ரஞ்சிதசிங்கின் துக்கத்தை எதிர் பார்த்துக் கலங்கி நின்ற சட்டோஜி, "நண்பரே! தங்கள் தாயின் பிரிவுக்காக தாங்கள் வருந்த வேண்டாம்! நான் வெளியே சென்று, எங்கிருந்தாலும் அந்தம்மாளைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து சேருகிறேன். தாங்கள் கொண்ட கவலையை ஒழித்துச் சமாதானத்தோடிருந்தால் நான் திருப்தி யடைவேன்" என்றான். ரஞ்சித், "நண்பரே! என் தாயின் பிரிவுக்காக நான் வருந்த வில்லை; அவள், ஒரு போர்வீரனது பத்தினி யென்பதைத் தாங்களறிவீர்கள். அவள் எங்குச் சென்றாலும் கொஞ்சங்கூட கஷ்டத்திற் குள்ளாகாமல் வந்து சேருவாள். தங்களை விட்டு நீங்கின தங்கள் மனையாளை, யெப்படிக் கண்டுபிடித்து தங்களிடம் சேர்ப்பேன்" என்கிற துக்கந்தான் எனக்குப் பெரிதா யிருக்கிறது என்றான்.

சட்டோஜி — "நான் அவளது ஞாபகத்தை அடியோடு ஒழித்துவிட்டேன்; இனிமேல் அவ்வுத்தம இரத்தினம் எனக்குக் கிடைக்கப் போகிறாளென்கிற நம்பிக்கை கிடையாது; என்னுடைய ஜீவிய காலமுழுவதும் தங்களுக்கு ஊழியனாக இருந்து என் காலத்தைக் கழிக்கிறேன். இதற்காகத் தாங்கள் இனிச் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை"

ரஞ்சித்சிங் — "ஆ! அப்படியா? — பேஷ்! பேஷ்! நன்றாயிருக்கிறது. எதாவது ஒரு பொருளை உத்தேசித்துத் தன்வாழ்நாள் முழுவதும் துக்கத்தை யடையும் ஓர் உத்தமனை, அவனது கவலையை நீக்கிச் சந்துஷ்டியோடிருக்கும்படி செய்யாமல், என்னையே தேற்றிக்கொண்டு என் பொருட்டே சகலமான காரியங்களையும் செய்ய, அவனை எனக்கு அனுகூலமாக இருக்கும்படி நான் வைத்துக் கொண்டால், என்னை விட மஹா பாவி உலகில் வேறுண்டோ! ஒருவனுக்குச் சந்தோஷம் அன்னியர்களால் ஏற்பட வேண்டுமே யன்றி அவனே உண்டாக்கிக் கொள்ள முடியுமோ! பசியோ டிருக்கும் ஒருவனுக்கு ஆஹாரத்தைக் கொடுத்தால் அவன் மனம் பூரிப்பை யடைந்து முகத் தெளிவைப் பெறுகிறான். அவனைப் பார்த்து நாமும் அவனோடு துக்கப்பட் டிருந்தால் சந்தோஷம் எப்படி வரும்? பசியோ டிருக்கும் ஒருவனை வயிறு நிறையப் புசிக்க ஒருவன் அவனுக்குப் பசிக்கு ஆகாரமளிக்காமல் வேலை வாங்கினால், வேலை வாங்குகிறவன் ஆகார புஷ்டியால் எவ்வளவு திருப்திகரமா யிருந்தாலும் நிச்சயமான சந்தோஷத்தை யடையமாட்டான். இது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட மனசாக்ஷி — இதனால், எல்லா ஜீவ பிராணிகளும் ஒன்றே யென்று கொள்ளவேண்டியது. தங்களபிப்பிராயம் போல் நான் செய்வது மிருந்த சாமான்னியர்களின் காரியமே யாகும். சற்றுநேரம் இத் தோட்டத்தில் உலாவி வருவோம் வாருங்கள்" எனச் சட்டோஜியைக் கூட அழைத்துக் கொண்டு தோட்டப் பக்கம் சென்று, அவனுடைய விருத்தாந்தங்கள் யாவையும் ஒன்று கூட விடாமல் ஆதியோ டந்தமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டான். தான் முதலில் சட்டோஜியின் உயிர்க் காதலியைக் கண்டு பிடிக்க வேண்டிய வழிகள் இன்னின்னவை யென்

பதை ஒரு விதமாகத் திட்டஞ் செய்து கொண்டான். அதற்குப் பின், தாயின் சமாசாரத்தைச் சற்றுக் கவனிக்க வேண்டியதாகத் தீர்மானித்தான்.

தான் மனதில் கொண்ட கலக்கத்தைத் தக்ஷணமே நீக்கினான். சந்தோஷமும் துக்கமும் ஒன்றேயென உத்தேசிக்கும் மனிதர்களன்றோ புத்திமான்களாவார்கள்! அவர்கள் எக்காரியத்தையும் வென்று சாதிக்கக் கூடிய சக்தியுள்ளவர்களாவார்கள். சந்தோஷம் உண்டாகும் காலத்தில் ஓயாது குதூகலித்துக் கூத்தாடி, துக்கம் வரும் காலத்தில் சஞ்சல சித்தராய்ச் சகித்துத் துயரப் படுகிறவர்கள் எதற்கும் பிரயோஜனப்படார்கள். அவர்கள் செய்யுங் காரியம் பாழாய் முடியும்; ஸ்திர புத்தியோடு மோக்ஷ சாதனத்தை யடையவேண்டிய வழிகளைத் தேடிக்கொள்ள சக்தியற்றவர்களாய் மந்தபுத்தியோடு திரிந்து காலத்தைக் கழிப்பார்கள்.

ஸ்திரபுத்தியை வகித்த நமது ரஞ்சிதசிங் அதிசீக்கிரத்தில் தன் துயரத்தை மாற்றினது பெரிதல்ல; இது உத்தமர்களின் செய்கையேயாம்.

சட்டோஜியும் ரஞ்சிதசிங்கும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு பங்களாவிற்கு வந்து போஜனம் செய்தார்கள்.

ரஞ்சித், அன்று உட்டானி முதலிய எல்லாரோடும் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருந்து காலங் கழித்தான். மறுநாள் தன் சவாரிக்கு யோக்கியமான நல்ல குதிரையொன்றை வாங்கிக் கொண்டான்.

தான் வெளியே ஒரு காரியார்த்தமாய் போகிறபடியால், வெளிக்காரியங்களைச் சட்டோஜியும் வீட்டுக்காரியங்

களை உட்டாணியும், தான் வரும் வரையில் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று ஏற்பாடு செய்தான். அடுத்த நாள் தன் செலவிற்கு வேண்டிய திரவியத்தைக் கையி லெடுத்துக் கொண்டு, குதிரை மீதேறிப் புறப்பட்டு விட் டான். அங்குள்ள பெரிய போலீஸ் உத்தியோகஸ்தரிடத் தில் அவன் சென்று தன்னை இன்னானெனத் தெரிவித்தான். அவர் இவனை வேண்டியபடி உபசரித்துத் தாங்கள் வந்த காரியம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். "நான் வந்த விஷயம் பின்பு தெரிவிக்கிறேன். நான் செய்யப் போகும் காரியங்களுக்குத் தாங்கள் அனுகூலமாக மட்டும் இருந்தால் போதுமானது" என்று சொன்னான். அவர் இவனது கௌரவத்தைத் தெரிந்தவரானதால் அப் படியே செய்கிறேன் என ஒத்துக்கொண்டார்.

உடனே இவன் அவ்வூரிலுள்ள சட்டோஜியின் மாம னும் தவளாபாயின் தகப்பனுமான பீகார்ஹோல் காரைக் கூப்பிட்டுவரச்செய்து, அவரிடம் வியாபார விஷய மாய்ப் பேசிப் பிறகு குடும்ப யோகக்ஷேம விஷயமாக விசாரித்து, தான் எவ்வளவு சங்கதி அவரால் தெரிந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவு மட்டும் தெரிந்து கொண்டு, பிறகு சற்று நேரம் வேறு விஷயமாய்ப் பேசி அனுப்பிவிட்டான்.

அடுத்தநாள், அவர் தன்னைக் கேட்டுக்கொண்டபடி ரஞ்சித் அவர் வீட்டிற்குப் போய், அவரால் கொடுக்கப் பட்ட மரியாதையை ஏற்றுக்கொண்டு, அவரது மருமகனு கிய சட்டோஜி தனக்கு ஆப்த நண்பனென்றும், அவரது சமுசாரமாகிய தவளாபாய் தன்னை நன்றாய் அறிந்தவ ளென்றும் அவர்கள் போன இடம் தெரியாததால், தான் மிகவும் வருந்துவதாகவும் சொன்னான்.

ஹோல்கார் — ரஞ்சித சிங்கைப் பார்த்து, "நீங்கள் இவ்வூரி லிருக்கிற வரையில் என் வீட்டிலேயே இருக்க வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

ரஞ்சித், சரியென ஒப்புக்கொண்டு அங்கேயே சில தினங்கள் வரையி லிருந்தான்.

இவனுடைய நோக்கமெல்லாம் பக்கத்து வீட்டுக் காரனை நாராயணராவ் ஹோல்கார் மேலேயே யிருந்தது.

அவன் தன்னிடம் வசிய வந்து பேச ஏற்படுத்திக் கொண்டான். ஆகையால் அவனும் இவனுக்கு நண்பனாய் விட்டான்.

இருவரும் அடிக்கடி வெளியே போய், ஓயாது ஏதோ சில விஷயமாகத் திரிந்தார்கள். ரஞ்சிதசிங் நாராயணராவ் ஹோல்காரிடம் தெரிந்துகொண்ட விஷயங்கள் யாவும் அவனுக்கு அனுகூலமாகவே அவன் நினைத்தபடி யிருந்தன.

ஒருநாள் இருவரும் போலீஸ் அதிகாரியின் வீட்டிற் குப்போய் வேடிக்கையாக பேசிக்கொண் டிருந்தார்கள். அப்போது ரஞ்சிதசிங் நாராயணராவ் ஹோல்காரைப் பற்றி மிகுந்த பெருமையாகப் பேசி, "இவர் ஏற்கெனவே விரும்பி யிருந்த ஒரு பெண், ஊமர்கோட்டையிலுள்ள சட்டோஜி யென்கிற ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டாள். அப் பெண்ணை எப்படியாவது இவர் அடையவேண்டு மென்கிற விருப்பத்தோடு நாடகத்தில் நடிக்கும் இருவரைத் தருவித்து அவர்களில் ஒருவனைப் பெண் வேடம் பூண்டு கொள்ளச்செய்து, ஸ்த்ரீ புருஷர்கள் பாவனைகாட்டி ஊமர்கோட்டையிலுள்ள சட்டோஜியை ஆசிரதம் அடையும்படி செய்து, அவன் சொத்துக்க ளெல்லா வற்றையும் பாழாக்கி, தாம் கோரிய பெண்ணையும் கொண்டுவரச் செய்தார். அடே அப்பா! அசாத்திய

சாமர்த்தியம். நல்ல வேலை செய்திருக்கிறார். கடைசியில் இவருக்குப் பிராப்த மில்லாமற் போய்விட்டது. நன்மை பயக்காத சாமர்த்தியமாய் முடிந்தது, என்ன செய்வார் பாபம்! அபார புத்தி; கல்பிதமான யோசனை! தயவு செய்து பதிவு செய்து கொள்ளுங்கள், இந்தப் பிரபுவை விடவேண்டாம்'' என்றான்.

உடனே போலீஸ் அதிகாரி, நாராயணராவ் ஹோல்காரைப் பிடித்து ஜெயிலுக்குக் கொண்டுபோகும்படி, தன்னிடத்தி லிருந்த சேவகர்களுக்கு உத்தரவு செய்ய, அவர்கள் அவனைப் பிடித்துக்கொண்டார்கள்.

நாராயணராவ், ரஞ்சித சிங்கைப் பார்த்து, ''தாங்கள் என்னிடம் இவ்வளவு நேசமா யிருந்து இப்படிச் செய்யலாமா?'' என்று கேட்க, ரஞ்சித், ''துஷ்டர்களைப் பிடித்து சிக்ஷை செய்ய வேண்டு மென்பது கடவுளுடைய உத்தரவு. நம்மால் செய்யக்கூடியது ஒன்று மில்லை. உங்களுக்குத் துணையாக இருந்த நாடகக்காரர்களான மாதவனும் முகுந்தனும் நாளையதினம் வருவார்கள்'' என்று சொல்லி அவர்க ளிருப்பிடங்களை அதிகாரியிடத்தில் தெரிவித்தான்.

அவர் கேஸினுடைய விஷயங்கள் யாவும் ரஞ்சித சிங்கைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, அவனது தீவிரமான புத்திக்கு மெச்சி, தம்மோடு கூடவே யிருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

மறுநாள் மாதவனையும் முகுந்தனையும் பிடித்துக் கொண்டுவந்தார்கள்.

அவர்களை விசாரித்தபோது, அவர்கள், நடந்த விஷயங்கள் யாவும் உண்மைதா னென்றும், தவளாபாயை முகுந்தன் வெளிப்படுத்தி ஒருவருக்குந் தெரியாமல்,

அழைத்துக்கொண்டு நெடுக வரும்போது, வழி தப்பி மலையின் கீழ்ப்பாகஞ் சென்று விட்டதாகவும், அங்குள்ள காட்டின் வழியாக, ஒருவன், தங்களுக்கு வழி காட்டுவதாகச் சொல்லி அழைத்துக்கொண்டு, காட்டின் மார்க்கமாகச் சென்று முகுந்தனை விட்டுவிட்டுத் தவளாபாயை மட்டும் கொண்டுபோய் விட்டதாகவும் தெரிவித்தார்கள்.

ரஞ்சிதசிங், 'அக்காட்டிற்குப் போக வழி தெரியுமா?' என்று கேட்க, முகுந்தன், தெரியுமென ஒப்புக்கொண்டான். அன்றைத் தினமே போலீஸ் அதிகாரியும் பத்து பேர் சிப்பாய்களும் ரஞ்சித சிங்கும் முகுந்தன் வழி காட்டப் புறப்பட்டுச் சென்றார்கள்.

இரண்டு நாள் பிரயாணஞ் செய்து, மூன்றாவது தினம் காட்டை யடைந்தார்கள். தவளாபாயைப் பிடித்துக் கொண்டு போன இடம் இதுதானென, ஓரிடத்தைக் காட்டினான் முகுந்தன்; அந்தப் போலீஸ்காரர் முதலிய யாவரும் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள். ரஞ்சிதசிங் பூமியில் ஒவ்வோரிடங்களிலுள்ள மணல்களில் காணப்படும் காலடிகளைக் கவனித்துக் கொண்டே இருந்தான்.

ஒவ்வோரிடத்தில் நாயின் அடி தெரிய, அவ்வடியைப் பார்த்து, ரஞ்சித் தனது நாயின் அடிபோல இருப்பதாகத் தெரிந்து, தனக்கு உண்மையாக ஊழியஞ் செய்த நாயை நினைந்து, துக்கப்பட்டுக் கொண்டே "எனது நாய் இங்கு வரக்காரணமென்ன! ஒரு சமயம் என் தாயின் பின்னே இங்கு வந்ததோ!" என அவ்வடியைப் பார்த்துக் கொண்டே நெடுகச் சென்றான்.

ஒரு மரத்தின் கீழ் மெலிந்த சரீரத்தோடு ஆஹாரங்கள் யாதுமில்லாமல் வருந்தி எழுந்திருக்கவும் சக்தியில்லாமல் படுத்துக்கொண்டிருந்த நாயைப் பார்த்து,

ரஞ்சித், தனது நாய்தான் என்று தெரிந்துகொள்ள முடியாமல் வேறு ஏதோ ஒரு நாய் அங்கே படுத்துக்கொண்டிருக்கிறதென அலக்ஷியமாக நினைத்து, அதின் சமீபத்தில் போகவில்லை. படுத்திருந்த நாய், இவனைப் பார்த்ததும் மெல்ல எழுந்து வாலையாட்டி, தத்தளித்து நடந்துகொண்டே, இவன் முன்னால் வந்து முன்கால்களை நீட்டி வணங்கி மறுபடியும் எழுந்திருக்கச் சக்தியற்றுக் கிடந்தது.

ரஞ்சிதசிங் — சில அடையாளங்களினால் அது தனது நாயென அறிந்து கொண்டு, தானும் கீழே உட்கார்ந்து, அதனைத் தூக்கி மடிமேல் வைத்து, "அன்பான தோழனே! நீ எப்படி யிங்குவந்தாய்? உன்னுடைய சரீரம் முழுமையு மிளைத்து, உருமாறிவிட்டாயே! உயிர் போகும் தறுவாயிலிருக்கிற உன்னை இப்போதாவது பார்க்கும்படி பிராப்த மிருந்ததே! உன் தலையும் தொங்க விட்டுப் போய்விட்டதே, நான் என்ன செய்வேன்!" என வருத்தப்பட்டுத் தனது ஆகாரத்திற்காக கையிற் கொண்டு வந்திருந்த ரொட்டித் துண்டுகளிலொன்றை யெடுத்துக் கொஞ்சங் கொஞ்சமாக அதற்குக் கொடுத்தான். ஆகாரம் வயிற்றிற்குள் சென்றதும், கொஞ்சம் சக்தி பெற்ற அந்த நாய், இவன் மடியை விட்டுக் கீழே யிறங்கி, வேறொரு பிரம்மாண்டமான மரத்தின் கீழுள்ள பொந்துக்குச் சென்றது.

ரஞ்சிதசிங் — "இந்நாய் அங்குப் போக வேண்டிய காரண மென்ன!" என அங்குச் சென்றான். நாய் அவ்விடத்தை மோந்து மோந்து பார்த்துக் கொண்டே ரஞ்சிதசிங்கையும் உற்று நோக்கியது.

ரஞ்சிதசிங், இங்கு ஏதோ விசேஷ மிருக்க வேண்டுமென நினைந்து, விசாலமான அந்த இடத்தின் கீழே கவனித்

துப் பார்த்து, ஒரு பெரிய கற்பாறை போட்டிருக்கக் கண்டான். அல்லாமலும் அக்கற்பாறை அங்குக் கிடக்கும் காரணமென்ன வென்பதையும் யோசித்துத் தன்னேடு கூட வந்த சிப்பாய்களைக் கொண்டு அதைப் புறட்டச் செய்தான். அவர்கள் மிகுந்த சிரமப்பட்டு, அப்பாறையைப் புறட்டி அப்பால் தள்ள, கீழே படிக்கட்டுகளோடு கூடிய வழி ஒன்றிருந்தது. அவ்வழியே கீழே யிறங்கி எல்லாரும் சென்ருர்கள்.

கொஞ்ச தூரத்திற் கப்பால், அவ் வழியானது ஒரு பெருங் கதவினல் மூடப்பட் டிருந்தது. அக் கதவை ரஞ்சிதசிங் மிகுந்த பிரயாசையோடு உடைத்து விட்டு, உள்ளே சென்றன். சிப்பாய்கள் முதலிய யாவரும் பின் சென்ருர்கள், இவர்கள் வருவதை அங்கு வசிக்கும் கள்வர்கள் யாவரு முணர்ந்து, தங்கள் தங்கள் ஆயுதங்களோடு இவர்களை யெதிர்க்க வந்தார்கள்.

அவர்கள் சுமார், இருநூறு பேர்கள் வரையி லிருந்தார்கள். அவர்கள் வரும்பொழுது வெடி தீர்த்துக் கொண்டே வந்தார்கள். சிப்பாய்கள், தாங்களும் வெடி தீர்க்க, அவர்கள்முன் இயலாதென உணர்ந்து, கொஞ்சம் பின் தங்கவே, அவர்களை ரஞ்சிதசிங் போகும்படி சொல்லிவிட்டுத் தான்மட்டும், வருகிறவர்களைக் குறி பார்த்துச் சுட்டுக் கொண்டே யிருந்தான். அவர்கள் ஒவ்வொருவராகக் கீழே விழுந்தார்கள். அவர்கள் சுடும் துப்பாக்கிக் குண்டானது ரஞ்சிதசிங் மேலே படாமல் காலின் கீழேயே வந்து விழுந்தது. இவன் துப்பாக்கியால் சுடுவதை கொஞ்சங் கூட நிறுத்தாமல், பக்கத்தி லிருந்த சிப்பாய்கள் துப்பாக்கி மருந்து போட்டுக் கிட்டித்து, இவன் கையை நீட்டும்போது மறைவாக இருந்து, இவனி

டத்தில் ஒலிக்கவும் மட மட மட வென எல்லாரையும் சுட்டு வீழ்த்தி விட்டான்.

இனிச் சண்டைக்கு வர யாருமில்லை யெனத் தெரிந்த ரஞ்சித், சிப்பாய்களோடு அவர்கள் வசிக்கும் இடங்களுக்குட்சென்று பார்க்க, தனது அன்பான தாய் நிற்பதைக் கண்டான். அவளிடஞ் சென்று துப்பாக்கியை அவள் காலின் கீழ் வைத்துச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்தான்.

சதுருபாய், தன் மகனைத் தூக்கி மார்போடணைத்து, "குழந்தாய்! நீ எப்படியும் இங்கு வந்து என்னைக் காப்பாற்றுவா யெனத் தைரியங் கொண்டிருந்தேன்! நீ இப்படிக் காட்டின் வழியாகக் கீழ் இறங்கி வெளியே வரும் பொழுதே நமது மகனே வந்து விட்டானெனச் சந்தோஷங் கொண்டேன். இக்கொடியர்களோடு நீ சண்டை செய்யும் போது உனக்கு உதவிபுரிய நானும் வரலாமா என்று நினைத்தேன். நீ எங்கே கோபித்துக் கொள்ளப் போகிறாயோ என்றுதான் பேசாமல் இங்கு நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். குழந்தாய்! அதிபாலனான நீ மலைக்குறவர்களைப் பிடித்து வதம் செய்கிறேனென்று பிடிவாதமாய்க் கிளம்பினையே! உன்னை விட்டுப் பிரிந்து ஒரு நிமிஷங்கூட இருக்க எனக்குப் பிரியப்படாமல் உன்னைத் தேடிக்கொண்டே புறப்பட்டு வந்தேன்" என்று தன் சமாசாரங்கள் யாவும் சொல்லி மகனைத் தழுவி முத்தமிட்டு அவனுடைய சமாசாரங்கள் யாவும் கேட்டுச் சந்தோஷமடைந்தாள். போலீஸ் அதிகாரிமுதல் சிப்பாய்கள் யாவரும் மிகுந்த மனக்களிப்போடு காட்டு மஹாராஷ்டிரர்கள் வகுப்பைச் சேர்ந்த கள்ள ஸ்திரீகளையும் சதுரு

யாவரும் வேண்டியபடி உபசரிக்கப் பட்டார்கள். கள்ள ஸ்திரீகள் ஆங்காங்கு தங்கள் தங்கள் புருஷர் செத்து விழுந்து உயிர் துறந்து கிடப்பதைப் பார்த்து, 'நாங்களென்ன செய்வோம்!' என ரஞ்சிதசிங் முன் கதறினார்கள்.

ரஞ்சிதசிங், சிப்பாய்களைக் கூப்பிட்டு, "இறந்தவர்கள் யாவரையும் ஒரு பக்கமாய்க் கொண்டு போய்ப் பெரும் பள்ளத்தில் போட்டு நெருப்பு வைத்துக் கொளுத்தி விடுங்கள்" என்று உத்தரவிட்டான்.

இன்னும் அவன், "கள்ள ஸ்திரீகளே! நீங்கள் யாரும் எதற்கும் கவலைப்பட வேண்டாம்! உங்களை நான் காப்பாற்றுகிறேன்" என அவர்களுக்கு வாக்குக் கொடுத்தான். தன் தாயோடு கூட வந்து நின்றுகொண்டு அவளது கண்ணாடையைப் பற்றி வேலைசெய்யும் மஹா லக்ஷணம் வாய்ந்த ஓர் இளம்பிராயமுள்ள பெண்ணை, ரஞ்சித் பார்த்து, "கள்ளர் கூட்டத்திலும் கனத்த அழகு வாய்ந்த இப்பெண்மணி, மிகுந்த நன்னடக்கையோடு என் தாய்க்கு வேண்டிய வேலைகளைச் செய்கிறாளே! ஆஹா! இவளது புருஷன் கூட என்னால் மாண்டிருப்பானோ! என்ன கொடுமையைச் செய்தேன்! களங்கமற்ற இவளுடைய முக மண்டலமானது கணவனது வியோகத்தால் களைப்புற்று வாடி, கவலையே பெருகிக் காணப் படுகிறதே, உத்தமி! என்ன பாபம் செய்தேன்! உத்தம ஸ்திரீகளை அவர்கள் கணவன்மாரிடத்தி லிருந்து பிரித்து விடுவது கொடும்பாபமன்றோ!" என மிகுந்த வருத்தப் பட்டுத் தன் தாயைப் பார்த்து, "அம்மா! உன்னிடம் மிகுந்த பக்தியோடு பணிவிடை செய்யும் இப் பெண்ணின் புருஷனும் என்னால் இறந்தானோ?" என்று கேட்க, அவள், "குழந்தாய்! இக்கள்ள ஸ்திரீகள் யாவருக்குமே புருஷர்கள் இங்கே யில்லை; இவர்

கள், ஒவ்வொரு சமயத்தில் கள்வர்களால் பலாத்காரஞ் செய்து கொண்டு வரப்பட்டவர்கள். இங்குள்ள கள்வர் தலைவன் கொஞ்ச நாளைக்கு முன் என்னாலேயே செத்தான்" என்று அதன் விருத்தாந்தங்கள் யாவும் விபரமாய்ச் சொல்ல, ரஞ்சிதசிங், "ஆஹா, அப்படிச் செய்தானா!" என்று ஒரு சமயம் கோப மடைந்தும், மறு சமயம் தனது தாயின் கற்பிற்கு மெச்சி, சந்தோஷப்பட்டும் மறுபடியும் கேட்க, அவள், "இக்கள்வர் தலைவன் உயிருட னிருந்த காலத்தில், தான் தூக்கிக் கொண்டுவரும் பெண்ணை, இங்கு வந்ததும் பலாத்காரஞ் செய்வான். அப்பொழுது அப்பெண் மிகவும் பயந்தவளாய், தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று அவன் காலில் விழுந்து விட்டால், க்ஷத்திரிய தருமத்தை வகித்த அவன், 'சரி, போ' என விட்டு விட்டுப் போய்விடுவான். பிறகு தன் புத்திரியைப் போலவும் சகோதரியைப் போலவும் அவள் உள்ள வரையில் அன்ன வஸ்திரங் கொடுத்து ஆதரிப்பான். காலில் விழுந்து காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டவர்கள் மட்டும் இங்கிருக்கிறார்கள். அவனுக்குப் பெண்டா யிருந்தவர்கள் எல்லாரும் வேறிடத்தி லிருக்கிறார்கள்" என்றாள்.

இவ்வார்த்தையைக் கேட்டதும், ரஞ்சிதசிங், மிகுந்த கோபத்தை யடைந்து, உடம்பு படபடத்துப் போய், தன் தாயைப் பார்த்து "நீ ஒரு போர்வீரனது பத்தினியா? எனக்குத் தாயா? க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவளா? அனேக யுத்தங்களைப் பார்த்து மனோதிடங் கொண்டவளா?" என்றதும் சுகுணாபாய், "குழந்தாய்! நான் அவன் காலில் விழாததினால் தான், யென்னைக் கத்தியால் வெட்ட வந்தான். பிறகு அவன் என் கிட்ட வந்ததும், ஏதோ பீதியை யடைந்து, கருங்கல் நாற்காலியின்மே லுட்கார்ந்தான்; ராஜத்தேள் கொட்டி, தக்ஷணமே இறந்துவிட்டா

னென்பதை மூர்தியே உனக்குச் சொன்னேனே! ஞாபக மில்லையா" என்றதும் "ஆம் தாயே! மறந்தேன், மன்னிப்பாய்" என நமஸ்கரித்தான்.

அவன் அப்பெண்ணின் சமாசாரத்தை விசாரிக்க, அவள் தனது சிநேகிதனாகிய சட்டோஜியின் சம்சாரமெனத் தெரிந்தது; கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததெனச் சந்தோஷமாய்க் கூத்தாடினான். சிப்பாய்களெல்லாரும் தெரிந்து ஆச்சரியப்பட்டார்கள். அடுத்தநாள், அங்குள்ள யாவருக்கும் அவரவர்களுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெளியே போகும்படி உத்தரவிட்டான். எல்லாரும் புறப்பட்டுப் போனார்கள். அவனும் தன் தாயும் தவளாபாயும் கள்வர்களுடைய தனங்களை யெல்லாம் சிப்பாய்களைக் கொண்டு காவல் செய்யும்படி சொல்லிவிட்டு, படிக்கட்டின் வழியாய் வெளியே வந்து நாயைப் பார்க்க, அது அங்குள்ள மரத்தின் கீழ் செத்துக் கிடந்தது.

அவனும், அவனுடைய தாயும் அதைத் தூக்கி வைத்துக் கொண்டு, கோவெனக் கதறினார்கள். "என் தாயைக் காண்பிக்க வேண்டியதற்காகவே உயிர் வைத்துக் கொண்டிருந்தாயோ! என் தாயைவிட ஆயிரம்பங்கு அதிகமான உன்னை விட்டுப் பிரிந்தேனே!" யென ரஞ்சிதசிங் கதறினான்.

சுகுணாபாய் அதைக் கொஞ்சத்தில் விட்டுப் பிரிய மனமில்லாதவளாய், அதைத் தூக்கி வைத்துக் கொண்டு கத்தினாள்.

பிறகு அதைத் தங்கள் கையாலேயே தகனஞ் செய்துவிட்டு, எல்லாரும் பார்த்தபுரி வந்து சேர்ந்தார்கள்.

எல்லாரும் ஒருவருக்கொருவர் விசாரித்துக்கொண்டிருந்த சந்தோஷத்தை யடைந்தார்கள். உட்டானி, "பைத்தியக்கார சாமியாரே! உங்கள் சமுசாரம் வந்தாள்" என்று பரிகாசம் செய்ய, ரஞ்சிதசிங், "உட்டானி! நீ சாமியார்களைக் கூட குடித்தனக்காரர்களாகச் செய்வதில் கெட்டிக்கரிதான்" என்றான்.

சட்டோஜி தன் சமுசாரத்தோடு ரஞ்சிதசிங் வீட்டோடிருந்து விட்டான்,

இறந்து போனவர்கள் நீங்கலாக மற்ற கபூலியர்கள் யாவரும் கழுவி லேற்றப்பட்டார்கள். மலைமீதுள்ள பங்களாவும் அதிலுள்ள சொத்துக்கள் யாவும் ரஞ்சித சிங்குக்கு அரசாங்கத்தாரால் பரிசளிக்கப் பட்டன. அனேக பட்டங்களும் கொடுக்கப்பட்டன.

நாராயண ராவ் ஹோல்கார், மாதவன், முகுந்தன் முதலியவர்கள் கடுஞ்சிறை யிருக்க விதிக்கப்பட்டார்கள். காட்டு மஹாராஷ்டிர ஸ்திரீகள் யாவருக்கும் ரஞ்சிதசிங் ஒவ்வொரு விடுதி ஏற்படுத்திக் கொடுத்து நாணயமாக அவர்கள் வாழ்நாட்களைக் கழிக்கும்படி ஏற்பாடு செய்தான்.

ரஞ்சிதசிங் சிலகாலம் பார்த்தபுரியிலும் சிலகாலம் மலைமீதிலுள்ள பங்களாவிலும் வசித்து உட்டானியோடும் தன் தாயோடும் மற்றுமுள்ள பந்து மித்திரர்களோடும் சந்தோஷமாய் வாழ்ந்து கொண்டிருந்தான்.

முற்றுப் பெற்றது.

PRINTED AT THE 'CAXTON PRESS', MADRAS — 1914.

தமிழ் நவீன கதைகள்

இதனடியிற் கண்ட கதைப் புத்தகங்கள், இனிய செந்தமிழ் நடையில் படிப்போர்க்கு மனோற்சாகத்தை யுண்டாக்கும் வண்ணம் எழுதப்பட்டுள்ளன. வாசிக்கப் புகுவோர் புத்தகத்தை முடிக்காமுன்னர் திருப்தி யடையார் என்பது திண்ணம். ஆரம்பத்தில் மாத்திரம் இனிமை வாய்ந்து செல்லச் செல்ல. படிப்போர்க்கு வெறுப்பை யுண்டாக்காமல் இவைகள் சதா பெரு நகைப்பு, வியப்பு முதலிய ரசங்களைப் பயக்கும். புத்தகங்கள் தடித்த கடிதத்தில் திருத்தமாய் அச்சிடப்பட்டுள்ளன.

பக்தவிஜயம்	3	0	0
தியாகராஜ கீர்த்தனைகள்	1	4	0
சுகுணதீரன் (முதற் பாகம்)	1	0	0
,, (இரண்டாம் பாகம்)	1	4	0
ஞானசம்பந்தன்	1	0	0
மனோரஞ்சிதம் (முதற் பாகம்)	1	0	0
அஞ்சனாக்ஷி	1	0	0
ஜயசீலன்	1	0	0
பழமொழித் தொகுதி	1	0	0
திரிலோக மோஹனாங்கி	1	0	0
மங்கையர்க்கரசி	0	12	0

லீலா	0	12	0
சுந்தரன்	0	12	0
ஆனந்த சுந்தரி	0	12	0
ஆங்கில சிரோமணிகள்	0	12	0
நீதிபாலன்	0	12	0
அயாஷா (முதற் பாகம்)	0	12	0
,, (இரண்டாம் பாகம்)	0	12	0
பத்மலோசனி	0	12	0
கன்னியின்முத்தம் (முதற்பாகம்)	0	12	0
,, (இரண்டாம் பாகம்)	0	12	0
இந்திரஜித்தன்	0	12	0
இராமாயண சாரம்	0	10	0
புருஷோத்தமன் சரித்திரம்	0	10	0
பன்னிரு நீதிக் கதைகள்	0	10	0
மாலிகா பூஷணி	0	10	0
ரம்பை	0	10	0
சாரதாம்பாள் சரித்திரம்	0	8	0
வத்ஸலா	0	8	0
காந்தாமணி	0	6	0
கற்புக்கரசி	0	6	0
காஞ்சனவல்லி	0	5	0
சிந்தாமணி	0	5	0
மோஹனா	0	5	0
இராபின்ஸன் குரூஸோ	0	4	0
வசந்தசேனை	0	4	0
சின்னத்தம்பி	0	4	0
காணாமற்போன கண்மணி	0	3	0

45

L.21

48 x

Cmly
3 2 70

Checked
30 9 86

சிறுவர்களுக்கான கதைகள்

	ரூ.	அ.	பை.
செம்படவன்	0	1	
வர்த்தகன்	0	1	
சண்டமாருதம்	0	1	
நடுவேனிற் கனவு	0	1	
கடற்கரை வாஸம்	0	1	
கூண்டுவிட்டுக் கூண்டுபாய்தல்	0	1	
அதிசயமான கிளி	0	1	
நாய்காட்டிய நல்லறிவு	0	1	
தாளில்லாக் கதவு	0	1	
அன்புள்ள சகோதரி	0	1	
மூன்று பூதங்கள்	0	1	
பச்சை தேவதை	0	1	
நல்ல பிள்ளைகள்	0	1	
நல்ல சிநேகிதர்கள்	0	1	
மூன்று தங்க மாம்பழங்கள்	0	1	
மூன்று [illegible]களை	0	1	
வெள்ளைப் பூனை	0	1	
தோட்டக்காரன்		1	
நான்கு பாடகர்கள்	0	1	
நைட்டிங்கேல் அம்மையார்	0	1	
பால [illegible]ராஜ்யாதிபதி	0	1	
மறுபடி முயற்சி செய்	0		
கோவிந்தன்	0	1	
சந்திரஹாஸன்	0	1	
காதர் அலி	0	0	

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
35, சின்னதம்பி தெரு, சென்னை.

Caxton Press, Madras.